# CEYLON HISTORY

# இலங்கைச் சரித்திர விளக்கம்

## 1500 — 1957

ஜி. ஸி. ஈ., ஆசிரிய பரீட்சை வகுப்புகட்கு

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
10. 5. 1980

தப
4707

நூலாசிரியன்
திரு. A. விஜயன் விக்ரோறியா B. A.
St. JOHN'S COLLEGE - DEMATAGODA - COLOMBO.

பிரசுர ஆசிரியன
திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள்
TEACHER — AUTHOR — PUBLISHER

உசாத்துணை நூல்கள்
இரவல் எடுப்பதற்கன்று

பிரசுரம்:
...லங்கா புத்தகசாலை,
கிளை: கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்
பருத்தித்துறை — இலங்கை

Nalayini - Senthinathan
60/-

# இலங்கைச் சரித்திர விளக்கம்

## (1500 — 1957)

954.93 SL/PR
4707

ஜி. ஸி. ஈ. ஆசிரிய பரீக்ஷை வகுப்புகட்கு

பாடச் சுருக்கம் - வினாக்கள் - பரீக்ஷைப் பத்திரங்கள் இணைவுற்றது.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சபை,
பதிவு இல. 73
10. 5. 1950
அறக்கட்டளை நிலையம்,
கசெட் இல. 14805
7. 6. 1968

உசாத்துணை நூல்
இரவல் எடுப்பதற்கன்று

நூலாசிரியன்:
திரு. A. விஜயன் விக்ரோறியா B. A.
ST. JOHN'S COLLEGE, COLOMBO.

பிரசுர ஆசிரியன்:
திரு. வே. சிவக்கொழுந்து அவர்கள்
TEACHER - AUTHOR - PUBLISHER.

முதற்பதிப்பு – 1957
Rights Reserved

4707

பிரசுரம்:
வடலங்கா புத்தகசாலை,
(கிளை: கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.)
பருத்தித்துறை — இலங்கை

# இலங்கை பரீக்ஷைப் பகுதி.

## சரித்திரம்

(3 மணிகொண்ட ஒரு வினாப் பத்திரம்)

(1) கி. பி. 1500 ஆண்டு முதலாக இலங்கையின் சரித்திர சம்பந்தமான கேள்விகள். போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய ஆட்சிக்கால சம்பந்தமான கேள்விகளும் அமையும்; இவற்றுட் சமூக, பொருளாதார விஷயங்களைப்பற்றிய கேள்விகளும் இலங்கையின் வரலாற்றுப் பூகோள சம்பந்தமான கேள்விகளும் அடங்கும்.

(2) ஏறக்குறைய கி. பி. 1500-ம் ஆண்டு முதலாக உலக சரித்திரத்தின் சங்கிரகம். 1815-ம் ஆண்டு முதலாக இற்றைவரையுள்ள காலத்தை விசேஷமாகக் கற்றல்வேண்டும். அல்லது

1688-ம் ஆண்டு முதலாக ஆங்கிலேயர் சரித்திரத்தின் சங்கிரகம்; இது ஆங்கிலேயர் கடல்கடந்துசென்று தம் ஆதிக்கத்தைப் பரப்பியமையையும் உள்ளிட்டதாகும். 1815-ம் ஆண்டு முதலாக இற்றைவரையுமுள்ள காலத்தை விசேடமாகக் கற்றல்வேண்டும்.

வினாப்பத்திரம் இருபகுதிகள் கொண்டதாகும். (1) இலங்கைச் சரித்திரம். (2) உலக சரித்திரம் அல்லது ஆங்கிலேயர் சரித்திரம். பரீட்சார்த்திகள் முதலாம் பகுதிக்கும், இரண்டாம் பகுதியில் உலகசரித்திரத்தையொட்டிய வினாக்களுக்கு அல்லது ஆங்கிலேயர் சரித்திரத்தையொட்டிய வினாக்களுக்கும் விடையளித்தல்வேண்டும். இலங்கைச் சரித்திரத்தையும் உலக சரித்திரத்தையும், அல்லது இலங்கைச் சரித்திரத்தையும் ஆங்கிலேயர் சரித்திரத்தையும் ஒப்பிட்டு ஆராய்தற்கான கேள்விகள் எப்பகுதியிலாதல் அமையக் கூடும்.

இலங்கைச் சரித்திரத்தில் 1795-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியை ஒட்டியனவும், உலக சரித்திரத்தில் அல்லது ஆங்கிலேயர் சரித்திரத்தில் 1815-ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியை ஒட்டியனவுமாகிய வினாக்களிலிருந்து பரீட்சார்த்திகள் எல்லா வினாக்களையும் தெரிந்துகொள்ளலாம். இலங்கைச் சரித்திரத்தில் 1500 தொடக்கம் 1795 வரையுமுள்ள காலத்தைப்பற்றி அல்லது ஆங்கிலேயர் சரித்திரத்தில் 1688 தொடக்கம் 1815 வரையுமுள்ள காலத்தைப்பற்றியும் சுருக்கமாக அறிந்திருத்தல் போதுமானது.

அச்சுப்பதிவு: கலாபவன அச்சகம் — பருத்தித்துறை.

# நான்முகம்.

இன்று உயர்வகுப்புகளிற் சுயமொழியிற் சரித்திரபாடத்தை இலகுவிற் போதிக்க - மாணவர் கற்றுத்தேற ஒழுங்கான முறையில் விஷயச் செறிவுடனும், உரைநடைச் சிறப்புடனும் அமைந்த ஒரு நூல் இல்லையென்பதையும், இப்பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் ஒரு சிறந்த சரித்திர நூலை ஆவலோடு எதிர்பார்ப்பதையும் அறிந்து இத்தேவையைப் பூர்த்திசெய்யும் நோக்குடன் கொழும்பு - சென்ற் ஜோன்ஸ் கல்லூரிப் பேராசிரியர் **திரு. விஜயன் விக்ரோரியா** அவர்கள் எழுதிய இந்நூலைப் பொறுப்பேற்றுப் பாடச் சுருக்கம், வினாக்கள், பரீக்ஷைப் பத்திரங்கள் என்பனவும் சேர ஒழுங்கான முறையில் அமைத்து வெளியிடுகின்றோம். நூலாசிரியர்க்குச் சரித்திரம் போதிக்கும் ஆசிரியர்களும், மாணவர்களும் நன்றிகூறும் கடப்பாடுடையர்.

**இம்முறையில் "உலக சரித்திர விளக்கம்" என்னும் நூலும்** தொடர்ந்து வெளிவரும்.

வணக்கம்

கலாபவனம்
மேலைப் புலோலி
*1-11-57*

வே. இலக்கொடுந்து
பிரசுர ஆசிரியன்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
வரை நிலைச் சுவை,
பதிவு இல. 73
10. 6. 1950
அறக்கட்டளை நிலையம்,
கசெட் இல. 14805
7. 6. 1965

# பொருளடக்கம்


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
| --- | --- | --- |
| | இலங்கையின் பூர்வ சரித்திரம் | 1 |
| 1. | 16-ம் நூற்றாண்டில் இலங்கை | 2 |
| 2. | கோட்டையிற் போர்த்துக்கேயர் | 9 |
| 3. | யாழ்ப்பாணத்திற் போர்த்துக்கேயர் | 25 |
| 4. | கண்டியிற் போர்த்துக்கேயர் | 33 |
| 5. | இலங்கையிற் போர்த்துக்கேயர் | 52 |
| | பரீக்ஷை வினாக்கள் | 65 |
| 6. | ஒல்லாந்தர் கிழக்குப் பிரதேசங்களுக்கு வருகை | 67 |
| 7. | நாயக்கர் வம்சத்துக் கண்டி அரசர்கள் | 83 |
| 8. | கண்டியும் ஒல்லாந்தரும் | 94 |
| 9. | இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் வீழ்ச்சி | 102 |
| 10. | இலங்கையில் டச்சு ஆட்சி | 107 |
| | பரீக்ஷை வினாக்கள் | 125 |
| 11. | இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிதம் | 127 |
| 12. | கோல்புறூக் கொமிஷன் சீர்திருத்தங்கள் (1832-33) | 154 |
| 13. | இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி | 163 |
| 14. | தோட்டங்கள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள் | 174 |
| 15. | சமுதாய அரசியல் அபிவிருத்திகள் | 193 |
| 16. | அரசியற் சீர்திருத்தங்கள் | 205 |
| 17. | சுதந்திர இலங்கை | 227 |
| | பரீக்ஷை வினாக்கள் | |
| | பரீக்ஷைப் பத்திரங்கள் | |


# இலங்கையின் பூர்வ சரித்திரம்

ஒரு காலத்தில் அரக்கர்கோனாகிய இராவணன் முதலியோரின் ஆட்சிப் பீடமாயும், பின்னர் இயக்கர், நாகர் என்னுஞ் சாதியினரின் வசிப்பிடமாயும் இருந்துவந்த இலங்காபுரி அல்லது ஈழம் காலகதியில் விஜயனது வருகையின் பின்னர் சிங்களவர் தமிழர் என்போரின் ஆட்சிக்குட்படலாயிற்று. பல சிங்கள அரசர்களும், தமிழ்மன்னர்களும் நாட்டின் வளத்துக்கு உதவினர். உள்நாட்டுக் கலகங்கள், சிற்றரசுச் சண்டைகள், தமிழரின் படையெழுச்சிகள் ஆதியவற்றைக் காலாகாலம் நாடு அனுபவித்துவந்தும் 15-ம் நூற்றாண்டுவரை அது அந்நியருக்கு அடிமைப்படவில்லை. வாசனைப் பொருட்கள், விலையுயர்ந்த இரத்தினங்கள், யானைத் தந்தம் முதலியவற்றை உதவும் ஓர் சுவர்க்கபூமி என்றமட்டிலேயே மேல்நாட்டினராகிய வெள்ளையர் இந்நாட்டை அறிந்திருந்தனரன்றி அவர்கள் 15-ம் நூற்றாண்டுவரை இங்கு காலெடுத்துவைத்ததுமில்லை; கண்ணாரக் கண்டதுமில்லை. ஆனால் கடந்த நானூற்றைம்பது ஆண்டுகளுக்கிடையில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்கள் இன்று எமக்கு வியப்பளிப்பவை. இக்குறுகிய காலத்திற்றான் நமது நாட்டில் எத்தனை ஆட்சிகள்! எத்தனை புரட்சிகள்! எத்தனை அழிவுகள்! எத்தனை ஆக்கங்கள்! எத்தனை சீர்திருத்தங்கள்! உயரிய மாளிகைகள்! ஒழுங்கான வீதிகள்! நவநாகரீகச் சூழல்கள்!

**முன்னே குளக்கோட்டன் மூட்டுந் திருப்பணியைப்**
**பின்னே பறங்கி பிடிப்பனே — மின்னே!**
**பூனைக்கண் செங்கண் புகைக்கண்ணன் போனபின்**
**தானே வடுகாய் வரும்.**

என்னும் திரிகாலமுணர் ஞானியின் திரிகோணமலைக் கற்சாசன வாக்குப்படி பறங்கியர் வந்தனர் - போயினர் - ஒல்லாந்தர் வந்தனர் - அவரும் போயினர் - -பின்னர் ஆங்கிலேயர் வந்தனர் - அவரும் ஆண்டு திரும்பினர். இன்று இலங்கை சுதந்திர நாடு - பெரிய சாகியத்தாராட்சி - ஆனால் நாளை...? இஃது இவ்வாறாக நாங்கள் இலங்கையாட்சியில் 16-ம் நூற்றாண்டு ஏடுகளைத் திருப்பிப் புரட்டுவோம்.

முதலாம் அத்தியாயம்

# 16-ம் நூற்றாண்டில் இலங்கை


## அரசியற் பிரிவு

கி. பி. 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை மூன்று பெரும் பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவை **கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி** என்பனவாகும். கோட்டை என்பதன் முழுப்பெயர் 'ஜயவர்த்தன **கோட்டை**' என்பதாகும். 15-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆறாவது பராக்கிரமபாகு கோட்டை அரசனாகவிளங்கினான். கோட்டை இராச்சியம் மிகவும் விஸ்திரணமுள்ளதாயும், செழிப்பிலும் செல்வாக்கிலும் மேம்பட்டதாயும் இருந்தது. கீழ் மேற்காக அமைந்திருந்த **கோட்டை இராசதானி** ஏழு கோறளை, நான்கு கோறளை, மூன்று கோறளை, இரண்டு கோறளை, **றைகம், மாத்தறை** ஆகிய சிறு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணமும் கோட்டை அதிபதியால் நியமிக்கப்பட்ட சிற்றரசர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கற்சுவர்களாலும் அகழிகளாலும் சூழப்பெற்ற அரண்மனையில் அரசன் வசித்துவந்தான். வியாபார அபிவிருத்தியை உத்தேசித்துக் கோட்டை அரசன் கொழும்புத் துறைமுகத்திலிருந்து சிலமைல்களுக்கப்பால் வசித்துவந்தான். பழைய அரசர்களின் சம்பிரதாயப்படி கோட்டை அரசன் இலங்கைத் தீவிலுள்ள பிறபகுதிகளிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி அரசாண்டுவந்ததால் அவன் இலங்கைச் சக்கரவர்த்தியென அழைக்கப்பட்டான். அவனுக்குக் கீழுள்ள சிற்றரசர்கள் வருடத்துக்கொரு முறையாகிலும் 'பெரஹரா' கொண்டாட்டத்தின்போது கோட்டைக்கு வந்து அரசனைச் சந்தித்து அவன் விருந்தினராகத் தங்கித் தத்தம் கப்பங்களைச் செலுத்திப் போவார்கள். பல தினங்களுக்கு நடைபெறும் இக் கொண்டாட்டத்திற்குச் சமுகந்தராத சிற்றரசர்கள்மீது கோட்டைப் பேரரசன் போர் தொடுப்பதுமுண்டு.

இலங்கையின் வடக்குத் தீபகற்பமும், யாழ்ப்பாணக் குடாநாடும், அதையடுத்துள்ள மன்னார் உள்ளிட்ட பிரதேசமும் **யாழ்ப்பாண இராச்சியமாக** விளங்கின. ஏற-



குறைய 13-ம் நூற்றாண்டில் இப் பிரதேசத்தில் தமிழர் ஆட்சி மேலோங்கியிருந்ததுமன்றி மற்றைய அரசர்களிடமிருந்து கப்பம் வாங்குமளவிற்கு அவர்கள் ஆட்சி பலம் பெற்றுமிருந்தது. 16-ம் நூற்றாண்டில் யாழ்ப்பாண அதிபதிகள் கோட்டையரசனுக்குக் கப்பங்கட்டி வந்தபோதும், யாழ்ப்பாணம் நல்லூரைத் தலைநகராகக்கொண்டு தனி இராசதானியாக விளங்கியது.




**கண்டி இராச்சியம்** உடுநுவரை, தும்பறை, ஹேவஹெத்த, யட்டிநுவரை, ஹரிஸ்பத்துவ ஆகிய பகுதிகளை உள்ளடக்கியது. ஆரம்பத்தில் அரசன் கம்பளையில்வசித்து

வந்தான்; பின்பு கண்டிக்குத் தன் வாசஸ்தலத்தை மாற்றிக்கொண்டான். இப்பிரதேசம் காடும் மலைகளும் அடர்ந்த பகுதியாகும். கண்டியரசன் கோட்டையிலுள்ள பேரரசனுக்கு நெருங்கிய உறவினனும் கப்பங் கட்டுபவனும் இருந்தான்.

மேற்கூறிய மூன்று பெரும் இராச்சியங்களைத் தவிர்த்து யாழ்ப்பாணத்தையடுத்த வனப்பகுதியான வன்னிப்பகுதியில் **வன்னியர்** என்னுஞ் சிற்றரசர்கள் ஆண்டுவந்தனர். திரிகோணமலை, மட்டக்களப்பு போன்றவையும் இச் சிற்றரசர்களின் ஆட்சிக்குட்பட்டவையாகும்.

முன்னர் கூறிய மூன்று இராச்சியங்களிலும் பொருளாதாரநிலை குன்றியிருந்தது. தென்மேற்குப் பகுதியிலுள்ள கோட்டை இராச்சியம் நெல் பயிரிடுவதற்கு ஏற்றதாயில்லை. அதன் வருமானம் கறுவாப்பட்டை இரத்தினக்கற்கள், பாக்கு, மிளகு ஆகிய பொருட்களை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலிருந்து கிடைத்து வந்தது. மேட்டுப் பாங்கான கண்டி இராச்சியமும் நெற்செய்கைக்கு ஏற்றதாயில்லை. மலைச்சரிவான பூமியாதலாலும், நீர்ப்பாசன வசதிக் குறைவாதலாலும் இந்த இராச்சியத்தில் நெல்விளைவே இல்லையெனலாம். அடுத்தபடியாக யாழ்ப்பாணக் குடாநாடு நிலவளம், நீர்ப்பாசனவசதி என்பவை குறைவுடைமையால் இங்கும் நெல்விளைவு மிகக் குறைவு. இவ்வேதுக்களால் இம்மூன்று இராச்சியங்களிலும் பொருளாதார நிலை அபிவிருத்தியடையவில்லை.

## அரசாட்சி முறை

16-ம் நூற்றாண்டில் இலங்கையில் நடைபெற்ற அரசியற் பரிபாலனத்தைப் பற்றியும், மக்கள் வாழ்க்கையைப் பற்றியும் ஈண்டு ஒருசிறிது கவனிப்பது அவசியமாகும். இக்காலத்தில் ஆண்ட சிங்கள அரசர்கள் பூரண அதிகாரம் உடையவர்களாயிருந்தனர். மன்னன் சொல்லுக்கு மறுசொல் இல்லை. அரசனுக்கு உதவியாக ஓர் ஆலோசனைச் சபையிருந்தது. அதை அரசன் முக்கியமான காரணங்களுக்காக அடிக்கடி கலந்தாலோசித்து வந்தான்.



கர்ணபரம்பரையாக வழங்கிவந்த நாட்டு வழக்கப்படி அரசனும் அச்சபையினரும் இயங்கி வந்தனர். சட்டம், சிவில், ராணுவ விவகாரங்களைக் கவனிப்பதற்குக் **கிராமத் தலைவர்கள்** அல்லது முனிசிப்புகள் (Headmen) நியமிக்கப்பட்டனர். வரி வசூலிப்பது - குளம், குட்டை, தெருவீதி ஆதியவற்றைப் பழுதுபார்த்துச் செப்பனிடுவது - கிராமச் சண்டைகளைத்தீர்த்துவைப்பது போன்றவைகள் கிராமத் தலைவர்களின் கடமைகளாக இருந்தன. சாதிக்கட்டுப்பாடு மிகத் தீவிரமாக நடைமுறையில் இருந்துவந்தது. மேலும் அவ்வச் சாதியிற் பிறந்தவர்கள் அவரவர் சாதிக்கு உரித்தான தொழில்களைச் செய்யவேண்டுமென்று நிர்ப்பந்தப்படுத்தப்பட்டனர்.

கிராமத்தாரிடையே நிலவும் நிலவிவகாரம், சொத்துரிமைத் தகராறு போன்றவைகளைத் தீர்ப்பதற்குக் **கிராமசபை** (கன்சபாவ) ஒன்று இருந்தது. இச்சபைத் தீர்ப்புக்குக் கட்டுப்படாதவர் கிராமத் தலைவனுக்கு விண்ணப்பஞ் செய்யலாம். குற்றஞ் செய்தவர்களை அபராதம் விதித்தோ, சிறைக்கனுப்பியோ கிராமத் தலைவன் தண்டித்து வந்தான். அவன் தீர்ப்பை எதிர்த்து அரசனுக்கும் விண்ணப்பஞ் செய்யலாம். தனது சேவைகளுக்குக் கிராமத்தலைவன் சம்பளம் பெறவில்லை. ஆனால் மக்கள் அவனது நிலபுலங்களைத் திருத்தி உழுது பயிரிட்டுக் கொடுத்தனர். சில சமயங்களில் சன்மானங்களும் வழங்கி வந்தனர்.

**'கபடகம்'** (Gabadagam) என்று சொல்லப்பட்ட அரசனுக்குச் சொந்தமான கிராமங்களிலுள்ள அரசமானிய நிலங்களை மக்கள் உழுது பயிரிட்டு வந்தனர். அதேபோன்று **நிந்தகம்** (Nindagam) எனப்பட்ட பிரபுக்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரபுமானிய நிலங்களையும், **தேவாலகம்** (Devalagam), **விகாரகம்** (Viharagam) எனப்பட்ட தேவமானிய நிலங்களையும் மக்கள் பயிரிட்டனர். அரசனுக்குச் செய்யுஞ் சேவைகளுக்காக அவன் மக்களுக்கு நிலங்களை இலவசமாய் உதவியும் வந்தான்.

அக்காலத்தில் வர்த்தகம் அரசனது ஏகபோக உரிமையாயிருந்தது. வெளிநாட்டு வர்த்தகத்திற்காக உள்நாட்டில் விவசாயம் நன்கு நடைபெற்றதாகத் தெரியவில்லை. **பண்டமாற்று முறை** (Barter System) பெரும்பாலும் வழக்கத்திலிருந்து வந்தது. எனவே செப்புநாணயங்கள் அருகிப்போயிருந்தன. தான் விளைவித்த ஒரு பண்டத்தைக் கொடுத்துத் தனக்குத் தேவையான மற்றொரு பண்டத்தைப் பிறரிடமிருந்து வாங்கி மக்கள் சீவியஞ்செய்து வந்தனர்.

இந்நூற்றாண்டில் சிங்கள மொழியிற் பிறமொழிக் கலப்பு ஏற்பட்டது. வடமொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்து அநேக சொற்கள் சிங்கள மொழியில் எடுத்தாளப்பட்டன. **அழகியவன்ன மொகத்தல** (Alagiyavanna Mohottala) போன்ற கவிஞர்கள் தோன்றிச் சிங்கள மொழியை வளம்பெருக்கினர்.

## போர்த்துக்கலும் போர்த்துக்கேயரும்

போர்த்துக்கல் மிகச் சிறிய நிலப்பரப்பையுடைய நாடாகும். ஆகவே சனத்தொகையும் குறைவாகும். அங்குள்ள நிலம் விவசாயத்திற்குத் தகுதியற்றதாயிருந்தது. ஆனால் **பூகோள சாத்திர ரீதியில்** கடல் மார்க்கமாகப் பிறநாடுகளுடன் வியாபாரஞ்செய்யும் வாய்ப்புப் பெற்றிருந்தது. போர்த்துக்கேயர் சம்பந்தப்பட்ட ஐரோப்பிய வர்த்தகமானது கிழக்குநாடுகளில் தரைமார்க்கமாகவே நடைபெற்று வந்தது. துருக்கியருக்கும் கிறீஸ்தவருக்குமிடையே நடந்த சிலுவையுத்தங்களின் பயனாகத் துருக்கியர் 1453-ம் ஆண்டில் ஆசியாவிலிருந்துவந்து மத்திய தரைக்கடலின் கிழக்குநாடுகளான **கொன்ஸ்தான்திநோபிள்** முதலிய பாகங்களைக் கைப்பற்றியபோது இவ்வியாபாரம் தடைப்பட்டது. கிழக்குநாடுகளின் செல்வத்தால் ஈர்க்கப்பட்டு வர்த்தகத்துறையில் முழுமூச்சுடனிறங்கிய ஐரோப்பியர் தரைமார்க்கம் தடைபட்டபோது கடல் மார்க்கமாகக்கிழக்கு நாடுகளுக்குச்செல்ல யாதாவது ஒரு மார்க்கங் காணத் தீவிரமாக முனைந்தனர். ஆபிரிக்கா



வின் தென்முனைக்குத் தெற்கேயுள்ள கடல்மார்க்கமாக இந்துசமுத்திரத்தை அடையலாம் என்ற நம்பிக்கை போர்த்துக்கேய அரசனும் புகழ்பெற்ற மாலுமியுமான **ஹென்றி** என்பவனுக்கு உதயமாயிற்று. அவனது ஆராய்ச்சிகளின் பயனாக 1486-ம் ஆண்டு **பர்தலோமியோ டயஸ்** என்பவன் **நன்னம்பிக்கை** முனையைக் கடந்து செல்லும் பாதையை வகுத்தான். இறுதியாக இந்தியக்



கரையை அடைய **வாஸ்கோ-ட-காமா** என்பவன் 1498ல் இப்பாதையை உபயோகித்து வெற்றியுங் கண்டான்.

இந்நாட்களிலிருந்து மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் வர்த்தகம் பெருகி வளரலாயிற்று. போர்த்துக்கேயர் தங்களது கடல் ஆதிக்கத்தைக் கொண்டு தங்கள் ஆட்சியை உறுதிப்படுத்தினர். 1510-ம் ஆண்டில் அவர்கள் இந்தியாவிலுள்ள **கோவைத்** துறைமுகத்தைக் கைப்பற்றினர். இதன்மேல் 1515-ம் ஆண்டில் **ஏடன், ஓர்மஸ்** என்னும் துறைமுகங்களையும் கைப்பற்றிப் பல வருடங்களாக முஸ்லிம்களின் ஏகபோக உரிமையாயிருந்துவந்த வர்த்தகத்தையுந் தடைபண்ணினர். கடைசியாக இந்துமகா சமுத்திரத்திலுள்ள கேந்திரஸ்தானமான இலங்கையையுங் கைப்பற்றித் தங்கள்

வர்த்தகத்தை அபிவிருத்தி செய்தனர். இவற்றின் பயனாக கீழ்நாடுகளிற் படிப்படியாகத் தங்கள் அரசாட்சியையும் நிலைநாட்டிக் கொண்டனர்.

### சுருக்கம்

இலங்கை கி. பி. 16-ம் நூற்றாண்டினாரம்பத்தில் கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி என்னும் மூன்று பெரும்பிரிவுகளைக் கொண்டிருந்தது — கோட்டையரசன் இலங்கைச் சக்கரவர்த்தியாய்ச் சிற்றரசர்களிடம் திறைபெற்று வந்தான். யாழ்ப்பாண இராச்சியமாக வடக்குத் தீபகற்பம், யாழ்ப்பாணக் குடாநாடு, மன்னார் என்பன சேர்ந்து விளங்கின. நல்லூர் தலைநகராகும் — கண்டி இராச்சியம் பல மலைநாடுகளைக் கொண்டிருந்தது. கண்டி அரசன் கோட்டைப் பேரரசனுக்கு உறவினனாய் இருந்தான் — சிற்றரசர்களாகிய வன்னியர் வன்னி, திரிகோணமலை, மட்டக்களப்பு போன்ற பகுதிகளை ஆண்டு வந்தனர் — அரசனுக்கு ஆலோசனை கூறச் சபை இருந்தது. முனிசிப்புகள் என அழைக்கப்படும் கிராமத்தலைவர்கள் சட்டம், வரி, நீர்ப்பரிபாலனம் முதலிய கடமைகளைக் கவனித்து வந்தனர். கிராமசபை சிறு விவகாரம், நிலத்தகராறு முதலியவற்றைத் தீர்த்து வந்தது— கபடகமென்பது அரசமானிய நிலமாகும்; நிந்தகமென்பது பிரபுமானிய நிலமாகும்; தேவாலகமென்பது தேவமானிய நிலமாகும். மக்கள் இந்நிலங்களையும் பயிரிட்டு வந்தனர் — வர்த்தகம் அரசனது உரிமையாக இருந்தது. பண்டமாற்றுமுறை வழக்கத்திலிருந்து வந்தது — சிங்கள மொழியில் வடமொழி முதலிய கலப்புகள் ஏற்பட்டன — போர்த்துக்கேயர் மேல்நாட்டினர்; மத்தியதரைக்கடல் மூலமாகத் தரைமார்க்கக் கீழ்நாட்டு வர்த்தகத்திற் தொடர்பு பட்டிருந்தனர். துருக்கியரின் தடை காரணமாக வர்த்தகத்தொடர்பு துண்டிக்கப்பட்டபோது கீழ்நாடுகளுக்குச் செல்லும் கப்பற் பாதைகளைக் கண்டுபிடித்துத் தமது வியாபாரத்தையும், ஆதிக்கத்தையும் படிப்படியாகக் கீழ்நாடுகளில் நிலைநாட்டினர். இலங்கையும் இவர் கைப்படலாயிற்று.

### வினுக்கள்

1. 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை எத்தனை இராச்சியப்பிரிவுகளைக் கொண்டிருந்தது? கோட்டை இராச்சியத்தைப்பற்றி விபரிக்குக.
2. 16-ம் நூற்றாண்டில் இலங்கையின் அரசியற் பரிபாலனம், விவசாய நிலைமை, மக்களின் வாழ்க்கைமுறை என்பவற்றைச் சுருக்கி எழுதுக.
3. போர்த்துக்கல் தேசத்தைப்பற்றியும், போர்த்துக்கேயர் 15-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் செய்த கடலாராய்ச்சி பற்றியும், கீழைத் தேசங்களில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியது பற்றியும் விபரிக்குக.
4. 16-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கையின் அரசியல் நிலைமை என்னும் விடயம்பற்றி ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதுக.
5. வன்னியர், முனிசிப்புகள், கபடகம், நிந்தகம், பண்டமாற்று, பர்தலோமியோடயஸ், வாஸ்கோடகாமா ஒவ்வொன்றையும் அல்லது ஒவ்வொருவரையும்பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக.

---

## இரண்டாம் அத்தியாயம்

# போர்த்துக்கேயர் காலம் 1597—1656

## கோட்டையிற் போர்த்துக்கேயர்

கி. பி. 1505-ம் ஆண்டில் எட்டாவது வீரபராக்கிரமபாகு கோட்டை இராச்சியத்தின் அரசனாக இருந்தபோது டொன் லொரன்சோ டி அல்மேய்டா என்னும் போர்த்துக்கேய தளபதி புயற்காற்றினாற் சிக்குண்டு தனது கப்பலுடன் இலங்கைக் கரையை அடைந்தான். இவன் கோவைத் தேசாதிபதியின் மகனாவான். மலாக்கா தீவுகளின் வழியாகப் பிரயாணஞ் செய்து விலையுயர்ந்த பொருட்களை ஏற்றிச்சென்ற முஸ்லீம் வர்த்தகக் கப்பல்களைத் தடுத்து நிறுத்துவதற்காக டொன் லொரன்சோ டி அல்மேய்டா கொச்சியிலிருந்து இலங்கைக்கு அனுப்பப்பட்டான். ஏனெனில் முஸ்லீம்கள் சிறந்த வர்த்தகம் செய்துவந்ததும், இஸ்லாமிய மதத்தைத் தழுவி வந்ததும், கிறிஸ்தவரும் வர்த்தகப்பேராசை பிடித்தவருமான போர்த்துக்கேயருக்குப் பகைமையையுண்டாக்கியது. காற்றில் சிக்கிய லொரன்சோவின் கப்பல் தற்செயலாகக் காலித் துறையை அடைந்தது. எதிர்பாராத துன்பமானது எதிர்பாராத இன்பத்தைக் கொணர்ந்தது போன்று இச்சம்பவம் இலங்கையில் போர்த்துக்கேயரது ஆட்சிக்கு அடிகோலியது எனலாம்.

இலங்கைக்கும் போர்த்துக்கலுக்கும் சில ஒருமைப்பாடுகள் உள. இரண்டும் சிறிய பிரதேசங்கள்; இரண்டிலும் சனநெருக்கங் குறைவு; விவசாயமும் கைத்தொழிலும் இருநாடுகளிலும் கவனிப்பாரற்றுக் கிடந்தன. ஆனால் இருநாடுகளுக்குமிடையே சில முக்கியமான விஷயங்களில் வேறுபாடுகளும் இருந்துவந்தன. இலங்கையானது கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய முப்பெரும் இராச்சியங்களையும், அவற்றுள் கோட்டை இராச்சியமானது றைகம, சீதவாக்கை, கோட்டை என்னும் மூன்று உட்பிரிவுகளையுங் கொண்டிருந்தது.

இலங்கையில் தமிழர், சிங்களவர் என்னும் இரு பெரும் சாதியினர் வசித்து வந்தனர். ஆனால் போர்த்துக்கல் ஒரே தனிநாடாய் விளங்கியதுமன்றி அங்குள்ள மக்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்களாயும், ஒரேபாஷையைப் பேசுபவர்களாயும் இருந்தனர். இஃதன்றிப் போர்த்துக்கேயருக்குத் தலைசிறந்த கப்பற்படையும், பயிற்சி பெற்ற வீரர்களைக்கொண்ட இராணுவப்படையும் இருந்தன. ஆனால் இலங்கையிலுள்ள இராச்சியங்களில் ஒன்றிலாவது கப்பற்படை இருந்ததில்லை. இலங்கை இராணுவத்தில் இருந்த வீரர்கள் பயிற்சி பெறாதவர்களாயும் ஏழைக் குடியானவராயும் இருந்தனர். இலங்கை இராணுவத்தில் **கொய்கம** (உழவர்) சாதியினரே சேர்க்கப்பட்டனர். ஆகவே போர்த்துக்கேயருடைய படைப்பலம் சிங்களவருடைய படைப்பலத்திலும் அதிவலிமை கூடியதாகவே இருந்தது. இத்தகைய படைப்பலம் போர்த்துக்கேயரிடம் இருந்தும் இவர்களுக்குக் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றவேண்டுமென்ற பேரவா கிடையாது. அந்த இராச்சியத்தில் ஒரு அரசனுக்கும் மற்ற அரசனுக்கும் நடைபெற்ற உள்நாட்டுக் கலகங்களே மேற்படி இராச்சியம் 1591-ம் ஆண்டில் போர்த்துக்கேயர் வசமாவதற்குக் காரணமாயிருந்தது. போர்த்துக்கேயருக்குக் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றும் நோக்கமிருந்திருந்தால் அவர்கள் கொழும்பில் அரசன் சம்மதத்துடன் தாமாகவே கட்டிய கோட்டைகளைச் சிங்களவர் எதிர்த்தபோது உடைத்தெறிய நேரிட்டிருக்காது.

## விஜயபாகுவும் புதல்வர்களும்

கோட்டை இராச்சியத்திலுள்ள அரசர்களுக்குள் ஏற்பட்ட உள்நாட்டுச் சச்சரவானது எங்ஙனம் போர்த்துக்கேயருக்குத் தங்களாட்சியை இங்கு நிலைநாட்ட உதவியதென்பதைப்பற்றி ஆராய்வோம். 1521-ம் ஆண்டில் **விஜயபாகு** என்பவன் கோட்டை இராச்சியத்துக்கு அரசனாயிருந்தான். அவனுக்கு **புவனேகபாகு, மாயாதுன்னை, றைகம் பண்டார** என்னும் மூன்று புத்திரர்கள் இருந்தனர். ஆனால் விஜயபாகு மன்னன் தனக்குப்பின்



கோட்டை இராச்சியத்துக்கு வாரிசுதாராகத் தன் அபிமான புத்திரன் ஒருவனை நியமிக்க முயற்சிசெய்தான். இதனால் மன்னனது மூன்று புத்திரர்களும் மாயாதுன்னை தலைமையில் தம் தந்தைக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்து தங்கள் தந்தையைக் கொலைசெய்து விட்டனர். தந்தை இறந்தபின் தனயர்கள் மூவர்க்கிடையே யார் கோட்டையைப் பரிபாலிப்பது என்பதுபற்றி வாக்குவாதம் உண்டாகி ஒரு முடிவுக்கும் வரவியலாத நிலைமையில் இருந்தது. இந்நிலையில் கோட்டை இராச்சியமானது மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கோட்டைக்கு 7-ம் புவனேகபாகுவும், சீதவாக்கைக்கு மாயாதுன்னையும், றைகமவுக்கு றைகம் பண்டாராவும் அரசராயினர்.

மாயாதுன்னை தனக்குக் கிடைத்த பங்காகிய சீதவாக்கைப் பிரதேசத்துடன் திருப்தி அடையவில்லை. தான் இலங்கைத்தீவு முழுவதையும் அரசாளவேண்டும் என்று அவாக் கொண்டான். இவ்வெண்ணம் நிறைவேறுவதற்கு முதற்படியாகத் தான் கோட்டை இராச்சியம் அனைத்திற்கும் முதலில் அரசனாகவேண்டும் - ஏனெனில் கோட்டை இராச்சியம் மிகச் செல்வாக்குடையதாய் இருந்தது - என்பதை அவன் நன்றாக அறிந்திருந்தான். எனவே கோட்டையரசனை தன் தமையன் 7-ம் புவனேகபாகுவின்மீது 1527-ம் ஆண்டில் படையெடுத்தான். தன் தமையன் போர்த்துக்கேயருடைய உற்ற நண்பனென்றும், போர்த்துக்கேயர் உதவி அவனுக்கிருக்கும்வரை தான் வெற்றிகொள்ளவியலாது எனவும் உணர்ந்திருந்தான். மேலும் போர்த்துக்கேயருக்குக் கோவையிலிருந்து படையுதவி கிடைக்கும் வாய்ப்பு இருந்தது. ஆதலின் போர்த்துக்கேயருடைய பகைவனான கள்ளிக்கோட்டை அரசன் **ஸாமோரின்** என்பவனின் உதவியை மாயாதுன்னை நாடினான். போர்த்துக்கேயர் கோவையிலிருந்து இலங்கைக்கு இராணுவத் துருப்புக்களைக்கொண்டு வாராதவாறு ஸாமோரின் தனது கப்பற் படையின் பலத்தை உபயோகித்துத் தடுக்கும்படி மாயாதுன்னை வேண்டினான். மாயாதுன்னையின் வேண்டுகோளுக்கு ஸாமோரின்

செவிமடுத்து அவனுக்கு உதவ முன்வந்ததுமன்றி மாயாதுன்னையின் இராணுவத்திற்குத் தன் துருப்புகளைக் கொடுக்கவும் சித்தமாயிருந்தான். இங்ஙனமாகக் கோட்டையில் 1527-ம் ஆண்டு முதல் 1539-ம் ஆண்டுவரை நடைபெற்ற போரில் மாயாதுன்னைக்குக் கள்ளிக்கோட்டை ஸாமோரினும், புவனேகபாகுவுக்கு போர்த்துக்கேயரும் பக்கபலமாயிருந்தனர்

போர்த்துக்கேயருடைய படைப்பலம் தனது படையிலிருந்த சிங்களவருடைய பலத்தைவிடப் பன்மடங்கு மேம்பட்டிருந்ததால் மாயாதுன்னை போர்த்துக்கேயரின் முன்னின்று நேர்நேராகப் போரிட அவ்வளவு விரும்பவில்லை. அவனது விருப்பமெல்லாம் போர்த்துக்கேயரின் படையுதவி தனது தமையனுக்குக் கிடைக்குமுன்னர் இராச்சியத்தைக் கைப்பற்றவேண்டும் என்பதுதான். ஸாமோரினது படை போர்த்துக்கேயர் படையை எதிர்த்துத்தாக்க வலியற்றிருந்ததால் மாயாதுன்னையினது எண்ணம் ஒருநாளும் ஈடேறவில்லை. கோட்டை இராச்சியத்திற் போர்த்துக்கேயருடைய படை வந்திறங்கியதும் மாயாதுன்னை தனது இராச்சியமாகிய சீதவாக்கைக்குத் திரும்பிவிட்டான். கடைசியாக 1539-ம் ஆண்டில் போர்த்துக்கேய படைகள் மாயாதுன்னையைத் தொடர்ந்து நாட்டுக்குள் துரத்திச்செல்லவே அவன் வேறு வழியின்றி அவர்களிடம் சரண்புகுந்து சமாதானம்கோரினான். மாயாதுன்னையின் போர்ச்சேவையிலுள்ள ஸாமோரினது போர்த்தளபதிகளின் தலைகளைத் தங்களிடம் அனுப்பினால் அவனுடன் சமாதானம் செய்துகொள்வதாகப் போர்த்துக்கேயர் கூறினர். போர்த்துக்கேயருடன்போர் செய்து வெற்றிபெறுவது இயலாத கருமமெனக் கருதிய மாயாதுன்னை ஸாமோரினது தளபதிகளைக் கொன்று தலைகளை வெட்டி அவற்றைப் போர்த்துக்கேயருக்கு அனுப்பினான். இப்படியாகப் போர்த்துக்கேயருடைய படையெடுப்புகளினின்றும் தன்னைப் பாதுகாத்துக்கொண்ட மாயாதுன்னை தனக்கு ஆபத்துக் காலத்தில் ஆதரவளித்த ஸாமோரினது உதவியை என்றென்றும் இழந்தவனானான். இதற்கிடையில் தனது மற்றச் சகோதரனாகிய றைகம் பண்டார இறந்துவிடவே மாயாதுன்னை றைகம் இராச்சியத்தையும் தன்னுடைய சீதவாக்கை இராச்சியத்துடன் இணைத்துக்கொண்டான்.



சிங்கள அரசுரிமைப்படி ஒரு இராச்சியத்தின் அரசன் இறந்துவிட்டால் அவனுக்குப்பின் அவனது அடுத்த சகோதரனே அந்த அரசுக்கு உரித்தாளியாவன். இந்த முறைப்படி பார்த்தால் புவனேகபாகுவே இராச்சியத்துக்கு உரித்தாளியாவன். ஆனால் தற்பொழுது அவனது அடுத்த சகோதரனாகிய மாயாதுன்னை றைகமவுக்கு உரித்தாளியாகிவிட்டான்.

நரைதிரை கொண்டு மூப்படைந்துவிட்ட கோட்டை அரசனான புவனேகபாகு தனக்குப்பின் தன் இராச்சியத்தைத் தன் சகோதரனான மாயாதுன்னையைக் கோட்டை இராச்சியத்துக்கு அரசனாக்க விரும்பாது தன்பேரன்புக்குப் பாத்திரமான பேரப்பிள்ளை (பௌத்திரன்) தர்மபாலவுக்கு உரித்தாக்க நினைத்தான். போர்த்துக்கேயரும் மாயாதுன்னை கோட்டைக்கு அரசனாவதை விரும்பவில்லை. அதற்குக்காரணம் இல்லாமலில்லை. இத்தனை காலமாகப் போர்த்துக்கேயருக்கும் மாயாதுன்னைக்கும் பகைமை நிலவியமை காரணமாகப் பல போர்கள் நடந்தன. அதுவுமன்றி மாயாதுன்னை கோட்டைக்கு அரசனானால் அவன் அங்குள்ள கறுவாப்பட்டை வியாபாரத்தைப் போர்த்துக்கேயருக்குக் கொடுக்கமாட்டான் என்பது தெளிவு. இக்காரணங்களால் மாயாதுன்னை கோட்டை அரசனாவதைத் தடுக்கப் புவனேகபாகு செய்யும் எவ்விதசூழ்ச்சியிலும் ஒத்துழைக்கப் போத்துக்கேயர் தயாராயிருந்தனர். மாயாதுன்னை பேராற்றல் மிக்க அரசன் என்றும், எனவே அவனை முறியடிக்கப் போர்த்துக்கேயரது உதவிதன்பேரனாகிய தர்மபாலாவுக்கு இருந்தாலன்றித் தான் இறந்தபின் மாயாதுன்னை தன் பேரனைத் தோற்கடித்துக் கோட்டை இராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்வான் என்றும் புவனேகபாகு நிச்சயமாக அறிந்திருந்தான். இவற்றைக் கருதி 1542-ம் ஆண்டு தர்மபாலா போன்று ஒரு தங்க உருவச்சிலையைச் செய்து அதைக் கோட்டை இராச்சியத்தின் அரசனாகப் போர்த்துக்கல் அரசனாகிய மூன்றாம் ஜோன் தன் கையாலேயே கிரீடம் சூட்டிப் பிரகடனப்படுத்தும்படியாகப் புவனேகபாகு ஏற்பாடுசெய்தான். மேலும் போர்த்துக்கல் அரசனைத் திருப்திப் படுத்துவதற்

காகக் கிறிஸ்தவ மார்க்கத்தை இலங்கையில் பரப்புதற்குக் கிறிஸ்தவ குருமார்களை அனுப்பும்படியும், புவனேகபாகு வேண்டுகோள் விடுத்திருந்தான். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோன்று சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியிருந்த போர்த்துக்கல் அரசன் இலங்கையிலுள்ள கறுவாப் பட்டை வியாபாரத்தைக் கைப்பற்றிக் கொள்ளவும், கிறிஸ்தவ மார்க்கத்தைப் பரப்பவும் இதுவே தருணம் என்பதை உணர்ந்து புவனேகபாகுவின் விண்ணப்பங்கட்கு இசைந்தான். எனவே தர்மபாலாவின் தங்கச் சிலைக்கு மிக்க ஆடம்பரங்களுடன் அமோகமான வரவேற்புகளுக்கிடையே மகுடந் தரிக்கப்பட்டதுமன்றிக் கிறிஸ்தமதம் பரப்புவதற்காக மதகுருமார்களும் இலங்கைக்கு அனுப்பியும் வைக்கப்பட்டனர்.

## புவனேகபாகுவின் குணாதிசயங்கள்

**புவனேகபாகு** சுமார் 20 வருடகாலமாகக் கோட்டையை ஆட்சிபுரிந்தான். அவன் ஒரு திடமான கொள்கையுடையவனல்ல. தன் தகப்பன் **விஜயபாகுவைக்** கொல்வதற்காகத் தனது சகோதரர்களுடன் சேர்ந்துகொண்ட புவனேகபாகு தனக்குப்பின் கோட்டை இராச்சியம் தன் சகோதரருக்குச் சேரவிடாது, தன்மகள் வழி வந்த பௌத்திரனாகிய தர்மபாலாவுக்குக் கிடைக்கும்படி தான் சாவதற்குமுன்பே ஏற்பாடுகள் செய்தான். போர்த்துக்கேயரது உதவி தனக்கு அவசியமாக இருந்ததால் புவனேகபாகு அவர்களது சிநேகத்தை நாடினான். அவன் கிறிஸ்தவக் குருமார்களை மதம் பரப்புவதற்காகத் தன் இராச்சியத்துக்கு அனுப்பும்படி போர்த்துக்கேயரைக் கேட்டதற்குக்காரணம் அவர்கள் தன்மேல் திருப்தி கொள்வதற்காகவே. அவன் போர்த்துக்கேயருக்குக் கொடுத்தவாக்குறுதிகளை மீறியதுமன்றித் தன் இராச்சிய மக்கள் மதம் மாறுவதையும் இரகசியத்தில் தடுத்துவந்தான். மயாதுன்னைக்குப்பயந்து அவனுக்கு விரோதமாகப் போர்த்துக்கேயரை ஏவிவிட்டான். சிலசமயம் போர்த்துக்கேயர் மாயாதுன்னையுடன் சமாதான உடன்பாட்டுக்கு ஏற்பாடு செய்யும்போது புவனேகபாகு இவ்வித ஏற்பாடுகளைத் தடுத்தும் வந்தான்.



போர்த்துக்கேயருடன் புவனேகபாகு நடந்துகொண்ட விதமானது கோட்டை மக்களுக்குத் திருப்தி அளிக்கவில்லை. அவர்கள் அவனை வெறுத்து மாயாதுன்னையின் பக்கம் சேர்ந்ததுமுண்டு. புவனேகபாகுவின் நடவடிக்கைகள் போர்த்துக்கேயரையும் திருப்திப் படுத்தவில்லை. அவர்கள் அவனைச் சந்தேகக் கண்கொண்டு நடத்தத்தொடங்கினர். தனக்கும் போர்த்துக்கேயருக்கும் பகைமை மூட்டியவன் மாயாதுன்னையாகும் என்பதைப் புவனேகபாகு அறிந்தவனல்ல. சிற்சில விஷயங்களில் அவன் தனது சுற்றத்தாராலும், சிநேகிதர்களாலும் வெறுக்கப்பட்டாலும் அவனது பெருந்தன்மையான குணங்களுக்காகவும், வசீகரமான தோற்றத்துக்காகவும் மக்கள் அவனை மதித்து வந்தனர் எனலாம்.

1551-ம் ஆண்டில் புவனேகபாகு தன் படைவீரருக்கு உணவளித்துக் கொண்டிருக்கும்போது அவன் மீது பகைமைகொண்ட ஒரு போர்த்துக்கேய வீரனால் சுடப்பட்டு இறந்தான். அவன் இறந்ததும் முன்னர்த் திட்டப்படி தர்மபாலா கோட்டை இராச்சியத்துக்கு அரசனானான். அவன் வயதில் இளைஞனாக இருந்ததால் அவனது தந்தையாகிய **விதிய பண்டார** கோட்டை இராச்சியத்துக்குப் பாதுகாவலனாக இருந்தான். அவன் அதிகாரத்தின்கீழ் ஆட்சி நடந்துவந்தது. விதிய பண்டார போர்த்துக்கேயருடன் பகைமை பாராட்டி வந்தான். அதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாகப் போர்த்துக்கேய இராசப்பிரதிநிதியாகிய **நோரன்கா** புவனேகபாகு கொலை செய்யப்பட்ட காரணத்தை அறிந்து போவதற்காகக் கோட்டை இராச்சியத்துக்கு வந்தபோது மேற்படி காரணத்தைப் புலன்விசாரித்துக் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதை விட்டு இறந்த அரசன் விட்டுப்போன சொத்துக்களைப் பற்றிய விபரம் அறிவதிலேயே மிக்க கண்ணுங் கருத்துமாய் இருந்தான். இது புவனேகபாகுவின் மருமகனாகிய விதிய பண்டாராவுக்குப் பிடிக்கவில்லை. அடுத்தபடியாக விதியபண்டார தன்னைத் தானே கோட்டை இராச்சியத்தின் நிரந்தரமான அரசனாக்கிக் கொள்ளப் பிரியப்பட்டான். இந்த விருப்

பத்தைப் போர்த்துக்கேயர் நிறைவேற்றமாட்டார்களென்றும், முன்னரே அவர்கள் தர்மபாலா கோட்டையரசனாவதற்குத் தங்கள் ஆதரவை அளித்துள்ளார்களென்றும் நன்கு அறிந்திருந்தான். ஆகவே விதியபண்டார போர்த்துக்கேயருக்குப் பல இன்னல்களையும் இடையூறுகளையும் உண்டுபண்ணித் தொந்தரவு செய்தான். அவர்கள் இலங்கையிலிருந்து செய்துவந்த கறுவாப்பட்டை வியாபாரத்தைத் தடுத்தான். அன்றியும் கிறிஸ்தவ கோயில்களை இடித்துத் தகர்த்துப் பல கிறிஸ்தவர்களை அதம் பண்ணினான். பார்க்கப்போனால் போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்ததற்கு முக்கிய இருகாரணங்கள் - கறுவா வியாபாரமும், கிறிஸ்தவ மதத்தைப் பரப்பலுமேயாகும். இவைகட்குதவும் எந்த அரசனுக்கும் அவர்கள் ஒத்தாசை செய்யக் காத்திருந்தனர். அதேபோல் இவ்விரண்டு விஷயங்களுக்கும் இடைஞ்சல் உண்டுபண்ணுபவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை ஒழிப்பதற்கும் போர்த்துக்கேயர் சித்தமாயிருந்தனர். எனவே விதியபண்டார தடையாயிருந்தபோது அவனுடன் போர்த்துக்கேயர் போர் தொடுத்தனர். இதில் ஆச்சரியப்படத்தக்க சம்பவம் என்னவென்றால் மாயாதுன்னை கோட்டைப் பாதுகாவலனை விதியபண்டாராவுக்கு எதிராகப் போர்த்துக்கேயருடன் சேர்ந்துகொண்டுபோர்புரிந்தமையேயாம். இதற்குக் காரணமில்லாமலில்லை. கோட்டை இராச்சியத்துக்குத் தன் தமையனை புவனேகபாகுவுக்குப்பின் தான் முறைப்படி அரசனாக வேண்டியிருக்க இந்நிலை மாறிக் கோட்டை அரசபட்டத்தை விதியபண்டார கைப்பற்றி அரசனாக எண்ணியதாகும். போர்த்துக்கேயரதும் மாயாதுன்னையினதும் படைகள் எண்ணிக்கையில் குறைந்த விதியபண்டாராவுடைய படையை முறியடித்தன. விதியபண்டாரா தோற்றான். போர்த்துக்கேயர்கோட்டை இராச்சியத்துக்கு அரசனாகத் தர்மபாலாவை நியமித்தனர்.

தர்மபாலா பெயரளவில் அரசனாக இருந்தானேயன்றி உண்மையில்போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாகவே இருந்து அரசபரிபாலனம் செய்து வந்தான். அவர்கள்



விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக எது வேண்டுமானாலும் செய்யக் காத்திருந்தான். ஏனெனில் அவனது வாழ்வும், அரசபதவியும் போர்த்துக்கேயர் உதவியின்றிக் கிடைத்திருக்காதல்லவா! எனவே 1557-ல் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பின்பற்றி ஞானஸ்நானம் (Baptism) பெற்று **டொன் சுவான் தர்மபாலா** எனப் பெயருந் தரித்தான். வேலியே பயிரை மேய்ந்ததுபோன்று பௌத்த மதத்தைக் காக்கவேண்டிய அரசனே அம்மதத்தை நீங்கிக் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்தமை கண்ட இலங்கைவாழ் பௌத்த மக்கள் செய்வதறியாது திகைத்தனர். போர்த்துக்கேயர் போட்ட தாளத்துக்கெல்லாம் ஆடும் தர்மபாலன் பௌத்த ஆலயங்களுக்குச் சொந்தமான நிலபுலன்களையும் கிறிஸ்தவ கோயில்களுக்குக் கொடுத்தான். இக்காரணங்களால் தர்மபாலா தன் சொந்த மக்களால் பரிகசிக்கப்பட்டு அவர்களது மதிப்பையும் இழந்திருந்தான் தனக்குச் சந்ததியின்மையால் தனக்குப்பின் கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயருக்குச் சேரவேண்டும் என்பதாகவும், கோட்டை அரசனே இலங்கை முழுவதுக்கும் அரசன் எனவும், இது தர்மபாலாவின் நன்கொடைச் சாதனம் எனவும் தான் இறக்குமுன்னர் மரணசாதனம் எழுதியிருந்தான். அந்த மரண சாதனத்தின்படி டொன் சுவான் தர்மபாலா 1597-ம் ஆண்டு இறந்தபோது போர்த்துக்கல் அரசனுக்குப் புகழ்பெற்ற கோட்டை இராச்சியம் உரிமையாயிற்று.

## சீதவாக்கையின் எழுச்சியும் வீழ்ச்சியும்

மாயாதுன்னையின் பரிபாலனத்தில் இருந்த சீதவாக்கை இராச்சியமானது **புவனேகபாகு** இறந்தபின் சீரும் சிறப்பும் அடைந்து ஒரு சில காலத்துக்குள் வீழ்ச்சியடைந்தது. அதுபற்றிச் சிறிது கவனிப்போம்.

கோட்டை இராச்சிய பாதுகாவலனை விதிய பண்டாராவை முறியடிக்கப் போர்த்துக்கேயரும் மாயாதுன்னையும் தோள்கொடுத்துப் போர்செய்தார்கள் என முன்னர் அறிந்தோம். அந்த உறவு நெடுநாட்களுக்கு நீடிக்கவில்லை. சிறிதுகாலத்தில் அவர்களுக்கிடையிற்

பகை மூண்டது. சீதவாக்கை அரசனான மாயாதுன்னையும் அவன் மகன் இராசசிங்கனும் கோட்டையைப் பலதடவை தாக்கினர். கிறிஸ்தவ மதத்தைத் தழுவித் தம்மைச் சரண் புகுந்த கோட்டை அரசனாகிய டொன் சுவான் தர்மபாலாவைப் பகைவரிடமிருந்து காத்திரட்சிப்பது போர்த்துக்கேயரது கடமையாய் இருந்தது. தர்மபாலா கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்து விட்டதால் பௌத்த மதத்தரான சிங்களமக்கள் தங்கள் மதத்தைக் காப்பதற்கும், இலங்கையிலிருக்கும் அன்னியராகிய போத்துக்கேயரைத் துரத்துவதற்கும் சீதவாக்கை மன்னனையே நம்பியிருந்தனர். இதுசமயம் சீதவாக்கை மிகப் பேரும் புகழும்பெற்று, வீழ்ந்து சரிந்துகொண்டிருக்கும் கோட்டை இராச்சியத்துக்கு எதிரிடையாகத் திகழ்ந்தது. 1562-ம் ஆண்டில் முல்லேரியா என்னும் இடத்தில் போர்த்துக்கேயருக்கும் சீதவாக்கைப் படைகளுக்குமிடையே நடைபெற்ற போரில் போர்துக்கேயர் புறமுதுகுகாட்டி ஓடியமையால் வெற்றிகண்ட சீதவாக்கைப் படைகள் கோட்டையையும் முற்றுகையிட்டன. தமது படை உதவியும் வேறு ஒத்தாசையும் இன்றியிருந்த போர்த்துக்கேயரால் இந்த முற்றுகையைச் சமாளிக்க இயலவில்லை. இதனிடையே போாத்துக்கேயர் இந்தியாவிலும் போரில் ஈடுபட்டிருந்தனர். எனவே சிறிய படையுடன் கொழும்பு, கோட்டை ஆகிய இரு இடங்களையும் பாதுகாக்க இயலவில்லை. ஆகவே 1565-ல் கோட்டையைப் போர்த்துக்கேயர் கைவிட்டனர். மயாதுன்னை கடற்கரைப் பகுதியை உள்ளடக்கிய கொழும்பைத் தவிர்த்துக் கோட்டை இராச்சியத்தின் ஏனைய பகுதிகளைத் தனது சீதவாக்கை இராச்சியத்துடன் இணைத்துக் கொண்டான். இதன்பின் மாயாதுன்னையும் அவன் மகன் இராசசிங்கனும் கொழும்பைத் தாக்கிப் போர்த்துக்கேயரைத் துரத்த முயற்சித்தனர். அம்முயற்சி கைகூடவில்லை. மாயாதுன்னை இறந்தபின் அவன் மகன் இராசசிங்கன் கொழும்பைத் தொடர்ந்து முற்றுகையிட்டும் பயன்பெறாததுகண்டு தன் கவனத்தைக் கண்டி இராச்சியத்தின்மீது திருப்பினான்.



தாரரான டொன் பிலிப்பை அழைத்துத் தங்களுக்கு அரசனாக வேண்டுமென்று கண்டி மக்கள் வேண்டினர். அத்துடன் போர்த்துக்கேயருடைய உதவியையும் நாடி 1582-ம் ஆண்டில் கண்டிமீது படையெடுத்துக் கண்டியரசனாகிய கரலியத்த பண்டார என்பவனை இராசசிங்கன் முறியடித்துக் கண்டியையும் சீதவாக்கையுடன் சேர்த்துக் கொண்டான். இவ்வாறாகச் சீதவாக்கை இராச்சியம் வளர்ந்து இலங்கையில் மிகுபலம் பொருந்தியதாய் விளங்கியது. அதன் அரசனாக முதலாம் இராசசிங்கன் மிக்க பராக்கிரமனாய்த் திகழ்ந்தான்.

இத்தகைய மகோன்னத நிலையிலிருந்த சீதவாக்கை தேய்பிறைபோல் சீர்குன்றும் காலமும் அண்மித்து விட்டது. கண்டியரசனாகிய கரலியத்த பண்டார முதலாம் இராசசிங்கனால் தோற்கடிக்கப்படுதலும் தனது மருமகனையும், மகளையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு போர்த்துக்கேயரிடம் சரண் புகுந்தான். சிலகாலஞ் சென்றபின் கரலியத்த பண்டார இறக்கவே இந்த இரு குழந்தைகளும் போர்த்துக்கேயரின் ஆதரவில் வளர்க்கப்பட்டுக் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்து ஞானஸ்நானம் பெற்றனர். இருவரும் கிறிஸ்தவர்களானபோது முறையே டொன் பிலிப்பு, டோனா கத்தரினா என நாமகரணஞ் செய்யப்பெற்றனர்.

இந்நிலையில் 1587-ம் ஆண்டில் இராசசிங்கன் மறுமுறையும் கொழும்பை முற்றுகையிட்டான். தனது இராச்சியங்களான சீதவாக்கை, றைகம, கண்டி ஆகிய இடங்களிலுள்ள சேனைகள் அனைத்தையுங் கூட்டி கொழும்பை முற்றுகையிட்டுத் தீவிரமாகச் சமர் விளைத்தான். ஆனால் போர்த்துக்கேயரைக் கோட்டையினின்றுந் துரத்துவது சாத்தியமில்லாது போயிற்று. தோல்விக்குமேல் தோல்வி ஏற்பட்டதால் இராசசிங்கன் மனமுடைந்து தனது பிரஜைகளைக் கொடுமைப் படுத்தினான். அரசனுக்கு விரோதமாக மலைநாட்டிலும் கீழ்ப்பகுதியிலும் எத்தனையோ கலகங்களும் சதிகளும் ஏற்பட்டன. கண்டியில் இராசசிங்கன் ஆட்சியை விரும்பாத மக்கள் குழப்பஞ் செய்தனர். கண்டி இராச்சியத்தின் வாரிசு

னர். இத்தருணத்தைப் பயன்படுத்த விரும்பிய போர்த்துக்கேயர் டொன்பிலிப்பு அரசனால் கண்டியிற் தங்களது வியாபாரத்துக்கும், மதப் பரப்புதலுக்கும் தடையேற்படாது என்றுணர்ந்து குழப்பகாரருக்கு ஆதரவு காட்டினர். **கோணப்பு பண்டார** என்னும் வீரனைக் கண்டிக்கு அனுப்பி டொன் பிலிப்புவை அரசனாக்கப் போர்த்துக்கேய தளபதி ஆஞ்ஞையிட்டான். தன் தந்தையைச் சதிகாரனென்று குற்றஞ்சாட்டி வெட்டிவீழ்த்திய இராசசிங்கனுக்கு எதிராகப் பழிக்குப்பழிவாங்கும் நோக்கத்தோடு கோணப்புபண்டார போர்த்துக்கேயருடைய கட்டளையைச் சிரமேற் கொண்டான். கிறிஸ்தவ மதத்தைத் தழுவி **டொன் சுவான் கோணப்புபண்டார** என்னும் நாமமும் பூண்டான். கண்டி அரசுரிமையை ஏற்ற டொன்பிலிப்பு சிலநாட்களில் இறந்தான். டொன்சுவான் கோணப்புபண்டார தன்னுடன் வந்த போர்த்துக்கேயரைச் சிறைப்படுத்திக் கொன்றுவிட்டுத் தன்னைத் தானே 1591-ம் ஆண்டு அரசனாகப் பிரகடனஞ் செய்தான்.

கோணப்புபண்டாரன் கண்டியரசனானபோது தன் பெயரை **முதலாம் விமலதர்ம சூரியன்** என மாற்றிக் கொண்டான். கோணப்பு பண்டாராவின் சூழ்ச்சியையும் பெயரை மாற்றியதையும் அறிந்த இராசசிங்கன் 1592-ம் ஆண்டு கண்டியின்மீது படையெடுத்தான். அப்படையெடுப்பில் **வல்லனை** என்னுமிடத்தில் நடந்தபோரில் இராசசிங்கன் தோல்வியடைந்ததுமன்றிப் போரில் ஏற்பட்ட வெட்டுக் காயத்தினால் 1593-ம் ஆண்டில் உயிர்நீத்தான். அவனுக்குச் சந்ததி இல்லாமையால் சீதவாக்கையில் உள்நாட்டுக் குழப்பம் ஏற்பட்டது. இவ்வாறு குழப்பம் விளைத்தோரைப் போர்த்துக்கேயர் அதம்செய்து சீதவாக்கை, றைகம, கோட்டையின் சிலபகுதிகள் ஆகியவற்றைத் தர்மபாலாவின் ஆட்சிக்குட் கொணர்ந்தனர். இங்ஙனமாகக் கீர்த்திவாய்ந்த சீதவாக்கை வீழ்ச்சியுற்றது. கோட்டை இராச்சியம் பழைய உன்னத நிலை எய்தியது.



## மாயாதுன்னையின் குணாதிசயங்கள்

மாயாதுன்னை புத்திகூர்மையும் உயரிய அபிலாசையும் அஞ்சா நெஞ்சமும் படைத்த அரசனாவான். அவன் **விஜயபாகுவின்** மூன்றாவது மகன். தன் தந்தையைக் கொல்வதற்குத் தன் சகோதரரைக் கூட்டிச் சதிசெய்தவன். தனக்குக்கிடைத்த சீதவாக்கை இராச்சியத்துடன் திருப்திப்படாது கோட்டைக்கு அரசனாகவும், இலங்கைமுழுவதுக்கும் சக்கரவர்த்தியாகவும் வரப் பேராசை கொண்டான். அந்நோக்கத்துக்குத் தடங்கலாகப் போர்த்துக்கேயர் நின்றதால் அவர்களை ஒழிப்பதே தன் வாழ்க்கையின் இலட்சியமாகக் கொண்டான். தனது சகோதரனாகிய **றைகம் பண்டாரனி**னுடைய இராச்சியத்தைக் கைப்பற்றினான். கோட்டைச் சிம்மாசனத்தைக் கைப்பற்ற மாயாதுன்னை எடுத்த முயற்சிகள் போர்த்துக்கேயரால் தடைபட்டன. எனவே போர்த்துக்கேயரை அழிக்கக் கள்ளிக்கோட்டை அரசனாகிய **ஸாமோரின்** உதவியை நாடினான். ஆனால் தன் உயிரைக் காத்துக் கொள்வதற்காக ஸாமோரின் சேனையிலுள்ள முக்கிய தலைவர்களது தலைகளை வெட்டிப் போர்த்துக்கேயருக்கு அனுப்பித் தன்னைப் பாதுகாத்துக் கொண்டான். **புவனேகபாகு** போர்த்துக்கேயருடன் பகைகொள்ளவும், அவனுக்குப் போர்த்துக்கேயரிடமிருந்து தனக்கெதிராகக் கிடைத்து வந்த உதவியைத் தடுக்கவும் சூழ்ச்சி செய்தான். **விதிய பண்டாரா**வை அழிப்பதற்குப் போர்த்துக்கேயருடைய நட்பை நாடிப் போர்த்துக்கல் அரசனுக்குக் கப்பஞ் செலுத்தச் சம்மதித்தான். **புவனேகபாகு**வைக் கொல்ல நினைத்தான். அதில் வெற்றியும் பெற்றான். பின் **தர்மபாலா**வை நஞ்சூட்டிக் கொல்ல எத்தனித்தான். ஆனால் அதில் தோல்வியுற்றான். ஏறக்குறைய 50 வருடங்களாக இடைவிடாது போர்செய்தும் மாயாதுன்னை தன் ஒரே ஆசையாகிய இலங்கைக்குச் சக்கரவர்த்தியாவதில் சித்திபெறவில்லை.

இருந்தபோதிலும் இவன் சாதித்தவைகள் பெருமைப்பட வேண்டியவையாகும். கோட்டையின் பெரும்

பாகத்தைத் தன் ஆட்சியின் கீழ்க் கொணர்ந்தான். கோட்டையையும், கொழும்பையும் முற்றுகையிட்டு அதில் ஓரளவு வெற்றியும் பெற்றான். இவனது கொள்கையால் சிங்கள அரசரிடமிருந்த கோட்டை இராச்சியமானது அன்னியரான போர்த்துக்கேயர் கைப்புகுந்தது. தன் எண்ணத்தைப் பூர்த்திசெய்யாதவனாகிய மாயாதுன்னை தனது 80-ம் வயதில் சீதவாக்கையில் தனது மகனாகிய முதலாம் இராசசிங்கனாற் கொல்லப்பட்டான் என்று மகாவமசம் கூறுகின்றது.

### சுருக்கம்

### கோட்டை சீதவாக்கை அரசர்களின் வம்சாவளி (1484—1597)

- 8-வது வீரபராக்கிரம பாகு (1484-1509)
  - தர்ம பராக்கிரமபாகு IX (1505-1551)
  - விஜயபாகு VII (1518-1521)
    - புவனேகபாகு VII (1521-1551)
      - மகள் & விதியன்
        - தர்மபாலன் (1551--1597)
      - இரு புதல்வர் (மரணம்-1546)
    - றைகம் பண்டாரன் (மரணம்-1538)
    - மாயாதுன்னை (1521-1581)
      - (மூத்த மகன்)
      - முதலாம் இராசசிங்கன் (திகிரிபண்டாரன்) (1581-1592)

கி. பி. 1505-ல் எட்டாவது வீரபராக்கிரமபாகு கோட்டையரசனாதல் — கோவைப் போர்த்துக்கேய தேசாதிபதியின் மகன் டொன்லொரன்சோ அல்மேய்டா இலங்கைக்கு வரநேர்ந்தமை — இலங்கைக்கும் போர்த்துக்கலுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் — போர்த்துக்கேயரின் படைப்பலம் — விஜயபாகு தன் அபிமான புத்திரனொருவனைத் தனக்குப்பின் கோட்டை இராச்சியத்திற்கு அரசனாக்க எண்ணலும் பிள்ளைகளாகிய புவனேகபாகு, மாயாதுன்னை, றைகம்பண்டார என்போரால் கொலைசெய்யப்படலும் — கோட்டை இராச்சியம் கோட்டை, சீதவாக்கை, றைகம என மூப்பிரிவாதல் — சீதவாக்கையரசனான மாயாதுன்னையின் பேராசையும்



கோட்டையைக் கைப்பற்ற விரும்பலும் — புவனேகபாகுவின் மீது 1527-ல் படையெடுத்தல் — புவனேகபாகுவுக்குப் போர்த்துக்கேயரின் உதவி — மாயாதுன்னை கள்ளிக்கோட்டையரசனான ஸாமோரின் உதவியை நாடல் — மாயாதுன்னையின் படைப் பலக்குறைவு — மாயாதுன்னையின் படைகளை 1539-ல் போர்த்துக்கேயர் கோட்டைக்குள் தூரத்திச் செல்லல் — போர்த்துக்கேயருடன் சமாதானம் — போர்த்துக்கேயரைத் திருப்திசெய்வதற்குத் தனக்குதவிய ஸாமோரினது தளபதிகளின் தலைகளை வெட்டியனுப்பல் — றைகம்பண்டார இறத்தல் — றைகம சீதவாக்கையுடன் இணைத்தல்—புவனேகபாகுவின் மூப்பு — பௌத்திரன் தர்மபாலாவுக்குத் தன் இராச்சியத்தை உரிமையாக்க நினைத்தல் — போர்த்துக் கேயரின் ஆதரவு என்றும் இருக்கவேண்டித் தர்மபாலாவின் உருவச்சிலைக்குப் போர்த்துக்கேயவரசன் மூன்றாம் ஜோன் என்போனால் கிரீடதாரணம் செய்வித்தலும், கிறிஸ்தவ குருமார்களை இலங்கையில் வரவேற்றலும் — இரகசியமாக மக்கள் மதம் மாறுவதைத்தடுத்தல் — அரசனதுபோக்கில் மக்களின் வெறுப்பு—அவனது நடவடிக்கைகளிற் போர்த்துக்கேயரின் வெறுப்பு — 1551-ல் புவனேகபாகு போர்த்துக்கேய ரொருவனாற் சுடப்பட்டு இறத்தல்—தர்மபாலா கோட்டைக்கு அரசனாதலும் அவனது தந்தை விதிய பண்டார பாதுகாவலனாக இருத்தலும்— போர்த்துக் கேயர்மீது விதியபண்டாரவின் வெறுப்பு—மாயாதுன்னை போர்த்துக்கேயரோடு சேர்ந்து விதியபண்டாரவுக்கெதிராகப் போர்தொடுத்தல் — விதியபண்டாரவின்தோல்வி — 1557-ல் தர்மபாலா கோட்டையரசனாக நியமனம்பெறலும் டொன் ஜுவான் தர்மபாலா எனப் பெயர்தரித்தலும்— போர்த்துக்கேயருக்குச் சாதகமாக அவனது மரணசாதனம்—மக்களின் வெறுப்பு — சாதனப்படி 1597-ல் கோட்டை போர்த்துக்கேயருக்கு உரிமையாதல் — சீதலாக்கை சிரோங்கல் — மாயாதுன்னையும் மகன் இராசசிங்கனும் கோட்டையைப் பலதடவை தாக்கல் — மாயாதுன்னைக்கும் போர்த்துக்கேயருக்கும் உறவு முறிதல் — கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த தர்மபாலனைக் காக்கப் போர்த்துக்கேயர் உதவுதல்— 1552-ல் முல்லேரியா யுத்தத்தில் சீதவாக்கைப் படைகளின் வெற்றி— கோட்டையையும் முற்றுகையிடல் — 1565-ல் போர்த்துக்கேயர் கோட்டையைக் கைவிடல் — கொழும்பைத் தவிர்த்துக் கோட்டையை மாயாதுன்னை சீதவாக்கையுடன் இணைத்தல் — மாயாதுன்னை இறந்தபின் முதலாம் இராசசிங்கன் கொழும்பைப் பலமுறை முற்றுகையிட்டும் தோல்வியுறல் — இராசசிங்கன் கண்டியில் கவனத்தைச் செலுத்தி 1582-ல் கரலியத்த பண்டாரவைத் துரத்தியடித்துக் கண்டியையும் சீதவாக்கையுடன் இணைத்தல் — சீதவாக்கை சீர்குன்றல்: — கண்டி அரசனான கரலியத்த பண்டார தோல்வியடைந்தவனால் மருமகனுடனும் மகளுடனும் போர்த்துக்கேயரிடம் சரண்புகுதல் — மருமகனும் மகளும் டொன்பிலிப்பு, டொனாகத்திரினா என்னும் பெயர்களைப் பூண்டு மதம் மாறுதல் — 1587-ல் இராசசிங்கன் மறுபடியும் கோட்டையை முற்றுகையிடல் — போர்த்துக்கேயரை எதிர்க்க இயலாது தோல்விக்கு மேல் தோல்வியடைதல் — இராசசிங்கன் பிரஜைகளைக் கொடுமைப்படுத்துதல் — கண்டி மக்களின் வெறுப்பும் போர்த்துக்கேயரின் உதவியை நாடுதலும் — கோனப்பு பண்டார வீரனால் கண்டியை முற்றுகையிடல் — டொன்பிலிப்புவின் பின் கோனப்பு பண்டார கண்டி அரசனாதல்— அரசுரிமையை ஏற்றபின்னர் கோனப்பு பண்டார பௌத்த மதத்தைத் தழுவி டொன் ஜுவான் கோனப்பு பண்டார என்னும் பெயரையும் மாற்றி முதலாம் விமலதர்ம சூரியன் என்னும் பெய

ரோடு கண்டியை ஆளல் — 1592-ல் இராசசிங்கன் கண்டியின் மீது படையெடுத்துத் தோல்வியுற்று வெட்டுக்காயத்தினால் 1593-ல் இறத்தல் — சீதாவாக்கை, றைகம, கோட்டையின் சில பகுதிகள் போர்த்துக்கேயரால் தர்மபாலனின் ஆட்சிக்குள் கொணரப்படல் — சீதாவாக்கை வீழ்ச்சியுறக் கோட்டை பழைய உன்னத நிலையெய்தல்.

### வினக்கள்

1. போர்த்துக்கல் தேசம் எங்குள்ளது? இலங்கைக்கும் போர்த்துக்கலுக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் என்ன?
2. இலங்கைக்கு முதன் முதல் வந்த போர்த்துக்கேயன் யாவன்? அவனது வரவு தொடக்கம் முதலாம் இராசசிங்கன் காலம்வரை இலங்கையில் போர்த்துக்கேயர் நடவடிக்கைகளை அட்டவணை முறையில் எழுதுக.
3. எவ்வரசன் காலத்தில் இலங்கையில் கிறிஸ்தவ மதம் வரலாயிற்று? ஆரம்ப காலத்தில் கிறிஸ்தவமதம் இலங்கையில் பரவிய விதத்தை விபரிக்குக.
4. புவனேகபாகு தன் அரசுரிமையை யாருக்கு அளிக்க விரும்பினன்? அதன் விளைவுகளென்ன?
5. மாயாதுன்னை கோட்டை இராச்சியத்தில் நாட்டங்கொண்டதேன்? அவன் தனது நோக்கத்தில் எவ்வளவு தூரம் வெற்றி தோல்வி கண்டான்?
6. முல்லேரியா யுத்தம் யார் யாருக்கிடையில் எவ்வாண்டில் நடைபெற்றது? பெறுபேறென்ன?
7. கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயருக்கு உரிமையாக நேர்ந்த சந்தர்ப்பங்களை விபரிக்குக.
8. புவனேகபாகு, தர்மபாலா, இராசசிங்கன் என்போரில் இருவரைப்பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக
9. விதிய பண்டார, டொளுகத்தரினு, டொன் சுவான் தர்மபாலா, சாமோரின், தொரன்கா, விமலதர்மசூரியன் என்போரில் ஐவரைப் பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக.
10. சீதாவாக்கை சிறோங்கியமைக்கும், பின்னர் சீர்குன்றியமைக்கும் உரிய காரணங்களை ஆராய்க.
11. ஏழாம் புவனேகபாகு மாயாதுன்னை இருவருள் ஒருவரினது குணகுணங்களை விபரித்தெழுதுக.

---

## மூன்றும் அத்தியாயம்

# யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர்

முந்திய அத்தியாயத்தில் கோட்டை அரசர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகளும், உள்நாட்டுச் சண்டைகளும் வியாபாரப் பேராசைகொண்ட போர்த்துக்கேயருக்கு நாடுபிடிக்கச் சந்தர்ப்பமளித்தன என அறிந்தோம். அவர்கள் உள்நாட்டு அரசர்களின் விவகாரங்களில் தலையிடுவதற்கும், அதன் பயனாகக் கோட்டை இராச்சியத்தின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் இவையே காரணமாயிருந்தன என்பதையும் கண்டோம். யாழ்ப்பாண இராச்சியத்திலும் இவைபோன்ற காரணங்களால் உள்நாட்டு அரசர்களுக்குள் ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டபோது போர்த்துக்கேயர் தம்ஆட்சியை ஸ்தாபிக்க அனுகூலமாயிற்று. போர்த்துக்கேயர் தங்கள் ஆட்சியை யாழ்ப்பாணத்தில் எவ்வாறு நிலைநாட்டினர் என்பதுபற்றி ஆராய்வோம்.

கோட்டை இராச்சியம் வல்லமையுற்றிருந்தபோது கோட்டை அரசர்களுக்கு யாழ்ப்பாணத் தமிழ் அரசர்கள் திறை செலுத்தி வந்தனர். ஆயினும் பராக்கிரமபாகு இறந்ததும் அரசியற்குழப்பங் காரணமாகக் கோட்டை இராச்சியம் வலுக்குன்றியபோது யாழ்ப்பாண அரசனை **பரராசசேகரன்** என்பவன் 1478-ல் கோட்டை அரசனுக்கு அனுப்பிவந்த திறையை நிறுத்திச் சுதந்திர மன்னனாய்த் திகழ்ந்தான். இவனது காலத்திலேயே போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரலாயினர். 1519-ம் ஆண்டில் சங்கிலி என்பவன் யாழ்ப்பாண அரசனைக் கொன்றுவிட்டு அரசைக் கைப்பற்றிக் கொண்டான். முறைப்படி அரசுக்கு உரிமையுடைய அரசகுமாரன் தனக்குச் சேரவேண்டிய அரசைப் பெற்றுத் தரும்படியாகப் போர்த்துக்கேயருக்கு வேண்டுகோள் விடுத்தான். அந்தக்காலத்தில் அரசுரிமை இழந்து தத்தளித்த அரசர்கள் போர்த்துக்கேயரை நாடிய முறைப்படி இவனும் செய்ததில் தவறொன்றுமில்லை. போர்த்துக்கேயர் இந்த

உரிமையாளனுக்கு உதவ முன்வந்தனர். அதனால் யாழ்ப்பாண இராச்சியத்தில் கிறிஸ்தவ மதம் பரப்புவதற்கு வசதி யளிக்கவும், வருடந்தோறும் போர்த்துக்கல் அரசனுக்குத் திறை செலுத்தவும் வேண்டுமென இரு நிபந்தனைகளைப் போர்த்துக்கேயர் விதித்தனர். இவன் அந்நிபந்தனைகளுக்கு இணங்கியதும் 1543-ம் ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு ஒரு போர்த்துக்கேய கப்பற்படை அனுப்பப்பட்டது. மாயாதுன்னையைப்போல் புத்திசாதுரியமும், திடகாத்திரமும் உள்ளவனான சங்கிலியன் போர்த்துக்கேயரது படை வலிமையை அறிந்திருந்தான். எனவே அவன் போர்த்துக்கேய தளபதியைச் சந்தித்துப் போர்த்துக்கேயருக்குக் கப்பம் கட்டுவதாகவும், கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்குத் தன் இராச்சியத்தில் வழிசெய்வதாகவும் உறுதி கூறினான். இதனால் திருப்தியடைந்த போர்த்துக்கேய தளபதி யாழ்ப்பாண அரசுக்குரிய உரிமையாளனை ஒதுக்கிவிட்டுச் சங்கிலியன் அந்நாட்டு அரசனாக இருந்துவருவதற்கு அனுமதித்தான். வாக்களித்த பிரகாரம் சங்கிலியன் கப்பங்கட்டி வந்தான். போர்த்துக்கலிலிருந்து கிறிஸ்தவமதக் குருமார் யாழ்ப்பாணம் வந்து மக்களை மதம் மாற்றலாயினர்.

கிறிஸ்து மத போதகர்களின் அயரா உழைப்பினால் மக்கள் பெருவாரியாகக் கிறிஸ்தவ மதத்தைத் தழுவினர். சங்கிலியன் உறவினருட் சிலரும் கிறிஸ்தவராயினர். இதைக் கண்ணுற்ற சங்கிலிக்கு மனம் வெதும்பியது. கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள் போர்த்துக்கேயருடைய ஆட்சியை யாழ்ப்பாணத்தில் விரும்பி வரவேற்கலாம்— இவ்வாறு மதம் மாறிய கிறிஸ்தவர்கள் போர்த்துக்கேயருக்கு வேண்டியகாலங்களில் துணைபுரியலாம்— ஆதலின் மனம் திரும்பிய கிறிஸ்தவர்கள் தனக்கெதிராக எந்த நேரமும் கிளம்பக்கூடும் என்று சங்கிலி நினைத்தான். இதுசமயம் போர்த்துக்கேயர் கோட்டையில் ஏற்பட்ட உள்நாட்டுக் கலவரங்களை அடக்குவதில் கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்தனர். இதை உணர்ந்த சங்கிலியரசன் மன்னாருக்கு ஒரு படையை அனுப்பிக்



கிறிஸ்தவ மதத்திலிருந்து இந்து மதத்துக்குத் திரும்ப மறுத்தவர்களையெல்லாம் சொல்லொணாத் துன்பத்துக்குள்ளாக்கினான். ஒரே தடவையில் சிரச்சேதம் பண்ணப்பட்டவர்கள் மாத்திரம் அறுநூறு கிறிஸ்தவருக்குக் குறையாமலிருந்ததாகச் சொல்லப்படுகிறது.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தது வியாபாரத்துக்காகவும், மதப்பரப்புதலுக்குமாகும். இவை இரண்டும் நிறைவேற உதவியாயிருக்கும் அரசனுக்கு வேண்டிய ஒத்தாசை செய்தார்கள் என்றும், தடையாயிருந்து வந்தவர்களுடன் போர் தொடுத்தார்கள் என்றும் ஏற்கனவே கூறப்பட்டது. சங்கிலியன் போர்த்துக்கேய குருமாருக்கும், மதம் மாறிய யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்களுக்கும் இழைத்துவரும் தீங்கைக்கண்ணுற்ற **பிரான்சிஸ் ஸேவியர்** என்னும் கிறிஸ்தவ குருவானவர் சங்கிலியன்மீது போர் தொடுப்பதற்கு ஒரு கப்பற்படை அனுப்புமாறு கோவைத் தேசாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்தார். யாழ்ப்பாண அரசனாகிய சங்கிலியனின் அட்டகாசங்களை அறிந்த போர்த்துக்கேயர் மதம் மாறுபவர்களுக்கு அரசன் செய்யும் இடையூறுகளைத் தவிர்க்கவும், கிறிஸ்தவ மதத்தைத் தழுவியவர்களைப் பாதுகாக்கவும் சித்தமாயிருந்தனர்; 1544-ல் யாழ்ப்பாணத்துக்கு ஒரு போர்த்துக்கேய படை அனுப்பப்பட்டது. அரசனைத் தண்டிக்கச் சென்ற படைத்தளபதியும் வீரர்களும் தாங்கள்வந்த காரியத்தை விடுத்துத் திரவியங்களுடன் யாழ்ப்பாணக் கரையில் ஒதுங்கிய போர்த்துக்கேய கப்பலொன்றின் திரவியங்களைச் சேகரிப்பதில் நாட்டஞ் செலுத்தியமையால் சங்கிலியன் தனக்கு வரவிருந்த ஆபத்துக்களினின்றும் தப்பினான்.

தான் இனிக் கிறிஸ்தவர்களுக்குக் கொடுமை விளைப்பதில்லையெனச் சங்கிலி உறுதிகூறியமையின் போர்த்துக்கேய படையினர் அவனைத் தண்டியாது திரும்பினர். மீண்டும் சங்கிலியனது கொடுமைகளைப் பொறுக்கமாட்டாத யாழ்ப்பாண மக்கள் பலமுறைகளில் கோவைக்கு மனுக்கள் அனுப்பிவந்தனர். ஆனால் 1560-ம் ஆண்டு வரை போர்த்துக்கேயரின் கவனத்தைக் கவர்ந்தவை

இந்தியாவிலும், கோட்டை இராச்சியத்திலும் நடைபெற்ற போர்களாகும். இதன்பின்னர் அடுத்த ஆண்டில் சங்கிலியனுக்கெதிராக யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோட்படி ஒரு போர்த்துக்கேய சேனை யாழ்ப்பாணத்துக்குப் படையெடுத்துச் சென்றது. தனக்கு ஆபத்து வந்துவிட்டது என்பதை அறிந்த சங்கிலியன் இந்தியாவுக்கு ஓடினான். அங்கும் போர்த்துக்கேயர் அவனைத் தொடர்ந்த போது சங்கிலியன் சமாதானம் கோரினான். போர்த்துக்கல் அரசனைத் தனது எஜமானனாக ஏற்றுக்கொள்வதாகவும், விசுவாசத்துடன் நடந்து கப்பம் செலுத்துவதாகவும், மதம் பரப்பும் செயல்களுக்கு இடையூறு விளைப்பதில்லை எனவும் சங்கிலி உறுதியளித்தான். இவ்வுறுதிமொழியின் பேரில் போர்த்துக்கேயர் அவனை யாழ்ப்பாண அரசனாகத் தொடர்ந்து இருந்துவர அனுமதித்தனர். சங்கிலியன் போர்த்துக்கேயரால் சிறைபிடிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டான் எனக்கூறும் சரித்திர நூல்களும் உண்டு. சங்கிலியனை முற்றிலும் நம்பாதவர்களாய்ப் போர்த்துக்கேயர் ஒரு இராணுவத்தையும் அங்கு நிறுவினர். முகாம் இட்டிருந்த இராணுவ வீரர்கள் அக்கிரமங்களில் ஈடுபட்டு நாய்களைப்போல் அலைந்துதிரிந்து கொள்ளை, கொலை முதலியவற்றைச் செய்து யாழ்ப்பாண மக்களின் அவச்சொல்லுக்கு ஆளாயினர். பஞ்சமாபாதகங்கள் அனைத்தும் இவர்கள் புரிந்தனர். இக்காரணங்களால் கொதித்தெழுந்த யாழ்ப்பாண மக்கள் போர்த்துக்கேய படை வீரர்களைத் தாக்கினர். தாக்கப்பட்ட வீரர்கள் மன்னாருக்கு ஓட்டம் பிடித்தனர்.

இதற்குப் பிந்திய யாழ்ப்பாண அரசியல் சரித்திரமானது சற்றுத் தெளிவின்றிக் காணப்படுகிறது. நாளாவட்டத்தில் சங்கிலியன் கொடுங்கோலனாக மாறினான்; மக்களின் நன்மதிப்பை இழந்தான். அவனை நீக்கிவிட்டுக் **காசிநயினார்** என்பவனை மக்கள் தங்கள் அரசனாக்கினர். ஆட்சி பரிபாலனத்தில் சங்கிலியனுக்குத் தம்பியாகவே இவன் காணப்பட்டமையால் இவனை அரச பதவியிலிருந்தும் நீக்கி விடும்படி யாழ்ப்பாண மக்கள் போர்த்துக்கேயரை வேண்டினர். போர்த்துக்கேயர் காசிநயினாரைக் கொலைசெய்து **பெரியபிள்ளை** என்பவனை அரசனாக்கினர். பெரியபிள்ளை **இரண்டாம் செகராசசேகரன்** என்னும் பெயரோடு 1570-ல் பதவியேற்றான். இங்ஙனம் அரசர்களை "ஆக்குவதும் அழிப்பது"மான வேலையைப் போர்த்துக்கேயர் செய்து வந்தனர். போர்த்துக்கேயரே தனக்கு அரசைத் தேடித்தந்ததால் அரசனாகிய பெரியபிள்ளை அவர்களிடம் விசுவாசமாயிருந்தான்; கப்பமும் செலுத்தினான்; மதம் பரப்பவும் உதவினான். இப்படி நிகழுங்காலை **புவிராஜபண்டாரன்** என்னும் ஒருவன் பெரியபிள்ளையிடமிருந்து 1582-ல் அரசைக் கைப்பற்றியதுடன் போர்த்துக்கேயரது நோக்கங்களுக்குத் தன் நாட்டில் இடங்கொடுக்க மறுத்தான். இதனால் 1591-ம் ஆண்டு போர்த்துக்கேயர் அவனைக் கொன்றுவிட்டனர். அதே வருடத்தில் **நல்லூரில்** போர்த்துக்கேய தளபதி ஒருவன் யாழ்ப்பாணப் பிரமுகர்களைக்கொண்ட ஒருகூட்டத்தைக் கூட்டுவித்தான். இதுதான் சரித்திரத்தில் **நல்லூர் உடன்படிக்கை** எனப்படும். அதன்படி இராச்சியப் பிரமுகர்கள் போர்த்துக்கல் அரசனைத் தங்கள் அரசனாக ஏற்றுக்கொள்ள வேண்டும்; அவன் மக்களுடைய பழைய சம்பிரதாயத்தை யொட்டிய சட்டங்களுக்கும் பழக்க வழக்கங்களுக்கும் மதிப்புத்தந்து நடந்து கொள்ள வேண்டும். இந்த நிபந்தனைகளின்படி போர்த்துக்கல் அரசன் யாழ்ப்பாண அரசனாகப் பிரகடனப் படுத்தப்பட்டான். பெரியபிள்ளையினது மகன் உள்நாட்டில் அரசனாக (பிரதிநிதியாக) நியமிக்கப்பட்டான். பெரியபிள்ளை இறந்த போது திரும்பவும் யாழ்ப்பாணத்தில் உள்நாட்டுக் கலவரம் உண்டானது. இதைப்பயன்படுத்தக் கருதிய போர்த்துக்கேயர் **சங்கிலியன்** என்னும் மற்றொருவனை அரசனாக்கினர். அரசபதவிக்கு வந்ததும் இந்தப் புதிய சங்கிலியன் என்பவன் பழைய சங்கிலியனைப் போன்று போர்த்துக்கேயருக்கு எதிராக நடக்கத் தலைப்பட்டான். எனவே போர்த்துக்கேய தளபதியாகிய **கோன்ஸ்தாந்தின் டிசா** என்பவன் 1618-ம் ஆண்டில் **பிலிப் டி ஒலிவியெரா** என்பவனை அனுப்பிச் சங்கிலியனைத் தண்டித்தான். சங்கிலியனும்,

மனைவியும் கைதியாகக் கொழும்புக்குக் கொண்டுவரப் பட்டனர். அங்கிருந்து சங்கிலியன் கோவைக்கு அனுப்பப் பட்டு விசாரணைக்குள்ளாகி மரணதண்டனை விதிக்கப்பட் டான். அவனை அலபண்டேகா என்னும் சந்தை வீதி வழியே சிரச்சேதம் செய்யக் கொண்டுபோயினர் என வும், ஓர் இரத்தினக் கம்பளத்தின் நடுவே சிவந்த பட்டு மெத்தையொன்றிட்டு அதன்மேலே அவனைவைத்துச் சிரங்கொய்யப்பட்டதெனவும், சங்கிலியன் சிரச்சேத மடையுமுன்னர் தன் கைகளைப் பின்கட்டாகக் கட்ட விடுதல் தன் வீரத்துக்கு ஈனம் என மறுத்துத் துணி வோடு தண்டனையையேற்றனெனவும் யாழ்ப்பாண வைபவ கௌமுதி கூறுகின்றது.

இங்ஙனமாக நீண்டநாட்களாக யாழ்பாணத்தில் பிர முகர்கள் தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டிருந்த தால் அதற்கு ஒரு முற்றுப்புள்ளிவைத்துப் போர்த்துக் கேயரின் கீழ் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கொண்டு வரவேண்டுமெனத் தளபதியான கொன்ஸ்தாந்தின் டிசா திட்டம் வகுத்தான். அவன் நினைத்தது போன்று போர்த்துக்கேயப் படையெடுப்புகளினலும், அரசியல் பிரமுகர்களிடையே ஏற்பட்ட சச்சரவுகளினலும் மனம் நொந்துகிடந்த யாழ்ப்பாண மக்கள் போர்த்துக்கேயர் ஆட்சி தங்கள் நாட்டில் வேரூன்ற வழிசெய்தனர். சங்கிலி யன், காசிநயினர் போன்ற அரசர்களின் கொடுங்கோ லாட்சியினல் கஷ்டப்பட்ட மக்கள் போர்த்துக்கேயரது உதவியை நாடவேண்டியிருந்தது. ஆகவே 1621-ம் ஆண் டில் **பிலிப் டி ஒலிவியேராவின்** உதவியோடு யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் ஆளத்தொடங்கினர்.

**விசேட குறிப்பு.** பறங்கியர் தமதாட்சியின்போது தமிழரசர் களின் பரம்பரையான முறைகளைப் பெரிதும் மாற்றாது கைக் கொண்டனர். யாழ்ப்பாண நாடு முன்போலவே வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி, பச்சிலைப்பளி என்னும் நான்கு பிரிவு களையுடையதாயிருந்தது. **தோம்பு:** யாழ்ப்பாண நாட்டின் சகல காணிகளையும் விரிவாகப் பதிவுசெய்து ஒல்லாந்தருக்கும், பிரிட்



டிஷ் அரசினருக்கும் காணிப்பதிவு விஷயத்தில் முன்மாதிரி காட்டி விட்டவர்கள் பறங்கியரேயாகும். **தேசவழமை:** பறங்கியர் யாழ்ப்பாணத்தைத் தேசவழமைப்படியே பரிபாலித்தனர். இத் தேசவழமையே ஒல்லாந்தர் காலத்தில் விபரமாய் எழுதிவைக் கப்படுவதாயிற்று. முதுசொம், சீதனம், தேடியதேட்டம் என் பவைபற்றிய ஒழுங்குகள் தமிழ் வழமையை அனுசரித்துப் பறங் கியராற் சட்டமாக்கப் பட்டவைகள். **சமயக் கொள்கை:** பறங் கியர் சனங்களையெல்லாம் கிறிஸ்தவர்களாகுமாறு போதித் தனர். அவ்விதம் மதம் மாறினோர்க்குப் பலவித உத்தியோகங் களையும் கொடுத்தனர். மதம் மாறப் பின்னின்றோரை ஒறுத் தனர். **கல்வி விருத்தி:** தம்சமய ஆலயங்களை ஊர்கடோறும் கட் டியதோடமையாது பறங்கியர் அவ்வாலயங்களுக் கணித்தாய்ப் பள்ளிக்கூடங்களையும் பட்டினத்தில் உயர்தரகல்வியூட்டும் பெரிய வித்தியாசாலையையும் ஸ்தாபித்துச் சிறுவருக்குக் கல்வியூட்டு வித்தனர் என இன்னபிற விபரங்களை யாழ்ப்பாண வைபவகௌ முதி என்னும் நூல் கூறுகின்றது.

**சுருக்கம்**

## யாழ்ப்பாண அரசர்கள்
## 1478—1621

1. முதலாம் பரராசசேகரன் *1478—1519*
2. முதலாம் செகராசசேகரன் (சங்கிலியன்) *1519—1561*
3. புவிராசபண்டாரன் } *1561—1570*
4. காசிநயினர் }
5. இரண்டாம் செகராசசேகரன் (பெரியபிள்ளை) *1570—1582*
6. இரண்டாம் பரராசசேகரன் (புவிராசபண்டாரன்) *1582—1591*
7. எதிர்மன்ன சிங்கன் *1591 — 1615*
8. இரண்டாம் சங்கிலியன் *1615—1621*

போர்த்துக்கேயர் இலங்கையில் தம்மாட்சியை ஸ்தாபிக்க அரசர்களுக்குள் ஏற்பட்ட சச்சரவுகள், உள்நாட்டு விவகாரங்களில் தலையிடக் கிடைத்த சந்தர்ப் பங்கள் அநுகூலமாயிருந்தமை— 1478-ல் யாழ்ப்பாண அரசியல் நிலைமை— பரராசசேகரன் கோட்டை அரசனுக்கு அனுப்பிவந்த திறையை நிறுத்தல்— 1519-ல் சங்கிலியன் யாழ்ப்பாண அரசனாதல்— அரசுக்குரிமையான இளவரசன் போர்த்துக்கேயர் உதவியை நாடல்— போர்த்துக்கேயரது உதவியும் பிடிக்கப்படாமை— [illegible] சங்கிலியன் தானே முந்தி பிடித்தவைகளையேற்றல்— கிறிஸ்தவ குருமார்

யாழ்ப்பாணம் வரலும் மதம் மாற்றலும்—மக்கள்பெருந்தொகையாய் மதம் மாறல்—சங்கிலியனின் கவலை— கிறிஸ்தவர்களை ஒழிக்க முயற்சித்தல்— இவர்களைக் காப்பாற்ற 1544-ல் ஓர் போர்த்துக்கேய படை யாழ்ப்பாணம் வரல்— படைவீரரின் வேதுவனமும் சங்கிலியன் தப்புதலும்— யாழ்ப்பாண மக்களின் வேண்டுகோளும் போர்த்துக்கேயரின் இரண்டாம் படையெடுப்பும்— சங்கிலியனின் இரண்டாம் சமதான உடன்படிக்கை— யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் படைநிறுவுதல்— போர்த்துக்கேய வீரரின் அக்கிரமச் செயல்கள்— சங்கிலியனின் கொடுங்கோல்— காசிநயினார் ஆட்சிப்பீடத் தமர்தல்— காசிநயினாரதும் கொடுங்கோலாட்சி— மக்கள் வேண்டுகோட்படி பெரியபிள்ளையை அரசனாக்கல்— பெரியபிள்ளை போர்த்துக்கேயருக்கு அடிபணிந்து நடத்தல்— புவிராச பண்டாரன் அரசைக் கைப்பற்றல்— போர்த்துக்கேயர் அவனைக்கொல்லல்— நல்லூர் உடன்படிக்கை— எதிர்மன்னசிங்கன் அரசனாக நியமிக்கப்படல்— பெரியபிள்ளை இறந்தபோது உள்நாட்டுக் கலவரம்— இரண்டாம் சங்கிலியனை அரசனாக்கல்— அவன் மதமாற்றம் முதலியவற்றில் போர்த்துக்கேயருக்கெதிராக நடத்தல்— 1618-ல் சங்கிலியன் கைதியாக்கப்பட்டு பின்னர் சிரச்சேதம் செய்யப்படல்— யாழ்ப்பாணத்தில் 1621-ல் பிலிப் டி ஒலிவியேராவின் அதிகாரத்தின்கீழ் போர்த்துக்கேயராட்சி ஆரம்பமாதல்.

### வினாக்கள்

1. போர்த்துக்கேயர் தமதாட்சியை இலங்கையில் நிலைநாட்டுவதற்குச் சந்தர்ப்பமளித்த ஏதுக்கள் எவை?

2. யாழ்ப்பாணத்திற்குப் போர்த்துக்கேயர்வரவும், படிப்படியாகத் தமதாட்சியை நிலைநாட்டவும், மக்களை மதம் மாற்றவும் துணைபுரிந்த சந்தர்ப்பங்களை ஆராய்க.

3. முதலாம் சங்கிலியனைப்பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

4. காசிநயினர், பெரியபிள்ளை, புவிராசபண்டாரன், எதிர்மன்னசிங்கன், பிலிப் டி ஒலிவியேரா, கொன்ஸ்தாந்தின்டிசா—ஒவ்வொருவரைப்பற்றியும் சிறுகுறிப்பெழுதுக.

5. சங்கிலியனின் இரண்டாம் சமதான உடன்படிக்கை,நல்லூர் உடன்படிக்கை —ஒவ்வொன்றிலும் கூறப்பட்ட நிபந்தனைகள் யாவை?

---

நாலாம் அத்தியாயம்

# கண்டியில் போர்த்துக்கேயர்

கி.பி.1505-ம் ஆண்டில் போர்த்துக்கேயர் இலங்கையில் கால் வைத்தாலும் ஏறக்குறைய 35 ஆண்டுகளுக்குப் பின்பே கண்டி இராச்சியத்துடன் தொடர்பு அவர்களுக்கு ஏற்பட்டது. கறுவாப்பட்டை வியாபாரத்துக்கும் கிறிஸ்தவமத போதனைக்கும் கண்டி இராச்சியம் ஏற்ற இடமாய் இருந்துங்கூடப் பல தவிர்க்கமுடியாத காரணங்களால் போர்த்துக்கேயர் அங்கு கவனம்செலுத்த முடியாது போயிற்று. கோட்டை இராச்சியத்தில் 15 வருடங்களாக வியாபாரம் செய்துவந்து முஸ்லீம் வியாபாரிகளுடன் போட்டியிட்டுக் கோட்டை இராச்சியத்தில் முஸ்லிம்களது வியாபாரத்தைப் போர்த்துக்கேயர் பறித்ததுமன்றி நாட்டுஅரசனுடன் சௌஜன்னியமான முறையில் வாழவேண்டிய வழிகளை அவர்கள் தேடவேண்டியதாயிற்று. அதைஅடுத்துப் புவனேகபாகுவுக்கும் மாயாதுன்னைக்கும் நடந்த சச்சரவில் போர்த்துக்கேயர் தலையிடவேண்டியதாயிற்று. இக்காரணங்களால் கண்டி இராச்சியத்தின்மீது போர்துக்கேயர் தம் கண்ணோட்டத்தைச் செலுத்தவில்லை. கோட்டை இராச்சியம் 1521-ம் ஆண்டில் பிரிக்கப்பட்டபோது கண்டி இராச்சியத்தை ஆண்ட அரசன் விக்கிரமபாகு ஆவான். அவன் ஆட்சிக்காலத்தில் உள்நாட்டில் சமாதானம் நிலவி வந்தது. எனவே போர்த்துக்கேயருக்கு அங்கு தலையிடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படவில்லை.

1539-ம் ஆண்டில் கள்ளிக்கோட்டை ஸாமோரினது படைத்தலைவர்களின் தலைகளைக் கொய்து போர்த்துக்கேயருக்குத் தூபம்போட்டு மாயாதுன்னை அவர்களது சிநேகிதத்தைப் பெற்றுக்கொண்டான். போர்துக்கேயரின் ஆதரவின்கீழ் இருந்த தன் தமையன் புவனேகபாகுவோடு போர்செய்வதற்குத் தனது படைப்பலம் போதாது என்று உணர்ந்திருந்தான். அதே சமயத்தில் இலங்கைமுழுவதுக்கும் தான் அரசனாக வேண்டுமென்ற

பேராசையால் உந்தப்பட்டதனால் கண்டி இராச்சியத்தின் மீது படையெடுக்கக் கருதினான். இந்தக் கண்டி முற்றுகையில் புவனேகபாகு தன் சகோதரன் மாயாதுன்னையுடன் சேர்ந்து கொண்டான். இவ்வளவு காலமாக விரோதிகளாய் இருந்தும் 12 வருடங்களில் நாலுதடவை புவனேகபாகு மாயாதுன்னையால் தாக்கப்பட்டும் அவற்றைப் பொருட்படுத்தாத முறையில் இருவரும் ஒருவருக்கொருவர் ஒத்தாசை செய்தனர் என்றால் அது ஆச்சரியத்துக்குரியதே. கண்டி அரசனாகிய விக்கிரமபாகு சகோதரர் இருவருடைய படைப்பலத்துக்கு முன் தன் படைப்பலம் நிற்காது என்பதை உணர்ந்து போர்த்துக்கேயர் உதவியை நாடினான். தான் ஒரு கிறிஸ்தவனாக மாறுவதாகவும் தன் இராச்சியத்தில் போர்த்துக்கேயருடைய வர்த்தகத்துக்கும் வேதபோதனைக்கும் வேண்டிய வசதிகளை அளிப்பதாகவும் வாக்களித்தான். தங்கள் நோக்கங்கள் ஈடேற வழியுண்டென்று அறிந்த போர்த்துக்கேயர் விக்கிரமபாகு அரசனே மதம் மாறுவதால் மதப் பரப்புதலுக்கு அமோகமான வரவேற்பு கண்டி இராச்சியத்தில் இருக்கும் என்றும் பலர் மனம் திரும்புவார்கள் என்றும் எதிர்பார்த்துத் தங்கள் உதவியை அரசனுக்கு அளிப்பதாகக் கூறினர். இலங்கைக்கு வெளியே இந்தியாபோன்ற இடங்களில் பல போர்களில் ஈடுபட்டிருந்ததால் போர்த்துக்கேயர் விக்கிரமபாகு உதவிகோரிய சமயத்தில் படைகளை அனுப்ப இயலாது இருந்தனர். கடைசியாக 50 போர்த்துக்கேயப் போர்வீரர்கள் அடங்கிய படை ஒன்றினைக் காலந்தாழ்த்திக் கண்டிக்கு அனுப்பினர். இதற்கிடையில் போர்த்துக்கேயரின் உதவியை எதிர்பார்த்து ஏமாந்த கண்டி அரசன் விக்கிரமபாகு வேறு வழியின்றிப் படையெடுப்பவர்களுடன் சமாதானம் கோரவேண்டியவனானான். அதன்படி விக்கிரகபாகு மாயாதுன்னை கேட்ட விடுதலைப்பணத்தைக் கொடுத்ததுடன் புவனேகபாகுவின் பேரப்பிள்ளையான தர்மபாலாவுக்குத் தன் மகளை மணம் முடித்துத் தருவதாகவும் கூறினான். இதற்குப்பின் கோட்டை இராச்சியத்திலும், யாழ்ப்பாண இராச்சியத்திலும் தலையிட்டுக் கொண்



டிருந்த போர்த்துக்கேயருக்குக் கண்டியைப்பற்றிக் கவனமில்லாது போயிற்று. இவ்விதமாகவே போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தில் தங்கள் நோக்கங்கள் ஈடேற வழிவகைகள் இருந்துங்கூடக் காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளத் தவறிவிட்டனர்.

1582-ம் ஆண்டில் கண்டி இராச்சிய விவகாரங்களில் தலையிடப் போர்த்துக்கேயருக்கு மற்றொரு சந்தர்ப்பம் இருந்தது. மாயாதுன்னையின் மகனாகிய முதலாம் இராஜசிங்கன் கண்டி அசனாகிய **கரலியட்ட பண்டார** என்பவனைத் துரத்திவிட்டுத் தானே கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டான். துரத்தப்பட்ட கண்டி அரசன் சிறுவர்களான தன் மருமகனையும், மகளையும் தன்னுடன் கூட்டிச் சென்று போர்த்துக்கேயரிடம் அடைக்கலம் புகுந்தான். இரு குழந்தைகளும் ஞானஸ்நானம் பெற்று முறையே **டொன்பிலிப்பு, டோனாகத்தரினா** என்னும் பெயர்களைப் பெற்றனர். இவ்விபரம் இரண்டாம் அத்தியாயத்தில் நீங்கள், வாசித்தறிந்ததாகும்.

முதலாம் இராஜசிங்கன் தனது கொடுமை காரணமாக மக்களால் வெறுக்கப்பட்டான். தனக்கெதிராகக் கிளம்பியவர்களைக் கடுந்தண்டனைக் குள்ளாக்கினான். கண்டி இராச்சியப் பிரஜைகள் கொதித்தெழுந்து போர்த்துக்கேயர் உதவியை நாடினர். உரிமையாளனான டொன்பிலிப்பைப் பட்டத்திரசனாக்கத் துடித்தனர். இத் தருணத்தைப் பயன்படுத்திக்கொண்டு போர்த்துக்கேயர் **கோணப்பு பண்டார** என்னும் வீரனைப் படைகளுடன் கண்டி இராச்சியத்துக்கு அனுப்பினர். இவ்வீரன் கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்து **டொன்ஜுவான் கோணப்பு பண்டார** என்னும் நாமத்தைப்பெற்றான். கண்டியிலுள்ள சிங்கள வீரர்கள் இவனுக்கு ஆதரவு நல்கினர். இவன் முதலாம் இராஜசிங்கனை முறியடித்து டொன்பிலிப்பைக் கண்டிச் சிம்மாசனமேற்றினான்.

டொன்பிலிப்பு சிம்மாசனமேறியவுடன் கண்டிய பரம்பரையைச் சேர்ந்த அரசனானவன் தங்களுக்கு அர

சனானான் என்பதை உணர்ந்த கண்டி இராச்சியமக்களும், கிறிஸ்தவன் ஒருவன் அரசனானான் - அவன் தங்கள் நோக்கங்களுக்கு அநுசரணையாக இருப்பான் என்று போர்த்துக்கேயரும் நினைத்து மிக அகமகிழ்ந்தனர். ஆனால் டொன்ஜுவான் கோணப்பு பண்டார மட்டும் திருப்தியடையவில்லை. ஏமாற்ற மடைந்த கோணப்புப் பண்டார போர்த்துக்கேயருக்கு விரோதமாக இராச்சிய மக்களைத் தூண்டினான். இச்சமயம் டொன்பிலிப்பும் திடீர் மரணமடைந்தான். டொன்ஜுவான் என்பானே நஞ்சைக் கொடுத்து டொன்பிலிப்பைக் கொன்றான் எனப் போர்த்துக்கேயர் கருதினர். கோணப்பு பண்டார தனக்கு ஆதரவாயிருந்த ஒரு சிலரது முயற்சியால் கண்டி அரசைக் கைப்பற்றினான். கண்டி மக்களுக்கு விருப்பமான வகையில் அரசு புரிந்து அவர்களது நல்லெண்ணத்தைச் சம்பாதித்தான். சட்டப்படி கண்டி அரசுரிமைக்குப் பாத்திரமாகாத டொன்ஜுவான் மக்கள் மனதைக் கவரும்படியாகத் தன் கிறிஸ்தவப் பெயரை மாற்றிப் பௌத்தனாக மாறி விமலதர்ம சூரியன் என்றும் பெயரைச் சூட்டிக்கொண்டு அரசாண்டான். டொன் ஜுவானுடைய கொள்கைகள் போர்த்துக்கேயருடைய நோக்கங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாக இருந்தன. மேலும் மதம் மாறிய அவன் கண்டிமக்களுக்கும் ஒரு கெட்ட முன்மாதிரியாக இருப்பான் எனக் கருதிய போர்த்துக்கேயர் கண்டி. இராச்சியத்தின் மீது படையெடுத்துக் கண்டி அரசுக்குரிமையுடைய டொனா கத்தரினாவை அரசியாக்கினர். தங்கள் பழைய கண்டி அரசனாகிய கரலியத்த பண்டாராவின் மகள் டொனாகத்தரினாவாக இருந்தபடியால் கண்டி மக்களும் மிகுந்த சந்தோஷப்பட்டனர். விமலதர்ம சூரியன் முறியடிக்கப்பட்டு ஓடி ஒளித்துக் கொண்டான். டொனாகத்தரினா அரசியாகப் பிரகடனப் படுத்தப்பட்டதால் அவள் தங்களது நோக்கங்களுக்குத் தடையாக இருக்கமாட்டாள் என்று போர்த்துக்கேயர் நம்பினர்.

கண்டிச்சிம்மாசனம் ஏறிய டொனாகத்தரினா போர்த்துக்கேயரது கைப்பொம்மை போலிருந்து காரியங்களைச்



செய்து வந்தாள். அவர்கள் சொல்லுக்கு மறு சொல் சொல்லாது அவர்களின் ஆதரவில் இருந்து வரலானாள். காலாவட்டத்தில் போர்த்துக்கேய பிரபு ஒருவனுக்கு அரசி டொனாகத்தரினாவை மணம் முடிப்பதாகப் போர்த்துக்கேயர் திட்டம் வகுத்தனர். போர்த்துக்கேயப் பிரபுவைத் தங்கள் அரசி மணப்பதை விரும்பாத கண்டி மக்கள் ஜெயவிர பண்டார என்பவனை அரசி மணக்க வேண்டும் என்று விரும்பினர். இதைப் போர்த்துக்கேயர் விரும்பவில்லை. அரசியின் மணம் முடிக்கக் கொடுத்து வைக்காத ஜெவீர பண்டார பதுங்கி இருந்து விமலதர்ம சூரியனுடன் சேர்ந்து அவனிடம் போர்த்துக்கேயரைக் காட்டிக் கொடுப்பதாகக் கூறினான். ஆகவே இருவரும் திட்டம் போட்டனர். இந்தச் சதித்திட்டத்தை அறிந்த போர்த்துக்கேயர் ஜெவீர பண்டாராவைக் கொன்றுவிட்டனர். இதன்பின் தலைமறைவாயிருந்த விமலதர்ம சூரியன் கண்டி இராச்சிய மக்களின் துணைக் கொண்டு போர்த்துக்கேயரோடு பொருது அவர்களைத் தோற்கடித்தான். இறுதியில் டொனா கத்தரினாவை மணந்து விமலதர்ம சூரியன் கண்டிக்குச் சட்டப்படி அரசனானான்.

கண்டி இராச்சியத்துக்கு அரசனாகிய விமலதர்ம சூரியனின் குணாதிசயங்களைப்பற்றி ஒரு சிறிது ஆராய்வது பொருத்தமுடையதாகும். அவன் சிறுவயதிலிருந்தே போர்த்துக்கேயரால் வளர்க்கப்பட்டமையால் அவர்களது நடையுடை பாவனைகளை நன்கு அறிந்திருந்தான். போர் வித்தைகளைச் செவ்வனே கற்றறிந்து போர்த்துக்கேயரையும் புறமுதுகிட்டு ஓடும்படி செய்துள்ளான். பாரபட்சமின்றி எல்லோருக்கும் ஒரே மாதிரியான நீதி வழங்கினான். கட்டுமஸ்தான தேகக்கட்டும் புஜபல பராக்கிரமும் உடையவன். சர்வ புருஷ இலட்சணங்களும் பொருந்திய ஆஜானபாகுவாக விளங்கிய இவன் திண்ணிய திறமும் நுண்ணிய அறிவும் உடையவன். யாவருக்கும் அஞ்சாதவனாய் இருந்து போர்த்தந்திரத்தில் தனக்கு ஒப்புமையின்றித் திகழ்ந்தான். மக்கள் மனதைப் புண்படுத்தாது இருந்து அவர்களுக்கு ஏற்றவாறு தன்

நிலையை மாற்றிக்கொண்டான். கிறிஸ்தவமதத்தினின்று மாறிப் பௌத்த மதத்தை தழுவினான். புத்த பிரானது தந்தத்தை வைத்துப் பூசிப்பதற்காக இரண்டு அடுக்கு ஆலயத்தைக் கட்டினான். பௌத்த துறவிகளுக்குக் குருப்பட்டம் அளிப்பதற்காக அரக்கனிலிருந்து பௌத்த குருமாரை வரவழைத்தான். இத்தனை நற்குணங்களும் செய்கைகளும் விமலதர்ம சூரியனிடமிருந்தாலும் குற்றங் குறைகள் இல்லாமலிருக்கவில்லை. கண்டி இராச்சியத்தின் "இராஜத் துரோகி" "மதத் துரோகி" என்று ஒரு சரித்திர ஆசிரியர் விமலதர்ம சூரியனை வர்ணித்துள்ளார்.

இதுவரை சொல்லியவற்றால் போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தில் தங்களது மதப் பரப்புதலுக்கும் வியாபாரப் பெருக்கத்துக்கும் உதவி செய்வதாக வாக்களித்த அரசர்களுக்கு அல்லது அரச பாத்தியதை கொண்டாடியவர்களுக்கு உதவிபுரிவான் வேண்டித் தலையிட்டனர் என்பது புலப்படும். இனி அவர்கள் கண்டிமீது படையெடுத்து அந்த இராச்சியத்தில் தங்கள் ஆட்சியை ஸ்தாபித்துக் கொண்டதைப்பற்றிப் படிப்போம்.

போர்த்துக்கேயர் கண்டியின் மீது படையெடுத்து அந்த இராச்சியத்தில் தமது ஆட்சியை ஸ்தாபிப்பதற்கு வர்த்தகம், மதம், இராணுவம் ஆகிய மூன்று விஷயங்கள் பற்றிய காரணங்களிருந்தன. கண்டிச் சிம்மாசனமேறிய விமலதர்மசூரியன் போர்த்துக்கேயருடைய வர்த்தக வளர்ச்சிக்குப் பாதகமாயிருந்தான். அன்றியும் அவன் புத்தமதத்தைத் தழுவியபின் அம்மத வளர்ச்சிக்குப் பாடுபட்டுக் கிறிஸ்தவ மதத்தை வெறுக்கலானான். மற்றும் கிறிஸ்தவர்களைக் கொடுமைப் படுத்தவும் எத்தனித்தான். இவைகளன்றிப் பயிற்சியிலும், இராணுவ அனுபவத்திலும் யுத்த தளவாடங்களுடைமையிலும் கண்டி இராச்சிய அரசனைவிட எத்தனையோ மடங்கு மேம்பட்டிருந்த போர்த்துக்கேயர் விமலதர்ம சூரியனை இலகுவில் பொருது வெற்றிமாலை சூடலாம் என நம்பினர். ஏனெ



னில் கோட்டை இராச்சியத்திலும், யாழ்ப்பாண இராச்சியத்திலும் பல போர்களில் வெற்றி கண்ட அவர்கள் கண்டி இராச்சியப் படையெடுப்பை வெகு சுலபமாக நடத்தலாம் என எண்ணினர். இக்காரணங்கள் மட்டுமன்றி கோவை நகரைவிட இலங்கையானது போர்த்துக்கேயர் தமதாட்சியை நிலையாக்குவதற்கு வாய்ந்த கேந்திரஸ்தானமாகவும் இருந்தது. இந்துமகா சமுத்திரத்தையொட்டிய நிலப்பரப்பைக் கவனித்தால் இலங்கை கேந்திரஸ்தானம் வகிப்பதும் அங்கிருந்து கொண்டு அச் சமுத்திரத்தை யொட்டிய பகுதிகளில் ஆணை செலுத்துதல் இலகு என்பதும் புலப்படும். இலங்கை தலைமையான ஆட்சிப்பீடம் ஆகவேண்டுமானால் இலங்கை முழுமையும் போர்த்துக்கேயரின் பரிபாலனத்தின்கீழ் அமைய வேண்டுவது அவசியமாகும். தங்களுடைய செல்வாக்குக்குத் தடங்கலான கண்டி அரசனை அதிகாரம் செலுத்த விட்டு வைத்துக் கொண்டு போர்த்துக்கேயர் இலங்கையைத் தமது ஆட்சிப் பீடமாக்க முடியாது; எனவே கண்டி இராச்சியத்தின் மீது படையெடுப்பதைத் தவிர அவர்கட்கு வேறு வழியில்லை.

கண்டி இராச்சியத்தின் மீது போர்த்துக்கேயரது படையெடுப்புகள்பற்றி இனிக்கவனிப்போம். கி. பி. 1594 ம் ஆண்டில் "லோப்ஸ் டி சௌசா" என்னும் போர்த்துக்கேய வீரன் இலங்கையின் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப்பட்டான். இவனே விமலதர்ம சூரியனைக் கண்டி அரசாட்சியினின்றும் அகற்றி அதைக் கைப்பற்றும்படி அனுப்பப்பட்டவன். அவன் தான் வந்த காரியத்தில் வெற்றி பெற்றுக் கிறிஸ்தவ மதத்தினளான டோனா கத்தரீனாவைக் கண்டி அரசியாக்கினான். ஆனால் கடைசிவரை கண்டி மக்களின் நல்லெண்ணத்தைச் சம்பாதித்துக் கொள்ளப் போர்த்துக்கேயரால் முடியாது போயிற்று. ஈற்றில் போர்த்துக்கேயர் விமலதர்மசூரியனால் தன்துறுபா என்ற இடத்தில் போரில் எதிர்க்கப்பட்டனர்.

## போர்த்துக்கேயர் போரில் தோற்ற காரணங்கள்

போர்த்துக்கேயர் கண்டி இராச்சியத்தில் படையெடுத்தபோது விமலதர்மன் உணவுப் பொருட்களை எடுத்துக் கொண்டு நாட்டைவிட்டு ஓடி மறைந்து கொண்டதும் உணவு இன்றிப் போர்த்துக்கேயப் படைகள் தத்தளித்ததும், அவர்களுக்கு உதவியாக இருந்த சேனாவீரர்கள் அவர்களுக்குத் துரோகஞ் செய்துவிட்டு அகன்று போனதும் போர்த்துக்கேயர் தோல்விக்கு முக்கிய காரணங்களாகும். இவ்வாறு தோல்வியுற்ற போர்த்துக்கேயர் அவமானம் தாங்கமாட்டாமல் தங்கள் இராணுவத்தின் மதிப்பைக் காக்க எண்ணினர். போர்த்துக்கேய இராணுவப் பிரதிநிதியும் கண்டியை எப்படியும் முற்றுகையிட்டுத் தீரவேண்டும் என்று உறுதி பூண்டான். மேலும் இந்நிலையில் விமலதர்ம சூரியன் தன்னை இலங்கை முழுமைக்கும் அரசனெனப் பிரகடனப்படுத்தினான். நாம் ஏற்கெனவே அறிந்தவாறு தர்மபாலாவின் மரணசாதனப்படி விமலதர்ம சூரியனின் இப்பிரகடனம் போர்த்துக்கேயரால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஏனெனில் அந்த நன்கொடைச் சாதனப்படி கோட்டை அரசனே இலங்கை முழுவதற்கும் அரசனாக உரிமை உள்ளவனாவான். இறுதியாகக் கோட்டை இராச்சியமக்கள் விமலதர்மசூரியனைத் தங்கள் அரசனாக ஒப்புக்கொள்ளத் தயாராய் இருந்தனர். அரசன் தூண்டுதலின் பேரில் போர்த்துக்கேயருக்கு விரோதமாகவும் அவர்கள் கிளம்பினர். இதைக் கண்ட போர்த்துக்கேயர் கோட்டையிலுள்ள தங்கள் அரசாட்சிக்கும் செல்வாக்குக்குங்கூட விமலதர்ம சூரியன் பங்கம் விளைத்ததாகக் கருதினர். ஆகவே 1602-ம் ஆண்டில் **ஜெரோனிமோடி அசவிடோ** என்னும் போர்த்துக்கேய பிரதமசேனாதிபதியின் தலைமையில் கண்டி முற்றுகையிடப்பட்டது. போர்த்துக்கேயப்படை **கனனேத்தன** வைக் கைப்பற்றிப் **பலானே** [Bolonde] என்னும் இடத்தைத் தாக்கியது. பின்பு கண்டி அரசனைப் பிடித்துக் கொலை செய்வதற்காக **அசவிடோ** முயன்றான். ஆனால் இம்முயற்சி பலிக்காது போகவே கொழும்புக்குத் திரும்பிவிட்டான்.



போர்த்துக்கேய அரசாங்கத்தின் பிரதிநிதியாக இலங்கையில் இருந்த பிரதம சேனாதிபதி 1597-ம் ஆண்டில் தனது பரிபாலனத்துக்குள் அடங்கிய பிரதானிகள் கூட்டமொன்றை **மல்வானை** என்னுமிடத்திற் கூட்டினான். தர்மபாலனது நன்கொடைச் சாதனப்படி போர்த்துக்கேய அரசனே இலங்கைக்கும் அரசன் என்ற பிரகடனம் அமோக வரவேற்புகளுக்கிடையே பிரகடனப்படுத்தப்பட்டது. இதுகுறித்துச் சிங்கள அரச குடும்பத்தினரும், பிரதானிகளும் பிரமாணஞ்செய்து கொடுத்தனர். தர்மபாலனது சாதனம் வாசிக்கப்பட்டது. இலங்கையில் சட்டப்படி அரசபரிபாலனம் நடைபெறவேண்டுமென்று பிரதானிகளால் தீர்மானிக்கப்பட்ட பிரகாரம் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதே சமயத்தில் பழைய சம்பிரதாயங்களுக்கு விரோதமாக கிறிஸ்தவ மதப்பிரசாரம் செய்யப் பூரண சுதந்திரம் இருக்கவேண்டுமென்று சேனாதிபதியால் கேட்டுக்கொள்ளப்பட்ட பிரகாரம் அக்கூட்டம் அந்நிபந்தனையையும் அங்கீகரித்தது. இவ்வாறு ஒப்புக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளடங்கிய பிரகடனம் **மல்வானை உடன்படிக்கை** எனப்படும்.

கி. பி. 1602-ம் ஆண்டு நடந்த ஒரு சம்பவமானது சுயேச்சையான ஒரு கண்டி இராச்சியம் இலங்கையில் போர்த்துக்கேயரது ஆட்சிக்கு ஊறு விளைவிக்கலாம் என்பதைத் தெளிவாக்கிற்று. இவ்வருடத்தில் இரு டச்சு இராச தூதர்கள் கண்டி அரசன் விமலதர்மசூரியனைப் பேட்டிகாண வந்தனர். **ஒல்லாந்தர்** என அழைக்கப்படும் **டச்சு** சாதியைச் சேர்ந்த இவர்கள் கீழைநாட்டுக்கு வந்தமை ஏலக்காய், சாதிக்காய், கறுவாப்பட்டை, கராம்பு போன்ற விலையுயர்ந்த பொருட்கள் பற்றிய ஏற்றுமதி வர்த்தக சம்பந்தமானவையே. கண்டி இராச்சியத்தில் இவர்கள் நுழைந்ததைக் கண்ட போர்த்துக்கேயர் திகிலடைந்தனர். இவ்வொல்லாந்தர் போர்த்துக்கேயரைக் கடல்மார்க்கமாகத் தாக்கலாம் என்ற சந்தேகம் போர்த்துக்கேயருக்குண்டு. மேலும் கண்டி மக்களும் ஒல்லாந்தருடன் சேர்ந்து போர்த்துக்கேயரைத் தாக்க

லாம் - இங்ஙனமாக இருபுறத்திலும் தாக்குதல் நடைபெற்றால் தாம் இலங்கையினின்று இலகுவில் துரத்தப்படலாம் - இக்காரணத்தால் கண்டியை எப்படியும் கூடிய விரைவில் தமதாக்கிக் கொள்வதென்று போர்த்துக்கேயர் உறுதிப்பாடு கொண்டனர். எனவே 1603-ம் ஆண்டில் போர்த்துக்கேயப் பிரதம சேனாதிபதி அசவிடோ திரும்பவும் கண்டிமீது படையெடுத்தான்; **பலானை** கைப்பற்றப்பட்டது. கண்டி நகரைத் தாக்குவதற்குச் சேனாதிபதி ஆயத்தமானான். கண்டி இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் இலகுவில் கைப்பற்றிவிடுவார்கள் என்பதாகக் கருதப்பட்டது. ஆனால் சேனாதிபதியுடன் சென்ற சிங்கள வீரர்கள் போர்த்துக்கேயச் சேனையை விட்டுக் கண்டியரசனுடன் சேர்ந்துகொண்டனர். செய்வதின்னதென்றறியாத போர்த்துக்கேயர் பின்வாங்கினர். பின்னோக்கிச்சென்ற போர்த்துக்கேயச் சேனையை விமலதர்ம சூரியனின் படைகள் நான்கு பக்கங்களிலும் சுற்றி வளைத்துப் போர்செய்து அழித்தன. அசவிடோவும் வேறுசிலரும் தப்பியோடிக் கோட்டையை அடைந்தனர்.

இதற்கிடையிற் கண்டி அரசன் போர்த்துக்கேயரை இலங்கையினின்றும் அகற்றும் நோக்கத்தோடு ஒல்லாந்தருதவியை நாடினான். துரதிஷ்டவசமாகக் கண்டிக்கு வந்த இரு ஒல்லாந்தரில் ஒருவனாகிய **செபால்டு டி வியர்த்** என்பவன் குடிமயக்கத்தில் உளறிய சிலபேச்சுக்களையொட்டிய விவகாரத்தின் நிமித்தம் அவனுக்கும் கண்டி அரசனுக்கும் ஏற்பட்ட தகராற்றில் அவன் கொலைசெய்யப்பட்டான். இதனால் இனி ஒல்லாந்தரது உதவியைத் தான்பெறுதல் துர்லபம் என்பதைக் கண்டி அரசன் உணர்ந்தான். போர்த்துக்கேயருடன் ஏதாவது ஒரு உடன்பாட்டுக்கு வருதலே தனக்கு நன்மை பயக்குமெனவுங் கருதினான். பச்சோந்தி நிறம் மாறுவதைப்போல் தன்நயங் கருதித் தன்கொள்கைகளை மாற்றும் சுபாவம் உடையவன் விமலதர்மசூரியன் என்பதை நாம் நன்கறிவோம். உடனே போர்த்துக்கேய இராசப் பிரதி



நிதிக்குச் செய்தி அனுப்பித் தனது கண்டி அரசுரிமையைப் பலப்படுத்திக் கொடுத்தால் தான் திரும்பவும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவுவதாகவும், போர்த்துக்கல் அரசனைத் தான் தலைமையதிபதியாக ஏற்றுக்கொள்வதாகவும் விமலதர்ம சூரியன் தெரிவித்தான். இவனது "நிலையற்ற" தன்மையை நன்கறிந்த போர்த்துக்கேய இராசப்பிரதிநிதி இவனது எந்த உடன்பாட்டுக்கும் வரப் பிரியப்படவில்லை. எனவே கண்டியை எப்படியும் தாக்குவது எனத் திடசித்தம் பூண்டான்.

1604-ம் ஆண்டில் விமலதர்ம சூரியன் இறந்தான். அவனுக்குப்பின் அதேவருடத்தில் அவன் சகோதரனான **சேனரதன்** கண்டி அரசனாகி ஏறக்குறைய 31 ஆண்டுகள் அவ்விராச்சியத்தைப் பரிபாலித்தான். பல கலைகளைக் கற்றவனும் நல்லொழுக்கம் உடையவனுமான சேனரதன் சமாதானத்தையே பெரிதும் விரும்பினான். போர்த்துக்கேயர் இலங்கையின் மற்றப்பாகங்களை ஆட்கொண்டு கண்டி இராச்சியத்தையும் கைப்பற்றுவதில் ஊக்கமாக இருந்தபோது சேனரதன் எப்படிச் சமாதானத்தைக் காக்கமுடியும்? போர்த்துக்கேய பிரதம சேனாதிபதியான **அசவிடோ** 1611.ம் ஆண்டில் பெரும்படையுடன் கண்டியைத் தாக்கினான். அவன் படைகள் கண்டி நகரைக் கொள்ளையடித்துச் சூறையாடி நகருக்குத் தீ வைத்தன. போர்த்துக்கேயவீரர்கள் பஞ்சமாபாதகங்களைச் சிறிதும் அஞ்சாது வரையறையின்றிச் செய்தனர். கண்டிச் சிங்கள மக்கள் போர்த்துக்கேயரது பெயரைக் கேட்டாலே அருவருப்புந் துவேஷமுங் காட்டினர். இக்கொடியவரது அளவிட முடியாத அக்கிரமங்களைச் சகித்துக்கொண்டு நாட்டில் வாழ்வதிலும் பார்க்கக் கொடும்புலி வாழ்கின்ற காடு சிறந்தது என மக்கள் கருதினர். 1614-ம் ஆண்டில் **அசவிடோ** இலங்கையை விட்டுக் கோவைக்கு இராசப் பிரதிநிதியாகச் சென்றான். அவனுக்குப்பின் **ஹோமேம்** என்பவன் இலங்கையின் பிரதம சேனாதிபதியாகக் கடமையாற்றினான். கடமை, கட்டுப்பாடு, சட்டதிட்டங்கள் ஆகியவற்றை மீறிய போர்த்துக்கேய இராணுவவீரர்கள்

தெருத்தெருவாகச் சுற்றிக் கண்டிமக்களைக் கொடுமைப்படுத்தி வந்தனர். சேனாவீரரை ஒழுங்குமுறைக்குக் கொண்டுவர நினைத்த இராசப்பிரதிநிதி கண்டி இராச்சியத்தின்மீது போர் தொடுக்கும்படி கட்டளை பிறப்பித்தான். போர் தொடங்கியது. 14 வயதுக்கு மேற்பட்ட ஆண்களை எல்லாம் பிடித்துக் கொல்லவேண்டும் என்பது போர்த்துக்கேய வீரர்களுக்குக் கிடைத்த கட்டளையாகும். வெளியிலிருந்து படையுதவி வருவதைத் தடுத்து நிறுத்தவும், உள்நாட்டு வர்த்தகத்தைச் சீர்குலைக்கவும் **புத்தளம், மட்டக்களப்பு, கொட்டியாரம்** ஆகிய துறைமுகங்களைப் போர்த்துக்கேயர் அடைத்துவிட்டனர். இறுதியில் கண்டி அரசன் வழிதெரியாது திகைத்துப் போர்த்துக்கேயருடன் ஒரு ஒப்பந்தத்திற்கு வரலானான்.

1618-ம் ஆண்டில் **கொன்ஸ்தாந்தின் டி ஸா** இலங்கையில் போர்த்துக்கேயப் பிரதம சேனாதிபதியாக நியமிக்கப்பட்டான். இவன் தலைசிறந்த திறமைமிக்கவீரன்; ஒழுக்கசீலன்; போர்த்துக்கேய சேனாவீரர்களிடையே காணப்பட்ட குறைகளையும் குற்றங்களையும் நிவிர்த்திக்கப் பாடுபட்டான். சிங்கள மக்களுக்குப் போர்த்துக்கேய வீரரால் விளைவிக்கப்பட்ட துன்பங்களைப் போக்க அரும்பாடுபட்டான். இதனால் பொதுமக்களுடைய அபிமானத்துக்கும் அன்புக்கும் பாத்திரமானான். **சப்பிரகம, காலி** ஆகிய இடங்களில் கோட்டைகளை நிர்மாணித்துக் கண்டி இராச்சிய பரிபாலனம் செய்துவந்தான். மேலும் யாழ்ப்பாண இராச்சியத்தில் நடைபெற்ற குழப்பங்களை அடக்கி அங்கிருந்த **சங்கிலி** அரசனைப் பதவியினின்றும் நீக்கி அவ்விடம் ஓர் கோட்டையையும் எழுப்பினான்.

## கொன்ஸ்தாந்தின் டி ஸா

1620-ம் ஆண்டில் இலங்கைப் பிரதம சேனாதிபதி பதவியினின்றும் விலகியிருந்தாலும், திரும்பவும் 1623-ம் ஆண்டில் இலங்கைக்குவந்து ஒல்லாந்தர் கண்டி இராச்சியத்திலிருந்து எந்தவுதவியும் பெறமுடியாதவாறு முயற்சி



கள் செய்தான். பழைய கோட்டைகளைப் பழுதுபார்த்துப் பலப்படுத்தியதுமன்றித் **திரிகோணமலை, மட்டக்களப்பு, கல்பிட்டியா** ஆகிய இடங்களில் பலமான கோட்டைகளை நிர்மாணித்தான். போர்த்துக்கேயர் தங்கள் சொந்த வருவாயைக் கருதிக் கண்டி அரசனுக்கு இரகசியமாக யுத்த தளபாடங்கள் விற்றுவந்ததையும் கண்டுபிடித்துத் தடுத்தான். கண்டியரசனாற் குடியேற்றப்பட்டுக் கீழ்மாகாணத்தில் நெற்பயிர்களை விளைவித்துவந்த முஸ்லிம்களை அப்பகுதிகளினின்றும் கலைத்தான். இக்காரணங்களால் கண்டி அரசனான **சேனரதன்** என்பான் கொதித்தெழுந்து 1627-ம் ஆண்டு கோட்டை இராச்சியத்தின்மீது படையெடுத்துப் போர்த்துக்கேயரைத் தாக்கினான். இதை எதிர்த்து டி ஸா 1627-ம், 28-ம் ஆண்டுகளில் கண்டிமீது படையெடுத்தான். **அம்பதென்ன** என்னுமிடத்தில் சேனரதன் மகன் **இரண்டாம் இராசசிங்கன்** போர்த்துக்கேயப் படைகளைப் புறமுதுகு காட்டியோடச் செய்தான்.

1630-ம் ஆண்டில் டி ஸா திரும்பவும் ஒருமுறை கண்டிமீது படையெடுத்தான். இப்படையெடுப்பே அவனுக்கு அழிவுகாலத்தைத் தேடித்தந்தது எனலாம். இப்படையெடுப்பின்போது பதுளை நகரைப் போர்த்துக்கேயர் தீக்கிரையாக்கினர். ஏற்கனவே போர்த்துக்கேயரின் கொடிகளையும் அடக்குமுறையையும் சகிக்காதிருந்த சில சிங்களப் பிரதானிகளும் 2000-க்கு மேற்பட்ட சேனாவீரர்களும் இதுதான் தக்க தருணமென்று நினைத்து டி ஸாவைவிட்டு நீங்கிக் கண்டி அரசனுடன் சேர்ந்துகொண்டனர். தென்பகுதிக் கரையைத் தன் படைவீரருடன் அடைந்த டி ஸா கண்டி அரசப் படைகளால் ரன்டெனிவெல என்னுமிடத்தில் தாக்கப்பட்டான். அதில் தன் உயிரையும் இழந்தான். போர்த்துக்கேயரின் வளர்ந்தோங்கிய புகழ் இச்சம்பவத்திலிருந்து சுருங்கித் தேய ஆரம்பித்தது. தங்களுக்குக் கீழுள்ள பகுதிகளை ஒவ்வொன்றாய்ப் போர்த்துக்கேயர் இழக்க நேரிட்டது.

1635-ம் ஆண்டு சேனரதன் இறந்தான். அவனுக்குப் பின் அவன் மகன் இராசசிங்கன் **இரண்டாம் இராசசிங்கன்** எனப் பெயர் தரித்துச் சிம்மாசனம் ஏறினான். போர்த்துக்கேயரை இலங்கையினின்றும் விரட்டுவது அவனது ஒரே குறிக்கோளாக இருந்தது. இதன் பொருட்டு ஒல்லாந்தரது உதவியைநாடி அவர்களுக்குத் திரிகோணமலை அல்லது மட்டக்களப்பு இவையொன்றில் கோட்டை கட்டித்தருவதாகவும், போர்த்துக்கேயருடன் செய்யும் போரில் ஏற்படும் செலவுத்தொகையை ஒல்லாந்தருக்குத் தான் அளிப்பதாகவும் 2-ம் இராசசிங்கன் வாக்களித்தான். இராசசிங்கனது கோரிக்கைகளுக்கு ஒல்லாந்தர் சம்மதித்தனர். கண்டியரசனுக்கும் ஒல்லாந்தருக்கும் இவ்வித உடன்படிக்கை ஏற்படுவதைக் கேள்வியுற்ற போர்த்துக்கேயர் தமது பிரதம சேனாதிபதியாகிய **டி மெல்லோ** என்பவனை 1636-ம் ஆண்டில் அனுப்பிக் கண்டிமீது போர்தொடுத்தனர். முன் நடந்ததுபோலப் போர்த்துக்கேயப் படையிலிருந்த சிங்களவர் அவர்களைக் கைவிட்டு அரசன் பக்கம் சேர்ந்துகொண்டனர். **கன்னொறுவா** என்னுமிடத்தில் போர்த்துக்கேயப்படை தோற்கடிக்கப்பட்டுச் சிதறுண்டு போயிற்று. போரில் டி மெல்லோவும் உயிரிழந்தான். கீழ்நாட்டில் போர்த்துக்கேயருக்கு அடங்கி நடந்தவர்கள் இத்தோல்விக்குப்பின் பகிரங்கமாகக் கிளர்ச்சிபண்ணினர். இதன்பின்னர் போர்த்துக்கேயர் கண்டிமீது படையெடுப்பதைக் கனவிலுங் கருதவில்லை.

போர்த்துக்கேயர் படைப்பலம் சிங்களவரது படைப் பலத்துக்கு எவ்வளவோ அதிகமாயிருந்தும் கண்டிப்படையெடுப்புக்களில் போர்த்துக்கேயருக்குத் தோல்விமேற் தோல்வியே ஏற்பட்டதைப் பார்த்தோம். இதற்குப் பல காரணங்கள் இருந்தன. துவக்கத்தில் போர்த்துக்கேயருக்கு ஏற்பட்டிருந்த செல்வாக்கெல்லாம் கண்டி மக்களிடமிருந்து அவர்களுக்குக் கிடைத்த பேராதரவேயாகும். கண்டியில் கொடூர ஆட்சி நடந்தபோதும், அரசுரிமையில்லாதவன் சிம்மாசனத்தை அபகரித்துக் கொண்ட



போதும் மக்கள் இப்படிப்பட்டவர்களை விரட்டுவதற்காகப் போர்த்துக்கேயரது உதவியை நாடினார்கள். ஆனால் 1594-ம் ஆண்டிலிருந்து போர்த்துக்கேயர் நாட்டையாளும் நோக்கத்தோடு காரியங்களைச் செய்து வந்ததிலிருந்து கண்டி மக்கள் தங்கள் ஆதரவை அவர்களுக்கு நல்கவில்லை. மக்களின் விசுவாச உணர்ச்சியும் நாட்டுப்பற்றும் போர்த்துக்கேயருக்குத் தோல்வியை ஏற்படுத்தின. இரண்டாவதாக மலைகளும், காடுகளும், கரடுமுரடான பாதைகளும் அமைந்திருந்த மலைப்பிரதேசங்களில் கண்டிச் சிங்களவர் **கொரில்லாப்போர்** முறையைக் கையாண்டு குன்றுகளிலும், குகைகளிலும், மரங்களிலும் பின்னாக ஒளிந்துகொண்டு எதிரிகளைத் தாக்கினர். போர்த்துக்கேயர் இந்த மலைநாட்டையும் கொரில்லாப் போர்முறையையும் பயிலாமலிருந்ததால் அவர்களது படைகளைக் கண்டியர் எளிதிற் தாக்கி முறியடித்தனர். மூன்றாவதாக அடிக்கடி தொடர்ந்து போர்த்துக்கேயர் போரிட்டு வந்ததால் தங்கள் படையில் பெருவாரியான உள்நாட்டுச் சிங்களவரையும் சேர்த்திருந்தனர். தம் எஜமானருக்காக எவ்வளவுபோராடியும் போர்த்துக்கேய அதிகாரிகள் இச்சிங்களச் சேனாவீரரின் அபிமானத்தையும் நல்லெண்ணத்தையும் பெறுவதற்கு ஒன்றுஞ் செய்யவில்லை. அன்றியும் பெரும்பான்மையான கீழ்நாட்டுச் சிங்களவர் கண்டி அரசனைத் தங்கள் சமயத்துக்கும் சாதிக்கும் பரிபாலகனெனக்கொண்டு போற்றி வந்தார்கள். அந்நியர் தங்கள் அரசியலிலோ மதக் கோட்பாட்டிலோ தலையிடுவதை விரும்பவில்லை. எனவே தருணம் வாய்க்கும்போதெல்லாம் போர்த்துக்கேயப் படையிலுள்ள சிங்களவர் அவர்களைக் கைவிட்டுநீங்கிக் கண்டியரசன் பக்கம் சேர்ந்துகொண்டனர். கடைசியாகப் போர்த்துக்கேயருக்குக் கண்டியில் தோல்வி நேர்ந்தபோதெல்லாம் கீழ்நாட்டில் கலவரம் உண்டாகிப் போர்த்துக்கேயர் ஆட்சியைக் குலைக்க மக்கள் வழிதேடினர். இக் கீழ்நாட்டுக் கலவரங்களை அடக்குவதற்குப் பெரும் பணச்செலவும் படைச்சேதமும் ஏற்பட்டன. ஏறக்குறைய 100 ஆண்டுகளாக ஓயாது ஒழியாது போர்த்துக்கேயர் போர்செய்து வந்ததால் அவர்

களது இராணுவப்பலம் குறைந்துகொண்டே வந்தது. இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, ஆபிரிக்கா, பிரேசில், கிழக்கிந்தியதீவுகள் ஆகிய இடங்களிலும் போர்த்துக்கேயர் தம்ஆட்சியை நிலைநாட்டுவதற்காகப் பிரயத்தனஞ் செய்தனர். இதனால் பெரும் படைகள் அழிவுற்றன. பொருட்செலவும் ஏற்படலாயிற்று. எனவே போர்த்துக்கேயரது இராணுவப் பலம் குன்றிவந்தது. இக்காரணங்களால் கண்டிப் படையெடுப்புகளில் போர்த்துக்கேயர் பலமுறைகளிலும் தோல்வியடைந்தனர். எனினும் போர்த்துக்கேயர் எத்தனையோ இடையூறுகளுக்கு மத்தியிலும் தைரியமாக வீரதீரத்துடன் போரிட்டனர். அவர்கள் ஒருபோதும் விரோதிகளுக்குஅடிபணிந்து சரணகதி அடைந்ததுமில்லை; பின்வாங்கி ஓடியதுமில்லை. அசவிடோ, கொன்ஸ்தாந்தின் டி ஸா போன்ற சேனாதிபதிகள் செயற்கரிய சாதனைகளைப் போர்க்காலங்களிற் செய்தும் மேற்கூறிய காரணங்களால் போர்த்துக்கேயர் வெற்றிமாலை சூடவில்லை. கண்டி இராச்சியம் சுதந்திரமாகவே திகழ்ந்து வந்தது.

1638-ம் ஆண்டில் இரண்டாம் இராசசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் ஒரு புதிய உடன்படிக்கை ஏற்பட்டது. அதன்படி இலங்கையில் வர்த்தக உரிமையை ஒல்லாந்தருக்குக் கொடுக்கவும், அவர்கள் வர்த்தகத்துக்குத் தடையாக உள்ளவர்கள்மீது அரசன் தக்க நடவடிக்கை எடுக்கவும், போர்த்துக்கேயரை இலங்கையினின்றும் வெளியேற்ற ஒல்லாந்துப் படைகளுக்காகும் செலவைத் தானே கொடுக்கவும் அரசன் சம்மதித்தான். மேலும் போர்த்துக்கேயரிடமிருந்து பறிக்கப்படும் கோட்டைகளில் அரசன் விரும்பினல் டச்சுப்படைகளை அமர்த்துவது என்றும் ஒரு நிபந்தனை உடன்படிக்கையில் காணப்பட்டது. அரசனிடமிருந்த உடன்படிக்கைப் பிரதியின் கடைசி நிபந்தனையிலுள்ள 'அரசன் விரும்பினல்' என்ற வார்த்தைகள் காணப்பட்டனவே யொழிய ஒல்லாந்தார் வைத்திருந்த பிரதியில் இந்த வார்த்தைகள் மட்டும் காணப்படவில்லை. இதனல் பின்னெருகால் இராசசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் பிணக்குகள் ஏற்பட்டன.



## சுருக்கம்

(1) இலங்கையில் 1505-ல் போர்த்துக்கேயர் வருகை — 35 ஆண்டுகளுக்குப் பின்பே கண்டி இராச்சியத்துடன் தொடர்பு — 1521-ல் கோட்டை பிரிக்கப்பட்டபோது கண்டிக்கு விக்கிரமபாகு அரசனாயிருத்தல் — மாயாதுன்னை இலங்கை முழுமைக்கும் அரசனாக விரும்பல் — மாயாதுன்னையோடு புவனேகபாகுவுங்கூடிக் கண்டியை 1539-ம் ஆண்டளவில் முற்றுகையிடல் — விக்கிரமபாகு போர்த்துக்கேயர் உதவியை நாடல் — தான் மதம் மாறவும், தன் இராச்சியத்தில் கண்டியில் வேதபோதகர்க்கு இடங் கொடுக்கவும் விக்கிரமபாகு ஒப்புக்கொள்ளல் — வேறிடங்களில் போரில் ஈடுபட்டிருந்தமையால் போர்த்துக்கேயர் உதவி காலந்தாழ்த்திக் கிடைத்தல் — 50 பேர் கொண்ட போர்த்துக்கேய படை கண்டிக்கு அனுப்பப்படல் — இதற்கிடையில் கண்டியரசன் புவனேகபாகுவின் பேரப்பிள்ளை தர்மபாலனுக்குத் தன் மகளை மணம் முடித்துத்தரவும், மாயாதுன்னை கேட்ட விடுதலைப் பணத்தைக் கொடுக்கவும் ஒப்புக்கொள்ளல் — எனவே போர்த்துக்கேயர் நோக்கங்கள் ஈடேறாமை (2) 1582-ல் கண்டியரசனான கரலியட்ட பண்டார என்பவனைத் துரத்திவிட்டு மாயாதுன்னையின் மகன் இராசசிங்கன் கண்டியரசனாதல் — கரலியட்ட பண்டார தன் மருகனுடனும் மகளுடனும் போர்த்துக்கேயரைச் சரணடைந்து மதம் மாறல் — மருகனும் மகளும் டொன் பிலிப்பு, டொனகதரினா என்னும் பெயர்களைப் பெறல் — இராசசிங்கனின் கொடுங்கோலாட்சி — டொன் பிலிப்பைப் பட்டத்தரசனாக்கக் கண்டி மக்களின் அவா — டொன் ஜுவான் கோணப்புபண்டார என்னும் படைவீரனைப் போர்த்துக்கேயர் கண்டிக்கனுப்பல் — இவன் கண்டியிலுள்ள சிங்கள வீரரோடு சேர்ந்து இராசசிங்கனை முறியடித்து டொன்பிலிப்பைச் சிம்மாசனமேற்றல் — சிறிது காலத்துள் டொன் பிலிப்பு மரணமடைதலும் டொன் ஜுவான் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றலும் — இவன் பௌத்தனாக மாறி விமலதர்மசூரியன் என்னும் பெயரோடு கண்டியை ஆளல் — போர்த்துக்கேயரின் அதிருப்தியும் கண்டிமீது படையெடுத்து விமலதர்மசூரியனை முறியடித்து டொனகதரினாவைக் கண்டி அரசியாகப் பிரகடனப்படுத்தலும் (3) டொனகதரினாவைப் போர்த்துக்கேயர் தம் பிரபு ஒருவனுக்கு மணம் முடிக்கத் திட்டம் வகுத்தல் — ஜெயவீர பண்டார என்பவனை அரசனாக்கக் கண்டி மக்கள் விரும்பல் — போர்த்துக்கேயரின் எதிர்ப்பு — ஜெயவீர பண்டார தலைமறைவாயிருந்த விமலதர்ம சூரியனுடன் சேர்ந்து போர்த்துக்கேயரைக் காட்டிக்கொடுக்கச் சூழ்ச்சிசெய்தல் — போர்த்துக்கேயர் ஜெயவீர பண்டாரனைக் கொன்றுவிடல் — விமலதர்மசூரியன் கண்டி மக்களோடு சேர்ந்து போர்த்துக்கேயரை முறியடித்தல் — விமலதர்ம சூரியன் டொன கதரினாவை மணந்து கண்டியில் தனது ஆட்சியை ஸ்திரப்படுத்தல் — விமலதர்ம சூரியனின் போர்த்திறன், நீதி, புருஷலட்சணம், அன்னைதிவு, புத்த சமயாபிமானம், மக்களிடத் தாதரவு என்னுங் குணவிசேஷங்கள் (4) இலங்கையின் கேந்திரஸ்தானம் — இந்து சமுத்திர நிலப்பரப்பில் இலங்கையைத் தமது ஆட்சிப்பீடமாக்கப் போர்த்துக்கேயரின் பேரவா — 1591-ல் லொப்பஸ் டி சௌசா என்னுஞ் சேனாதிபதி விமலதர்ம சூரியனை முறியடித்து டொனகதரினாவைக் கண்டியரசியாக்கல் — முன்னர் கூறியவாறு கன்னொருவா யுத்தத்தில் போர்த்துக்கேயருக்கேற்பட்ட தோல்வியும் விமலதர்ம சூரியன் டொனகதரினாவை மணம் முடித்து மீட்டும் கண்டிக்கு

அரசனாதல் — தோல்வியடைந்த போர்த்துக்கேயர் அவமானம் தாங்காது மீண்டும் கண்டியைக் கைப்பற்றக் கருதல் — 1602-ல் அசவிடோ தலைமையில் கண்டி முற்றுகையிடப்படல் — கனனொத்தன கைப்பற்றப்படலும், பலனே தாக்கப்படலும் — கண்டியரசனைக் கொல்ல அசவிடோ முயற்சித்தலும், அது பலிக்காமையும்.

1597-ல் மல்வானை உடன்படிக்கை—இதன்படி தர்மபாலனின் நன்கொடைச் சாதனத்துக்கமையப் போர்த்துக்கேய அரசனே இலங்கை முழுமைக்கும் அரசனென வாரித்து வரவேற்கப்படல் — சிங்கள அரச குடும்பத்தினரும் பிரதானிகளும் பிரமாணம் செய்து கொடுத்தல் — இலங்கையில் சட்டப்படி அரச பரிபாலனம் நடைபெறவேண்டுமென ஒப்புக்கொள்ளப்படல் — பழைய சம்பிரதாயங்களுக்கு விரோதமாக இலங்கையில் கிறீஸ்தவ மதப் பிரசாரஞ் செய்யப் பூரண சுதந்திரம் போர்த்துக்கேயருக்கு அளிக்கப்படல்.

1602-ல் விமலதர்ம சூரியனைப் பேட்டி காணவும், வியாபார ஒப்பந்தம் செய்து கொள்ளவும் ஜோரிஸ் வான் ஸ்பில்பேர்கன், ஆறு மாதங்களில் செபால்டு டி வீயர்த் என்னும் இரு ஒல்லாந்தர் வரல் — ஒல்லாந்தரின் கடற்படை வலிமை கொண்டு போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து கலைக்க விமலதர்மன் எண்ணங்கொண்டு வியாபார உரிமை வழங்கல் — கண்டியை விரைவில் கைப்பற்றத் திட்டமிட்டு 1603-ல் அசவிடோ கண்டியைத் தாக்கல் — பலனே கைப்பற்றப்படல் — கண்டியைத் தாக்க முயலும்போது அசவிடோபக்கத்துச் சிங்களச்சேனை கண்டியரசனுடன் சேரல்—போர்த்துக்கேய சேனை சின்னபின்னப்படல்—செபால்டு டி வீயர்த் என்னும் ஒல்லாந்த தூதன் கொல்லப்படல் — கண்டியரசன் ஒல்லாந்தருதவியை இழத்தல் — போர்த்துக்கேயருடன் ஒரு உடன்பாட்டுக்கு வரக் கண்டியரசன் எண்ணல் — அசவிடோ இணங்காமையும், மீட்டும் கண்டியைத் தாக்க உறுதி பூணலும்.

1604-ல் விமலதர்மன் இறத்தல் — சகோதரன் சேனரதன் கண்டியரசனாதல் — 1611-ல் அசவிடோ பெரும்படையுடன் கண்டியைத் தாக்கல் — கண்டியில் போர்த்துக்கேய வீரரின் அக்கிரமங்கள் — 1614-ல் ஹோமெம் இலங்கையின் பிரதம சேனாதிபதியாதல் — கண்டி மீட்டும் தாக்கப்படல் — கண்டியரசன் போர்த்துக்கேயருடன் ஒப்பந்தத்துக்கு வரல்.

1618-ல் கொன்ஸ்தாந்தின் டி ஸா சேனாதிபதியாதல் — இவனின் உயர்குணங்கள் — கோட்டைகளை நிர்மாணித்தல் — 1627-ல் சேனரதன் கோட்டைமீது படையெடுத்தல் — 1628-ல் டி ஸா கண்டி மீது படையெடுத்தல் — இரண்டாம் இராசசிங்கன் போர்த்துக்கேயரைத் தோற்கடித்தல் — 1603-ல் டி ஸா திரும்பவும் கண்டிமீது படையெடுத்தல் — டி ஸாவின் வீழ்ச்சி — 1635-ல் சேனரதன் இறத்தல் — இரண்டாம் இராசசிங்கன் சிம்மாசன மேறல் — ஒல்லாந்தர் உதவியை நாடலும் ஒப்பந்தமும் — 1636-ல் டி மெல்லோ கண்டி மீது படையெடுத்தல் — கன்னொருவா யுத்தம் — போர்த்துக்கேயரின் வீழ்ச்சி — கண்டிப்படையெடுப்புகளில் போர்த்துக்கேயரின் தோல்விகளுக்குக் காரணங்கள் — 1638-ல் இராசசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்கும் புதிய உடன்படிக்கை — 1642-ல் ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கேயருக்கும் ஏற்பட்ட பத்துவருடச் சமாதான உடன்படிக்கை



— 1639 முதல் 1658 வரை இலங்கையிற் போர்த்துக்கேயர் கோட்டைகளை ஒல்லாந்தர் படிப்படியாகக் கைப்பற்றலும், இராசசிங்கனிடம் கொடுக்க மறுத்துத் தமதாக்கலும் — இலங்கையிற் போர்த்துக்கேயர் ஆதிக்கம் ஒழிதல்.

### வினாக்கள்.

1. முதன் முதல் கண்டியிற் போர்த்துக்கேயர் உதவியை நாடிய அரசன் யார்? அவன் அவ்வாறு நாடியதற்கான சந்தர்ப்பங்களை ஆராய்க.

2. முதலாம் இராசசிங்கன் காலத்திலும் அதைத் தொடர்ந்தும் கண்டியைப் போர்த்துக்கேயர் முற்றுகையிட்ட சந்தர்ப்பங்களை நிரையாகக் கூறி ஒவ்வோர் முற்றுகையினதும் பெறுபேறுகளையும் விபரிக்க.

3. கண்டி முற்றுகையில் பங்கு பற்றிய போர்த்துக்கேய தளபதிகளையும், அவர்கள் கண்டியைக் கைப்பற்ற இயலாமற் போனமைக்குரிய காரணங்களையும் ஆராய்க.

4. அசவிடோ, கொன்ஸ்தாந்தின் டி ஸா, டொனுகதரினு, விமலதர்மசூரியன்— ஒவ்வொருவரையும் பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

5. சேனரதன், மல்வானை உடன்படிக்கை, கன்னொருவா யுத்தம் — சிறு குறிப்புகள் எழுதுக.

6. இலங்கையில் ஒல்லாந்தரது வருகையையும், நோக்கங்களையும் அவர்கள் எவ்வாறு போர்த்துக்கேயர் ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு உதவினர்கள் என்பதையும் பற்றிச் சுருக்கிக் கூறுக.

---

## ஐந்தாம் அத்தியாயம்

# இலங்கையில் போர்த்துக்கேயர்

மல்வானை உடன்படிக்கையின்படி போர்த்துக்கேயர் இந்த நாட்டின் வழக்கிலுள்ள சட்டம், முறைமை ஆகியவற்றை அநுசரித்து நாடாள்வதாக ஒப்புக்கொண்டார்களல்லவா? ஆனால் அவர்கள் உண்மையில் இச்சட்ட முறைகள் எவையெனக் கண்டுபிடிக்க முயற்சிக்கவில்லை. வழக்கிலுள்ள முறைமைகளை மீறியதுமன்றிக் கோட்டையில் உள்ள சிங்களவரினதும், யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழரினதும் பகைமையைச் சம்பாதித்துக் கொண்டனர். இதற்குப் பல காரணங்கள் இருந்தன.

முதலாவதாக இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் சேனாதிபதிகளாகவும், குருமார்களாகவுமே வந்தார்கள். சேனாவீரர் போரில் திறமைபெற்றிருந்தனர். குருமார் மதம் பரப்பும் அலுவலில் தீவிரமாய் இருந்தனர். போர்த்துக்கேயரில் ஒருசிலர் மாத்திரம் அரசியல்ஞானம் படைத்து ஆராய்ச்சி அனுபவம் பெற்றிருந்தார்கள். கொன்ஸ்தாந்தின் டிசாவை இதற்கு விதிவிலக்காகச் சொல்லலாம். குவின்ஸ் கோட்டை இராச்சியத்தில் ஒழுங்கையும், சமாதானத்தையும் நிலைநாட்டியதுமன்றிப் போர்த்துக்கேயர் தம் கோட்டை மக்களுக்குச் சமாதான நீதியும் வழங்கினர். மற்றைய சேனாதிபதிகளெல்லோரும் போர்த்திறனைப் பெற்றிருந்தார்களன்றி நாட்டுச் சட்டமுறைகளைப் படித்து அறிவதில் அக்கறை கொள்ளவில்லை. இரண்டாவதாக ஏறக்குறைய 150 ஆண்டுகளாகப் போர்த்துக்கேயர் இலங்கையில் ஏதாவது ஒரு பாகத்திற் போர்செய்வதில் எப்பொழுதும் ஈடுபட்டிருந்ததால் அதிகாரிகள் தங்கள் கவனத்தைப் போர்களிற் செலுத்தினார்களேயன்றி ஆட்சிமுறையைச் செம்மைப் படுத்த எண்ணவில்லை. மூன்றாவதாகப் போர்த்துக்கலிலும், இலங்கையிலும் ஒரேமாதிரியான ஆட்சிப்பரிபாலன முறையிருந்ததாகப் போர்த்துக்கேயர் நம்பினார்கள். இருநாடுகளிலும் நிலமானிய முறையின் அடிப்படையில் அரசாங்கம் நடைபெற்றது. உதாரணமாகக் கோட்டை



இராச்சியமானது நான்கு கோறளைகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசாவையின் பரிபாலனத்திலும், மேலும் ஒவ்வொரு கோறளையும் அத்திக் கோறளைகளாகப் பிரிக்கப்பட்டு இவை அத்திக் கோறளைமாரின் கீழும், கிராமங்கள் விதானைமார் மற்றும் சிறு தலைமைக்காரர் ஆகியவர்களின் பொறுப்பிலும் இருந்து ஆட்சி நடைபெற்றது. இவர்கள் நீங்கலாக வெடோர்டி பாஸண்டா என்ற நீதியதிகாரிகளும், ரௌவிடோர் என்ற நீதிபரிபாலன அதிகாரிகளும் நியமிக்கப்பட்டனர். மாகாண அரசியற் பரிபாலனம் பழைய சிங்கள முறையையொட்டியே நடந்து வந்தது. மத்திய அரசாங்கம் உயர்தர இராணுவ அதிகாரியான பிரதம சேனாதிபதியின் பொறுப்பிலிருந்தது. அவன் கோவையிலிருந்த இராச்சியப் பிரதிநிதியின் கட்டளைக்குட்பட்டுப் பரிபாலனஞ் செய்தான். போர்த்துக்கலுக்கும் இலங்கைக்கும் ஆட்சிமுறையிற் சிலபல ஒருமைப்பாடுகள் இருந்தபோதிலும் இலங்கையிற் சாதிக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் அரசியலும் சமூகமும் இயங்கிவந்தனவென்பதைப் போர்த்துக்கேயர் அறியாது போயினர். உத்தியோக நியமனங்களிலும், அரச சேவையிலும் மற்றும் சட்ட மன்றங்களிலுங் கூடச் சாதி உரிமைகள் பழங்காலச் சிங்கள மன்னரால் அநுசரிக்கப்பட்டன. ஆனால் போர்த்துக்கேயரோ தங்கள் பல்லக்குகளைத் தூக்குவதற்கும், மூடைகளைத் தூக்குவதற்கும் மக்களைக் கட்டாயப்படுத்தினர். இதனை மறுத்தபோது அவர்களைக் கொடுமைகளுக்குள்ளாக்கினர். உயர்ந்த சாதியினர் தங்களுக்குத் தாழ்ந்த சாதியினர் செய்யும் வேலைகளைத் தாம் போர்த்துக்கேயருக்குச் செய்வதிலும் இறப்பதே மேல் என்று கருதியதாக ஒரு பிரபல யேசுசபைக் குருவானவர் கூறியுள்ளார். உயர்ந்த சாதியான ஒருவன் செய்யும் இழிதொழிலானது இச்சாதியினருக்கு உண்டான இழிவாகும் எனக் கருதி அவர்கள் எல்லோருமே போர்த்துக்கேயரை வெறுத்தனர். இங்ஙனமாகச் சாதி ஒழுக்க முறைகளையறியாது கோட்டையிலும் யாழ்ப்பாணத்திலும் போர்த்துக்கேயர் மக்களின் வெறுப்புக்கு ஆளாயினர்.

சிங்கள - தமிழ் அரசர்கள் ஆண்ட காலத்தில் **திசாவை, கோறளை** போன்ற உத்தியோகங்களை உள்நாட்டினரே நிர்வகித்து வந்தனர். ஆனால் இப்பதவிகளுக்குப் போர்த்துக்கேயரே நியமிக்கப்பட்டனர். இப்பதவிகளை வகிப்பவரின் எதேச்சை அதிகாரத்தைத் தடுக்கச் சட்டதிட்டங்கள் முன்பு இருந்தன. அவர்கள் மக்களை மனம்போல் ஆட்டிவைக்க முடியாதிருந்தது. அரசர்களும் இச்சட்டத்தைத் தேவைப்பட்டபோது அமுல் நடத்தி வந்தனர். ஆனால் போர்த்துக்கேய அதிகாரிகள் வரைமுறையின்றி மக்களை இம்சித்தனர். பிரதம சேனாதிபதி வழக்கிலிருந்த சட்டதிட்டங்களையறிந்து அமுல்செய்ய முயற்சிக்கவில்லை. உத்தியோகஸ்தர் அனைவரும் சுயநலங் கருதிக் கருமம் செய்துவந்தனர். கிறிஸ்தவ திருச்சபைக்குச் சேரவேண்டிய வருவாயிலுங்கூடக் கைவைத்தனர். வரி வசூலிப்பவர் செய்துவந்த கொடுமைகள் சொல்லுந்தரமன்று. முற்காலத்தில் ஒவ்வொரு பிரசையும் கொடுக்கவேண்டிய தானியம் இவ்வளவு – செய்யவேண்டிய ஊழியம் இவ்வளவு என்பதாகக் கணக்கிடப்பட்டிருந்தது. ஆனால் இப்போது மனம்போன போக்கில் போர்த்துக்கேயர் வரிகளைத் தீர்மானித்து வசூலித்து வந்தனர். ஏழைக் குடியானவர் அநேகமுறை வரிவசூலிப்போரது கொடுமைகளுக்கஞ்சித் தங்கள் குழந்தைகளை அடகு வைத்தோ அல்லது விற்றுக் காசாக்கியோ தம் வரியைச் செலுத்திவந்தனர் எனச் **சங். குயிரோஸ் பே. ச.** எழுதியிருக்கிறார். நிலவரி, குத்தகை வரி, பூதல்வரி முதலிய வரிகள் கிறிஸ்தவரல்லாரிடமிருந்து வசூலிக்கப்பட்டது. நீதிஸ்தல அபராதம் ஆகியவற்றிலிருந்து வருமானம் பெற்றனர். மேலும் இரத்தினங்கள், முத்துக்கள், பாக்கு, யானை, கறுவா ஆகிய பொருட்களை விற்பதற்கு அரசருக்கு இருந்த உரிமைமூலமும் பெருந்தொகை கிடைத்து வந்தது.

போர்த்துக்கேய உத்தியோகஸ்தரால் துன்புறுத்தப்பட்ட பிரஜைகள் நியாயஸ்தலத்திற்குப்போய் முறையிட்டனர். நீதிபதிகளான போர்த்துக்கேயர்களும், போர்த்துக்கேய ஏனைய அதிகாரிகளைப்போல் நாட்டு

4707



நடைமுறை, பழக்க வழக்கங்களை அறியாதவர்களாதலால் பிரஜைகள் ஏமாற்றமடைந்தனர். **ரௌடர்** என்ற நீதிபரிபாலன உத்தியோகத்தர்களுக்குச் சன்மானங்களும் மக்களால் வழங்கப்பட்டன. சன்மானத்தின் விலைமதிப்பை உத்தேசித்து நீதியின் பெறுமதியும் அமைந்திருந்தது.

இங்ஙனமாகப் போர்த்துக்கேயரின் ஆட்சிமுறையானது நிர்வாகத் திறனற்றதாயும், துர்ப்பிரயோகம் நிறைந்ததாயும் அமைந்திருந்தது. அவ்வாட்சியில் இலஞ்ச ஊழல்களும், பலாத்காரம், அநீதி சுயநலம், பேராசை போன்ற கொடுமைகளும் பெருகியிருந்தன. எனவே அவ்வாட்சியில் பிரஜைகள் துவேஷமும், அருவருப்புங் கொண்டிருந்தனர். இதனாலேயே போர்த்துக்கேயப் படைகள் கண்டி யுத்தங்களிற் தோல்வியடையவும், ஏனைய இடங்களிலுள்ளவர்கள் போர்த்துக்கேயருக்கு விரோதமாய்க் குழப்பம் விளைக்கவும் நேர்ந்தது. சகிக்க முடியாத கொடுமைகளைப் போர்த்துக்கேயர் இலங்கையருக்கு இழைத்ததினாலேயே ஆண்டவன் அவர்களை இவ்வாறு தண்டிக்கிறார் என்று மதக்குருவாகிய ஒரு சரித்திர ஆசிரியர் கூறியிருக்கிறார்.

## போர்த்துக்கேயரும் மதமும்

போர்த்துக்கேயர் இலங்கையிற் காலெடுத்துவைக்குமுன் இங்கிருந்த சமயநிலையை அறிந்திருப்பது அவசியமாகும். கோட்டை இராச்சியத்தில் மிகப் பெரும்பான்மையோர் பௌத்தர்களாகவும், யாழ்ப்பாணத்திற் பெரும்பான்மையானோர் இந்துக்களாகவும் இருந்தனர். இந்த இரண்டு இராச்சியங்களிலும் ஆங்காங்கு சிறிது மகமதியரும் வசித்து வந்தனர். போர்த்துக்கேயர் தங்கள் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பும் எண்ணத்துடன் கிழக்குத் தேசங்களுக்கு வந்தபோது ஐரோப்பாவுக்குள் முன்னேறிவந்த துருக்கியரைப் பகைத்து வந்தனர். இவர்கள் மகமதியரைத் தங்கள் மதத்துக்கும், வர்த்தகத்திற்கும் பரம விரோதிகளாகக் கருதினர். மகம்மதியரது கப்பல்

களைக் கவிழ்த்தும், வீடுகளை எரித்தும், அவர்களை வதைத்தும், வர்த்தகம் செய்யவிடாது தடுத்தும் பல இன்னல்களைப் போர்த்துக்கேயர் விளைத்து வந்தனர்.

போர்த்துக்கேயர் கிழக்குத் தேசங்களுக்கு வருவதற்கு முன் பௌத்த மதத்தைப் பற்றியும், இந்துமதத்தைப்பற்றியும் அறிந்திருக்கவில்லை. அவர்கள் இலங்கைக்கு வந்தபின் இந்த இரு மதத்தினதும் வழிபாட்டு முறைகளைப் பார்த்து இம்மதத்தவர்களை **அஞ்ஞானிகள்** என்று அழைக்கத் தலைப்பட்டனர். அத்துடன் பௌத்த-இந்து மதத்தினரைக் கத்தோலிக்க மதத்திற்குச் சேர்ப்பிப்பதும் தங்கள் கடமையாகக் கொண்டனர். எனவே கத்தோலிக்க மதச் சபையினர்களான பிரான்சிஸ், டொமினிக், யேசுசபை எனப்பட்ட சபையார்கள் வேதப் பரப்புதலுக்காகக் கீழைத் தேசங்களுக்கு அனுப்பப்பட்டார்கள். அங்ஙனம் வந்தவர்களில் **சிஸ்ட சவேரியார்** சிறப்புவாய்ந்தவராவர். இச்சந்நியாசிகள் ஊரூராகச் சென்று மக்களது பண்புகளைப் பழகி அவர்களோடு உண்டும் - உறங்கியும் ஏழை, முதியோர், வியாதியஸ்தர் ஆகியவருக்கு உதவி செய்தும் - மக்களது அபிமானத்தைப் பெற்றும் - ஆத்ம இரட்சணிய அலுவல்களில் ஈடுபட்டுமிருந்தார்கள். இதன் பயனைக் கடற்கரைப் பிரதேசங்களில் வசித்த மக்கள் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர்.

போர்த்துக்கேயருடைய மதப்பற்றுதலைப் பற்றிச் சிலர் தவறாக எண்ணக்கூடும். அவர்கள் இந்நாட்டு மக்களைக் கட்டாயப்படுத்தித் தங்கள் கிறிஸ்தவமார்க்கத்தைத் தழுவும்படி செய்தார்களென்றும், அவ்விதம் மதம்மாறத் தவறியவர்களை இம்சித்தார்களென்றும் சிலர் கருதலாம். ஆனால் உண்மை அப்படியல்ல. சங்கிலி அரசனால் கொலைசெய்யப்பட்ட 600 கத்தோலிக்கரும் தங்கள் மதத்தைக் கைவிடுவதைவிட இறப்பதே மேல் எனக் கொண்டு இவ்வண்ணமே செய்தார்கள். மேலும் ஏறக்குறைய 100 வருடங்களின் பின்வந்த டச்சுக்காரர்களால்



இடையிடையே இம்சிக்கப்பட்ட - மதம்மாறிய மக்கள் அக்கொடுமைகளுக்குப் பயந்து கத்தோலிக்க மதத்தைக் கைவிட்டார்களில்லை. ஆனால் போர்த்துக்கேயர் தங்கள் மதப்பரப்புதல் வேலையிற் தலையிட்டவர்களான **சங்கிலி, விதியபண்டார, விமலதர்மசூரியன்** போன்ற அரசர்களை எதிர்த்துப் போர்செய்தார்களென்பது உண்மையே.

கத்தோலிக்க மதம் இலங்கையில் வெகுவிரைவிற் பரவியதற்குப் பல காரணங்களிருந்தன. முதலாவதாகக் கோட்டையும் யாழ்ப்பாணமும் போர்த்துக்கேயர் கைவசம் வந்ததும் அவர்களது மதத்தைத் தங்கள் ஆட்சியின் கீழுள்ளவர்கள் ஆதரிக்கத் தொடங்கினர். அரசாங்கம் தம் மதத்தினருக்கு அளித்த ஆதரவும் சாதகமாயிற்று. இந்நேரத்தில் பௌத்தமதமும் இந்துமதமும் அரசர்கள் ஆதரவின்மையால் தங்கள் பழைய உன்னதநிலையினின்றும் தாழ ஆரம்பித்தன. அடுத்ததாகக் கத்தோலிக்க மதக் குருமார் ஆத்ம ரட்சணிய தாகத்துடன் மதம் பரப்புதல் வேலையில் ஈடுபட்டனர். மெய்வருத்தம் பாராது பசி நோக்காது, கண்துஞ்சாது, எவரதும் அவச்சொல்லுக்கும் அஞ்சாது கருமமே கண்ணாயிருந்து தங்கள் உயிரையும் மதச் சேவைக்காகத் தியாகம் பண்ணத் தயாராயிருந்தனர். மூன்றாவதாகப் பௌத்தமதம் இந்துமதம் ஆகியவற்றில் இருந்ததுபோல் கத்தோலிக்க மதத்தின் சடங்குகளும் ஆசாரமுறைகளும் விக்கிரக வணக்கம், பரிசுத்த பண்டங்களைப் பாதுகாத்தல் போன்றவை பற்றிய புத்தகங்களும் மலிந்திருந்ததால் மக்கள் தயங்காது இம்மதத்தைக் கைப்பற்றினர். புதிதாகப் புகுத்தப்பட்ட இம்மதத்தில் அவர்கள் எது புதினமுங் கண்டு திகைத்துப் போகவில்லை. நான்காவதாக இலங்கையின் பண்பாடு இக்காலத்தில் குறைந்து அழிந்துபோகும் தருணத்தில் ஐரோப்பாவில் உண்டான மறுமலர்ச்சி இயக்கத்தின் கலாசாரத்தைப் போர்த்துக்கேயர் இலங்கையிற் புகுத்த முயற்சித்தனர். போர்த்துக்கேயராற் புகுத்தப்பட்ட இக்கலாசாரத்தை மக்கள் பெரிதும் போற்றி அதை நடைமுறையிற் கைக்கொண்டனர். இறுதியாகக் கத்தோலிக்க

மதம் கட்டுப்பாடும் சட்ட திட்டங்களும் அமைந்த ஸ்தாபனமாதலால் அதை எந்த மதமும் எதிர்த்து அழிக்க இயலவில்லை. மேற்கூறிய காரணங்களாற் கத்தோலிக்க மதம் துரிதமாய்ப் பரவியபோதிலும் சிற்சில காரணங்களால் அதன் வளர்ச்சி தடைபட்டதுண்டு. தலைமுறை தலைமுறையாகப் புத்த இந்து மதங்களைத் தழுவியவர்களைத் திடீரெனப் புதுமதத்திற்கு மாற்றுதல் முடியாத காரணம். ஏனெனில் வாழையடி வாழையாக இம்மக்கள் அம் மதங்களைப் போற்றிவந்ததுடன் இம் மதங்கள் இவர்கள் வாழ்க்கையில் இரண்டறக் கலந்துவிட்டதும் காரணமாகும். மேலும் புத்த இந்து மதத்தைப்போலல்லாது கத்தோலிக்கமதம் அன்னியர் மதமாக, இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டுச் சரக்காக மக்கள் கருதினர். அன்றியும் போர்த்துக்கேய சேனைவீரர்களின் அட்டகாசமும், வெறிநாய்த்தனமும், போர்த்துக்கேய அதிகாரிகளின் கொடுங்கோல் ஆட்சியும் மக்களைக் கத்தோலிக்க மதத்தைப் பற்றவிடாது தடுத்தன. மேலும் கத்தோலிக்க மார்க்கத்தைத் தழுவியவர்கள் அம்மார்க்க முறைப் போதனைப்படி நடவாது கண்டதே காட்சி - கொண்டதே கோலம் என நடந்து வந்தனர். இதனால் மக்கள் அவர்களையும் அவர்கள் சார்ந்த மதத்தையும் வெறுக்கக் காரணமாயிற்று. இக்காரணங்களுக்குமிடையில் இந்நாட்டில் கத்தோலிக்க மதம் வேரூன்றக் காரணமானவர் போர்த்துக்கேயராவரென்ற உண்மை மறுக்க முடியாததாகும்.

## போர்த்துக்கேய ஆட்சியின் விளைவுகள்

போர்த்துக்கேயர் ஏறக்குறைய 150 ஆண்டுகளாக இலங்கையில் ஆட்சி செய்தார்கள். அவர்களது ஆட்சியால் அரசியலிலும், சமூகத்திலும், சமயத்திலும், கலாசாரத்திலும், மொழியிலும் ஏற்பட்ட விளைவுகளை இங்கு கவனிப்போம்.

போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்தபோது கோட்டை, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய மூன்று பெரும் இராச்சியங்கள் இருந்தன. இவைகளில் மிகச் செல்வாக்கடைந்திருந்த கோட்டை இராச்சியத்தின்கீழ் மற்றிரு



இராச்சியங்களும் அடங்கியிருந்தன. கோட்டை அரசனுக்கு மற்றிரு அரசர்களும் கப்பம் செலுத்திவந்தனர். ஆனால் போர்த்துக்கேயர் இந்நாட்டை விட்டகன்றபோது கண்டி இராச்சியம் மட்டுமே சுதந்திர நாடாகக் காட்சியளித்து அன்னியர் படையெடுப்பினின்றும் காக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசியலிலே கண்டி முக்கிய கேந்திரஸ்தானத்தை அடைந்திருந்தது. அன்றியும் போர்த்துக்கேயர் பலமுறை கண்டிமீது படையெடுத்தும் வெற்றி பெறவில்லை. எனவே அங்கு வாழ்ந்த மக்களிடையே தாங்கள் கரைநாட்டினரைவிட உயர்ந்த வகுப்பார் என்ற எண்ணம் கொண்டிருந்தனர். அன்னிய படையெடுப்புக்களால் அல்லற்பட்ட கீழ் நாட்டுச் சிங்களவரைப் பார்க்கிலும் மலைநாட்டுப் பகுதியாகிய தாங்கள் சிறந்தவர்கள் என்ற கருத்து அவர்களிடை நிலவி வந்தது. இங்ஙனமாகச் சிங்கள மக்களிடையே இரு பிரிவுகள் ஏற்பட்டன.

போர்த்துக்கேயர் இந்நாட்டில் கத்தோலிக்க கிறிஸ்தவ மார்க்கத்தைப் புகுத்தினர். அம்மதம் பரவுவதற்காக அரும்பாடுபட்டுப் பலரை மனந்திருப்பினர். கத்தோலிக்க மதக் கொள்கைகள் மக்களிடையே பரவத் தொடங்கின. சமத்துவம், சகோதரத்துவம், சமாதானம் போன்ற போதனைகளைக் குருமார் பரப்பி வந்தனர். கி. மு. 247-ம் ஆண்டு மகிந்தனால் கொண்டுவரப்பட்ட புத்தமதம் சமத்துவத்தைப் பற்றிப் போதித்தபோதிலும் கி. பி. 1500-ம் ஆண்டுவரை சாதிக் கட்டுப்பாடுகள் ஆங்காங்கு நிலவி வந்தன. கத்தோலிக்க மதம் வந்துற்றகாலை கோட்டையிலும் யாழ்ப்பாணத்திலும் மனந்திரும்பிய மக்கள் தங்களுக்குள்ள சாதிக் கட்டுப்பாட்டைத் தகர்த்தெறிந்தனர்.

மேலும் போர்த்துக்கேயரது வருகையால் மேல்நாட்டுச் சிற்பம், சித்திரம், சங்கீதம் ஆகிய கலைகளும் இந்நாட்டில் புகுந்துள்ளன. அன்றியும் கத்தோலிக்க குருமார் பிரசித்தி பெற்ற கலாசாலைகளையும் பாடசாலைகளையும் நிறுவியுள்ளனர். போர்த்துக்கேயரது நடையுடை பாவனை, ஆடையலங்காரங்கள் இந்நாட்டு மக்களைக்கவர்ச்

துள்ளன. பெண்மணிகள் போர்த்துக்கேய மாதரைப போன்று பாவாடை, சட்டை அணிந்துவரத் தொடங்கினர். கண்டியரசனான முதலாம் இராசசிங்கன் போர்த்துக்கேயரது பாணியைப் பின்பற்றித் தன் உடைகளை அணிந்துகொண்டான்.

தமிழ் - சிங்கள இயல்புகளிலும் இலக்கியங்களிலும் போர்த்துக்கேயரது மொழி புகுந்துள்ளது. போர்த்துக்கேய வார்த்தைகளாகிய தொப்பி, கமிஸ், சப்பாத்து, கவிசம், ஆயா போன்றவைகள் சிங்களத்திலும் தமிழிலும் எடுத்தாளப்படுகின்றன. கத்தோலிக்க நூல்களும் விசேஷமாக பைபிளும் தமிழ் - சிங்கள மொழிகளில் போர்த்துக்கேய குருமார்களால் எழுதப்பட்டன. அநேக சிங்கள நூல்களை **சங். ஜேசப்வாஸ், கோன்சால்வஸ்** ஆகிய குருமார் எழுதியுள்ளனர். இதுவுமன்றி இந்நாட்டு மக்கள் **பெரைரா, பெர்னாண்டு, அல்மேய்டா, சில்வா, சல்காது** போன்ற போர்த்துக்கேயப் பெயர்களைத் தாமும் நாமகரணஞ் சூட்டிக் கொண்டனர். இங்ஙனமாகப் போர்த்துக்கேயர் வரவால் பல துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அனைத்துக்கும் மேலாகக் கத்தோலிக்க மதம் அவர்களால் இந்நாட்டிற் புகுத்தப்பட்டது.

## போர்த்துக்கேயர் வீழ்ச்சி

அடுத்ததாக ஒருநாட்டின் செல்வங்களுள் சிறந்தது அந்நாட்டு மனித சக்தியேயாகும். 16-ம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கலில் ஜனசக்தி அபிவிருத்தியும் குறைந்தது. சுமார் 100 ஆண்டுகளாக இடைவிடாது போர்த்துக்கேயர் பல இடங்களிலும் போர்களில் ஈடுபட்டிருந்ததால் போர்களின் விளைவாக மக்கள் மடிந்தனர். ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் கலப்புமணம் செய்து அவற்றின் மூலம் சந்ததிகளைப்பெருக்க முனைந்தும் அம்முயற்சி போதிய பயனளிக்காது போயிற்று. குறைந்துபோன மனிதசக்தியானது போர்த்துக்கேயரது வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. போர்த்துக்கேயர் தங்கள் கடல் ஆதிக்கத்தை இழந்துவிட்டனர். சிறந்த கடற்படையும் இந்து மகாசமுத்திரத்தில் கடல் ஆதிக்கமும்



பெற்றிருந்த அவர்கள் தமக்கு யாரும் நிகரில்லையென்பதாக எண்ணியிருந்தனர். கடற்படையை நவீன முறையில் ஆக்கவும் கருதினார்களில்லை. அதுவுமன்றி ஒல்லாந்தர் கிழக்குப் பிரதேசங்களில் நாடுபிடிக்கும் ஆசையுடனும் வர்த்தக நோக்கத்துடனும் வருவார்களெனப் போர்த்துக்கேயர் எண்ணவில்லை. எனவே தங்கள் வியாபாரத்தைப் பெருக்குவதற்காகவே தங்கள் கடல்ஆதிக்கத்தைப் பயன்படுத்தினார்களன்றி அன்னியர் படையெடுப்பைத் தவிர்ப்பதற்கான முறையில் கடற்படைக்குத் தக்க பயிற்சி அளிக்கவில்லை.

கி. பி. 1580-ம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டில் அரசபதவிக்கு உரிமையாளனில்லாதபோது அந்நாட்டு அரசனுக்கு நெருங்கிய பந்துவான 2-ம் பிலிப்பு என்ற ஸ்பெயின் நாட்டு மன்னன் போர்த்துக்கலுக்கும் அரசனானான். அவன் போர்த்துக்கேயரது நன்மைகளை உதாசீனம் செய்து தன்நாடான ஸ்பெயினுக்குப் போர்த்துக்கேயரது பணத்தையும் சேனாவீரர்களையும் உதவிவந்தான். கீழ் நாடுகளில் போர்த்துக்கேயருக்குச் சொந்தமான இடங்களைப் பாதுகாப்பதில் 2-ம் பிலிப்பு கவனமெடுக்கவில்லை. ஆகவே போர்த்துக்கேயரது ஆதிக்கத்திலிருந்த ஒவ்வோர் இடமும் பறிபோயது.

கீழ் நாடுகளுக்கு அனுப்பப்பட்ட போர்த்துக்கேய அதிகாரிகளின் கொடுமைகளும், இலஞ்ச ஊழல்களும், ஆட்சித் திறமைக்குறைவும் போர்த்துக்கேயர் வீழ்ச்சிக்கு முக்கிய காரணங்களாகும்.

மேலும் போர்த்துக்கேயர் ஆட்சி வீழ்ச்சியடைந்ததற்குரிய காரணங்களை ஆராய்வோம். இந்தியா, சீனா, ஜப்பான், ஆபிரிக்கா, பிறேசில், கிழக்கிந்தியதீவுகள் ஆகிய இடங்களைத் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்த போர்த்துக்கேயர் போர்த்துக்கலில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு மத்திய அரசாங்கத்தின் மூலம் இவ்விடங்களைப் பரிபாலிக்கக் கருதினர். போர்த்துக்கல் போன்ற சிறிய நாட்டுக்கு இப்படிப்பட்ட மத்திய அரசாங்கம் போதுமா

னதாகும். அதே மத்திய அரசாங்கம் பல இடங்களிலும் பரவலாய் இருந்த போர்த்துக்கேயரது சாம்ராச்சியத்தைப் பரிபாலிக்கப் போதுமானதாயில்லை. சேனைவீரர்களும், மதக்குருமாரும் நிறைந்திருந்த போர்த்துக்கல் நாட்டில் தகுதிவாய்ந்த - அனுபவமுள்ள ஆட்சியாளரில்லாது போயினர். போர்த்துக்கேயர் தங்கள் சிறிய நாட்டை ஆள்வதற்குக்கூடத் திறமையான ஆட்சியாளரைப் பெற்றிருக்கவில்லை. எனவே தங்கள் சக்திக்கு விஞ்சிய இடங்களைப் பிடித்து ஆள நினைத்த போர்த்துக்கேயர்- அவ்விடங்களைக் கட்டி ஆளுவதற்காக ஐரோப்பா ஆகிய கண்டங்களிலிருந்துவந்து தங்கள் துறைமுகத்தில் வியாபாரம் செய்துவந்த கப்பல்களுக்கு வரிவிதித்து அவ்வரியை வசூல்செய்வதற்குப் போதிய திறனில்லாத போர்த்துக்கேயர் - தங்கள் சாம்ராச்சியத்தில் பலமுள்ள ஆட்சியை நிறுவுவர் என எதிர்பார்ப்பது துர்லபம்.

இரண்டாவதாகப் பிறநாடுகளிலிருந்துவந்து குவிந்த செல்வத்தால் போர்த்துக்கேயர் தாம் செய்துவந்த கமத்தொழில், கைத்தொழில், மீன்பிடித்தல் ஆகிய தொழில்களைத் துறந்து சோம்பேறிகளாய் அலைந்தனர். அலைகடலில் பெரும் புயலையும் பொழிகின்ற மழையையும் பொருட்படுத்தாது புதுப்புது வர்த்தகத்துறைகளைக்கண்டு வீர தீரமுடையோராய் இருந்த மக்கள் பின்பு உல்லாச வாழ்க்கையில் ஈடுபட்டு ஆடம்பரமாய்த் திரிந்து சோம்பிக் கிடந்தனர். இங்ஙனமாகப் புறநாட்டுக் கப்பல்கள் மூலமாய்க் கிடைத்த செல்வமானது போர்த்துக்கேய சமுதாயத்தை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றது.

ஆராய்ந்து பார்த்தால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்ட போர்த்துக்கேய இராஜப் பிரதிநிதிகளில் **அல்புகேர்க்** போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே ஆட்சித் திறமையுள்ளவர்கள். மற்றவர்களெல்லாம் ஆளுந் திறமையற்றவராயிருந்தனர். அன்றியும் அதிகாரிகள் உள்நாட்டு அரசர்களுடன் குழப்பஞ் செய்து மக்களைப் பகைத்து மக்களின் ஆதரவை இழந்துவிட்டனர். எனவே



கொடுமைகளுக்கு அஞ்சாதவர்களான போர்த்துக்கேயரை வெறுத்து ஒல்லாந்தரை உள்நாட்டு மக்களும் மன்னரும் வரவேற்கத் தயாராயிருந்தனர்.

அனைத்துக்கும் மேலாக இலங்கைக்கு வந்த ஒல்லாந்தர்களும் எந்தவிதத்திலும் சளைத்தவர்களல்ல. ஆட்சித்திறன், மனிதசக்தி, இராணுவ கடற்படைப் பலம், இயற்கையில் அடைந்த சொந்த முயற்சி என்பவற்றிலும் ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைவிட மேம்பட்டிருந்தனர். ஆதலின் வலிமை குறைந்த நாட்டை வலிமை கூடிய நாடானது வெற்றிகொண்டதில் ஆச்சரியமில்லை. ஒல்லாந்தர்களால் விரட்டப்பட்ட போர்த்துக்கேயர் 1658-ம் ஆண்டில் இலங்கையைவிட்டு வெளியேறினர்.

### சுருக்கம்

மல்வானை உடன்படிக்கையின்படி நாட்டின் வழக்க முறைகளைப் போர்த்துக்கேயர் அநுசரிக்கவில்லை — முறைகளை மீறி நடந்தனர் — கோட்டைச் சிங்களவரிடமும் யாழ்ப்பாண மக்களிடமும் பகைமையைத் தேடிக்கொண்டனர் — குருமாராகவும், சேனாதிபதிகளாகவும் இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயரில் பெரும்பாலோர்க்கு அரசியல் ஞானம் கிடையாது — தமது நூற்றைம்பது வருட ஆட்சிக் காலத்தில் ஏதோ ஒவ்வோர் பாகத்தில் போரில் ஈடுபட்டிருந்தமையால் ஆட்சிமுறையைச் செம்மைப்படுத்த முயலவில்லை — இலங்கையில் சாதிக்கட்டுப்பாட்டின் அடிப்படையில் அரசியலும் சமூகமும் இயங்கியதைப் போர்த்துக்கேயர் உணரவில்லை — மூடை தூக்கல், பல்லக்குத் தூக்கல் போன்ற தொழில்களைப் பார்த்த சாதியாரைக்கொண்டு செய்வித்தமையின் போர்த்துக்கேயர் அம்மக்களின் வெறுப்புக்கு ஆளாயினர் — சிங்கள - தமிழ் அரசர்கள் காலத்தில் உள்நாட்டினர் வகித்த திசாவை, கோறளை போன்ற உத்தியோகங்களும் போர்த்துக்கேயர் நியமிக்கப்பட அவர்கள் வரைமுறையின்றி மக்களை இம்சித்து அநியாய வரிகளையும் வசூலித்தனர் — நியாயஸ்தலத்தில் நீதியும் முறையாக வழங்கப்படவில்லை — போர்த்துக்கேயர் ஆட்சி நிர்வாகத்திறனற்றதாயும், பலாத்காரம், அநீதி, சுயநலம், பேராசை போன்ற கொடுமைகள் நிறைந்ததாயுமிருந்தமையால் அவர்கள் பக்கலிலுள்ள சிங்களப் படைகளும் மறுபக்கம் சாரத் தோல்விகளும் குழப்பங்களும் ஏற்படலாயின.

## போர்த்துக்கேயரும் மதமும்

போர்த்துக்கேயர் தமது கத்தோலிக்க-கிறிஸ்தவ மதத்தைப் பரப்புவதற்காகப் பௌத்தர், இந்துக்கள், முஸ்லிம்களுக்குப் பெரும் கொடுமைகள் புரிந்தனர்—குருமாரில் ஒரு பகுதியினர் மாத்திரம் மக்களுடைய சுகதுக்கங்களிற் பங்குபற்றி அவர்களை மனந்திருப்பச் செய்தனர் — இதனால் கடற்கரைப் பிரதேச மக்கள் கத்தோலிக்க மதத்தைத் தழுவினர் — போர்த்துக்கேயர் மதம்மாறினோருக்கு ஆதரவு காட்டியமை, போர்த்துக்கேய குருமாரின் உள்ளன்பு, கத்தோலிக்கமதப் புத்தகங்கள் மலிந்திருந்தமை — ஐரோப்பாவில் உண்டான மறுமலர்ச்சி இயக்கத்தின் காலம்

சாரத்தைப் போர்த்துக்கேயர் இலங்கையிற் புகுத்தியமை என்னும் காரணங்களால் இலங்கையிற் கத்தோலிக்க மதம் பரவியதெனினும் பௌத்தர்கள், இந்துக்களிற் பெரும்பகுதியினர் புதியமதக்கோட்பாடுகளை ஏற்கவும் வழமையடி வழமையாக வழங்கி வந்த தம் மதங்களைக் கைவிடவும் இணங்கவில்லை.

## போர்த்துக்கேயர் ஆட்சியின் விளைவுகள்

ஒரு காலத்தில் மிகச் செல்வாக்கு அடைந்திருந்த கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயர் ஆட்சியில் தனது செல்வாக்கை இழந்தது — கண்டி தனது சுதந்திரத்தையிழக்கவில்லை — கண்டி மக்கள் கரைநாட்டுச் சிங்களவரிலும் தாங்கள் சிறந்தவர்கள் எனக் கருதத் தொடங்கினர் — சிங்கள மக்களிடையே இருபிரிவுகள் ஏற்பட்டன — கத்தோலிக்க மதம் இலங்கையிற் பரவலாயிற்று — கத்தோலிக்க மதத்தினர் சாதிக் கட்டுப்பாடுகளைத் தளரவிடலாயினர் — பலதாரமணம் முதலியவற்றில் சீர்திருத்தங்கள் ஏற்பட்டன — போர்த்துக்கேயர் வருகையால் மேல்நாட்டுச் சிற்பம், சித்திரம், சங்கீதம் ஆகிய கலைகள் இந்நாட்டிற் புகுந்தன — கத்தோலிக்கக் குருமார் பிரசித்திபெற்ற கலாசாலைகளையும், பாடசாலைகளையும் நிறுவினர் — போர்த்துக்கேயரது நடையுடை பாவனை அலங்காரங்களும் மக்களைக் கவர அவர்கள் அவற்றைப் பின்பற்றினர் — தமிழ் - சிங்கள இலக்கியங்களில் தொப்பி, கமிஸ், சப்பாத்து, ஆயா போன்ற போர்த்துக்கேய வார்த்தைகள் கலந்துகொண்டன — பெரேரா, பெர்னாண்டு போன்ற போர்த்துக்கேயப் பெயர்களையும் மக்கள் தமக்கு நாமகரணஞ் செய்துகொண்டனர்.

## போர்த்துக்கேயரின் வீழ்ச்சி

16-ம் நூற்றாண்டின் இறுதியில் போர்த்துக்கேயர் மனிதசக்தியை இழந்தமை - தமது கடற்படையை நவீனமுறையில் வலுப்படுத்தாமை — 2-ம் பிலிப்புவின் சுயநலம் — போர்த்துக்கேய அதிகாரிகளின் கொடுமைகள் — மத்திய அரசாங்கத்தின் வலுக்குறைவு — அனுபவமுள்ள ஆட்சியாளரின்மை — பிறநாட்டுச் செல்வத்தால் டாம்பீக வாழ்வு — ஒல்லாந்தரின் போர்த்திறன் என்பன போர்த்துக்கேயராட்சி அஸ்தமனத்திற்குக் காரணங்களாகும்.

### வினாக்கள்

1. போர்த்துக்கேயர் ஆட்சி இலங்கையில் நிலைபெறாமற்போனமைக்கும், மக்கள் அதில் வெறுப்புக் கொண்டமைக்கும் உரிய காரணங்களை ஆராய்க.
2. இலங்கையிற் கத்தோலிக்க கிறீஸ்தவ மதம் ஓரளவு பரவியமைக்கும் முற்றாக இலங்கை மக்களை மனந் திருப்ப இயலாமற்போனமைக்குமுரிய காரணங்களை ஆராய்க.
3. இலங்கையில் போர்த்துக்கேயராட்சியின் விளைவுகளையும், பலாபலன்களையும் ஆராய்க.
4. போர்த்துக்கேயர் ஆட்சியை இன்றும் எமக்கு நினைவூட்டும் சின்னங்களெவை?
5. போர்த்துக்கேயர் ஆட்சி ஆரம்பத்தில் இலங்கையில் வேரூன்றிய வகையையும், இறுதியில் நிலைதளர்ந்து வீழ்ச்சியடைந்த வகையையும் விரிவாக விளக்குக.

---

# பரீட்சை வினாக்கள்

1. 16-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையில் இருந்த மூன்று பிரதான இராச்சியங்களைப் பற்றி எழுதுக.
2. 16-ம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கையைப் பற்றியும், பொருளாதார வர்த்தக நிலைகளைப் பற்றியும், அரசியல் முறைகளைப் பற்றியும் எழுதுக.
3. போர்த்துக்கலும் போர்த்துக்கேயரும் - என்னும் பொருள் பற்றி ஓர் குறிப்பு எழுதுக.
4. சீதவாக்கையின் எழுச்சியையும், வீழ்ச்சியையும், அதற்குரிய காரணங்களையும் ஆராய்க.
5. இலங்கைச் சரித்திரத்தில் டொன்சுவான் தர்மபாலா மிகவும் பரிதாபத்துக்குரியவன் - என்ற கூற்றை ஆராய்க.
6. கண்டி இராச்சியத்தின் மீது போர்த்துக்கேயர் செய்த முக்கிய படையெடுப்புகளைக் கிரமமாய்க் கூறுக.
7. போர்த்துக்கேயர் கண்டிமீது பலமுறை படையெடுத்தும் அவ்விராச்சியத்தைக் கைப்பற்றி ஆளமுடியாமைக்குரிய காரணங்களை ஆராய்க.
8. போர்த்துக்கேயரது இலங்கைப் பரிபாலனத்தைப் பற்றிக் கட்டுரை வரைக. அவர்களது பரிபாலனம் அனுகூலமடையாமற் போனதற்குரிய காரணங்கள் யாவை?
9. போர்த்துக்கேயரது ஆட்சியினால் இலங்கையடைந்த பலாபலன்கள் யாவை? அவர்கள் ஆட்சி வீழ்ச்சியடைவதற்குரிய காரணங்கள் யாவை?
10. குறிப்பு வரைக: மல்வானை உடன்படிக்கை, புவனேகபாகு, மாயாதுன்னை, 1-ம் இராசசிங்கன், 1-ம் விமலதர்மசூரியன், சேனரதன், கொன்ஸ்தாந்தின் டி ஸா, அசவிடோ, டிமெல்லோ.

# ஆறும் அத்தியாயம்

# ஒல்லாந்தர் காலம் 1656 -- 1796

## ஒல்லாந்தர் கிழக்குப் பிரதேசங்களுக்கு வருகை

ஐரோப்பாவிலே ஸ்பெயின் சாம்ராச்சியத்தின் ஓர் பகுதியாக ஒல்லாந்து விளங்கியது. இந்நாடு சீருஞ் சிறப்புமுற்றுப் பொருள்வளத்திலும், வியாபாரத் துறையிலும், தொழில் அபிவிருத்தியிலும் மேம்பட்டிருந்தது. ஒல்லாந்து தேசத்தைத் தாழ்ந்த தேசமென்று சொல்வர். ஏனெனில் இது கடல்நீர்மட்டத்துக்குக் கீழாக அமைந்துள்ளது. கடல்நீர் இந்நாட்டுக்குள் நுழைந்து மக்களுக்குச் சேதம் விளைவிக்காதவாறு பெரும் அணைகளைக்கட்டி நீரைத் தடுத்து வருகிறார்கள். ஒல்லாந்து தேசத்தில் வாழ்பவரே **டச்சுக்காரர்** என்றும் வழங்கப்படுவர். 17-ம் நூற்றாண்டில் ஒல்லாந்து தேசம் பொருள் வளத்தால் மட்டுமன்றிக் கலைவளத்திலும் மகோன்னத நிலையெய்தியிருந்தது. பேர்பெற்ற விஞ்ஞானிகளும், சட்ட நிபுணர்களும், வலிமைமிக்க எழுத்தாளர்களும், தத்துவ ஞானிகளும், ஓவியர்களும், சிற்பிகளும் அங்கு மலிந்திருந்தனர்.

ஸ்பெயின் சாம்ராச்சிய அரசனாக அக்காலத்தில் விளங்கியவன் **இரண்டாம் பிலிப்பு** என்பவனாவன். இவன் அறநெறி தவறிச் செங்கோலோச்சி வந்தான். மக்களை வாட்டிக் கொடுங்கோன்மை புரிந்தான். அவன் ஆட்சியை எதிர்த்து ஒல்லாந்தர் கலகம் விளைத்தனர். இதற்குக் காரணங்களில்லாமலில்லை. இதுகாறும் ஒல்லாந்து தேச மாகாணங்கள் ஒல்லாந்து தேசப் பிரபுக்களாலேயே ஆளப்பட்டு வந்தன. ஆனால் பிலிப்பு பேரரசனாகச் சிம்மாசனம் ஏறியதும் ஒல்லாந்துப் பிரபுக்களை நீக்கிவிட்டு ஸ்பெயின் நாட்டவரை ஒல்லாந்துதேச மாகாணங்களைப் பரிபாலிப்பதற்கு நியமித்தான். அன்றியும் ஸ்பெயின் நாட்டுப் பேரரசனும் குடிகளும் கத்தோலிக்க கிறிஸ்தவ மார்க்கத்தைச் சேர்ந்தவர்கள்; ஒல்லாந்து தேசத்தவரோ புரொட்டஸ்தாந்து மதத்தைத் தழுவியவர்கள். ஆகவே கத்தோலிக்கனாகிய பிலிப்பு புரொட்டஸ்

தாந்தராகிய ஒல்லாந்தரிடம் பகைமை பாராட்டி அவர்களை வெறுத்துக் கடும் வரிகளை விதித்து இம்சித்து வந்தான். இவ்விரு வகையிலும் துன்புற்ற ஒல்லாந்தர் யுத்தசன்னத்தராயினர். **ஒரேஞ் வம்சத்து வில்லியம்** (William of Orange) என்பவனின் தலைமையில் ஸ்பெயின் சாம்ராச்சியத்துப் பேரரசனுடன் போர்செய்தனர். தங்கள் அஞ்சா நெஞ்சத்தினாலும், வில்லியம் என்பவனுடைய போர்த்திறனாலும், தங்களுக்கிருந்த ஓரளவு கடல் ஆதிக்கத்தினாலும் ஒல்லாந்தர் தங்கள் எதிரியைப் புறமுதுகு காட்டி ஓடச்செய்தனர்.

கி. பி. 1584-ம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டுப் பேரரசன் தூண்டுதலினால் ஒல்லாந்தருக்கு வாழ்வளித்த **வில்லியம்** கொலைசெய்யப்பட்டான். அதன்பின் வில்லியத்தின் மகன் போர்க்கோலம் பூண்டு தலைமை தாங்கிச் சேனைகளை நடத்திச்சென்று ஸ்பெயின் நாட்டுப் படைகளை முறியடித்தான். இத்தோல்வியானது ஸ்பெயின் நாட்டின் செல்வாக்குக்குப் பங்கம் விளைத்தது. மேலும் 1588-ம் ஆண்டில் ஆங்கிலேயர் **ஆர்மேடா** என்னும் ஸ்பெயின் நாட்டுக் கப்பற்படையைக் கைப்பற்றிச் சிதறடித்தனர். இதுகாரணத்தால் அந்நிய நாட்டுடன் ஸ்பெயின் நாட்டவர் செய்துவந்த வியாபாரம் தடைப்பட்டது. அவ்வியாபாரத்தைக் கெடுக்க ஒல்லாந்துக் கப்பல்கள் கங்கணங் கட்டின. இக்காரணங்களால் ஸ்பெயினுக்கும் ஒல்லாந்தருக்கும் ஓர் சேர்வுடன் படிக்கை 1609-ம் ஆண்டு ஏற்பட்டது. 1648-ம் ஆண்டிலிருந்து ஒல்லாந்து நாடானது ஒரு தனிச் சுதந்திர நாடாக விளங்கியது.

16-ம் நூற்றாண்டிற் கப்பல் வர்த்தகத்திற்குக் கேந்திரஸ்தானமாக **ஆம்ஸ்டர்டாம்** என்னும் பட்டினம் இருந்து வந்தது. நூற்றுக் கணக்கான கப்பல்கள் அத்துறைமுகப் பட்டினத்திற்கு வந்துபோயின. அக்காலத்திற் கிழக்குத் தேசங்களுடன் வர்த்தகப் போக்கு வரவு செய்வதற்காகப் பல வியாபாரக் கொம்பனிகள் நிறுவப்பட்டன. கிழக்கிந்திய தீவுகளுக்குச் சென்ற கப்பற்படையிலுள்ள கப்பல் அதிகாரியான **ஸ்பில்பேர்கன்** (Spilbergan)



என்னும் டச்சுக்காரன் 1601-ம் ஆண்டில் கண்டியரசனாகிய **விமலதர்மசூரியனைச்** சந்தித்தான். அதேவருடத்தில் ஒல்லாந்துக் குடியரசு கிழக்கிந்திய தீவுகளில் வியாபாரஞ் செய்வதற்கான முறையில் ஒரு வர்த்தக சாதனத்தைப் பிறப்பித்தது. அச்சாதனத்தின்படி சேர்வர்த்தகக் கொம்பனி உருவாகியது. வியாபார சம்பந்தமாகப் பிறதேசங்களுடன் ஒப்பந்தங்கள்செய்யவும், ஆங்காங்கே கோட்டைகள் கட்டவும், அக்கோட்டைகளைப் பாதுகாப்பதற்காகச் சேனைகளைத் திரட்டவும் அக்கொம்பெனிக்கு உரிமைகள் கொடுக்கப்பட்டன. எனினும் இவ்வுரிமைகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் டச்சு இராச்சியத்தின் நிர்வாகசபைக்கு உரியதாயிருந்தது. இந்த டச்சு வர்த்தகக் கொம்பனிக்கு வேண்டிய மூலதனத்தில் ஒருபங்கை டச்சு அரசாங்கம் கொடுத்துதவியது. இங்ஙனம் டச்சு அரசாங்கத்தின் பொருளுதவியுடனும் ஆதரவுடனும் உருவாகிய **டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பெனி** படிப்படியாகக் கிழக்கு நாட்டிற் பலவிடங்களிலும் தொழிற்சாலைகளைக் கட்டி வியாபாரத்தை விருத்தி செய்துவந்தது.

1602-ம் ஆண்டில் ஒரு பெரிய கப்பற்படை கிழக்கு நோக்கிப் புறப்பட்டது. அப்படையின் உதவித் தளபதியாயிருந்து **சேபால் டி வியர்த்** (Seebald de Weert) என்னும் டச்சுக்காரன் இலங்கைக்கும் வந்துபோனான். மேலும் அவன் சயாம், சீனா ஆகிய இடங்களுக்கும் விஜயஞ்செய்து அநேக வியாபாரத் தொழிற்சாலைகளைக் கட்டுவித்துத் தன் கப்பற்படையுடன் ஒல்லாந்து தேசந் திரும்பினான். அதன்பின் 1604-ம் ஆண்டில் **வான்டேர் ஹேஜன்** என்னும் டச்சுத் தளபதி **மொலுக்காஸ், ரைடர்** என்னும் இடங்களைப் பிடித்துத் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணித்தான். மேலும் 1606-ம், 1607-ம் ஆண்டுகளில் முறையே பிரசித்திபெற்ற டச்சுத் தளபதிகளால் போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்பட்டனர். "தமக்கு எதிர்ப்பு இனி இல்லை - போர்த்துக்கேயர் மடக்கமாட்டார்கள்" என்றுணர்ந்த டச்சுக்காரர் கடல் ஆதிக்கத்தைப் பலப்படுத்தியதுமன்றி, வர்த்தகத்தையும் அபி

விருத்தி செய்தார்கள். இதன் பயனாக டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பனி பிரமிக்கத்தக்க முறையில் வருவாயைப் பெற்றது.

வளர்ந்துவரும் வர்த்தகத்தாலும் வருவாயாலும் உந்தப்பட்ட டச்சுக்காரர் தம் வியாபாரத்தைக் கிழக்குத் தேசங்களில் ஸ்திரமான அடிப்படையில் ஸ்தாபிக்கப் பகீரதப் பிரயத்தனஞ் செய்தனர். முதலாவதாகக் கிழக்கிந்தியக் கொம்பனியின் தலைமைப் பீடத்தை ஜாவாத் தீவிலும் பின் பட்டேவியாவிலும் அமைத்தார்கள். பின்பு கிழக்குத் தேசங்களைப் பரிபாலிக்க வேண்டி ஒரு பிரதம தேசாதிபதியும் (கவர்னர் ஜெனரலும்) அவருக்கு ஆலோசனை கூறியுதவ ஏழு தேசாதிபதிகளும் (கவர்னர்களும்) அடங்கிய ஒரு ஆலோசனைக் குழு நியமிக்கப்பட்டது. நியமிக்கப்பெற்ற தேசாதிபதிகள் (கவர்னர்கள்) எல்லோரும் மிகத் திறமையும் உற்சாகமும் உள்ளவர்களாக விளங்கினரென்றே சொல்லவேண்டும். ஏனெனில் அவர்களால் கிழக்குத் தேசங்களிற் பல இடங்களுக்கும் அனுப்பப்பட்ட டச்சு மாலுமிகளும், தளபதிகளும் புதுப்புது இடங்களை அறிந்து வருவதிலும், புதுப்புதுத் தொழிற்சாலைகளை ஏற்படுத்துவதிலும், புது வர்த்தகப் பொருட்களை விளைவிப்பதிலும், புது வழிகளில் வர்த்தகத்தைப் பெருக்குவதிலும் ஊக்கம் காட்டினர். டச்சுப் பிரதம தேசாதிபதியின் உற்சாகமும், மதிவேகமும் இவர்களுக்கு எப்போதும் கிடைத்துவந்தது. பிரதம டச்சுத் தேசாதிபதிகளுள் **கோவன்** (Koen) என்பவனும், **அந்தோனி வான் டீமன்** (Antony van Deeman) என்பவனும் முக்கியமானவர்கள். பிந்தியவன் காலத்திற்றான் இலங்கையில் டச்சுக்காரர் காலெடுத்துவைக்கத் துணிந்ததுமன்றி இந்நாட்டைக் கைப்பற்றவும் திட்டமிட்டனர்.

கடல் ஆதிக்கத்தின் கட்டுக் கோப்பிலே தங்கள் சாம்ராச்சியத்தையும் வர்த்தகத்தையும் வளர்க்க விரும்பிய டச்சுக்காரர் 1652-ம் ஆண்டில் நன்னம்பிக்கை முனையைக் கைப்பற்றினர். கிழக்குப் பிரதேசங்களில் அடிவைப்பதற்கு இத்தீவு சௌகரியமாய் அமைந்தது. இங்கு



நல்ல உணவும் நீரும் கிடைத்தமையால் டச்சுக்காரர் அமோகமாகக் குடியேறினர்கள். இங்கிருந்துகொண்டு வடகிழக்கு முகமாகக் கடற்பிரயாணஞ் செய்து "மொறிஷியஸ்" (Mauritius) தீவைக் கைப்பற்றினர். பின்னர் கொழும்பு, காலி ஆகிய இடங்களின் வழியாக மலாக்கா நீரிணையைக் கடந்து பட்டேவியாவை அடைந்தனர்.

கிழக்குத் தேசங்களில் வர்த்தகஞ் செய்யவந்த போர்த்துக்கேயருடைய கொள்கைக்கும் ஒல்லாந்தரது கொள்கைக்கும் சில வேறுபாடுகளுண்டு. முதலாவதாக இந்தியக் கடற்கரையிலுள்ள முக்கிய கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றிக்கொண்டால் கீழை நாடுகளில் வர்த்தகத்தில் உரிமை அனுபவிக்கலாமென்று போர்த்துக்கேயர் கருதினர். அவர்களுக்குச் சாதகமாகப் போர்த்துக்கேயரது கடற்படையை எதிர்க்க வலிமையுள்ள வேறு ஐரோப்பிய கடற்படை கீழைத்தேசங்களில் இருக்கவில்லை. ஆனால் டச்சுகாரர் போர்த்துக்கேயரைப் போல் வர்த்தக ஏகபோக பாத்தியத்தைக் கீழைத் தேசங்களிற் கொண்டாட நினைத்தபோதிலும் டச்சுக்காரரது கடற்படைபோன்று ஆங்கிலேயர் போர்த்துக்கேயரது கப்பற்படைகளும் இந்தியக் கரையில் ஸ்திரப்பட்டிருந்தன. எனவே பொருள் உற்பத்தியாகும் கேந்திர ஸ்தானங்களைக் கைப்பற்றினாலன்றி வர்த்தகத்துறையில் ஏகபோக உரிமையை டச்சுக்காரர் பெறமுடியாமல் இருந்தது. தங்களுள் சண்டையிட்டுவந்த சிங்கள அரசர்கள் தத்தம் எதிரியின் கெடுபிடியினின்றும் தங்களைப் பாதுகாத்துக்கொள்ளவும், அந்நியராகிய போர்த்துக்கேயருக்கு விரோதமாகவும் டச்சுக்காரர் உதவியை அரசர்கள் நாடியமையால் டச்சுக்காரருக்கு வர்த்தகப் பொருளுற்பத்தியாகும் இடங்களைக் கைப்பற்ற முடிந்தது. இரண்டாவதாகப் போர்த்துக்கேயர் மேல்நாடுகளுக்கும் கீழ்நாடுகளுக்கும் இடையே வர்த்தகத்தை ஆரம்பித்து வளர்த்துவந்தனர். ஆனால் டச்சுக்காரரோ இவ்விரு பிரதேசங்களுக்கிடையிலுமன்றிக் கிழக்கேயுள்ள பல நாடுகளிலும் தமது வர்த்தகத்தை ஸ்தாபித்து வளர்த்தனர். கிழக்கிந்தியக் கொம்பெனியின் பிரதிநிதிகளான டச்சுக்காரர்

குறைந்த செலவில் மிகுந்த ஆதாயத்தைப் பெறவினைத்தனர். எவ்வெவ் வழிகளிலெல்லாம் வருவாய் கிடைக்குமோ அவ்வவ் வழிகளில் வர்த்தகத்தைப் பெருக்கினர். மேலும் தங்களுக்கு வேண்டிய கறுவாப்பட்டை, மிளகு, யானைத்தந்தம் ஆகிய பொருட்களை டச்சுக்காரர் பெற்று அவைகளின் **பெறுமானத்தைப்** பணமூலங் கொடுத்து வந்தனர். ஒல்லாந்திலிருந்து தங்கம், வெள்ளி ஆகியவற்றைக் கொணர்ந்து **பண்டமாற்று** முறையில் மேற்குறித்த பொருட்களைப் பெற்று வர்த்தகம் புரியவில்லை. எனவே வேறொரு முறையில் பொருட்களை வாங்குவதிற் போர்த்துக்கேயருக்கும் டச்சுக்காரருக்கும் கொள்கையளவில் வித்தியாசமுண்டு. இரண்டாவது போர்த்துக்கேயர் போர்களில் ஈடுபட்டிருந்தனர். ஆனால் டச்சுக்காரர் போரினாற் பெரும் பணச்செலவு ஏற்படுமென்பதை மனதிற்கொண்டு போர்கள் உண்டாகாதவாறு கூடியமட்டும் தடுத்துவந்தனர். சிங்கள மன்னர் காலத்துச் சாம, பேத, தான முறைகளை டச்சுக்காரர் கையாண்டு இவைகள் பயன்படாமற் போனபோதே "தண்டம்" என்பதைக் கடைப்பிடித்தனர். எவ்வித சாத்வீகமுறையும் பயன்பெறாத விடத்துப் போரில் இறங்கினார்களேயொழியப் போர்த்துக்கேயரைப்போல் தொட்டதற்கெல்லாம் டச்சுக்காரர் போரில் இறங்கவில்லை.

## இலங்கையில் ஒல்லாந்தர் வருகை

1602-ம் ஆண்டில் ஒல்லாந்த தூதுவனான **ஸ்பில்பேர்கன்** என்பவன் கண்டி அரசனாகிய முதலாம் விமலதர்ம சூரியனைச் சந்தித்துப் பேசினான். போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதற்கு ஒல்லாந்தர் தமது இராணுவப் பலத்தைத் தந்துதவுவதாகவும், அதற்கு ஈடாக ஒல்லாந்தர் இலங்கையில் வியாபாரம் செய்ய அனுமதிக்கப்படவேண்டுமென்றும் தூதுவன் அரசனைக் கேட்டுக்கொண்டான். ஆனால் ஒல்லாந்த தூதுவன் வாக்களித்தபடி விமலதர்மசூரியனுக்கு உதவி கிடைக்கவில்லை. ஸ்பில்பேர்கனுக்குப் பின் **செபால் டி வீயர்த்** என்னும் ஒல்லாந்த தூதுவன் விமலதர்மசூரி



யனைச் சந்தித்து ஒல்லாந்தருக்கு வியாபார உரிமை தேடக் கருதினான். ஆனால் அவன் வந்த காரியத்தை நிறைவேற்றுவதற்கு முன் பரிதாப முடிவை எய்தினான். கண்டி அரசனான விமலதர்மசூரியனால் ஏற்பாடு பண்ணப்பட்ட விருந்தில் கலந்துகொண்ட இந்த ஒல்லாந்த தூதுவனான டி வீயர்த் அளவுக்கு மிஞ்சிக் குடித்து, மதி மயங்கி அரசனைச் சிறிதும் பொருட்படுத்தாது தாறுமாறாக வாயில்வந்தபடி திட்டிவிட்டான் எனவும், இதனாற் கோபங்கொண்ட அரசன் டி வீயர்த்தையும் அவனது சகாக்களையும் கொன்றுவிட்டான் எனவுங் கூறப்படுகிறது. இக்காரணத்தால் டி வீயர்த் வந்த காரியம் கைகூடாது போயிற்று. அடுத்தபடியாக 1638-ம் ஆண்டில் கண்டியரசனாகிய இரண்டாம் இராசசிங்கனின் விருப்பத்திற்கிணங்கக் கிழக்கிந்தியக் கொம்பெனியின் கீழைத்தேசத்துப் பிரதம தேசாதிபதி **அந்தோனி வான் டீமன்** என்பவன் கடற்றளபதியாகிய **வெஸ்ரர் வல்ட்** (Wester wold) என்பவனை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். வெஸ்ரர் வல்ட் தனது உதவித் தளபதியான **கோஸ்ரர்** (Coster) என்பவனுடன் ஒரு கடற்படையையும் அழைத்துக்கொண்டு முதலில் **திரிகோணமலை, மட்டக்களப்பு** ஆகிய இடங்களைப் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிக் கண்டி அரசனாகிய இரண்டாம் இராசசிங்கனைச் சந்தித்து ஒரு சமாதான உடன்படிக்கையையும் செய்துகொண்டான். அதன் முக்கிய நிபந்தனைகள் பின்வருமாறு:—

(அ) ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை இலங்கையிலிருந்து வெளியேற்றுவதில் அரசனுக்கு எல்லா உதவிகளையும் செய்யவேண்டும்.

(ஆ) இதற்குப் பிரதியுபகாரமாக அரசன் போரில் ஏற்படும் சகல செலவுத் தொகைகளையும் ஒல்லாந்தருக்குக் கொடுப்பதுமன்றி அவர்களுக்கு வசதியான ஒரு துறைமுகத்தையுங் கொடுக்கவேண்டும்.

(இ) கறுவாப்பட்டை வியாபாரத்தில் ஏகபோக உரிமையை ஒல்லாந்தருக்கே அரசன் அளிக்கவேண்டும்.

கறுவாப்பட்டை, மிளகு, யானைத்தந்தம், ஏலம் முதலியவற்றை அரசனின் பிரஜைகள் வேறொருவருக்கும் விற்கக்கூடாது.

(ஈ) போர்த்துக்கேயர் இனிமேலும் இலங்கையில் படையெடுக்காமற் பாதுகாப்பதற்காக அவர்களிடமிருந்து கைப்பற்றப்படும் கோட்டைகளில் **அரசன் விரும்பினால்** ஒல்லாந்த வீரர்களிருந்து அக்கோட்டைகளைப் பாதுகாக்கவேண்டும்.

இந்த நான்காவது நிபந்தனையிலுள்ள "அரசன் விரும்பினால்" என்ற விஷயந்தான் பின்னர் டச்சுக்காரருக்கும் இராசசிங்கனுக்கும் பெரும் பிணக்கை உண்டாக்கியது. எப்படியெனில் அரசனுக்குத் தெரிந்த போர்த்துக்கேய மொழியில் கைச்சாத்திடப்பட்ட பிரதியில் இவ்வாக்கிய நிபந்தனை காணப்பட்டதே தவிர டச்சுமொழியில் எழுதப்பட்ட பிரதியில் இது காணப்படவில்லை. எனவே போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைக்ளில் ஒல்லாந்தர்கள் பாதுகாப்புச் செய்யும்போது இராசசிங்கன் அதை எதிர்த்து ஒல்லாந்தருக்கு அப்படியான உரிமையில்லை என்பதாக வாதாடினன். 1640-ம் ஆண்டில் **நீர்கொழும்பும்**, பின்னர் **காலியும்** ஒல்லாந்தர் வசமாயின. இலங்கையில் கிழக்கிந்தியக் கொம்பெனியின் தலைமைக் காரியாலத்தைக் காலியில் ஸ்தாபித்துத் தளபதியாகிய **கோஸ்ரர்** என்பவனை அதன் அதிபதியாக்கினர். போர்த்துக்கேயர் இலங்கையினின்றும் படிப்படியாக வெளியேற்றப்பட்டமை குறித்து இராசசிங்கன் மகிழ்வெய்தினன். எனினும் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றும் கோட்டைகளை ஒல்லாந்தர் ஆக்கிரமிப்பது உடன்படிக்கைக்கு விரோதமான செயலாகும் எனக்கருதினன்.

போர்த்துக்கல் சிம்மாசனத்திற்கு உரிமையாளன் ஒருவன் இல்லாமற் போனபோது ஸ்பெயின் நாட்டு அரசனை **இரண்டாம் பிலிப்பு** போர்த்துக்கலுக்கும் அரசனானன். ஆனல் அவன் தன்னிஷ்டப்படி ஸ்பெயின் பிரபுக்களைப் பதவியில் அமர்த்தியதுமன்றிப் போர்த்துக்கல் நாட்டு வருமானத்தை அக்நாட்டு மக்களுக்குச் செலவிடாது ஸ்பெயின் நாட்டுப் பிரஜைகளின் சேமாபிவிருத்திக்கே செலவிட்டான். இதனல் போர்த்துக்கேயர் பிலிப்பு அரசனுடன் விரோதங்கொண்டு ஸ்பெயினிலிருந்து பிரிந்து 1640-ம் ஆண்டில் சுதந்திர நாட்டினராயினர். இவ்விபரங்களை முன்பு வேறோரிடத்திற் கூறியுள்ளோம். ஸ்பெயினிலிருந்து பிரிந்த போர்த்துக்கேயர் 1642-ம் ஆண்டில் ஒல்லாந்து தேசத்தின் 10 வருட உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டனர். இதனற் போர்த்துக்கேயரிடமிருந்து **சப்தகோறளைகளும், மாத்தறையும்** ஒல்லாந்தருக்குக் கிடைத்தன. இச்செய்கை இரண்டாம் இராசசிங்கனுக்கு அடங்காத ஆத்திரத்தை மூட்டியதால் சப்த கோறளைகளிலிருந்தும் ஒல்லாந்தர் வெளியேறவேண்டுமென்று வாதித்தான். அரசன் வற்புறுத்தலுக்கு ஒல்லாந்தர் இணங்காதபடியால் 1645-ம் ஆண்டில் **தைசன்** (Thyesen) என்பவனும், 1646-ம் ஆண்டில் **வான்டர் ஸ்ரேல்** (Vander stael) என்பவனும் அரசனுடன் பொருது தோல்வியுற்றனர். இராசசிங்கனுடன் சமர்விளைப்பதால் பிரயோசனமில்லையெனக் கண்ட **மாற்சூக்கர்** (Maetsukyer) எனும் டச்சுத் தளபதி 1647-ம் ஆண்டில் ஒரு புதிய உடன்படிக்கையை இராசசிங்கனுடன் செய்துகொண்டான். அதன்படி கறுவாப்பட்டை வர்த்தகத்தில் ஒல்லாந்தருக்கிருந்த ஏகபோக உரிமை பறிக்கப்பட்டது. மேலும் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளை இராசசிங்கன் விரும்பினல் மட்டுமே ஒல்லாந்தர் வைத்துக்கொள்ளலாம் என்றும் கண்டிருந்தது. இதனலும் இராசசிங்கன் திருப்திப்படவில்லை.

1652-ம் ஆண்டில் திரும்பவும் ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கேயருக்கும் போர் எழுந்தது. போர்த்துக்கேயருடைய பலத்த எதிர்ப்புக்கிடையிலும் கொழும்புக் கோட்டையை ஒல்லாந்தர் கைப்பற்றினர். இராசசிங்கன் கொழும்புக் கோட்டையை இடிக்கும்படி கூறியும் ஒல்லாந்தர் அவ்வண்ணஞ் செய்யவில்லை. தாங்கள் போர்த்துக்கேயரிடமிருந்து சண்டையிட்டுப் பெற்று நேரில் ஆளைப்படுத்தியதால் இராசசிங்கனுக்கு அதில் சம்பந்த

மில்லை என்பதாக ஒல்லாந்தர் தெரிவித்துவிட்டார்கள். இரண்டு ஆண்டுகள் கழித்து இராசசிங்கனுக்கு விரோதமாக உள்நாட்டிற் குழப்பம் ஏற்பட்டது. அப்போது அரசன் ஒல்லாந்தரை உதவிக்கு அழைத்தான். குழப்பத்தை அடக்கியமைக்காக இராசசிங்கனால் அளிக்கப்பட்ட **திரிகோணமலை, மட்டக்களப்பு** ஆகிய கரையோரப்பகுதிப் பட்டினங்களை ஒல்லாந்தர் பெற்றுக்கொண்டனர். அதுமட்டுமன்றிக் **கற்பிட்டி, கோட்டையாறு** முதலிய கடற்கரைப்பகுதித் துறைகளையும் ஒல்லாந்தர் அபகரித்துக் கொண்டனர்.

ஒல்லாந்தரின் இச்செய்கை இராசசிங்கனுக்கு எரிகின்ற தீயில் எண்ணெய் வார்த்தது போலிருந்தது. வேறு வழியின்றி பிரெஞ்சுக்காரரை உதவிக்கழைத்து ஒல்லாந்தரை இத்தீவினின்றும் விரட்டி ஓட்டுவதற்கு இராசசிங்கன் விழைந்தான். ஆனால் அரைகுறை மனதுடன் பிரெஞ்சு வீரர்கள் செய்த உதவி பயனற்றுப் போயிற்று. இக்காரணத்தால் ஒல்லாந்தருக்கும் இராசசிங்கனுக்கும் பகைமை வளர்ந்தது.

ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை இத்தீவினின்றும் விரட்டியிருந்தாலும், அவர்கள் கண்டியரசனாகிய இரண்டாம் இராசசிங்கனுடன் சமாதானத்துடன் இருக்கவில்லையென்றே கூறலாம். அரசனும் குடிகளும் அந்நியர் தம் நாட்டிற்கு வருவதைச் சந்தேகக் கண்கொண்டே நோக்கி வந்தனர். கரையோரப் பகுதியிற் குடியேறிய ஒல்லாந்தர் போர்த்துக்கேயரைப்போல் எந்தநிமிஷமும் கண்டி இராச்சியத்தின்மீது கண் வைக்கலாம் என்பது மக்களுடைய பீதியாகும். ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய கோட்டைகளைத் தாமே வைத்திருந்ததை உடன்படிக்கைக்கு விரோதமாகவே அரசன் கருதினான். ஆனால் மறுபுறத்தில் அரசன் தங்களுக்குப் போரில் ஏற்பட்ட செலவுத் தொகைகளைக் கொடுக்குமட்டும் அந்தக் கோட்டைகளைத் தங்களுடனே வைத்திருப்பதாக ஒல்லாந்தர் காரணங்காட்டினர். அரசன் செலவுத் தொகைக்கான கணக்கு விபரங்களைக் கேட்டபோது



ஒல்லாந்தர் அக்கணக்கைக் காட்டவில்லை. ஒல்லாந்தர் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசினார்கள் என்பதை மறுக்கமுடியாது. ஒல்லாந்தர் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய மாகாணங்களிலிருந்து வரிகள் முழுவதையும் வசூலித்து அவற்றை அனுபவித்து வந்ததால், ஒல்லாந்தர் போர்த்துக்கேயருக்கு விரோதமாகத் தனக்கு உதவிசெய்ததால் ஏற்பட்ட செலவைக் கொடுக்கமுடியாது என்பது இராசசிங்கனின் வாதம். எனினும் ஒல்லாந்தருக்குத் தம்வசமுள்ள கோட்டைகளை அரசனுக்குக் கொடுக்கும் எண்ணமே கிடையாது. அதற்குப் பலகாரணங்களுண்டு. முதலாவதாக விலையுயர்ந்த பொருட்கள் விளைகின்ற இடங்களைத் தம் கைவசம் வைத்திருக்க வேண்டுமென்பது ஒல்லாந்தரின் விருப்பமாகும். தாம் கைப்பற்றிய கோட்டைகளின் துணைக்கொண்டு இலங்கையிலுள்ள முக்கிய துறைமுகங்களில் ஆதிக்கம் செலுத்த முடியும். **கற்பிட்டியும், கோட்டையாறும்** கண்டியரசன் வசமுள்ள துறைமுகங்களாயிருந்தாலும் அவைகளை அவசியமேற்பட்டால் கட்டுப்படுத்தவும் முடியும். இந்த இரண்டு துறைமுகங்களும் பின்னால் ஒல்லாந்தரால் அரசனிடமிருந்து அபகரிக்கப்பட்டன. அன்றியும் விலைமதிப்புள்ள கறுவாத் தோட்டங்கள் நீர்கொழும்பிலிருந்து காலிவரை ஒல்லாந்தர் வசமிருந்தன. எனவே கோட்டைகளைத் தாம் வைத்திருப்பின் கறுவா உற்பத்தியாகும் இவ்விடங்களைப் பாதுகாக்க முடியும். அடுத்ததாக இந்துசமுத்திரக் கரைகளிலே ஒல்லாந்தரைத் தவிர்த்து வேறு சில ஐரோப்பிய நாட்டாரும் நடமாடிக் கொண்டிருந்தனர். ஒல்லாந்தரிடம் கோட்டைகளிருப்பின் அவர்கள் அந்நியர் படையெடுப்பினின்றும் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். கடைசியாகக் கண்டியரசனின் போக்கு நம்பக் கூடியதாக இருந்ததில்லை. இப்போது ஒல்லாந்தரை விரட்ட வேறெந்த வெளிநாட்டு உதவியையும் நாடக்கூடும். அப்படியான சந்தர்ப்பத்தில் ஒல்லாந்தர் தங்களைத் தற்காத்துக் கொள்வதற்குக் கோட்டைகளைத் தமது ஆதீனத்தில் வைத்துக்கொள்வது அவசியமாயிருந்தது. இக்காரணங்களால் அரசன்

போர்த்துக்கேயரிடமிருந்து பெற்ற கோட்டைகளின் பேரில் தன்னுரிமையை நிலைநாட்ட நினைத்தும் ஒல்லாந்தர் அக்கோரிக்கைக்கு இடங்கொடுக்கவில்லை. இதனால் ஒல்லாந்தருக்கும் கண்டியரசர்களுக்கும் இடைவிடாத போராட்டம் நடந்துவந்தது.

கண்டியரசனாகிய இரண்டாம் இராசசிங்கனுடைய பிற்கால வாழ்வில் அரசியலில் ஏற்பட்ட ஒருபுதுமாற்றம் என்னவெனில், கண்டிப் பிரபுக்கள் தங்களாதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டியதேயாகும். ஒல்லாந்தரை நாட்டினின்றும் வெளியேற்றும் முயற்சியிற் தனது சிந்தனையெல்லாம் பறிகொடுத்த இராசசிங்கன் உள்நாட்டில் வளர்ந்துவரும் பிரபுக்களின் அதிகாரத்தை மடக்கத் தவறிவிட்டான். அவர்கள் அரசனது பெலயீனத்தைக் கண்டு தங்கள் ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்திக் கொண்டனர். அரசன் உள்நாட்டுக் குழப்பத்தைத் தடுத்து நிறுத்த டச்சுக்காரர் உதவியைத் தேடியதும், அவனது கொடுங்கோலாட்சியும், குடிசனங்களுடைய அபிமானத்தை அவன் இழந்ததும், பிரபுக்கள் தங்கள் செல்வாக்கைப் பலப்படுத்த ஏதுவாயிருந்தன. பிற்காலங்களில் அரசன் குடிப் பழக்கத்தையும் கைக்கொண்டான். அவனுக்கும் டச்சுக்காரருக்கும் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் கூடப் பிரபுக்கள் மூலமாகவே நடைபெற்று வந்தன. அவனைக் கொல்வதற்கும் சதிகள் நடந்துகொண்டிருந்தன. ஆனால் சதியினின்றும் தப்பிப் பிழைத்தான். அன்றியும் அந்நியராகிய போர்த்துக்கேயரை இந்நாட்டினின்றும் விரட்டுவதற்கு மற்றொரு அந்நியராகிய டச்சுக்காரரை அழைத்தது மிகவும் மதியீனமான காரியமென்பதைத் தன் இறுதிகாலத்தில் இராசசிங்கன் உணர்ந்தான். அவன் மிகவும் மனமுடைந்தவனாய் 1687-ம் ஆண்டு இறந்தான்.

**இரண்டாம் இராசசிங்கன்:** கண்டியரசர்கள் எல்லாரையும்விட இரண்டாம் இராசசிங்கனைப்பற்றி நாம் அதிகமாகத் தெரிந்துகொள்ள முடியும். ஏனென்றால் ஏறக்குறைய 20 ஆண்டுகளாகக் கண்டி இராச்சியத்திற்



சிறையிருந்த **ரொபேட்நொக்ஸ்** (Robert Knox) என்ற ஆங்கிலேயன் கூற்றிலிருந்தும், இராசசிங்கன் தானே டச்சுக்காரருக்கு எழுதியனுப்பியிருந்த பலகடிதங்கள் வாயிலாகவும் இவ்வரசனைப் பற்றிப் பல விஷயங்கள் அறியப்படுகின்றன. கட்டுமஸ்தான தேகக்கட்டும், தடைபடாக் குருதியோட்டமும், கிளர்ச்சி மிக்க ஊக்கமும், பீடு நடையும் பொருந்தியவனாய் ஆஜானுபாகுவாய் விளங்கினான். இராசசிங்கன் போர்த்துக்கேய மொழியிலும், லத்தீன் பாஷையிலும் பேசக் கற்றிருந்தான். உதட்டில் உறவும், உள்ளத்திற் கள்ளமும் உடையவன். எனவே டச்சுக்காரர் அவனுடன் யுத்தியுடனும் வஞ்சகத்துடனும் நடந்தனர் என்பதில் ஆச்சரியமில்லை. போர்த்துக்கேயரை இலங்கையினின்றும் விரட்ட இராசசிங்கன் டச்சுக்காரரை வரவேற்றான். டச்சுக்காரர் தனக்குப் பிடிக்காமற்போகவே இப்போது அவர்களை இந்நாட்டினின்றும் வெளியேற்றப் பிரெஞ்சுக்காரரை நாடினான். அது எப்படியிருந்தாலும் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றிய இடங்களை டச்சுக்காரர் தமக்குச் சொந்தமாக்குவதற்கு எவ்விதமான நியாயமும் இருக்கவில்லை. போர்த்துக்கேயரை விரட்டுவதற்காக ஏற்பட்ட செலவைக் கொடுக்கும்படி டச்சுக்காரர் கேட்டார்கள். ஆனால் இராசசிங்கன் எழுதிக் கேட்டபின்னும் அச்செலவுத் தொகை இவ்வளவுதான் என்று டச்சுக்காரர் கணக்குக் காட்டியதில்லை. போதாக்குறைக்கு நிறைந்த வருவாயுள்ள இடங்களைப் போர்த்துக்கேயரிடமிருந்து அரசன் பேரால் டச்சுக்காரர் கைப்பற்றி அவ்விடங்களில் வரிகளை விதித்துச் செலவுத் தொகைக்கு ஈடுபெற்றனர். அப்படியிருந்தும் டச்சுக்காரர் இராசசிங்கன்மீது குற்றங் கூறியது அபவாதமாகும்.

இராசசிங்கன் இறக்க அவன் மகன் **இரண்டாம் விமலதர்மசூரியன்** 1687-ம் ஆண்டு கண்டிச் சிம்மாசனமேறி, ஏறக்குறைய 21 வருடங்கள் ஆட்சிசெய்தான். இவன் சிறுபராயந் தொட்டுக் கிறிஸ்தவ மடத்தில் வளர்க்கப்பட்டு வந்தமையால் அங்கு கற்ற கல்வியும் பயிற்சியும் அவனுக்குப் பயன்தரவில்லை. அரசியல் ஞானமின்மையால் பிரபுக்களது செல்வாக்கையும், சக்தியையும் அவ

னுற் கட்டுப்படுத்த முடியவில்லை. எடுத்ததற்கெல்லாம் அவர்களைக் கலந்தே பரிபாலனஞ் செய்து வந்தான். அவன் ஆட்சிக் காலத்தில் அவனுக்கும் டச்சுக்காரருக்கும் போராட்டம் நடந்தே வந்தது. போர்த்துக்கேயரிடமிருந்து பெற்ற கோட்டைகளை யார் வைத்திருப்பது என்பதுபற்றி இருசாராருக்கும் பிணக்கு இருந்துவந்தது. இரண்டாம் விமலதர்மசூரியன் தனது வியாபாரத்தைப் பெருக்குவான்வேண்டி 1701-ம் ஆண்டில் தன் எல்லைப்புறப் பிரதேசங்களை அடைத்து விட்டான். இதனால் கண்டியிலிருந்து விளைபொருட்கள் டச்சுப் பிரதேசங்களுக்குச் செல்ல வழியில்லாது போயிற்று. இதனைப் பொறுக்க டச்சுக்காரர் தென்னிந்திய வியாபாரக் கப்பல்களைத் தம் ஆதீனத்தின் கீழுள்ள துறைமுகங்களில் வந்திறங்காதபடி தடுத்துவிட்டனர். விமலதர்மசூரியன் மத விஷயங்களிலும் மிகுந்த கவனஞ் செலுத்தினன். பௌத்த சங்கத்தைப் புனருத்தாரணஞ்செய்ய முயற்சித்தான். மூன்று அடுக்கு மாடியையுடைய தலதா மாளிகையைக் கட்டுவித்தான். இவனுக்குப்பின் இவனது மகன் நரேந்திரசிங்கன் கண்டிக்கு அரசனானன். இவன் காலத்திற் பிரபுக்களின் செல்வாக்கு உச்சநிலையை எய்தியது. இவனுக்கும் டச்சுக்காரருக்கும் அவ்வளவு சுமுகமான நிலை இருந்ததாகச் சொல்லமுடியாது.

### சுருக்கம்

ஒல்லாந்து அல்லது டச்சுநாடு ஸ்பெயின் சாம்ராச்சியத்தின் ஒருபகுதி— கடல் மட்டத்திலும் தாழ்ந்த பிரதேசம் — பொருள் வளத்திலும் கல்வியறிவிலும் மேம்பாடுற்று விளங்கியது—ஸ்பெயின் அரசனான இரண்டாம் பிலிப்பு டச்சு நாட்டுக்கும் அரசனாதல் — ஒல்லாந்துப் பிரபுக்களை நீக்கல் — கொடுங்கோலாட்சியும் மதவேறுபாடும் — மக்களின் எதிர்ப்பு — ஒரேஞ் நாட்டு வில்லியம் தலைமை தாங்கி ஒல்லாந்தைச் சுதந்திர நாடாக்கல் — அம்ஸ்ரர்டாம் வர்த்தக மேம்பாடு — வியாபாரக் கொம்பெனிகள் பல நிறுவப்படல் — 1601ல் ஸ்பில்பேர்கன் விமலதர்மசூரியனைச் சந்தித்தலும் வர்த்தக ஒப்பந்தமும் — டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பெனியின் செல்வாக்கு.

1602ல் செபால்ட் டி வீயர்த் வருகை — சயாம், சீனா முதலிய இடங்களில் தொழிற்சாலைகளை நிறுவல் — 1606-ம், 1607-ம் ஆண்டுகளில் போர்த்துக்கேயர் தோற்கடிக்கப்படல் — டச்சுக்காரரின் ஆதிக்க வளர்ச்சியும் கிழக்கிந்தியக்



கொம்பெனியின் அபிவிருத்தியும் — டச்சுக்காரர் வியாபாரத்தை ஸ்திரப்படுத்த எண்ணல் — கிழக்கிந்தியக் கொம்பெனிகளின் தலைமைப் பீடத்தை ஜாவாவிலும் பின் பட்டேவியாவிலும் அமைத்தல் — பிரதம தேசாதிபதியும், தேசாதிபசேகரும் நியமனம் பெறுதல் — அன்னாரின் தளபதிகளினதும் மாலுமிகளினதும் உற்சாகமும் ஊக்கமும் — அந்தோனி வான் டீமன் காலத்தில் டச்சுக்காரர் இலங்கையைக் கைப்பற்றத் தீர்மானித்தல் — 1652ல் கன்னம்பிள்ளை முனையைக் கைப்பற்றல் — மற்றும் கீழ்நாடுகளுக்கு வரல் — டச்சுக்காரரின் வியாபாரக் கொள்கை — சிங்கள அரசர் ஆதரவு — இலங்கையில் வர்த்தக விருத்தி — தண்டத்தையும் போரையும் இயன்றவரை நாடாமை.

### இலங்கைக்கு ஒல்லாந்தர் வருகை

1602ல் ஸ்பில்பேர்கன் கண்டியரசனான விமலதர்மசூரியனைச் சந்தித்தல் — பின் செபால்ட் டி வீயர்த் வரல் — போர்த்துக்கேயரைத் துரத்த உதவுவதாக வாக்களித்தலும் வியாபார ஒப்பந்தமும் — உதவி நேரத்துக்குக் கிட்டாமை — டி வீயர்த் கொல்லப்படல் — 1638ல் இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் வெஸ்டர் வோல்ட் தளபதி ஒரு கடற்படையுடன் வந்து திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களைப் போர்த்துக்கேயரிடமிருந்து கைப்பற்றல் — இராசசிங்கனுடன் செய்துகொண்ட ஒப்பந்தம்—நான்கு நிபந்தனைகள் —ஒல்லாந்தர் கோட்டைகளைத் திருப்பிக் கொடுக்கத் தவறுதல் — மனஸ்தாபம் மூளல் — இரண்டாம் பிலிப்பு போர்த்துக்கலுக்கும் அரசனாதல் — போர்த்துக்கல் ஸ்பெயினிலிருந்தும் பிரிதல் — 1642ல் பத்து வருடச் சமாதான உடன்படிக்கை — 1652ல் மீண்டும் போர் ஆரம்பித்தல் — இராசசிங்கனுக்கும் பிரஜைகளுக்குமிடையில் உள்நாட்டுக் குழப்பம் — ஒல்லாந்தர் உதவி — கற்பிட்டி, கோட்டையாறு என்னுமிடங்களையும் ஒல்லாந்தர் ஆக்கிரமித்தல் — இராசசிங்கன் பிரான்சியர் உதவியை நாடல் — உதவி கிடைக்காமை - பகைமை வளர்தல் - கண்டிப் பிரபுக்கள் தம் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டல் — 1687ல் இராசசிங்கன் இறத்தல் — அவனது குணாதிசயங்கள் — இராசசிங்கனின் மகன் இரண்டாம் விமலதர்மசூரியன், அவனுக்குப்பின் அவனது மகன் நரேந்திரசிங்கன் கண்டியரசனாதல் —பிரபுக்களின் செல்வாக்கு உயர்தல்.

### வினாக்கள்

1. 16-ம் நூற்றாண்டின் இறுதியிலும், 17-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் ஒல்லாந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

2. டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பெனி உருவாகி வளர்ச்சியடைந்த வகையை விபரிக்குக.

3. போர்த்துக்கேயருக்கும், ஒல்லாந்தருக்குமுள்ள வியாபார முன்னேற்ற வேறுபாட்டையும் பிந்தியவர் வியாபாரத்துறையில் எவ்வாறு முன்னேற்றங் கண்டனர் என்பதையும் விபரிக்குக

4. இலங்கைக்கு ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) எப்போது வந்தனர்? அவர்கள் இலங்கையிற் படிப்படியாக எவ்வாறு தமது ஆதிக்கத்தை ஸ்திரப்படுத்தினர்?

5. இரண்டாம் இராசசிங்கனின் குணாதிசயங்களைப் பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

6. இலங்கையில் 17-ம் நூற்றாண்டில் பிரபுக்களாட்சி மீட்டும் ஆதிக்கம் பெற்றமையை விபரிக்குக.

7. சிறுகுறிப்பெழுதுக: இரண்டாம் பிலிப்பு, ஒறேஞ்சு நாட்டு வில்லியம், ஸ்பில்பேர்கன், செபால் டி வீர்த், வான்டெர் ஹேர்ஜன், கோவன், அந்தோனி வான் டீமன், வெஸ்ரர் வல்ட், கோஸ்ரர், ஜெரபேட் ஹொக்ஸ்.

---

உசாத்துணை நூல்
இரவல் எடுப்பதற்கல்ல

## ஏழாம் அத்தியாயம்

# நாயக்கர் வம்சத்துக் கண்டி அரசர்கள்

1739-ம் ஆண்டு நரேந்திரசிங்கன் இறந்தான். அவனுக்குப்பின் கண்டிச் சிம்மாசனமேறுவதற்கு நரேந்திரனுக்குச் சகோதரனோ புத்திரனோ இல்லை. **சேனரதன்** காலத்திலிருந்த கண்டியரசர்கள் தங்கள் மனைவிமாரைத் தென்னிந்தியாவிலுள்ள **மதுரை** அல்லது **தஞ்சாவூரைச்** சேர்ந்த **நாயக்கர்** வம்சத்தில் வரித்துக்கொண்டார்கள். இப்படியாகத் தென்னிந்தியாவிலிருந்து வந்த அரசரது மனைவியர்கள் தங்களுடனே தம் உடன் பிறந்தாரையும், சுற்றத்தாரையும் கண்டிக்கு அழைத்துவந்தனர். இவர்கள் அரச சபையிலே முக்கிய அங்கத்துவம் வகித்து வந்தார்கள். நரேந்திரசிங்கன் தனக்குச் சந்ததியின்மையால் தான் வரித்துக் கொண்ட மனைவியின் சகோதரனைத் தனக்குப்பின் பட்டத்துக்குரியவனாக்கி இறந்தான். நாயக்கர் வம்சத்தைச் சேர்ந்த அந்நியன் தங்களுக்கு வேந்தனாயிருப்பதைச் சகிக்காத கண்டிப் பிரபுக்களிற் சிலர் நரேந்திர அரசனுக்கு காந்தர்வத்திற் பிறந்த ஒரு மகனைச் சிம்மாசனமேற்றப் பிரயத்தனப்பட்டனர். ஆனால் வேறுசில பிரபுக்கள் அரசவுரிமையில்லாத ஒரு சிங்களவனைக் கண்டியரசக்குரியவனாக்க முயற்சித்தனர். இங்ஙனமாகப் பிரபுக்கள் தங்களுள்ளே போட்டியாலும் பொறாமையாலும் நிலைதளர்ந்திருந்ததால் சிங்கள இராச்சியத்திற்கு நாயக்கர் மரபிலுள்ளவர்கள் அரசராவது தவிர்க்க முடியாததாயிற்று.

நாயக்கர் வம்சத்து முதலாவது கண்டியரசன் **ஸ்ரீ விஜயஇராசசிங்கன்** ஆவன். அவன் தன் வலிமைகுறைந்த நிலையை நன்கு அறிந்திருந்தான். எனவே கண்டி இராச்சிய மக்களை அநுசரித்து அவர்கள் விருப்பப்படி பரிபாலனஞ் செய்துவந்தான். தனது பெயரைச் சிங்களப் பெயராக மாற்றிக்கொண்டான். பௌத்த மதக் காரியாலயங்களில் பெரிதும் பரிவும் அக்கறையுமுடையவனாகக்

காட்டிக்கொண்டான். ஏறக்குறைய எட்டு வருடங்களே (1739—1747) ஆட்சிபுரிந்தாலும் டச்சுக்காரரை மிகவும் வெறுத்து, அவர்களது வியாபார அழிவுக்கும் உலை வைத்தான். தென்னிந்தியாவிலிருந்து வந்த நாயக்கர்கள் வர்த்தகப் பொருட்களின் விலையை நன்கறிவார்களாதலால் டச்சுக்காரர் இதுகாறும் வியாபாரத்தில் கொள்ளை லாபம் அடித்து வந்தது போல் இனியும் செய்யமுடியாது தடுத்தனர். இதுமட்டுமன்றி நாயக்கர்கள் ஆங்கிலேயரின் உற்ற நண்பராயிருந்தபடியால், டச்சுக்காரருக்கு விரோதமாக அவசரம் ஏற்படும்போது ஆங்கிலேயரை உதவிக்கு அழைக்கவும் தயாராயிருந்தனர். எனவே கண்டி இராச்சியத்தில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டபோது டச்சுக்காரருக்கும் கண்டி இராச்சியத்துக்கும் நிலவிவந்த பகைமையுணர்ச்சி உச்சநிலையடைந்ததென்றே சொல்லவேண்டும்.

ஸ்ரீ விஜயனுக்குப் பின் **கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன்** கண்டிச் சிம்மாசனமேறினான். அவன் பட்டத்துக்கு வந்தபோது 14 வயதுச் சிறுவனாயிருந்தமையால் சிங்களப் பிரபுக்கள் மிக்க செல்வாக்குடன் விளங்கினர். இதற்கிடையில் அரச சபையிலுள்ள நாயக்கர் தொகை பெருகிற்று. நாயக்கரைச்சார்ந்த உறவினர்கள் மிகுந்த ஆதிக்கமும் பணப்பலமும் படைத்த ஒரு தனிச் சக்தியாய் விளங்கினர். கண்டியரசன் இந்த நாயக்கரைக் கலந்தே ஆட்சியைப் பரிபாலித்து வந்தான். இரண்டாம் இராசசிங்கன் காலத்திலிருந்து மீண்டும் செல்வாக்குப் பெற்றுக் கொண்டுவரும் சிங்களப் பிரபுக்கள் கண்டியரசனது இப்போக்கை எதிர்த்தனர். சீற்றங்கொண்ட பிரபுக்கள் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனைக் கொலைசெய்து வேறொருவரை அரியாசனமேற்றுவதற்காகக் கூடிக் கலந்து சதியாலோசனைத் திட்டமிட்டனர். ஆனால் இச்சதியாலோசனை அரசன் காதில் விழவும் அவன் சதிக்குக் காரணமாயிருந்தவனைக் கொலைசெய்ய உத்தரவிட்டான்.

கீர்த்தி ஸ்ரீ பௌத்தமதப் புனருத்தாரணத்துக்காக அயராது உழைத்தான். ஸ்ரீவிஜயனைப்போல் இவனும்



டச்சுக்காரரிடம் பகைமை பாராட்டினான். டச்சுக்காரருடன் வர்த்தகஞ் செய்ய இவன் உடன்படவில்லை. டச்சுப் பிரதேசங்களிலுள்ளவர்களை டச்சுக்காரருக்கு விரோதமாகத் தூண்டிவிட்டான். டச்சுக்காரருக்கு விரோதமாக ஆங்கிலேயருடன் தொடர்பு வைத்தான். 1762-ம் ஆண்டில் **பைபஸ்** (Pybus) என்னும் ஆங்கிலேயன் கண்டிக்கு விஜயஞ்செய்தது இதனாலேயாம். வர்த்தகப் பொருட்கள் உற்பத்தியாகுமிடங்களை டச்சுக்காரரின் ஆதிக்கத்திலிருந்தும் மீட்க நினைத்தான். இக்காரணங்களால் டச்சுக்காரர் கண்டி இராச்சியத்தின் மீது போர் தொடுத்தனர். பின் 1766-ம் ஆண்டு எழுதிய ஒரு உடன்படிக்கை மூலம் போர் நிறுத்தப்பட்டது. அதன் முக்கிய அம்சங்களாவன.—

(அ) மாத்துறை, காலி, கொழும்பு, யாழ்ப்பாணம் ஆகிய திசாவனிகளிலும் - கற்பிட்டி, மன்னார், திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய கடற்கரைப் பகுதிகளிலும் டச்சுக்காரருக்குள்ள பூரண உரிமையை அரசன் அங்கீகரிப்பது.

(ஆ) கண்டியில் வியாபாரஞ் செய்யும் உரிமையும், கறுவாப்பட்டை உரிப்பதற்கு அனுமதியும் டச்சுக்காரருக்குக் கொடுப்பது.

(இ) உப்பளங்களுக்குத் தாராளமாய்ப் போய்வரக் கண்டியர்களை அனுமதிப்பது, அதனால் அரசாங்கம் இழக்கும் வருவாயைக் கண்டியரசனுக்கு வருடா வருடம் நஷ்ட ஈடு செய்வது.

(ஈ) டச்சுப் பகுதியை விட்டு வெளியேறியவர்களைக் கண்டியரசன் டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பெனியாரிடம் திருப்பி ஒப்படைப்பது, அதுபோன்று கண்டி இராச்சியத்தைவிட்டு வெளியேறியவர்களை டச்சுக்காரர் கண்டியரசனிடம் ஒப்படைப்பது.

1782-ம் ஆண்டில் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் இறக்க அவன் சகோதரனை **இராசாதி இராசசிங்கன்** சிம்மாசனமேறினன். இவன் காலத்தில் நாயக்கர்களது செல்வாக்கு மிகவும் அதிகரித்துக்கொண்டு வந்தது. வளர்ந்துவரும் நாயக்கர்களது செல்வாக்கைக் கட்டுப்படுத்தச் சிங்களப் பிரமுகர்கள் சூழ்ச்சிகளில் ஈடுபட்டார்கள். இராசாதி இராசசிங்கன் டச்சுக்காரரை வெளியேற்றுவதற்காகப் பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினன். பிரெஞ்சுக்காரரின் உதவி பயனற்றதாகிவிடவே ஆங்கிலேயர் இந்நாட்டில் டச்சுக்காரரது பிரதேசங்களின்மீது படையெடுத்து 1796-ம் ஆண்டில் அவற்றைக் கைப்பற்றினர். பலம்வாய்ந்த கப்பற்படையும், இராணுவப் படையுங் கொண்ட ஆங்கிலேயர் இலங்கையில் முதன்முதலாகக் கடற்கரைப் பிரதேசங்களைப் பிடித்துப் பின் கண்டி இராச்சியத்தையுங் கைப்பற்றிக்கொண்டனர்.

## கண்டி இராச்சிய அரசாங்கமுறை

**அரசன்:** அரசனிடம் சட்டம், நிர்வாகம், நீதிபரிபாலனப் பொறுப்புக்கள் யாவும் ஒப்படைக்கப்பட்டிருந்தன. பெயரளவில் அரசன் ஒரு சர்வாதிகாரிபோலிருந்தாலும் செயலளவில் அவன் நாட்டுக்கும், சட்டங்களுக்கும், நடைமுறைகளுக்கும் கட்டுப்பட்டே அரசியற் பரிபாலனஞ் செய்துவந்தான். ஒரு அரசனுக்குப்பின் அவனது சகோதரனே அல்லது புத்திரனே சிம்மாசனத்திற்கு உரியவனுமாயிருந்தான். இறந்த அரசனுக்குச் சகோதரனே, புத்திரனே இலதேல் பிரபுக்கள்சபை கூட்டப்பட்டு அதில் முதல் **அதிகார்** (Adigar) பிரேரித்த ஒருவரை அரசனாக்க மற்றவர்களும் ஆமோதித்தனர். அரசாங்கத்தின் எல்லா விஷயங்களிலும் அரசன் பிரபுக்களைக் கலந்தாலோசித்தே பரிபாலனஞ் செய்துவந்ததால் நாளடைவில் பிரபுக்களின் செல்வாக்கும் சக்தியும் அதிகரித்தன.

**பிரபுக்கள்:** பல அதிகாரிகளின் துணைக்கொண்டு அரசன் இராச்சிய பரிபாலனஞ் செய்துவந்தான். பரிபா



லன சௌகரியத்தை முன்னிட்டு நாட்டை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து, வடக்கு - கிழக்குப் பகுதிகளுக்கு ஒரு அதிகாரும், தெற்கு - மேற்குப் பகுதிகளுக்கு மற்றொரு அதிகாரும் நியமிக்கப்பட்டனர். அரசனுடைய உத்தரவுகள் ஒழுங்காக அமுல் நடத்தப்படுகின்றனவா என்பதும், பொதுவேலைகளைக் கண்காணிப்பதும் இவர்களுடைய கடமைகளாகும். அத்துடன் இந்த இரு அதிகாரும் பிரதான நீதியரசர்களாகவும், இராணுவ அதிபர்களாகவும் கடமையாற்றினர். அரசனுக்கு ஆலோசனை கூறுவதும், கிராமத் தலைவர்களை நியமிப்பதும் இவர்கள் கடமைகளாயிருந்தன.

இந்த இரு பெரும்பிரிவுகளும் மேற்கொண்டு 21 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. அவைகளிற் திஸாவனிகள் என்றழைக்கப்பட்ட 12 பிரிவுகள் **திஸாவ** எனப்பட்ட அதிகாரிகளின் கீழும், மற்றைய 9 பிரிவுகளும் **ரட்டாஸ்** (Ratas) என அழைக்கப்பட்டு ஒவ்வொன்றும் **இரட்டமகாத்மய** (Ratamahatmaya) வின் கீழும் இருந்தன. இந்த உத்தியோகஸ்தர்கள் அந்தந்தப் பிரிவுகளிற் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டியும், அரசனது உத்தரவை அமுல் நடத்தியும், வரி வசூலித்தும், வியாபாரம், கமத்தொழில் ஆகியவற்றை மேற்பார்த்தும், மற்றும் சிறு குற்றங்களுக்கு நீதிவிசாரணை நடத்தியும் கடமையாற்றி வந்தனர். இவர்கள் அதிகார்களுக்கு அடுத்த கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தராவர்.

இந்த உத்தியோகஸ்தர்களுக்குக் கீழ் கோறளைகளுக்குப் பொறுப்பாளிகளாக **கோறளைகளும்**, **அத்துக் கோறளைகளும்**, கிராமங்களுக்குப் பொறுப்பாக **விதானை**மாரும் இருந்து கடமையாற்றினர். இவர்களெல்லோரும் முற்கூறிய பெரிய உத்தியோகஸ்தரைப்போல் எல்லாக் கடமைகளையும் தங்கள் தங்கள் பகுதிகளில் ஆற்றிவந்தனர். ஆனல் இவர்களுக்கு இராணுவ அதிகாரங்கள் மட்டும் இல்லை. இவர்களைத் தவிர முதலியார், முகாந்திரம், ஆராய்ச்சி எனப்பட்ட உத்தியோகஸ்தரும் உண்டு.

மேலே குறிக்கப்பட்ட எல்லா உத்தியோகஸ்தரும் தாங்கள் அரசனுக்குச் செய்யுஞ் சேவைகளுக்காக நிந்தகம் (Nindagam) என வழங்கும் பிரபு மானிய நிலங்களைப் பிரதியுபகாரமாகப் பெற்றுவந்தனர். இதைத் தவிர்த்து உத்தியோக நியமனங்களிலும் நீதிஸ்தலங்களிலுள்ள அபராதங்களிலும் கிடைக்கும் வருமானமும் வேறு உண்டு. இவர்கள் கிராமங்களில் முகாம் செய்திருக்கின்ற காலங்களில் அப்பகுதி மக்கள் இவர்களுக்கான உணவுச்செலவையும் கையேற்க வேண்டும். இவ்வருமானங்களுடன் இவ்வுத்தியோகஸ்தர்களுக்குச் சிற்சில சலுகைகளுமிருந்தன.

**இலாக்காக்கள்:** மேற்கூறிய உத்தியோகஸ்தர்கள் நீங்கலாக நூற்றுக் கணக்கான உத்தியோகஸ்தர்கள் வெவ்வேறு இலாக்காக்களில் ஊழியஞ் செய்தனர். ஒவ்வோர் இலாக்காவிற்கும் ஒவ்வோர் உயர்ந்த அதிகாரி நியமிக்கப்பட்டார். இராணுவ சேவை இலாக்காவை நிர்வகிக்க **மடுவ லேக்கம்** (Maduwe Lekam) அதிகாரியும், மாடு இலாக்காவைப் பரிபாலிக்க **மடிக லேக்கம்** (Madige Lekam) அதிகாரியும், வரி வசூல் இலாக்காவை நிர்வகிக்க **நாணயக்கார லேக்கம்** (Nanayakara Lekam) அதிகாரியும், காலாட்படை இலாக்காவை நிர்வகிக்க **வெடிக்கார லேக்கம்** (Vedikara Lekam) அதிகாரியும் இருந்தனர். இந்த இலாக்காக்களின் உத்தியோகஸ்தர்களுக்கு அரசன் நிலங்களைச் சன்மானமாக வழங்கிவந்தான்.

**நீதிவிசாரணை:** அரசன் நீதிக்கு ஊற்றாக விளங்கினான். கொலை, இராசத்துரோகம் போன்ற கொடியகுற்றங்களும், பிரபுக்கள் விசாரணைக்கு மேற்பட்ட தகராறுகளும் அரசனால் தீர்ப்பளிக்கப்பட்டன. மற்றைய குற்றங்களை அதிகார் முதலான உத்தியோகஸ்தர்கள் விசாரணை செய்தனர். கிராமத்திலுள்ள வழக்குகளைக் கிராமசபை (Gansabhas) தீர்த்து வந்தது. கீழ்க்கோர்ட்டின் தீர்ப்பை எதிர்த்து மேல் கோர்ட்டுகளுக்கு அப்பீல் செய்யலாம். கொடிய குற்றங்களைக் குறைப்பதற்குச் சித்திரவதை போன்ற முறைகளுங் கையாளப்பட்டன.



நீதிபரிபாலனஞ் சம்பந்தமாய்ச் சிற்சில குறைபாடுகளுங் காணப்பட்டன. நிர்வாகசேவை உத்தியோகஸ்தர்களே நீதிபதிகளாகவுமிருந்ததால் பலதடவைகளில் நிர்வாக உத்தியோகஸ்தருக்கு விரோதமான வழக்குகளில் ஜனங்களுக்கு நியாயம் கிட்டியதில்லை. விசாரணைப் பதிவுகள் (Records) எழுதிவைக்கப்படாமையாலும், தகுந்த போக்குவரவுச் சாதனங்களின்மையாலும் நியாயம் பெறாதவர்கள் அப்பீல் செய்வது கஷ்டமாயிருந்தது. இரு கட்சிக்காரரும் வழக்குகள் சம்பந்தமாக நீதிபதிக்குக் கைலஞ்சங் கொடுத்து வந்ததால் சில நீதிபதிகள் எக்கட்சி அதிக தொகை கொடுக்கிறதோ அக்கட்சியின் சார்பாக நியாயம் வழங்கினர். இறுதியாக நீதிபதிகளின் வருமானம் நீதிஸ்தலத்தில் விதிக்கும் அபராதத்தைப் பொறுத்திருந்ததால் நீதிபதிகள் சுயநலங் கருதிக் கூடுதலான அபராதங்களை விதித்தும் வந்தனர்.

## சமூகப் பொருளாதார நிலைமை

கமத்தொழில் பிரதானமாய் நடைபெற்றது. அரிசி, சோளம், பயறு ஆகிய பயிர்வகைகள் பயிரிடப்பட்டு வந்தன. இயற்கைவளம் நிரம்பி ஏராளமாக உணவுப் பொருட்கள் விளைந்ததால் மக்கள் சுபீட்சமாய் வாழ்ந்தனர். பலா, தேங்காய் ஆகியவைகளையும் ஜனங்கள் உணவாகக் கொண்டனர். தென்னையிலிருந்து கள் இறக்கப்பட்டது. பதநீரிலிருந்து பனைவெல்லம் தயாரித்து வந்தனர்.

உள்நாட்டு வர்த்தகம் சிறிதளவிலேயே நடைபெற்றது. ஏனென்றால் ஜனங்களுடைய வாழ்க்கை எளிதாயும் தேவைகள் குறைந்ததாயும் இருந்தது. அன்றியும் கிராமங்களில் ஜனங்களுக்கு வேண்டியவை அனைத்தும் விளைவிக்கப்பட்டன. நகரப்புறங்களில் சிறிய கடைகள் இருந்தன. அவைகளிற் துணிமணிகள், அரிசி, பாத்திரங்கள், பழவகைகள் முதலிய பொருட்களும் விற்பனையா

யின. வெள்ளி நாணயங்கள் உபயோகத்திலிருந்தாலும், பெரும்பாலும் "பண்டமாற்று" (Barter) முறையிலேயே வியாபாரம் நடைபெற்றது.

நாட்டிலே பலவிதமான பொருட்கள் விளைவிக்கப் பட்டன. புடவை நெய்தல், இருப்பு எஃகு ஆயுதங்கள் செய்தல், துணி நெசவு முதலாயின உள்நாட்டில் நடைபெற்று வந்தன. சாதிக் கட்டுப்பாடு சமூகத்தில் தலை தூக்கி நின்றது. விவாகஞ் செய்தல், தொழில்முறைகள் செய்தல், ஒருவருடைய குடியிருப்பு, நடையுடை போன்றவைகள் யாவும் சாதி ஆசாரமுறைப்படி சாதிக் கட்டுப்பாட்டின் அடிப்படையில் நடைபெற்று வந்தன.

விவாகம் பற்றிய சட்டதிட்டமான ஒழுங்குமுறைகள் கிடையாது. ஒருவன் பலபெண்களை மணத்தலும், ஒருத்தி பல ஆடவர்களை விவாகம் செய்தலும் நடைபெறாமலில்லை. விவாக ரத்துக்களும் நடந்துதான் வந்தன. ஆண் பெண் இருமனமும் ஒன்றுபடுமிடங்களிலும் திருமணங்கள் தடையின்றி நடைபெற்றன.

சமூகத்தில் ஆடவர்களை விடப் பெண்கள் தாழ்வாகக் கருதப்பட்டனர். சமைப்பதும், வீட்டுப் பணிகளைச் செய்வதும் பெண்களின் முக்கிய கடமைகளாகும். ஆண்கள் உணவருந்திய பின்னரேயே பெண்கள் உணவருந்தினர். ஆண்களுக்கு அடிபணிவதொன்றைத் தவிரப் பெண்கள் சுதந்திர வாழ்வுடையவர்களாகவே இருந்தனர்.

**மதம்:** அரசர்களும் மக்களும் பௌத்த மதத்தைத் தழுவி வந்தனர். அரசர்கள் பௌத்தமத அபிவிருத்திக்காக நிலங்களைக் கொடுத்துதவினர். உல்லாச வாழ்க்கை வாழ்ந்துவந்த பௌத்த பிக்குகளை நன்னடத்தைக்குக் கொண்டுவருவதாகச் சங்கத்தை (Sangha) உயிர்ப்பித்தார்கள். வெளிநாடுகளிலிருந்து பௌத்த பிரசாரகர்களை வரவழைத்துச் சடங்குகளை நடப்பித்து வந்தார்கள். விகாரைகளில் திருவிழாக்களை ஏற்படுத்திச் சிறப்புச்செய்தார்கள்.



கண்டிப் பெரஹராவை மிகுந்த கோலாகலத்துடன் கொண்டாடி வந்தார்கள். சுருங்கக் கூறின் பௌத்த மதம் அரசர்களாற் பின்பற்றப்பட்டு - ஆதரிக்கப் பட்டு - உபகரிக்கப்பட்டு - வளர்ந்து வந்தது. பெரும்பான்மை மக்கள் பௌத்த மதத்தைச் சார்ந்திருந்திருந்தாலும், இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அரசன் தொந்தரவு செய்யவில்லை. இரண்டொரு அரசர்கள் மாத்திரம் கிறிஸ்வர்களையும் முஸ்லீம்களையும் கொடுமைப் படுத்திவந்தனரே தவிரப் பெரும்பாலும் நாட்டில் எல்லாமதத்தினரும் தத்தம் மார்க்கத்தைச் சார்ந்து தொழுவதற்குத் தடங்கல் இருந்ததில்லை. பௌத்தர்களுடைய அபிமானத்தைப் பெறுவதற்காக நாயக்கர் வம்சத்தினர் பிறமதத்தினரை வெறுத்தனரே தவிரக் கொடுமைப் படுத்தவில்லை.

**இலக்கியம்:** பௌத்த சங்கம் க்ஷீண தசை அடைந்த போது நல்ல இலக்கியங்கள் தோன்ற வழியின்றியிருந்தது. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலத்தில் பௌத்த மதமும், இலக்கியமும் மகோன்னத நிலை எய்தியதற்கு **வெலிவித சரணங்கர** (Valivita Saranangara) எனும் பௌத்தபிக்குவே காரணமாவர். பௌத்த மதத்துக்காகத் தன்னை அர்ப்பணித்த இப் பிக்கு பௌத்த மதத்தைப்பற்றிய அநேக இலக்கியங்களைச் சிங்கள மொழியில் எழுதினார். அநேக நூல்களைப் பாளி மொழியிலும் எழுதினார். உறங்கிக் கிடந்த சங்கத்துக்கு ஊக்கத்தையளித்துப் பௌத்த பிக்குகளின் வாழ்க்கையையும் சீர்ப்படுத்தினார். சரணங்கரவினாற் தூண்டப்பட்ட பல பிக்குகள் அரிய நூல்களைக் கற்றுப் பெரும் பண்டிதராயினர். அவர்களிற் பலர் பற்பல நூல்களையும், செய்யுட்களையும், உரைநடைகளையும் இயற்றினர். தமிழ் மொழியிலிருந்தும் பிறவற்றிலிருந்தும் பல காவியங்களும், நூல்களும் சிங்களமொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. நாட்டில் ஏற்பட்ட கலைப் புத்துணர்ச்சிக்கு வெலிவித சரணங்கர காரணமாவார்.

சுருங்கக்கூறின் கண்டி இராச்சியத்தில் 16-ம், 17-ம், 18-ம் நூற்றாண்டுகளில் நிலமானிய முறையின் அடிப்படையிலேயே அரசியல் நடைபெற்று வந்தது. சாதிக் கட்டுப்பாடுகள் தலைதூக்கி நின்றன. வர்த்தகம் மட்டுமே உள்நாட்டில் பெரும்பாலும் நடைபெற்று வந்தது. ஜனங்கள் கமத்தொழில் செய்துவந்தனர். அவர்கள் வாழ்க்கைத்தரம் மிகக் குன்றியிருந்தது. பௌத்த மதத்துக்கும், இலக்கியத்துக்கும் புத்துயிர் அளிக்கப்பட்டது. டச்சுக்காரர் காலத்தில் இன்னோரன்ன நிலையிலிருந்த கண்டி இராச்சியமானது ஆங்கிலேயராற் கைப்பற்றப் பட்டபோது மிகப்பெரிய மாற்றமடைந்தது எனலாம்.

## சுருக்கம்

நரேந்திரசிங்கனின் பின் 1739-ம் ஆண்டு முதல் கண்டியில் நாயக்கர் வம்சத்தவர் ஆதிக்கஞ் செலுத்தல் — நாயக்கர் வம்சத்து முதலாவது கண்டியரசன் ஸ்ரீ விஜய இராசசிங்கன் கண்டி மக்களுக்கும், பௌத்த மதத்துக்கும் ஆதரவுகாட்டி நடத்தல் — டச்சுக்காரரையும் அவர்கள் ஈட்டும் கொள்ளை லாபத்தையும் நாயக்கர் வெறுத்தலும் தடைசெய்தலும் — ஸ்ரீ விஜயனுக்குப் பின் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் சிம்மாசனமேறல் — அவன் செல்வாக்கு வாய்ந்தவரான நாயக்கரைக் கலந்து நாட்டைப் பரிபாலனஞ் செய்தல்—சிங்களப் பிரபுக்களின் சதியாலோசனையும் முடிபும்- கீர்த்திஸ்ரீயும் டச்சுக்காரரும் கொண்டுள்ள வெறுப்புமனப் பான்மை — 1762ல் பையபன் என்னும் ஆங்கிலேயன் கண்டிக்கு வரல் -அரசன் டச்சுக்காரரின் வியாபாரத் தடைசெய்தலும் போரும் — 1766ல் சமாதான உடன்படிக்கை — 1782ல் இராசாதி இராசசிங்கன் சிம்மாசனமேறல் — டச்சுக்காரரை வெளியேற்றப் பிரான்சிய ருதவியை நாடல் — உதவி பயனற்றதாதல் — 1796ல் டச்சுப் பிரதேசங்கள்மீது ஆங்கிலேயர் படையெடுத்தலும், அப்பிரதேசங்களைக் கைப்பற்றலும்.

கண்டி இராச்சிய அரசாங்க முறை — அரசன், பிரபுக்கள் மற்றும் பல்வேறு உத்தியோகஸ்தரும் அவர் தம் கடமைகளும் — அரசாங்கத்தின் பல்வேறு இலாக்காக்களும், லேக்கம் அதிகாரிகளும் — நீதிபரிபாலன முறைகளும் குறைபாடுகளும் — நாட்டின் சமூகப் பொருளாதார நிலைமை.

## வினுக்கள்.

1. 18-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கண்டியில் நாயக்கர் வம்சத்தாராதிக்கம் தோற்றியமைக்கும், வலுவடைந்தமைக்குமுரிய சந்தர்ப்பங்களை விபரிக்குக.

2. கண்டியில் நாயக்கராதிக்கத்தின்போது டச்சுக்காரர் வியாபாரம் கஷ்ட தசையடைந்ததேன்?



3. நாயக்க அரசர்கள் எவ்வெவ் வழிகளிற் கண்டியரசாட்சிசெய்து மக்களுக்கு மாறில்லா வழிகளில் நடந்தார்களென்பதை ஆதாரங்களோடு விபரிக்குக.

4. கண்டியரசருக்கும் டச்சுக்காரருக்கும் 1766ல் நிகழ்ந்த போரின் காரணத்தையும், சமாதான உடன்படிக்கையின் பிரதான அம்சங்களையுங் கூறுக.

5. கீர்த்திஸ்ரீ காலத்தில் எவ்வாண்டில் ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தனர்? எவ்வாண்டில் முதன்முதல் தம் ஆதிக்கத்தை நிலைநாட்டத் தொடங்கினர்?

6. 17-ம், 18-ம் நூற்றாண்டுகளில் கண்டி இராச்சிய அரசியற் பரிபாலன முறையைப் பின்வருந் தலையங்கங்களின்கீழ் விபரிக்குக.- அரசன், பிரபுக்கள், பல்வேறு இலாக்காக்கள், நீதிபரிபாலனம், பொருளாதாரம், சமயம், கலாச்சாரம்.

7. நாயக்கராட்சிக் காலத்திற் கண்டி இராச்சியத்தின் சமூகப் பொருளாதார நிலைமையை விபரிக்குக.

8. குறிப்பெழுதுக: நாயக்கர், ஸ்ரீ விஜய இராசசிங்கன், கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன், பையபன், திசாவ, இரட்ட மகாத்மய, வெடிக்கார லேக்கம், வெலிவித சரணங்கர.

எட்டாம் அத்தியாயம்

# கண்டியும் ஒல்லாந்தரும்

## அரசியற் தொடர்புகள்

முந்திய அத்தியாயங்களில் கண்டி அரசர்கள் ஒவ்வொருவருக்கும், ஒல்லாந்தருக்கும் (டச்சுக்காரருக்கும்) உண்டாயிருந்த அரசியல் வர்த்தகத் தொடர்புகளைப் பற்றிப் படித்தோம். இங்கு அரசியற் கண்கொண்டுநடந்துவந்த கண்டியரசர்களுக்கும், பொருளாதாரக் கண்கொண்டு நடந்துவந்த டச்சுக்காரருக்கும் ஏற்பட்ட சச்சரவுகளைப் பொதுவாகக் கவனிப்போம். ஏறக்குறைய ஒன்றரை நூற்றாண்டுகளாக இந்நாட்டிலிருந்த டச்சுக்காரரின் அரசியற் தொடர்பை ஐந்து பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன.- ஆக்கிரமிப்புக் கொள்கை, சமரச நோக்கு, உறுதி மனப்பான்மை, ஒத்துழைப்பு, யுத்தம் என்பனவாகும். இவை ஒவ்வொன்றையும் பற்றி இங்கு ஆராய்வோம்.

போர்த்துக்கேயர் இந்நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டபின் இரண்டாம் இராசசிங்கனுக்கு உள்நாட்டிலே பெருங் கஷ்டங்கள் விளைந்தன என்பதுபற்றி முன்பு படித்துள்ளோம். இத்தகைய உள்நாட்டுத் தொல்லைகளுக்கிடையேயும் அவன் ஒல்லாந்தருக்கு இன்னல் கொடுத்துக் கொண்டேயிருந்தான். டச்சுத் தூதுவர்களின் போக்குவரவைக் கட்டுப்படுத்தியும், கண்டியர்களை டச்சுக்காரருடன் வர்த்தகஞ் செய்யவிடாது தடுத்தும், கீழ்நாட்டுச் சிங்களவர்களை டச்சுக் குடியேற்றங்களிலிருந்து வெளியேற்றியும் டச்சுக்காரருக்கு இன்னல் விளைத்தான். ஆனால் கண்டியிலே உள்நாட்டுக் குழப்பம் அதிகரித்ததும் இராசசிங்கன் டச்சுக்காரரின் உதவியை நாடினான். டச்சுத் தளபதியான **வான் கோவன்ஸ்** (Van Goens) என்பவன் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உள்நாட்டுக் குழப்பத்தையடக்குமுகமாகக் கண்டி இராச்சியத்தைச் சேர்ந்த **கோறளைகளையும், சிலாபத்தையுங்** கைப்பற்றினான். இதனால் துயருற்ற கண்டிப் பிரஜைகள் இராசசிங்கனிடஞ் சரண்புக அவன் டச்சுகாரரது பகுதி



களைத் தாக்கினான். இதை எதிர்த்து டச்சுக்காரரும் திரிகோணமலை, மட்டக்களப்பு போன்ற முக்கிய துறைமுகப் பட்டினங்களைக் கண்டியர் வியாபாரத்துக்குத் தடையாக அடைத்துவிட்டனர். கண்டியில் டச்சுக்காரர் செய்த இந்த அநீதிகளைப் பட்டேவியாவிலுள்ள டச்சுத் தலைவர்கள் ஆமோதிக்கவில்லை. மேலும் வான்கோவன்ஸ் என்னும் டச்சுத் தளபதியின் ஆக்கிரமிப்புக் கொள்கைகளைக் கைவிடும்படி டச்சு மேலதிகாரிகள் உத்தரவிட்டனர். ஏனெனில் டச்சுக் கொம்பெனியாரின் வியாபாரத்துக்கு இப்போக்கு இடையூறாயிருந்தது. இஃது யானை தானே தன் தலைமேல் மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட செயலையொக்கும். மேலும் இச்செய்கை கண்டி இராச்சியத்தின்மீது படையெடுப்பதற்கான விளைவுகளை உண்டாக்கும். கூடியமட்டும் கண்டியருடன் உறவாயிருந்து தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்வதே டச்சுக்காரரின் கொள்கையானதால் வான்கோவன்ஸ் என்பவன் கண்டியரசனிடமிருந்து பறித்த இடங்களை அவ்வரசனிடமே சேர்ப்பிக்க வேண்டுமென்று அதிகாரிகள் கட்டளை பிறப்பித்தனர்.

**லாரன்ஸ்பைல்** (Lewrens Pyl) என்னும் டச்சுத்தேசாதிபதி கண்டியரசனுடன் சமரசமான போக்கில் நடந்துகொள்ளும் நோக்குடன் 1679-ம் ஆண்டில் கண்டிக்கு அனுப்பப்பட்டான். அரசனை எக்காரணங்கொண்டும் விரோதித்துக் கொள்ளாமல் வியாபாரப் பொருட்களைச் சமாதான முறையிற் கேட்டுப்பெறவேண்டுமென்று பைல் முயற்சித்தான். இந்நோக்குடன் இராசசிங்கன் மிருகங்களின்மேல் மிக்க விருப்புடையவன் என்று அறிந்த பைல் புலி, சிங்கம், குதிரை முதலிய மிருகங்களை ஒரு இராச தூதுவன் மூலம் அனுப்பிவைத்தான். அரசன் டச்சு அதிகாரிகளுக்கு அனுப்பிய கடிதங்களிலெல்லாம் டச்சுக் கவர்னரையும், குடிகளையும், கோட்டைகளையும் முறையே தனது கவர்னர், தனது குடிகள், தனது கோட்டைகள் என்றே குறிப்பிட்டிருந்தான். எனினும் டச்சுக் கவர்னரான பைல் அரசன் கூற்றுகளுக்கு

மறுப்பு விடுக்கவில்லை. இதற்குநேர்விரோதமாகப் பைல் கண்டியரசனுக்கு எழுதும்போதெல்லாம் மாட்சிமை தங்கிய தங்கள் விசுவாசமுள்ள கவர்னர் என்பதாகவே கையொப்பமிடுவது வழக்கமாயிருந்தது. இராசசிங்கன் இறந்தபின் அவனுக்காகச் செய்யப்பட்ட ஞாபகார்த்தச் சடங்குகளில் டச்சுக் கவர்னரும், அதிகாரிகளுங் கலந்துகொண்டனர். பைல் கையாண்டுவந்த சமரச நோக்கைப் பின்பற்றி அவனுக்குப் பின்வந்த டச்சுக் கவர்னர்களும், அதிகாரிகளும் நடந்து வந்தனர். கண்டியரசர்களுக்கும் டச்சுக்காரருக்கும் நிலவிவந்த இச்சமரசநோக்கு வளர்ந்தோங்கியதுபோற் றென்பட்டது. இராசசிங்கனுக்குப்பின் பிரபுக்களின் செல்வாக்கும் அதிகாரமும் கண்டி இராச்சியத்தில் மேலோங்கியிருந்தன. பிரபுக்களைத் திருப்திப் படுத்துவது பெருஞ் சிரமமாயிருந்தது. டச்சுக்காரர் குனியக் குனியப் பிரபுக்கள் குட்டி வந்தனர். எத்தனையோ சன்மானங்களைப் பிரபுக்கள் பெற்றும் திருப்தியடையவில்லை. ஓடுகிறவனைக் கண்டால் துரத்துகிறவனுக்குத் தொக்கு என்பார்கள். அதுபோன்று பிரபுக்கள் கற்பிட்டியாவில் வியாபாரஞ் செய்யுமுரிமை கோரினார்கள். கண்டி இராச்சியத்திற் கறுவாப்பட்டை உரிப்பதற்கு அனுமதிகோரி வருடா வருடம் டச்சுக்காரர் தூது அனுப்பவேண்டுமென்று நிபந்தனை விதித்தபோதிலும் பின்னர் பிரபுக்கள் கறுவாப்பட்டை உரிக்கவந்த வேலையாட்களை அங்ஙனஞ் செய்யவிடாது தடுத்துப் பல இன்னல்களை விளைத்து வந்தனர். இவ்வடாத்துகளால் டச்சுக்காரரது சமரச நோக்குக்குப் பங்கம் ஏற்படுவதாயிற்று. பட்டேவியாவிலுள்ள டச்சு அதிகாரிகள் கண்டியில் தங்கள் வியாபாரமுங் கெட்டுத் தங்கள் உரிமைக்கும் ஊறு நேர்ந்துவிடுமோவென அஞ்சி மனம் வருந்தினர். எனவே உறுதியான மனப்பான்மையுடன் கண்டி இராச்சியத்தில் டச்சுக்காரர் நடந்துகொள்ளவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

1703-ம் ஆண்டில் டச்சுக் கவர்னரான **கோர்னேலியஸ் ஜோன் சிமோன்ஸ்** (Cornelius Joan Simons) என்பவனும், அவனுக்குப் பின்வந்தவர்களும் கண்டியரச



னுக்குத் தாம் எதையும் விட்டுக் கொடுப்பதில்லையென்று திடசங்கற்பஞ் செய்துகொண்டு உறுதியான மனப்பான்மையுடன் இருந்தார்கள். **கற்பிட்டியா, கோட்டையாறு** (கொட்டியாரம்) ஆகிய துறைமுகங்களை அடைத்துக் கண்டியரின் வியாபாரம் வெளிச்செல்லாதபடி தடுத்தார்கள். இதற்குப் போட்டியாகக் கண்டியர் தங்கள் கடவட்டு என்ற பாதையை அடைத்து டச்சுக்காரருடன் வியாபாரஞ்செய்ய மறுத்தனர். கறுவாப்பட்டையை டச்சுக்காரருக்குக் கொடுப்பதிலும் மரத்திலிருந்தே சிதையட்டும் என்று மன்னன் எண்ணினன். தங்களது வியாபாரத்திற்குத் தங்களது உறுதியான மனப்பான்மைக் கொள்கை தடையாயிருப்பதை டச்சுக்காரர் உணர்ந்தனர். அன்றியும் டச்சுப் பிரதேசங்களில் குடியேறியிருந்த தங்கள் பிரஜைகளைக் கண்டியரசன் டச்சுக்காரருக்கு விரோதமாகக் கிளப்பிவிட்டான். இதனால் தம் பிரதேசங்களில் எழுந்த கிளர்ச்சிகளை அடக்கியொடுக்க டச்சுக்காரர் பெரும் பணச்செலவு செய்யவேண்டியதாயிற்று. ஏற்கெனவே கண்டி இராச்சியத்துடன் வர்த்தகம் தடைப்பட்டதால் வருமானம் இழந்துநின்ற டச்சுக்காரருக்கு இப்போது ஏற்பட்ட அதிகப்படியான செலவானது கூடிய கஷ்ட நஷ்டங்களைக் கொடுத்தது. எனவே டச்சுக்காரர் கண்டியரிடம் காட்டிய மனப்பான்மையைப் படிப்படியாகத் தளர்த்த வேண்டியதாயிற்று.

டச்சுத் தேசாதிபதியான **வான் இம்ஹோவ்** (Van Imhoff) 1736-ம் ஆண்டு இலங்கைக்கு வந்தான். கண்டியரசனுடன் ஒத்துழைப்பதையே தனது நோக்கமாகக்கொண்டிருந்தான். இவன் காலத்தில் கண்டி இராச்சியத்துக்கு **நரேந்திரசிங்கன்** அரசனாயிருந்தான். டச்சுக்காரருடன் வியாபாரஞ் செய்வதில் டச்சுக்காரருக்கு மட்டும் இலாபகரமானதுமன்றி அதனாற் கண்டியருக்கும் ஆதாயமுண்டு என்பதை வற்புறுத்தி ஒத்துழைக்குமாறு வான் இம்ஹோவ் கண்டியரசனுக்கு அறிவுறுத்தினன். கண்டி இராச்சியத்திலிருந்த சரக்குகளுக்குத் தகுந்த பணமும் தருவதாக வாக்களித்தான். இதன் காரணமாகக் கண்டியருக்கும் டச்சுக்கொம்பெனியாருக்கும் என்றும் நிலவாத

முறையில் ஒத்துழைப்பு மனப்பான்மை நிலவியது. துரதிஷ்டவசமாக **நரேந்திரசிங்கனுக்குச்** சந்ததியில்லாமற் போகவே அவன் பெண்வழி மைத்துனன் **ஸ்ரீ விஜய இராசசிங்கன்** என்னும் பெயருடன் கண்டிச் சிம்மாசனமேறினான். இவன் தென்னிந்தியாவிலுள்ள மதுரைப் பட்டினத்தைச் சேர்ந்த **நாயக்கர்** பரம்பரையிலுள்ளவன். இவன் காலத்தில் நாயக்கர் வம்சத்தினர் கண்டி இராச்சியத்தில் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர். டச்சுக்காரர் கண்டியிலிருந்து யானை, கறுவாப்பட்டை, முத்துக்கள், விலையுயர்ந்தகற்கள் ஆகியவற்றை எடுத்துச் சென்று இந்தியாவில் விற்றுக் கொள்ளைலாபம் பெற்று வருவதை நாயக்கர் நன்கு அறிவர். அந்த இலாபத்தைத் தாங்களே அனுபவிக்க விரும்பினார்கள். எனவே டச்சுக்காரருடன் நாயக்கர் வியாபாரஞ் செய்ய விரும்பவில்லை. அன்றியும் 'கண்டிச் சிம்சனமேறிய தங்களை இலங்கை முழுவதுக்கும் சக்கரவர்த்தியாக ஒப்பவேண்டும்' என்பதாக நாயக்கர் கருதினர். அனைத்துக்கும் மேலாக நாயக்கர் இந்தியாவிலிருந்த ஆங்கிலேயருடன் தோழமை கொண்டிருந்தனர். எனவே டச்சுக் கொம்பெனி அதிகாரிகளைத் துரும்பாக மதித்து நடத்தினர். இக்காரணங்களால் கண்டியருக்கும் டச்சுக்காரருக்கும் இருந்த தொடர்பு நாயக்கர் ஆட்சிக் காலத்திற் குன்றியது. இதற்கிடையில் வரிப்பளுவினால் டச்சுப் பிரதேசங்களிற் குடியேறியவர்கள் அதிருப்தியடைந்தனர். **நெல்வரி** போன்றவைகளாற் குடியானவர்கள் துயருற்றனர். வரிகளை வசூலிப்பதற்காக அவைகளைக் குத்தகைக்குக் கொடுப்பது டச்சுக்காரரின் வழக்கமாயிருந்தது. குத்தகைக்காரர்கள் குடிமக்களிடமிருந்து குறிப்பிட்ட தொகைக்கு அதிகமாகவே வரி வசூலித்து வந்தனர். மக்களை வருத்தும் இப்பழக்கங்களை நீக்க டச்சுக் கொம்பெனியார் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. 1657-ம் ஆண்டில் **ஜேன் ஸ்ருடர்** (Jan Streuder)என்பவன் டச்சுத் தேசாதிபதியாக இலங்கைக்கு அனுப்பப்பட்டான். இவன் அறிவாற்றலும் நிர்வாகத் திறனும் மிக்கவன். கொம்பெனியின் வர்த்தகத்தைப் பெருக்கவும்,



கண்டிப்பான வழிகளில் வரிகளைவசூலித்துக் கொம்பெனியின் வருமானத்தை அதிகரிக்கவும் ஆவன செய்தான். டச்சுக் கொம்பெனிக்குச் சொந்தமான நிலங்களில் உத்தரவின்றிக் கண்டியர் தென்னந் தோப்புக்களை வைத்தும், விவசாயத்தை விருத்தி செய்தும் வருகிறார்களென்றும் அறிந்தான். டச்சுக்காரர் இதுகாரணமாக மிதமிஞ்சிய வரிகளை விதித்தபோது கண்டிப் பிரஜைகள் கொடுக்க மறுத்ததாலும், நிலங்களை டச்சுக்காரர் வசம் ஒப்புவிக்கச் சம்மதிக்காததாலும் டச்சுக்கவர்னர் சேனா வீரர்களை அனுப்பி அம்மரங்களை வெட்டுவித்துப் பயிர்களை அழிப்பித்தான். இதைப் பொறுக்காத கண்டியர் கொதித்தெழுந்தனர். அரசன் கண்டிக் குழப்பக்காரருக்குச் சலுகைகாட்டி உதவியபோதும் குழப்பம் எளிதிலடக்கப்பட்டது.

கண்டி இராச்சியத்தைப் பொறுத்தவரையில் டச்சுக் கொள்கை பெரிய மாற்றம் அடைந்தது. நாயக்கர் வம்சத்து அரசர்கள் டச்சுக்காரருடன் வர்த்தகஞ் செய்ய மறுத்தனர். டச்சுக் குடியேற்றங்களிலுள்ள பிரஜைகளை அரசன் டச்சுக்காரருக்கு விரோதமாகக் கிளப்பி விட்டதுமன்றி **ஹன்வெல்ல, மாத்தறை** போன்ற இடங்களையும் கண்டித் துருப்புக்களைக் கொண்டு கைப்பற்றினான். அனைத்துக்கும் மேலாக ஆங்கிலேயரை அரசன் உதவிக்கழைத்து டச்சுக்காரரை இலங்கையினின்றும் வெளியேற்றுவான் என்பதாகக் கருதப்பட்டது. தங்களுடைய வர்த்தகத்துக்கும் அரசியல் உரிமைகளுக்கும் ஆபத்து வந்துவிட்டது எனக்கருதிய டச்சுக்காரர் கண்டி மீது போர்தொடுத்தனர். **பைபஸ்** (Pybus) என்னும் ஆங்கிலேயத் தூதுவன் 1762-ம் ஆண்டு கண்டி இராச்சியம் வந்துசேர்ந்தான். கண்டி அரசனைப் பணிய வைத்தாற்றான் டச்சுக்காரர் இலங்கையில் தங்கள் குடியேற்றங்களைக் கண்காணிக்க முடியும் என்று அத்தூதுவன் டச்சுக்காரருக்கு அறிவுறுத்தினான். அங்ஙனமே போர் தொடங்கப்பட்டது. கண்டி அரசன் நாட்டை விட்டோடிச் சமாதானத்துக்குவர எத்தனித்தான். அரசன் டச்சுக் கொம்பெனியாரைத் தனது எஜமானராக ஏற்றுக்

கொண்டு வருடாவருடம் கப்பங்கட்டி வரவேண்டுமென்று டச்சுத் தளபதி வான் எக் (Van Eck) கேட்டான். ஆனால் அரசன் அதற்கு உடன்படவில்லை. திரும்பவும் போர் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. துறைமுகங்கள் முற்று கைவிடப்பட்டுக் கண்டிக்கு வெளியிலிருந்து உணவும் படையுதவியும் வரவிடாது டச்சுக்காரர் தடைசெய்தனர். பயிர்கள் சிதைந்து அழிந்துபோயின. அரசனான கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் வேறு வழியின்றி டச்சுக்காரருடன் சமாதானங் கோரினான். அதன் பயனாக 1766-ம் ஆண்டு ஒரு உடன்படிக்கை எழுதப்பட்டது. இந்த உடன்படிக்கையின் அம்சங்களை முன் அத்தியாயத்திற் கூறியுள்ளோம். இச்சமாதான உடன்படிக்கையின்படி அரசன் இலங்கையிலுள்ள கரையோரப் பிரதேசங்கள் அனைத்தையும் டச்சுக்காரருக்குக் கையளித்தான். இதற்குப் பின் அரசன் இந்த அம்சங்களிற் சிறிது மாற்றங்கள் செய்யுமாறு எவ்வளவோ வேண்டியும் டச்சுக்காரர் அரசன் விருப்பத்துக்கு இணங்கவில்லை. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும் எனவெண்ணிக் கண்டியரசனும் பிரஜைகளும் உடன்படிக்கையை மீறி நடந்தனர். இதனிடையில் டச்சுக் கொம்பெனியாரது ஆட்சிமுறையில் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டமையாலும், கலகத்தை யடக்குவதற்குப் போதுமான துருப்புக்கள் இன்மையாலும் உடன்படிக்கை முற்றிலும் மீறப்பட்டது.

## சுருக்கம்

கண்டியரசர்கள் தமது ஆட்சியை ஸ்திரப்படுத்தும் நோக்கம் — டச்சுக்காரர் தம் வர்த்தகத்தைப் பெருக்கும் நோக்கம் — ஒன்றரை நூற்றாண்டுகளாக இலங்கையிலிருந்த டச்சுக்காரர் ஆக்கிரமிப்புக் கொள்கை, சமரசநோக்கு, உறுதியான மனப்பான்மை, ஒத்துழைப்பு, இறுதியில் யுத்தம் என்னுங் கொள்கைகளைக் கடைப்பிடித்துத் தமது நோக்கங்களை நிறைவேற்ற முயன்றமை — இரண்டாம் இராசசிங்கன் காலத்தில் உள்நாட்டுக் குழப்பங்கள் — இதுவரை டச்சுக்காரரை வெறுத்த அரசன் குழப்பத்தின்போது அன்னாரின் உதவியை நாடல் — வான்கோவன்ஸ் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தல் — கோறளைகளையும், சிலாபத்தையுங் கைப்பற்றல் — அரசனுக்கும் டச்சுக்காரருக்கும் பிணக்கு — முக்கிய துறைமுகங்களை டச்சுக்காரர் அடைத்து வியாபாரத்தைத் தடுத்தல் — பட்டேவியாவிலுள்ள டச்சுத் தலைவர்கள் வியாபாரவிருத்திவேண்டி ஆக்கிரமிப்புக் கொள்கையை ஆதரியாமை — இத்தனர்த்த போக்கின் விளைவுகள் — வேரான்ஸ் பைல் என்னுந் தளபதியின் சமரசப்போக்கு —



அரசனுதவை நாடி அனுப்பிய சன்மானங்கள் — இருதரத்தினரதும் கடிதப் போக்குவரவு — டச்சுக்காரர் பணிவைப் பிரபுக்கள் பயன்படுத்தல் — வியாபாரம் குன்றலும், டச்சுக்காரரின் நிர்மானமும் — ஜோன் ஸிமோன்ஸ் என்னும் டச்சுக் கவர்னரினதும் பிக்கியோரதும் உறுதிமனப்பான்மை — துறைமுகங்களையடைத்துக் கண்டியர் வியாபாரத்தைத் தடுத்தல் — வியாபாரப்பொருட்கள் சேதமுறினும் டச்சுக்காரருக்கு விற்பதில்லையென்னும் அரசனின் கொள்கை — டச்சுப் பிரதேசக் குடியேற்ற மக்களும் டச்சுக்காரருக்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்தல் — டச்சுக்காரருக்கு ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்கள் — டச்சுக்காரர் உறுதியான மனப்பான்மையைத் தளர்த்தல் — 1736ல் வான் இம்ஹோவ் என்னும் டச்சுக் கவர்னர் இலங்கைக்கு வரல் — நரேந்திரசிங்கனுடன் வியாபார ஒப்பந்தஞ் செய்தல் — அவன் சந்ததியின்றியிறக்க ஸ்ரீ விஜய இராசசிங்கன் அரசனாதல் — நாயக்கராதிக்கம் மேலோங்கல் — நாயக்கர் டச்சுக்கொம்பெனியின் கொள்கை இலாபத்திற்கு முற்றுப் புள்ளிவைத்தலும், ஆங்கிலேயருடன் உறவும் — பிற்றைய காலத்தில் டச்சு அதிகாரிகளின் கடும்வரிகளும் மக்களின் வெறுப்பும் — டச்சுக் கொம்பெனியார் தம் நிலங்களில் மக்கள் உத்தரவின்றி வளர்த்த பயிர்களை அழித்தல் — மக்களின் மனக்கொதிப்பும், கண்டியரசன் ஆதரவும் — ஆங்கிலேயர் கண்டியரசனுதவை நாடல் — டச்சு அதிகாரிகளின் மனப் பீதி — கண்டிமீது போர்தொடுத்தல் — கண்டியரசன் நாட்டைவிட்டோடிச் சமாதானத்தை நாடல் — டச்சுக்கொம்பெனியாரை ஏகராஜாராக ஏற்கவேண்டுமென்றும், கப்பங் கட்டவேண்டுமென்றும் வான் எக் தளபதி நிபந்தனை விதித்தல் — அரசன் இணங்காமையும், மீட்டும் போரும் — கீர்த்தி ஸ்ரீ சமாதான ஒப்பந்தங் கோரல் — 1766ல் சமாதான உடன்படிக்கை — டச்சுக்கொம்பெனியின் ஆட்சிமுறையிற் பல மாறுதல்கள்.

## வினாக்கள்

1. இலங்கையில் டச்சுக்காரரின் பிரதான நோக்கு எதுவாயிருந்தது? அவர்கள் தம்நோக்கை நிறைவேற்றக் கையாண்ட வழிகளென்ன? அவ்வழிகள் எவ்வளவு தூரம் பயனளித்தன?
2. டச்சுக்காரர் கண்டியரசனுடன் சமரசமாக வாழவிரும்பியதேதனால்? டச்சுக்காரரின் முந்திய பிந்திய கொள்கைகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளெவை? முடிவென்ன?
3. டச்சுக்காரர் தமதாட்சியின் இறுதிக் காலங்களில் மக்களின் வெறுப்பை எவ்வாறு தேடிக்கொண்டனர்?
4. கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன் காலத்தில் அவனுக்கும் டச்சுக்காரருக்கும் மனஸ்தாபம் வளர்ந்ததேன்? போர்களின் முடிவென்ன?
5. இலங்கையுடன் டச்சுக்காரர் கொண்டிருந்த வியாபார விருத்தி படிப்படியாகக் குன்றியமைக்குரிய காரணங்களை ஆராய்க.
6. வான் கோவன்ஸ், வான் எக், வேரான்ஸ் பைல், கொர்னேலியஸ் ஜோன் ஸிமோன்ஸ், வான் இம் ஹோவ், ஜேன் ஸ்குடர் என்போர் காலங்களில் அவர்காலத்தின் நிகழ்ச்சிகளையும் அவர்கள் செய்த சாதனைகளையும் விபரிக்குக.

ஒன்பதாம் அத்தியாயம்

# இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியின் வீழ்ச்சி

ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளாக டச்சுக்குடியரசு ஐரோப்பாவிலேயே உன்னத நிலையில் விளங்கி வந்தது. வர்த்தகத்திலும், நாடுகளைக் கைப்பற்றிக் குடியேற்றங்களை ஸ்தாபிப்பதிலும் டச்சுக் குடியரசினரை நிகர்த்தவர் 18-ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் யாருமிருந்ததில்லை எனலாம். இச்செல்வாக்கை டச்சுக் குடியரசு வளர்த்து வந்ததின் காரணம் அதற்கு எதிர்ப்பு இல்லாமையேயாகும். ஐரோப்பாவில் வல்லரசுகளாக விளங்கிய இங்கிலாந்தும், பிரான்சும் தத்தம் உள்நாட்டு விஷயங்களை ஒழுங்குபடுத்திவிட்டுத் தம் கவனத்தை அமெரிக்காவின்மேலும், கீழைத் தேசங்களின்மேலும் திருப்ப நினைத்த காலந்தொட்டு டச்சுக் குடியரசு தனது உன்னத நிலையினின்றும் தாழ்ந்துவிட்டது. இலங்கையில் டச்சுக் கொம்பெனியாரின் ஆட்சி வீழ்ச்சியுற்றதற்குக் காரணங்களை ஆராயுமுன் அவ்வீழ்ச்சிக்கு ஆதாரமான டச்சுக் குடியரசின் அந்நியநாட்டு விவகாரங்கள்பற்றி அறிவது அவசியமாகும்.

டச்சுக்காரரை இலங்கையினின்றும் வெளியேற்றி அவர்களின் வீழ்ச்சிக்கு அடிகோலியவர் ஆங்கிலேயராதலால் இங்கிலாந்துக்கும் ஒல்லாந்துக்குமுள்ள நிலைமைகளை ஆராய்தல் நலம். 1794-ம் ஆண்டில் பிரெஞ்சுக் குடியரசுச் சேனைகள் ஒல்லாந்துக்குள் நுழைந்து **பட்டேவியாக்** குடியரசை ஸ்தாபித்தன. கொம்பெனியார் விட்டுச் சென்ற அரசியலைச் சீர்திருத்தித் தமது நிலையைப் பலப்படுத்த வேண்டியிருந்தது. எனவே ஒல்லாந்திற்றானே பிரெஞ்சுக்காரர் தம் கவனம் முழுவதையுஞ் செலுத்தியதால் கீழைத் தேசங்களிலிருந்த வர்த்தகம், குடியேற்ற நாடுகள் முதலியவை பற்றிப் பராமுகமாயிருந்துவிட்டனர். ஆனால் ஆங்கிலேயரோ தம் நாட்டிலுள்ள அரசியற் பிணக்குகளையும் உள்நாட்டுக் கலகங்களையுஞ் சரிப்படுத்தி ஸ்திரமான அரசாங்கத்தைப் பெற்றிருந்தனர். ஆகவே ஆங்கிலேயருக்குக் கீழைத் தேசங்



களிலுள்ள தம் வர்த்தகம், ஆக்கிரமித்த நாடுகள் ஆகியவைகளில் போதிய கவனஞ் செலுத்த முடிந்தது. இரண்டாவதாக டச்சுக் கொம்பெனியின் பொருளாதார நிலைமிக மோசமாயிருந்தது. கடற் சண்டைகளில் ஆங்கிலேயரை எதிர்த்துத் தோல்வியுற்றுப் பெரும் பணத்தைச் செலவிட்டிருந்தது. போதாக் குறைக்கு டச்சுக் கொம்பெனியில் ஊழியம் செய்கிறவர்கள் பெரும் பணத்தைச் சூறையாடியிருந்தனர். அதன் காரணமாகச் சேனைகளுக்கான செலவைக் குறைக்கவேண்டியிருந்தது. ஆனால் அவ்வேளையில் இங்கிலாந்தில் **தொழிற்புரட்சி** (Industrial Revolution) காரணமாக நாட்டில் செல்வங் கொழித்தது. கீழைத் தேசங்களிலிருந்த தம் படைகளை ஆங்கிலேயர் சீர்திருத்தி நல்ல பயிற்சியளித்தனர். இறுதியாகப் பிரான்சிய புரட்சிப் போர்களின்பின் ஆங்கிலேயரது கடற்படை நிகரற்ற பலத்துடன் விளங்கியது. அப்படையை எதிர்க்கக்கூடிய சக்திவாய்ந்த வேறு வல்லரசுகள் எவையுங் கிடையா. இவற்றிலிருந்து ஆங்கிலேயர் அரசியலிலும், பொருளாதாரத்திலும், இராணுவ கடற்படைகளிலும் டச்சுக்காரரைவிடச் சிறந்து விளங்கினர் என்பது பெறப்படும்.

மேற்கூறிய காரணங்கள் ஒருபுறமிருக்க மறுபுறம் கிழக்கிந்திய டச்சுக் கொம்பெனியின் விஷயங்களிலும் மிகச் சீர்கேடு வந்துற்றது. கொம்பெனியின் அரசாங்க நிர்வாக முறைகளில் பல ஊழல்கள் மலிந்திருந்தன. சம்பளம் குறைந்த உத்தியோகஸ்தர் தாம் தனியே வியாபாரத்திலும் ஈடுபட்டனர். கொம்பெனியின் இலாபத்தைப் பெருக்குவதிலும் பார்க்கத் தமது இலாபத்தையே பெரிதாக எண்ணினர். அதிகாரிகளிடையே இலஞ்ச ஊழல் தாண்டவமாடியது. உற்சாகத்துடன் அலுவல் புரிந்துவந்த அதிகாரிகள் இப்போது தங்கள் கடமைகளை உதாசீனம் பண்ணினர். இலங்கையிலிருந்த டச்சுக்காரரிற் பலர் காலைமுதல் மாலைவரை குடித்தும் புகைத்தும் காலத்தை வறிதே கடத்தி வந்தனர் என்று ஒரு ஆசிரியர் குறிப்பிடுகின்றார். அது மாத்திரமன்றி டச்சுக் கொம்பெனியார் இலங்கை உள்நாட்டு மக்களின்

மீது வரிப்பளுவைக் கூட்டினர். அவ்வரிகளை வசூலித்த முறையும் மிகப் பாதகமானதாகும். அனுவசிய சட்டதிட்டங்களை ஏற்படுத்திச் சிங்களவரது அபிமானத்தை இழந்ததுமன்றி அவர்களே டச்சுக்காரருக்கு எதிராகக் கிளர்ச்சி செய்யவும் நேரிட்டது. கண்டி இராச்சியத்தை ஆண்ட நாயக்கர் வம்சத்தவரது போக்கும் டச்சுக்காரருக்கு எதிராகவேயிருந்தது. 1766-ம் ஆண்டு ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையை மீறிக் கண்டியர் மேன் மேலும் காரியங்கள் செய்துவந்தார்கள். அனைத்துக்கும் மேலாக ஆங்கிலேயர் தமது ஆட்சியை இந்தியாவில் நிறுத்துவான்வேண்டி இலங்கையை ஒரு கேந்திர ஸ்தானமாக அமைக்கவேண்டிய கட்டாயமும் உண்டாயிற்று.

ஆங்கிலேயர் தமது ஆட்சியைப் பலப்படுத்துவதற்கு இலங்கையில் ஒரு துறைமுகம் தேவையாயிருந்தது. கண்டி அரசன் கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கனுல் ஒப்படைக்கப்பட்ட கடற்கரைப் பிரதேசங்கள் டச்சுக்காரர் வசமிருந்தன. எனவே ஆங்கிலேயர் டச்சுக்காரருடன் பொருது கொள்வது அவசியமாயிற்று. ஐரோப்பாவிலே இங்கிலாந்துக்கும், ஒல்லாந்துக்கும் சமாதானம் நிலவி வந்ததால் இலங்கையில் டச்சுக்காரருடன் பொருதுவதற்கு ஆங்கிலேயர் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்திருந்தனர். அமெரிக்க கொலனிகளில் 'விடுதலைக் கொலனிகளின்'சார்பாக டச்சுக்காரரும் பிரெஞ்சுக்காரரும் உதவி புரிந்தனர். எனவே ஐரோப்பாவில் இரு சாராரும் ஆங்கிலேயருடன் போர் தொடுத்தனர். இதைப் பயன்படுத்திக்கொண்டு **திரிகோணமலையை** ஆங்கிலேயர் தாக்கினர். டச்சுக்காரருக்கு உதவியாகப் பிரெஞ்சுக்காரர் கைகொடுத்து ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட்ட திரிகோணமலையை உரிமைக்காரரான டச்சுக்காரரிடம் சேர்ப்பித்தனர். இங்ஙனமாக இலங்கையில் நுழைவதற்கு ஆங்கிலேயர் முயற்சித்தும் கைக்கெட்டவில்லை.

பிரெஞ்சுப் புரட்சியின் விளைவால் ஏற்பட்ட யுத்தங்களின் பயனுக இங்கிலாந்தும் ஒல்லாந்தும் ஒன்றுபட்டன.



பிரெஞ்சுப் படைகள் ஒல்லாந்துக்குட் பிரவேசித்து டச்சுக்காரரின் சம்மதத்துடன் பட்டேவியக் குடியரசை ஸ்தாபித்தன. டச்சு அதிபதியான **ஸ்ரத் ஹோல்டர்** (Shradt Holder) என்பவன் தன் நாட்டை விட்டோடி ஆங்கிலேயரிடம் சரண் புகுந்தான். இவனைக் கைப் பொம்மையாக வைத்துக்கொண்ட ஆங்கிலேயர் இலங்கையிலுள்ள டச்சுத் தேசாதிபதிக்குக் கடிதம் எழுதச் செய்து இலங்கையிலுள்ள டச்சுத் துறைமுகமாகிய திரிகோணமலையில் ஆங்கிலேயத் துருப்புக்களை நிறுத்தி வைப்பதற்கு ஏற்பாடுசெய்தனர். இதுமட்டுமன்றி டச்சுக் குடியேற்ற நாடுகளிலுள்ள துறைமுகங்களைப் பிரெஞ்சுக்காரர் அபகரித்துக் கொள்ளாவண்ணம் அவையனைத்தையும் ஆங்கிலேயர் வசம் ஒப்புவிக்கவேண்டுமென்றும் இலங்கையிலிருந்த டச்சுத்தேசாதிபதிக்கு ஸ்ரத் ஹோல்டர் மூலமாக ஆஞ்ஞை பிறப்பித்தனர்.

ஒல்லாந்தில் நடைபெற்ற அரசியல் மாற்றங்களையறியாத இலங்கை டச்சுத்தேசாதிபதியும், அதிகாரிகளும் ஸ்ரத் ஹோல்டர் கட்டளைக்குப் பணிவதாயிருந்தனர். ஆனால் ஆங்கு நிகழ்ந்த அரசியல் மாற்றங்களை இங்குள்ளவர்கள் அறிந்ததும் பட்டேவியக் குடியரசுக் கட்டளைகளை மட்டுமே நிறைவேற்றுவதாக உறுதி பூண்டனர். இதன்பின் இலங்கையிலுள்ள டச்சுத் துறைமுகங்களை ஆங்கிலேயர் தாக்கினுல் அவர்களை டச்சுத் தளபதிகள் எதிர்க்கத் தயாராயிருந்தனர். ஆங்கிலேயக் கப்பற் படைத் தலைவனுன **ஸ்ரீவாட்** (Stewart) தனது படைகளுடன் திரிகோணமலையைத் தாக்கி அதை 1795-ம் ஆண்டு கைப்பற்றினுன். இதையடுத்து மட்டக்களப்பும், யாழ்ப்பாணமும், 1796-ம் ஆண்டில் கொழும்பும் ஆங்கிலேயர் வசமாயின. டச்சுத் துறைமுகமான கொழும்பு வீழ்ச்சியுற்றதும் ஒன்றரை நூற்றுண்டுகளாக இலங்கையில் நிகழ்ந்துவந்த டச்சுக்காரர் ஆட்சியும் அஸ்தமித்தது.

**சுருக்கம்**

பதினெட்டாம் நூற்றுண்டில் ஐரோப்பாவில் டச்சுக் குடியரசின் உன்னத நிலை— இங்கிலாந்தும் பிரான்சும் தமது கவனத்தை அமெரிக்காவின் மீதும் கீழ்நாடுகள் மீதும் செலுத்தலும், டச்சுக்குடியரசின் செல்வாக்குக் கீழ்நிலையடைதலும்

—1794ல் பிரான்சுச் சேனைகள் ஒல்லாந்தின் நுழைதலும், பட்டேவியக் குடியரசு ஸ்தாபிக்கப்படலும் — பிரான்சியர் தம் கவனத்தை ஒல்லாந்தின்மீது செலுத்திக் கீழ்நாட்டு வர்த்தகம், குடியேற்ற நாடுகள் என்பவற்றிற் பராமுகமாயிருத்தல் — ஆங்கிலேயர் ஸ்திரமான அரசாங்கத்தைப் பெற்றுக் கீழ்நாட்டில் மிகுந்த கவனஞ் செலுத்தல் — டச்சுக்காரரின் தோல்விகள் — டச்சுக் கொம்பெனியின் ஊழல்கள் வீழ்ச்சிக்குக் காரணமாதல் — இங்கிலாந்தில் தொழிற்புரட்சி காரணமாகச் செல்வம் ஓங்குதல் — ஆங்கிலேயரின் பொருளாதார, இராணுவ, கடற்படை அபிவிருத்தி — அன்னார் தமதாட்சியை இந்தியாவில் நிறுவவேண்டி இலங்கையைக் கேந்திர ஸ்தானமாகக் கொள்ளல் — அமெரிக்க கொலனி விடுதலைப்போர் காலத்தில் ஆங்கிலேயர் திரிகோணமலையைத் தாக்கல் — பிரான்சியருதவியினால் டச்சுக்காரர் திரிகோணமலையை மீட்டல் — பட்டேவியக் குடியரசு ஸ்தாபிதத்தின்போது டச்சு அதிபதி ஸ்ரத் ஹோல்டர் ஆங்கிலேயரிடம் சரண்புகுதல் — சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஆங்கிலேயர் கீழ்நாட்டுத் துறைமுகங்களில் தம் துருப்புகளை நிறுத்தி வைப்பதற்கு ஸ்ரத் ஹோல்டரைக் கொண்டு இலங்கைக் கவர்னருக்குக் கடிதம் எழுதுவித்தல் — உண்மைநிலையை யறிந்து கவர்னர் கட்டளைக்குப் பணியாமை — பின்னர் ஆங்கிலேயர் 1795-ல் திரிகோணமலை, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் முதலிய துறைகளைத் தாக்கிக் கைப்பற்றி, 1796-ல் கொழும்பையுங் கைப்பற்றல் — ஒன்றரை நூற்றாண்டு காலத்திய டச்சு ஆட்சியின் அஸ்தமனம்.

### வினாக்கள்.

1. ஐரோப்பாவில் 18-ம் நூற்றாண்டின் இறுதியில் ஒல்லாந்தின் செல்வாக்குக் குன்றியமைக்குரிய காரணங்களை ஆராய்க.

2. 18-ம் நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலேயரின் செல்வாக்கு மேலோங்கியமைக்கும், கீழ்நாடுகளில் தமதாதிக்கத்தைச் செலுத்த வாய்ப்பெய்தியமைக்குமுரிய காரணங்களை ஆராய்க.

3. 18-ம் நூற்றாண்டிலிறுதியில் டச்சுக் கொம்பெனியின் விருத்தி குன்றியமைக்கும், கீழ்நாட்டு ஆதிக்கம் வீழ்ச்சியுற்றமைக்குமுரிய காரணங்களை ஆராய்க.

4. குறிப்பெழுதுக: தொழிற்புரட்சி, பட்டேவியக்குடியரசு, ஸ்ரத்ஹோல்டர், ஸ்ரீவாட்.

---

## பத்தாம் அத்தியாயம்

# இலங்கையில் டச்சு ஆட்சி

## பரிபாலனமும் பலன்களும்

டச்சுக் கிழக்கிந்திய கொம்பெனி 1602-ம் ஆண்டில் நிறுவப்பட்டது. அதை நிர்வகிப்பதற்காக 17 அங்கத்தவர்களைக்கொண்ட டைரக்டர்சபை இருந்தது. அச்சபை கிழக்குநாடுகளில் கொம்பெனியின் கொள்கைகளைத் தீர்மானிப்பதற்காக ஒரு கவர்னர் ஜெனரலையும் அவருக்கு உதவியாக ஒரு இந்திய நிர்வாகசபையையும் (Council of India) நியமனஞ் செய்தது. டச்சுத் தலைமை அதிகாரியான கவர்னர் ஜெனரல் **பட்டேவியாவில்** வசித்து வந்தார். அவர் பெரும்பாலும் இந்திய நிர்வாகசபையைக் கலந்து கிழக்கு நாடுகளில் கொம்பெனியின் நிர்வாகத்தை நடத்தி வந்தார்.

இலங்கையில் டச்சுக்காரர் மூன்று விஷயங்களைத் தங்கள் நோக்கங்களாகக் கொண்டு பரிபாலனஞ் செய்து வந்தனர். முதலாவதாக டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பெனிக்கும் தங்கள் தாயகமான ஒல்லாந்துக்கும் வர்த்தகம் செய்வதன் மூலம் வருவாயைப் பெருக்குவதாகும். இந் நோக்கம் நிறைவேறுவதற்காக அக்காலத்தில் வியாபாரத்தில் தலைசிறந்து விளங்கி வந்தவர்களான முஸ்லீம்களையும் எதிர்த்துத்தாக்கினர். அவர்களுக்குப்பெருந்துன்பங்களை விளைவித்தனர். இம் முஸ்லீம்களுக்கு அனுசரணையாயிருந்த அரசனைப் பகைத்தனர். அவர்களுக்கு இருந்த வியாபாரச் சலுகைகளைப் பறித்தனர். இங்ஙனமாக டச்சுக்காரர் தமக்கு வியாபாரத்திற் குறுக்கே நின்றவர்களையும், தடை செய்தவர்களையும் தாட்சண்யமின்றி முறியடித்தனர். வியாபாரத்தைமட்டும் கைப்பற்றுவதுடன் அமையாது இந்நாட்டு மக்களுக்கு உடைமைகளான தோட்டம் துரவு, காணி பூமி, மனைமாடம் ஆகியவற்றையும் கைப்பற்றி, அவற்றைத் தமக்கு உரித்தாக்கவேண்டும் என்னுங் கொள்கையுடையவர்களாய் டச்சுக்காரர் நடந்தனர். அடுத்தபடியாக டச்சுக்

கொம்பெனியின் நோக்கம் யாதெனில் இந்நாட்டில் தங்கள் மதமாகிய **புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மார்க்கத்**தைப் பரப்பவேண்டுமென்பதாயிருந்தது. இந்நோக்கம் நிறைவேறுமுகமாக, புரோட்டஸ்தாந்து மதப்போதகர்களுக்கு வேண்டிய சௌகரியங்களையும், சலுகைகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்றும், அவர்களுக்கு மேலான சங்கையும் மரியாதையும் அளிக்கப்படவேண்டுமென்றும் டச்சு அதிகாரிகளுக்குக் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. மேலும் இந்நாட்டுப் பிள்ளைகளின் அறிவு வளர்ச்சிக்காகப் பாடசாலைகள் நிறுவப்பட்டன. அப்பாடசாலைகளில் இந்நாட்டுச் சிறுவர்களுக்கு டச்சு மொழி போதிக்கப்பட்டது. இந்நாட்டவரையே கோயில் உபதேசிகளாக இருக்கும்படி அவர்களுக்கேற்ற பயிற்சியை டச்சு அரசாங்கம் அளித்துவந்தது. டச்சுக்காரரின் மூன்றாவது நோக்கம், இந்நாட்டில் தம்தாய் நாடாகிய ஒல்லாந்திலிருந்து மக்களைக் கொண்டுவந்து சாசுவதமாகக் குடியேற்றுவித்து இலங்கையை டச்சு மயமாக்குவதாகும். ஒல்லாந்திலிருந்து வரும் டச்சுக்காரருக்கு இந்நாட்டில் வர்த்தக வசதி மட்டுமன்றி, ஏனைய குடியிருப்பு வசதி, தோட்டம் ஆகிய சொத்துக்களைத் தேடித்தருதல் போன்ற சலுகைகளையும் செய்துகொடுப்பதாக டச்சுக்காரர் திட்டமிட்டிருந்தனர். ஆனால் தம் நோக்கத்தில் டச்சுக்காரர் எவ்வளவு தூரம் வெற்றி பெற்றார்கள் என்பதை நாம் அறிவோம்.

பட்டேவியாவில் வீற்றிருந்த கவர்னர் ஜெனரலினதும் அவருக்கு உதவியான இந்திய நிர்வாகசபையினதும் கட்டளைகளுக்கு உட்பட்டே டச்சுப் பரிபாலனம் நடந்து வந்தது. இலங்கையிலிருந்த பிரதான டச்சு அதிகாரி **கவர்னர்** ஆவர். அவருக்கு ஆலோசனைகூற ஒரு **அரசியற் சபை** (Political Council) இருந்தது. இச்சபையில் வருமானக் கட்டுப்பாட்டு அதிகாரி, கொழும்புத்திசாவை, பிரதான இராணுவ அதிகாரி ஆகியவர்களை உள்ளடக்கிய எட்டு **சிரேஷ்ட சிவில் சேர்விஸ்** (Senior Civil Service) அதிகாரிகள் அங்கம் வகித்தனர். இந்த எண்மரையும்



**சிரேஷ்ட வர்த்தகர்கள்** என்றும் அழைப்பதுண்டு. பரிபாலன சௌகரியத்தை முன்னிட்டு டச்சுக்காரர் இலங்கையைக் கொழும்பு, யாழ்ப்பாணம், காலி ஆகிய மூன்று பிரிவுகளாகப் பிரித்து இருந்தனர். இலங்கையிலிருந்த டச்சுக்கவர்னர், இலங்கையில் உள்ள டச்சுப் பிரதேசம் அனைத்துக்கும் பொறுப்பாயிருந்தாலும், கொழும்புப்பிரிவு அவருடைய நேரடியான ஆட்சியின் கீழிருந்தது. யாழ்ப்பாணப் பிரிவிலும், காலிப் பிரிவிலும் இருந்த டச்சுத் தளபதிகள் கொழும்புப் பிரிவிலிருந்த கவர்னரின் அதிகாரத்தைப் பெற்றே பரிபாலனம் செய்து வந்தனர். ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியான கரையோரக் கோட்டைகளிருந்தன. கொழும்புப் பிரிவு கற்பிட்டியாவிலிருந்து **வெந்தோட்டை** (Bentota) வரை வியாபித்திருந்தது. சிலாபம், நீர்கொழும்பு, களுத்துறை, கற்பிட்டி ஆகிய இடங்களில் இப்பிரிவைச் சேர்ந்த கோட்டைகளிருந்தன. யாழ்ப்பாணப் பிரிவானது மன்னார், திரிகோணமலை ஆகிய இடங்களையுள்ளடக்கி யாழ்ப்பாணக்குடாவின் வடகரைவரை பரவியிருந்தது. மன்னார், திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் இப்பிரிவுகளுக்கான கோட்டைகளும் அமைந்திருந்தன. காலிப் பிரிவானது வெந்தோட்டை முதல் அம்பாந்தோட்டைவரையுள்ள பகுதியாகும். இப்பிரிவுக்குச் சொந்தமாகக் காலியிலும் மாத்தறையிலும் கோட்டைகள் கட்டப்பட்டிருந்தன.

டச்சுப் பரிபாலனத்தில் நான்கு பிரதான சேவைகள் இருந்தன. முதலாவது **வர்த்தக சேவை** (Merchant Service) எனப்படும். இது ஏறக்குறைய தற்போதைய சிவில் சேர்விஸ் போன்றது. இதில் ஒரு சிரேஷ்டவர்த்தகர் (Senior Merchant), ஒரு கனிஷ்டவர்த்தகர் (Junior Merchant),ஒரு கணக்குவைத்திருப்பவர் (Book-keeper, பல குமாஸ்தாக்கள் (Clerks) எனப்படுவோர் இருந்தனர். அடுத்ததாகக் கடல் இராணுவ சேவைகள் (Naval Military Service) இருந்தன. இதில் கடற்படையிலும் தரைப்படையிலும் சேவை செய்வோர் அடங்குவர். மூன்

ரூவதாக மதசேவை (Ecclesiastical Service) இருந்தது. இப்பிரிவில் மதம் பரப்புதலுக்கும் கல்வி அபிவிருத்திக்குமாகப் பாடுபடுவோர் ஒருசாராரும், வியாதியஸ்தரைச் சந்தித்து ஆவன செய்யப்பாடுபடுவோரான மற்றொரு சாராரும் உளர். நான்காவது தொழிலாளர் சேவை (Artisan Service) எனப்படும். பொது வேலைகளைக் கவனித்து அவைகளுக்கான உழைப்பை இச்சேவை கொடுக்கும். இப்பிரதான சேவைகள் நீங்கலாக டச்சுப் பரிபாலனத்தில் மற்றும் பல அரசாங்க இலாக்காக்கள் இருந்தன. சிவில்அலுவல்களைக் கவனிப்பதற்குச் செக்கிரட்டேறியற் (Secretariat) எனப்பட்ட **காரியதரிசிக் கந்தோரும்**, கணக்கு வழக்குகளைப் பரிசீலனை செய்யக் **கணக்குப் பரிசோதனைக் கந்தோரும்** (Audit Office), உணவுப் பொருட்களை முறையாக விநியோகிக்க **கொம்மிசரியற்** (Commissaraiat) என்னுங் கந்தோரும், கறுவாப்பட்டை வியாபாரத்தைக் கவனிக்க **கறுவாப் பகுதி** (Cinnaman Department) யும், மற்றும் பல இலாக்காக்களும் இருந்தன.

கறுவாப்பட்டை டச்சுக்காரரின் பிரதான வர்த்தகப் பொருளாதலால் அதை நிர்வகிக்க ஏற்படுத்தப்பட்ட கறுவாப் பகுதியைப் பற்றிச் சிறிது அறிந்திருப்பது பொருத்தமாகும். இப்பகுதி **மகாபத்தே** (Mahabadde) எனப்பட்ட டச்சு அதிகாரியின் கீழிருந்தது. கறுவாப் பட்டை உரிப்பவர்கள் பல கிராமங்களிலும் வசித்துவந்தனர். இக்கிராமங்களிலுள்ள **விதானைமார்** மகாபத்தே என்ற டச்சுத் தளபதியின் கட்டளைகளுக்கு அடங்கி நடக்க வேண்டியவராவர். பட்டை உரிப்பவர்களின் பெயர்கள் ஒரு புத்தகத்திற் பதியப்பட்டிருக்கும். அவர்கள் இத்தொழிலைத் தவிர வேறெந்தத் தொழிலிலும் ஈடுபட முடியாது. பட்டையுரிப்பவர் எவராவது கிராமத்தை விட்டு ஓடினாலும், பட்டை திருடினாலும், கறுவாக் கன்றுகளுக்குச் சேதம் விளைத்து அவைகளை அழித்தாலும் அப்படிப்பட்டவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுவந்தது. 12 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் கறுவாப்பட்டை உரித்து டச்சுக்காரருக்குக் கொடுக்க



வேண்டும். பட்டை உரிப்பவர்களுக்குச் **சீரவரி** (Body tax) என்ற வரி விதிக்கப்பட்டது. 12 வயதுடையவன் குறைந்த பட்சம் 62 இறாத்தல் பட்டையாவது வருடமொன்றுக்கு உரித்தெடுக்க வேண்டும். மிகக் கூடிய சீரவரி வருடத்துக்கு 682 இறாத்தல் பட்டை உரித்துக் கொடுத்தலாகும். இந்த அளவுக்கு மேற்பட்ட 600 இறாத்தல் பட்டைக்கும் 92 சதங்கள் அதிக வேதனமாக வழங்கப்பட்டன. கொம்பெனியாருக்கு அதிகப் பட்டை உரித்துக் கொடுப்பவருக்கு ஊக்கமளிப்பதற்காகவே இப்பரிசு முறை கையாளப்பட்டது. ஆனால், தலைக்கு 682 இறாத்தல் பட்டை கட்டாயமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்பது சட்டமாகும். ஏனெனில் கறுவாப்பட்டை உரிப்போர் டச்சுக்காரருக்குச் சொந்தமான நிலங்களை வைத்திருந்ததால் அதற்குப் பிரதியுபகாரமாக இக் குறைந்தபட்ச சேவையை டச்சுக்காரர் எதிர்பார்த்தனர். மேலும் பட்டை உரிப்பவர்களுக்கு வேண்டிய அரிசி, உப்பு, மதுவகைகள் ஆகியவற்றை டச்சுக்காரர் கொடுத்து வந்தனர்.

## நீதிபரிபாலனம்

டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பெனியார் இலங்கையில் வர்த்தகத்தை அபிவிருத்தி செய்து அதன் மூலம் கை நிறைய இலாபத்தைச் சம்பாதிக்க வேண்டுமென்பதைப் பிரதான நோக்கமாகக் கொண்டிருந்ததால் அதற்கு முதல் அனுசரணையாகச் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் மிகக் கவனமெடுத்தனர். நாட்டுப் பழக்க வழக்கங்களை நன்கு அறிந்து மக்களுடன் பழகியிருந்து அவர்களுடைய பண்டைய கருத்துக்களுக்கும், நம்பிக்கைக்கும், புராதன நடைமுறைகளுக்கும் முரண் ஏற்படாவண்ணம் மிகச் சாதுரியமாகத் தங்கள் நீதிச் சட்டங்களை வகுத்தும், இந்நாட்டு மக்களது சட்டங்களை மாற்றியும் அமைத்துக் கொண்டார்கள். டச்சுக்காரர் தங்களது சட்டங்களை மக்களின்மேல் உடனடியாகத் திணிக்காமல் சாவகாசமாக அவற்றை நடைமுறைக்குக் கொணர்ந்து ஏற்கச் செய்தார்கள். உள்நாட்டுச் சட்டங்களில் இட்ட

மாய் இல்லாதனவற்றையும் மாற்றித் திருத்தியமைத்துக் கொண்டார்கள். எனவே போர்த்துக்கேயரைப்போலின்றி டச்சுக்காரர் மக்களின் கொள்கைகளுக்கு மாறில்லாது சட்டதிட்டங்களை ஏற்படுத்தினர்கள். மேலும் இந்நாட்டை ஆண்ட போர்த்துக்கேயரிற் பெரும்பாலோர் தளபதிகளாகவும், இராணுவ வீரர்களாகவும் இருந்தார்களேயன்றி ஆட்சித் திறனற்றவர்களாயிருந்தார்கள். ஆனால் டச்சுக்காரரோ கொம்பெனியைச் சேர்ந்த அனுபவம் மிக்க வியாபாரிகளாதலால் போர்த்துக்கேய தளபதிகளைவிட நிர்வாகத்திலும், ஆட்சிமுறையிலும் மேம்பட்டவர்களாகவே இருந்தனரென்று கூறவேண்டும். எனவே நீதிச் சட்டங்களை நடைமுறைக்குக் கொணருவதில் டச்சுக்காரர் போர்த்துக்கேயரைவிடப் பன்மடங்கு அனுதாபமும் திறனுமுடையவர்களாயிருந்தனர். இந்நாட்டுப் பழக்கங்களுக்கு ஆதரவுதருமுகமாகத் **தேசவழமை** (Thesa Valamai) போன்ற சுதேசச் சட்டங்களையும் முறைப் படுத்தினர். கல்யாணம், சொத்துரிமை, கடன், அடமானம் முதலிய விஷயங்களில் பண்டுதொட்டு இந்நாட்டு மக்களால் விசேஷமாக யாழ்ப்பாணப் பகுதிகளில் இருந்துவந்த முறைகளை ஒழுங்குபடுத்தித் தேச வழமை என்ற சட்டமுமாக்கினர். **உரோமன் டச்சுச் சட்டம்** (Roman - Dutch Law) என்று சொல்லப்படும் சட்ட நிபுணர்களால் தொகுக்கப்பட்ட சட்டம் நீதிபரிபாலன விஷயத்தில் நடைமுறைக்குக் கொண்டுவந்ததும் டச்சுக்காரரே. இனபேதங்களையும், இனவுரிமைகளையும் அடிப்படையாகக் கொண்டு பழங்காலத்து மானிய முறைப்படி அமைந்த சட்டங்களைப் புறம்பாக்கியது டச்சுக்காரராற் புகுத்தப்பட்ட இந்த ரோமன் - டச்சுச் சட்டமேயாகும்.

இலங்கை முழுவதும் உள்ள டச்சு நீதிஸ்தலங்களில் ரோமன் - டச்சுச் சட்டத்தின்படி நியாயம் வழங்கப்பட்டுவந்தது. கொழும்பு நகரில் **ராட் வான் ஜஸ்டிற்றை** (Raad Van Justitie) என டச்சு மொழியில் வழங்கப்பட்ட நீதிமன்றம் இருந்தது. அக்காலத்தில் இதுவே உயர்தர நீதிஸ்தலமாக விளங்கியது. கோட்டையில் வசித்த



ஐரோப்பியர் சம்பந்தமான வழக்கு விவகாரங்கள் இங்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. கீழ் நீதிமன்றங்களில் வழங்கப்படும் தீர்ப்பை எதிர்த்து மனுச் செய்வதற்கு இதுவே அப்பீல் நீதிமன்றமாக அமைந்திருந்தது. இந்தக் கொழும்பு உயர்தர நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு மாறாகச் செய்யப்படும் அப்பீல் மனுக்களை பட்டேவியாவிலுள்ள உயர்தர நீதிமன்றம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளலாம். இலங்கையிலிருந்த சுப்ரீம் கோடு அல்லது உயர்தர நீதிமன்றத்துக்கு உறுப்பினர்கள் வழக்கறிஞர் அல்லது சட்டப்பிறப்பினர் அல்லர். ஆனால் இலங்கையிலுள்ள டச்சுக் கவர்னருக்கு ஆலோசனைக்காக நிறுவப்பட்ட **அரசியற் சபை** (Political Council) அங்கத்தவர்களே இந்நீதிமன்றத்திலும் வீற்றிருந்து நீதி வழங்கினர்.

மாகாணங்களில் **சிவில் ராட்ஸ்** (Civil Raads), **லான்ட் ராட்ஸ்** (Land Raads) என்ற இருவிதமான நீதிமன்றங்களிருந்தன. கொழும்பு, காலி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் சிவில் ராட்ஸ் நீதிமன்றங்கள் ஐரோப்பியருக்குள்ளாகவோ அல்லது சுதேசிகளுக்குள்ளாகவோ ஏற்பட்ட சிவில் வழக்குகளை விசாரணை செய்துவந்தன. **120 றிக்ஸ் டொலர்** (Rix Dollers) (ஒரு றிக்ஸ் டொலர் 75 சதத்துக்குச் சமம்) தொகைக்குக் குறைந்த வழக்குகளை இந்நீதிமன்றம் விசாரிக்கும். கொழும்பு, யாழ்ப்பாணம், கற்பிட்டி, திரிகோணமலை, மட்டக்களப்பு, மாத்தறை, காலி ஆகிய இடங்களில் **லான்ட் ராட்ஸ்** என்னும் நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன. சுதேசிகளுக்கிடையே எழுந்த நிலத் தகராறுகளெல்லாம் இங்கு விசாரிக்கப்பட்டன. **120 றிக்ஸ் டொலருக்கு** அதிகமான தொகை சம்பந்தப்பட்ட வழக்குகளை இந்நீதிமன்றங்கள் விசாரணைசெய்யும்.

## அரசாங்க வருமானமும் வரிகளும்

கிழக்கிந்தியக் கொம்பெனிக்குக் கிடைத்துவந்த வருவாயை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். ஒன்று மக்களிடமிருந்து வரிகளை வசூலித்தலால் ஏற்பட்ட வருமானம்.

மற்றையது கொம்பெனியார் செய்துவந்த வியாபாரங்களிலிருந்து கிடைத்த வருமானம். இந்த இரு வழிகளாலும் கொம்பெனியார் நிறைந்த இலாபத்தை ஈட்டினர்.

பழைய சிங்கள அரசர்கள் எவ்வாறு நாட்டிலுள்ள நிலங்கள் அனைத்துக்கும் சொந்தம் பாராட்டினார்களோ அதே நிலமானிய முறைப்படி டச்சுக்கொம்பெனியாரும் இலங்கையிலுள்ள நிலங்களுக்குச் சொந்தம் பாராட்டி அரசனுக்குச் சேரவேண்டிய வரிகளைத் தங்களுக்கு உரிமையாக்கினர். நாட்டில் வாழ்ந்த பலவகைப்பட்ட சாதிகளுக்குப் பற்பல வரிகள் விதிக்கப்பட்டன. தலைவரி என்றும், ஊழியவரி என்றும், அதிகாரிவரி என்றும், தரைவரி என்றும், பூதல்வரி என்றும், விராந்தைவரி என்றும் எத்தனையோ வரிகள் வசூலிக்கப்பட்டன. வியாபாரத்தில் தங்களுக்குப் போட்டியாயிருந்த முஸ்லீம்களும், செட்டிமாரும் காலில் பாதரக்ஷை அணிவததற்காக அவர்களிடமிருந்தும் வரி வசூலிக்கப் பட்டது.

வரிகளுள் முக்கியமானது காணி வரியாகும்- அதாவது நிலத்தின் செழிப்பைப் பொறுத்து நிலத்தில் விளைந்த பொருட்களில் பத்திலொருபாகம் முதல் அரைப்பாகம் வரை கொம்பெனியாருக்குக் காணிவரியாக அளிக்கப்படவேண்டும். இவையன்றி மரணவரி என்று ஒருவரி உண்டு. அதன்படி பாரிய சொத்துக்களை விட்டு ஒருவர் இறந்துபோனபின் அச்சொத்துக்களிலிருந்து மூன்றிலொரு பங்கைக் கொம்பெனி அரசாங்கம் எடுத்துக்கொள்வதும் வழக்கமாயிருந்து வந்தது. மற்றும் மீன்வரியின் பிரகாரம் மீன்களைப் பிடித்த செம்படவர் அவற்றிலிருந்து மூன்றிலொரு பங்கு பெறுமதியை அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டும். அதுபோன்று தென்னந்தோப்புக்கள் வைத்திருப்பவர் தென்னைமர வரிப்பிரகாரம் விளைவில் பத்திலொரு பங்கை அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டும். இலங்கையில் டச்சுக் கொம்பெனியார் சிறிய பொருட்களென்றும் பாராது வரிவிதித்து வருமானத்தைப் பெருக்கினர்.



ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகமூலமாயும் டச்சுக் கொம்பெனியார் பெரும்பொருள் ஈட்டினர். கள்சாரயக் குத்தகை, மீன்குத்தகை, கடைக்குத்தகை ஆகிய குத்தகைகளைப் பிறருக்கு விற்பதாலும் ஒரு தொகைப் பணம் கிடைத்தது. தென்னை மரங்களிலிருந்து கிடைப்பனவாகிய தேங்காய்நெய், காடி, சாராயம் ஆகிய பொருட்களை ஏற்றுமதி செய்வதாலும், பாக்கு மரங்களிலிருந்து பாக்குகளைப் பெற்று மூடை மூடையாய்த் தென்னிந்தியா போன்ற இடங்களுக்கு அனுப்பியமையாலும், யானை, உப்பு, முத்துக்கள் ஆகிய காடுபடு திரவியங்களையும், கடல்படு திரவியங்களையும் பிறருக்கு விற்பதாலும் கொம்பெனியாருக்குப் பெரும் வருவாய் கிடைக்கலாயிற்று. மிளகு, கறுவா ஆகிய சரக்குகளில் ஏகபோக உரிமையைப்பெற்று வியாபாரஞ்செய்து வேறெவருக்கும் டச்சுக்காரர் அனுமதியின்றி இப்பொருட்களில் வியாபாரஞ்செய்ய உடன்படாது தடுத்து நிறுத்தியமையாலும் டச்சுக்காரருக்குப் பெருந்தொகை கிடைத்தது. முற்கூறிய குத்தகைகளினாலும், சுங்க இலாக்காவிலிருந்தும் ஏராளமான பொருள்வருவாய் கிடைத்து வந்தது. இறக்குமதிப் பொருட்களாக இந்தியாவிலிருந்து பருத்திப் பொருட்களையும், மற்றும் பிற இடங்களிலிருந்து ஈயம், பித்தளை, செம்பு போன்ற உலோகப் பொருட்களையும் பெற்று அவைகள் மூலமாகவும் கொம்பெனியார் இலாபமடைந்தனர்.

மேற்கூறியவாறு பலவிதமான வரிகளை டச்சுக்காரர் விதித்து வசூலித்தார்களென்றாலும் அவர்கள் அதன் விபரங்களுக்கெல்லாம் எழுத்துப் பூர்வமான கணக்கு விபரங்கள் வைத்திருந்தார்கள். மக்கள் அரசாங்கத்துக்குக் கொடுக்கவேண்டிய வரிகளைத் தவறாதுகொடுத்துவிடவும், வரிசெலுத்தும் விஷயத்தில் அவர்கள் அக்கறை செலுத்துவதற்காக டச்சுக் கொம்பெனியார் தோம்பு (Thombos) என்னும் இடாப்புகளை எழுதிவைத்திருந்தார்கள். இந்த இடாப்புகளில் வரி செலுத்த வேண்டியவரது பெயர், அவர் செலுத்திய வரி, அவருக்குள்ள நிலம், தோட்

டங்களின் விபரம், அவற்றின் பதிவிலக்கங்கள், அத்தோட்டங்களில் நிற்கும் மரங்களின் தொகை, மற்றும் அவற்றினின்றும் கிடைக்கும் பொருட்களின் பெறுமதி ஆகிய இன்னோரன்ன விபரங்களெல்லாம் **தோம்பில்** குறிக்கப்பட்டிருக்கும். இங்ஙனமாக விபரங் குறிக்கப்பட்டிருந்தமையாற்றான் டச்சு அதிகாரிகள் மக்களிடமிருந்து வரிகளை இலகுவாகவும், வெற்றிகரமாகவும் வசூலிக்க முடிந்தது. மக்களை அநியாயமாகக் கஷ்டப்படுத்தாததால், அவர்கள் அரசாங்கத்துக்குச் சேரவேண்டிய வரிகளைக் காலாகாலத்தில் கிரமமாகவும் சிரமமின்றியும் செலுத்த முடிந்தது. ஆனால் போர்த்துக்கேயர் இவ்விதமான இடாப்புகளைக் குறித்துவைக்காததால் வரி வசூலிக்கும்போது மிகக் கடுமையாகவும், கருணையற்ற கன்னெஞ்சுடனும் ஊர்ப்பணத்தைச் சூறையாடநேர்ந்தது. அதன் பயனாய்ப் போர்த்துக்கேயர் மக்கள் அபிமானத்தை இழந்து அவர்களால் வெறுக்கவும் படும்படியான நிலை ஏற்பட்டது.

## பொருளாதார அபிவிருத்தி.

டச்சுக் கொம்பெனியின் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் பொருளாதார நிலையை அவதானிக்கையில் அவர்களுக்கு எந்தெந்த விதங்களில் வருமானம் வந்தன என்றும், எவ்வெவ் வரிகளை விதித்தார்கள் என்றும் நாம் சற்றுமுன் கூறியவற்றை மனதிற் பதித்துக்கொள்ள வேண்டும். பலநூற்றாண்டுகளாக ஐரோப்பாவில் சிறந்த வர்த்தகர்களாயிருந்த டச்சுக்காரர், இலங்கைக்குவந்த போது தங்களால் எவ்வெவ்வகையில் வருவாயைப் பெருக்க முடியுமோ அவ்வவ்வகையில் முயற்சித்து வந்தார்கள். கிழக்குத்தேசங்களிலிருந்து வாசனைத்திரவியங்களையும், மற்றும் பொருட்களையும் ஐரோப்பாவுக்கு டச்சுக்காரர் அனுப்பிவந்த போதிலும், தங்கள் தாய்நாடாம் ஒல்லாந்திலிருந்து தங்கம் வெள்ளி ஆகியவற்றைத் தருவித்து இப்பொருட்களுக்கு ஈடுசெய்யத் துணியவில்லை. கீழ்நாடுகளில் பலவிடங்களிலும் தம் வர்த்தகத்தை அபிவிருத்திசெய்து அவற்றிலிருந்து கிடைக்கும் ஊதியத்தைக்



கொண்டு ஐரோப்பாவுக்கு ஏற்றுமதிசெய்யும் பொருட்களுக்கான செலவைச் சமன்படுத்தினர். இம்முறையைப் பின்பற்றி ஏற்றுமதிகளை அதிகமாக்கி, இறக்குமதிகளைக் குறைத்து வர்த்தகத்தில் இலாபம் சம்பாதிக்கும் நோக்குடன் டச்சுக்காரர் தொழில்புரிந்து வந்தனர்.

ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைகளை ஒழுங்குபடுத்தியதுடன் அமையாது தங்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருட்களை தங்கள் பிரதேசங்களிலே விளைவிக்கவும் டச்சுக்காரர் விரும்பினர். கறுவா நிறைய விளைவிக்கப்பட்ட கண்டி இராச்சியத்திலிருந்து டச்சுக்காரருக்கு தொந்தரவு இருந்துவந்தது. எனவே கண்டி அரசர்களின் தொந்தரவுகளினின்றும் விலகி, **மருதானை** போன்ற இடங்களில் டச்சுக்காரர் தாங்களாகவே கறுவாமரங்களை உற்பத்திபண்ணினர். அதுமட்டுமன்றி மலைநாட்டுப்பகுதிகளில் மிளகு, ஏலக்காய், கோப்பிக்கொட்டை போன்ற பொருட்களை கண்டி இராச்சிய மக்களால் பயிரிடுவித்து அவற்றை டச்சுக்காரருக்கு நேரடியாக விற்பனைசெய்வதற்கும் ஊக்கமளிக்கப்பட்டது. அரிசி, துணிமணி, சீனி போன்ற பொருட்கள் வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்குத் தருவிக்கப்பட்டன. இவைகளை எல்லாம் டச்சுப்பரிபாலனத்தின் கீழ் இலங்கையில் உற்பத்திசெய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. கரும்பு பயிரிடப்பட்டது. பருத்தி வன்னிப் பகுதிகளில் விளைவிக்கப்பட்டது. நெசவாலைகள் புத்தளத்தில் திறக்கப்பட்டன. யாழ்ப்பாணம், மன்னார் ஆகியவிடங்களில் நெசவுகாரர்களும் சாயம் ஊட்டுபவர்களும் மிகுதியாக வசித்துவந்தனர். இவையன்றி நீர்ப்பாசனவசதிகள் அபிவிருத்தியடைந்தன. ஏரிகளும், குளங்களும் வெட்டப்பட்டு மிகப் பெரிய நிலப்பரப்புக்கள் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டன. நிலத்தை உழுது பண்படுத்துவதற்கு இந்தியாவிலிருந்து தொழிலாளர் தருவிக்கப்பட்டனர். டச்சுக்காரர் கடல் படுதிரவியங்களிலும் நோக்கமாயிருந்து பெருவாரியான முத்துக்களை கடலிலிருந்து எடுப்பித்து முத்துவியாபாரஞ் செய்தனர். வெளிநாட்டுடன் வியாபாரத்தைத் தொடர்ந்து செய்வதற்கு வசதியான பல வீதிகளையும், கால்வாய்களையும் டச்சுக்

க்காரர் அமைத்தனர். தங்களுக்குப் பிரமாணங்களுக்கமைய நடந்து வியாபாரத்தில் இலாபம் தேடித்தருபவர்களை டச்சுக்காரர் கௌரவித்தனர். உபகாரப் பணம், பட்டம் பதவி ஆகிய சன்மானங்கள் பலருக்கு வழங்கப்பட்டன. பட்டம்பதவிகளுக்கு ஆசைப்பட்டுப் பலர் டச்சுக்காரரது வருமானப் பெருக்கத்துக்கு ஆக்கம் தேடினர். மிகச் சாதுரியமாகவும், கிரமமாகவும் டச்சுக்காரர் வரிகளை விதித்துத் தங்கள் கொம்பெனியினதும் தாய்நாட்டினதும் பொருளாதாரத்தை வளமாக்கினர். பாக்கு ஏற்றுமதி வியாபாரம் ஒன்றிலிருந்து மட்டும் கிடைத்த இலாபத்தைக்கொண்டு, டச்சுக்காரர் குடியேற்றப் பகுதிகளில் காவல்புரிந்த துருப்புக்களின் செலவுகள் முழுமையையும் சமாளிக்கமுடிந்தது என்றால் டச்சுக்காரர் எவ்வளவு திறமையாகவும் சிக்கனமாகவும், பொருளாதாரமுறையிலும் இந்நாட்டில் பரிபாலனம் செய்துவந்தார்கள் என்பது வெள்ளிடைமலை.

## மதம் - வளர்ச்சியும் சேவைகளும்.

டச்சுக் கிழக்கிந்திய கொம்பெனியாரின் பிரதான நோக்கங்களில் ஒன்று தம் மதமாகிய புரோட்டஸ்தாந்து கிறிஸ்தவ மார்க்கத்தை இலங்கையில் புகுத்துவதாகும். அரசியலிலும், பொருளாதாரத்திலும், தம் முழுக்கவனத்தையும் செலுத்தவேண்டிய டச்சுக்கொம்பெனியார் மதசம்பந்தமான விஷயங்களிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தியதற்குக் காரணமில்லாமலில்லை. இந்நாட்டில், விசேஷமாகக் கண்டியரசனுடன் உறவுபூண்டிருந்த சிங்களவரும், தமிழரும் ஆகிய இருசாரார் இந்துமதம், பௌத்த மதம், கத்தோலிக்கமதம் ஆகிய மூன்று மதங்களையும் தழுவியவர்களாவர். இம்மதத்தவர்களை டச்சு மதத்திற்கு மாற்றிவிட்டால் கண்டி அரசனையும் இந்நாட்டு மக்களையும் இணைத்திருக்கும் நெருங்கிய தொடர்பும், மக்கள் அரசனுக்குக் காண்பிக்கும் விசுவாசமும் குறையும். மதம் மாறிய மக்கள் கொம்பெனியுடன் விசுவாசமாய் நடந்து கொள்வார்கள் என்று டச்சுக்காரர் கருதினர். மேலும் மக்களுடைய ஆதரவும் விசுவாசமும் கிடைத்



தால் டச்சுக்காரர் தம் ஆட்சியை இந்நாட்டில் ஸ்திரப்படுத்தமுடியும் என்றுங் கருதினர். எனவே இந்நாட்டுப் பௌத்தர்களையும், இந்துக்களையும், கத்தோலிக்கரையும் தம் மார்க்கமாகிய புரொட்டஸ்தாந்து கிறீஸ்தவ மதத்துக்குப் பெருந்தொகையாக மாற்றினர். மிகத் துரிதமாகவும், தகுந்த அடிப்படையின்றியும் செய்யப்பட்ட இந்த மதமாற்றம் நெடுங்காலம் நீடிக்கவில்லை. இரகசியமாகப் பலர் தங்களது பழைய மதங்களையே பின்பற்றி வந்தார்கள்.

டச்சுப் பரிபாலனத்தின் கீழிருந்த மதசேவையானது சமயசம்பந்தமாக மட்டுமன்றிக் கல்விசம்பந்தமான விஷயங்களையும் உள்ளடக்கியதாக இருந்தது. வேதம் போதிப்பதும், கல்வி புகட்டுவதும், நோயாளிகளைப் பராமரித்து உதவி ஒத்தாசை செய்வதும், குருமார்கள் செய்து வந்த அதிமுக்கியமான சேவைகளாகும். மதகுருமார்களைப் பயிற்றுவிக்கும் குருமடங்களும் (Seminary), சிறுவர்களுக்குக் கல்விபுகட்டும் பாடசாலைகளும் **ஸ்கொலார்ஷேன்** (Scholarchen) என்ற பாடசாலைச் சபையின் கவனத்திலிருந்தன. **டயசனேற்** (Diocenate) என்ற கோயிற்சபை கோயில் நிர்வாகசம்பந்தமான காரியங்களைக் கவனித்து வந்தது. கிறிஸ்தவ சுவிசேஷங்களை மக்கள் எளிதிற் புரிந்து கொள்ளும்படியாக அவை தமிழிலும், சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பட்டன. 1738-ம் ஆண்டில் ஒரு டச்சு அச்சியந்திரசாலை திறக்கப்பட்டு அதிலிருந்து ஏராளமான சிங்கள - தமிழ் நூல்கள் பிரசுரிக்கப்பட்டன.

டச்சுப் பரிபாலனத்தில் மாகாணக் கல்விச்சபைகள் மூலம் கல்வி பரப்பப்பட்டது. இந்தச் சபைகள் கவர்னரால் நியமிக்கப்பட்ட அந்தந்த மாகாணத் திசாவைமார், குருமார் முதலியோரது பொறுப்பில் விடப்பட்டன. கொழும்புப் பிரிவில் 55 பாடசாலைகளும், காலிப் பிரிவில் 37 பாடசாலைகளும், யாழ்ப்பாணப் பிரிவில் 48 பாடசாலைகளுமிருந்தன. மேலும் அநாதைப் பிள்ளைகளுக்கும், தொழிற்கல்வி கற்போருக்கும் பல்வேறு பாடசாலைகள்

நிறுவப்பட்டன. குழந்தைகளுக்கு அவர்களின் தாய்மொழி மூலமாகவே போதனையளிக்கப்பட்டது. பாடசாலைகளில் மதபோதனைக்குச் சிறந்த வசதிகள் செய்யப்பட்டன. வருடத்துக்கு இருமுறை மாகாணக் கல்விச் சபையின் உறுப்பினரிற் சிலர் பாடசாலைகளின் பரிசோதனைக்காகப் போவார்கள். **பாடசாலைத் தோம்புகளைச்** (School Thombos) சரிபார்ப்பார்கள். குழந்தைகளுக்கு ஞானோபதேசம் தெரிந்திருக்கின்றதா என்று பரிசோதிப்பார்கள். வேதத்தைப் பற்றிய அறிவும் விசுவாசமும் கொண்டிருந்தவர்களுக்கு **ஞானஸ்நானம்** (Baptism) அளிக்கப்படும்.

மேற்கூறியபடி டச்சுக்காரர் கல்வியுடன் மதபோதனையையும் குழந்தைகளுக்கு ஊட்டியதால் மதமாற்றம் இலகுவில் நிறைவேறியதெனினும் நீடிக்கவில்லை. இதற்குக்காரணம் ஐரோப்பாவில் புரோட்டஸ்தாந்தரும் கத்தோலிக்கரும் ஒருவரை ஒருவர் பகைமை பாராட்டியது போல் இந்நாட்டிலும் அவ்விருவகுப்பாரும் தமக்குள் விரோதம் பாராட்டினர். அன்றியும் சுதேசிகளைப் பலவந்தமாய் மதம் மாற்றம் செய்தார்களெனக் கூறப்படுகிறது. மேலும் புரோட்டஸ்தாந்தரைத் தவிர, பிறமதத்தவர் பகிரங்க ஆராதனை நடத்தப்படாது என்று டச்சுக்காரர் கட்டளையிட்டனர். கத்தோலிக்கக் குருமாரை டச்சுப் பிரதேசங்களில் நுழைய விடக்கூடாது என்றும் தடை விதிக்கப்பட்டது. அப்படித் தடையிருந்தும் சங். **ஜோசப்வாஸ்** சுவாமிகளும் அவரது சீடர்களும் டச்சுக் குடியேற்றங்களில் நுழைந்து கத்தோலிக்க மதத்தைப் பரப்பியதுடன், கத்தோலிக்கருக்கு அநுசரணையாகவும் இருந்தனர்.

டச்சுக்காரரின் ஒன்றரை நூற்றாண்டுப் பரிபாலனத்தால் இந்நாட்டில் பல சாசுவதமானதும், நிரந்தரமானதுமான விளைவுகள் ஏற்பட்டன. அவ்விசேஷங்களால் இலங்கையின் அரசியலிலும், பொருளாதாரத்திலும் சமயத்திலும் கலாச்சாரத்திலும் பல மாற்றங்கள்



ஏற்பட்டன. அவைகளை முறையே இவண்கீழ் கவனிப்போம்.

போர்த்துக்கேயர் இந்நாட்டில் கால் எடுத்துவைத்த காலத்தில் கண்டி இராச்சியமானது கோட்டை இராச்சியத்துக்கு அடங்கியதால் வருடந்தோறும் கோட்டை அரசனுக்குக் கப்பம் கட்டிவந்தது. கோட்டையும் யாழ்ப்பாணமும் போர்த்துக்கேயர் கைக்குப் போனபின் கண்டி இராச்சியமானது அந்நிய ஆதிக்கத்துக்கும் படையெடுப்புக்கும் அடிமைப் படாமலிருந்து சுதந்திர நாடாய் விளங்கியது. இதன் காரணமாய் மலைநாட்டுச் சிங்களவர், கீழ்நாட்டுச் சிங்களவர் எனப் பாகுபாடுகள் ஏற்பட்டு, முன்னவர் பின்னவரைக்காட்டிலும் உயர்ந்தவர் என்ற மனப்பான்மை உதயமானது. டச்சுக்காரர் இங்குவந்து, கீழ்நாடுகளில் தம் குடியேற்றங்களை நிறுவியபோது கண்டிச்சிங்களவரது **உயர்வு** மனப்பான்மை மேன்மேலும் பெருகி வளர்ந்தது. அதன் பயனாகச் சிங்களவருக்குள் உயர்வு தாழ்வு மனப்பான்மை இன்றும் நிலவுகிறது.

பொருளாதாரநிலை சம்பந்தமாய், டச்சுக்காரர் இந்நாட்டில் தோட்டப் பயிர்ச்செய்கைக்கு அடிகோலினர் என்று சொல்லவேண்டும். கறுவா, கோப்பி, மிளகு, தேங்காய் ஆகிய பயிர்களை அமோகமாக உற்பத்திசெய்து வெளிநாடுகளுக்கு அனுப்பி நிரம்பிய இலாபம் சம்பாதித்தனர். டச்சுக்காரர் குடியேற்ற நாடுகளைத் தம் சொந்தத் தோட்டங்கள்போலப் பாவித்து, அங்குள்ள மக்களைத் தங்களுக்கு உழைத்துக்கொடுக்கும் தோட்டத் தொழிலாளராக எண்ணித் தோட்டப்பயிர்ச் செய்கைகளை விஸ்தரித்தனர். இவ்விளைபொருட்களை உற்பத்தி ஸ்தலங்களிலிருந்து கொழும்புக்குத் தருவிக்கவும் கொழும்பிலிருந்து பிற அன்னிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும் போக்குவரத்து வசதிகள் தேவைப்பட்டன. இதை முன்னிட்டு அநேக வீதிகளும் கால்வாய்களும் டச்சுக்காரரால் அமைக்கப்பட்டன. உணவுப் பற்றுக்குறையை நீக்க முயற்சிகள் செய்யப்பட்டன. சிறுசிறு கைத்தொழில்களும் ஆரம்பிக்கப்பட்டன.

சமயசம்பந்தமாகப் பார்க்கப்போனல் டச்சுக்காரராஸ்புரோட்டஸ்தாந்த கிறிஸ்தவமதம் இந்நாட்டில் புகுத்தப்பட்டு அம்மதம் நிலைத்து நிற்பதற்கும் வாய்ப்புகள் செய்யப்பட்டன. பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும், கத்தோலிக்கருக்கும் பொது ஆராதனைக்கான வசதிகள் மறுக்கப்பட்டாலும், டச்சுக்காரர் தம் மதப்பரம்புதலுக்காகச் சிங்களத்திலும், தமிழிலும், கிறிஸ்தவ இலக்கியம் ஒன்றை வெளியிட்டனர். சுதேசிகளை உபதேசிமார்களாகப் பயிற்றுவித்தனர். மத அபிவிருத்திக்காகப் பல பாடசாலைகள் நிறுவப்பட்டன. போர்த்துக்கேயர் காலம் வரை ஒழுங்கு படுத்தப்படாத கல்வித்திட்டம் டச்சுக்காரர் வருகைக்குப் பின் அவர்கள் முயற்சியால் ஒழுங்கு படுத்தப்பட்டுப் பாடசாலைகள் நல்ல அடிப்படையில் வேலைசெய்து வந்தன. சாதிவேறுபாடுகளைக் களைந்தெறியவும், எல்லோருக்கும் சமத்துவம் என்னும் கொள்கையை நிலை நாட்டவும், எழுத்து வாசனை அறிவை ஊட்டவும் பாடசாலைகள் பெரிதும் முயன்றன.

டச்சுக்காரரின் வருகையால் கலாச்சாரத்திலும் பெரிதும் மாற்றங்கள் நிகழ்ந்தன. ஜின் என்ற மதுபானம் அருந்தவும், புகையிலை பாவிக்கவும், புதுப்புது உணவு வகைகளைத் தயாரிக்கவும் இலங்கையர் பழகிக்கொண்டனர். டச்சுக்காரரின் பழக்க வழக்கங்கள் மக்களிடையே வேரூன்றின. டச்சுக்காரரின் சிற்பமுறைப்படி இந்நாட்டில் கட்டடங்கள் கட்டப்பட்டன. இஸ்தோப்பு, நடைகூடம், அறைகள், முற்றம், சமயலறை ஆகியவைகளை முறையே உடைத்தான வீடுகள் டச்சுப் பாணியில் கட்டப்பட்டன. டச்சுச் சொற்களான கந்தோர், நொத்தாரிஸ் போன்றன தமிழிலும், சிங்களத்திலும் வழங்கப்படுகின்றன. இவைதவிர டச்சுக்சந்ததியாராகிய பறங்கியர் (Burgher) எனும் சாதியார் பலதுறைகளிலும் அமர்ந்து இந்நாட்டுக்குப் பெருந்தொண்டு புரிந்துள்ளார்கள்.

அனைத்துக்கும் மேலாக டச்சுப் பரிபாலனத்தால் இந்நாட்டுக்குக் கிடைத்த நன்மைகளுள் தலைசிறந்ததும், எக்காலும் போற்றக்கூடியதும் என்றும் நின்று நிலைக்கக் கூடியதுமான ஒன்றுண்டு. அதுதான் டச்சுக்காரர் ஏற்படுத்திய ரோமன்டச்சுச்சட்டம் என்பதாகும். இலங்கையில் காணப்படும் நீதிமன்றங்களிலெல்லாம் நீதிக்கு ஆதாரமாக விளங்கி வருவது இச்சட்டமே. சுதேசி, விதேசியென்ற பாகுபாடின்றி அனைவருக்கும் ஒரே நீதியை வழங்குவது இச்சட்டம். டச்சுச் சட்ட நிபுணர்களால் தொகுக்கப்பட்டிருந்தாலும், இந்நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையொட்டி மாற்றம் திருத்தம் செய்யப்பட்டு இச்சட்டம் மக்களுக்கு நன்மை பயப்பதாய் விளங்கிவருகிறது.



### சுருக்கம்.

1602ல் டச்சுக்கொம்பெனி நிறுவப்படல்—அதை நிர்வகிக்க 17 டைரக்டர்களைக்கொண்ட அங்கத்தவர்சபை—கீழ்நாடுகளின் கொள்கையைத்தீர்மானிப்பதற்கு ஓர் கவர்னர் ஜெனரலும், இந்திய நிர்வாகசபையும்—கொம்பெனியாரின் மூன்று பிரதான நோக்கங்கள்—வர்த்தகமூலம் தாய்நாட்டின் வருவாயைப்பெருக்கல், புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதத்தைப் பரப்பல், ஒல்லாந்திலிருந்து மக்களைக் கொணர்ந்து இலங்கையில் சாசுவதமாகக் குடியேற்றல்—இலங்கையின் பிரதான டச்சு அதிகாரியான கவர்னரும், அவருக்கு ஆலோசனை கூறும் அரசியற்சபையும்—கவர்னரின் பரிபாலனமுறைகள்—பிரதான நான்குசேவைகள்: வர்த்தகசேவை, இராணுவசேவை, மதசேவை, தொழிலாளர்சேவை—டச்சுப்பரிபாலனத்தின் பல அரசாங்க இலாக்காக்கள்: காரியதரிசிக்கந்தோர், கணக்குப் பரிசோதனைக் கந்தோர் கொம்மிசாரியற், கறுவாப்பகுதி—விதானைமாரும் கடமைகளும்—கறுவாப்பட்டை உரிப்போருக்கான நிபந்தனைகளும் சன்மானமும்—டச்சுக்காரரின் நீதி பரிபாலன முறை—சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் கவனம்—பண்டைய கருத்துக்களுக்கும், பழக்கவழக்கங்களுக்கும் முரணின்றிப்பரிபாலித்தல்—தேசவழமை உரோமன் டச்சுச்சட்டம் என்பவற்றை நடைமுறைக்குக் கொணர்தல்—கொழும்புவின் பிரதம நீதி மன்றமாகிய ராட் வான் ஜஸ்டிற்றையினதும் கீழ்நீதிமன்றங்களினதும் நீதிபரிபாலனம்—சிவில்ராட்ஸ், லான்ட்ராட்ஸ் என்னும் மாகாணச் சிவில் நீதிமன்றங்கள்.

### வருமானமும் வரிகளும்.

வருவாயின் இருபிரிவுகள்: மக்களிடத்துவரி, வர்த்தகவருவாய்—பல்வேறு வகை வரிகள்: தலைவரி, ஊழியவரி, தரைவரி, பூதல்வரி, விராந்தைவரி, மரணச் சொத்துவரி, மீன்வரி, விவசாயவரி, இன்னபிற—பல்வேறு குத்தகைகள்- தோம்பு எனப்படும் இடாப்புக்கள்.

### மதமாற்றமும் கல்வியபிவிருத்தியும்.

பௌத்தர்கள், இந்துக்கள், கத்தோலிக்கர் என்போரைப் புரொட்டஸ்தாந்து மதத்துக்குப் பெருந்தொகையாய் மாற்றல்—குருமாரின் சேவைகள்—கல்விவிருத்தியில் குருமாரின் தொண்டு—பலபிரிவுகளிலும் பாடசாலைகள்—அநாதைப்பிள்ளைகளுக்கு ஆதரவு—பிறமதத்தவரின் பகிரங்க ஆராதனைகளுக்குத் தடையுத்தரவு.

டச்சுப்பரிபாலனத்தின் சாசுவதமான விளைவுகள்: அரசியல், பொருளாதார, சமய, கலாச்சார மாற்றங்கள்—கண்டிச் சிங்களவர், கீழ்நாட்டுச்சிங்களவர் என்னும் இருபகுப்புகள் ஏற்படல்—கறுவா, கோப்பி, மிளகு, தேங்காய், பாக்குபோன்ற பொருட்களின் அபிவிருத்தி—ஏற்றுமதி இறக்குமதி வியாபாரமுன்னேற்றம்—சிறு கைத்தொழில்கள் ஆரம்பம்—அச்சியந்திரசாலை நிறுவப்படல்—மத அபிவிருத்திக் காகப் பாடசாலைகள் தோற்றல்—ஜின் அருந்தல், புகையிலைபாவித்தல், புதுப்புது உணவுகளைத் தயாரித்தல் முதலாம் பழக்க வழக்கங்கள் வேரூன்றல்—கட்டட அமைப்புக்களில் மாற்றம்—கக்தோர், கொத்தாரிஸ் போன்ற டச்சுச் சொற்கள் தமிழ்மொழியிலும், சிங்களமொழியிலும் இடம்பெறல்—உரோமன் டச்சுச் சட்டத்தின் முக்கியத்துவம்.

### வினாக்கள்.

1. டச்சுக் கிழக்கிந்திய கொம்பனியின் அமைப்பு, நிர்வாகமுறை என்பவற்றை விளக்குக.
2. இலங்கையில் டச்சுக்காரர் எம்மூன்று விஷயங்களைத் தம்நோக்கங்களாகக் கொண்டு ஆட்சிபுரிந்தனர்? எவ்வளவு தூரம் தமது நோக்கங்களில் வெற்றி கண்டனர்?
3. இலங்கையில் டச்சு அரசியற்சபை அமைப்பையும், டச்சுப் பரிபாலன முறையையும் சுருக்கிக் கூறுக.
4. டச்சுப் பரிபாலனத்தில் இலங்கையிலிருந்த நான்கு சேவைகளையுங் கூறி கறுவாப்பகுதிச் சேவையை விபரிக்குக.
5. இலங்கையில் டச்சுக்காரரின் நீதிபரிபாலன முறையை விபரிக்குக.
6. இலங்கையில் டச்சுக்காரர் எவ்வெவ்வழிகளில் தமது வருவாயைப் பெருக்கினர் என்பதை ஆராய்க.
7. டச்சுப் பரிபாலனத்தின்கீழ் இலங்கையடைந்த நன்மைகளைச் சுருக்கமாய்க் கூறுக.
8. டச்சுக்காரர் வருகையால் இலங்கையில் மதம், கல்வி, கலாச்சார சம்பந்தமாய் நிகழ்ந்த மாற்றங்களென்ன?
9. குறிப்புகளெழுதுக: சிரேஷ்ட வர்த்தகர்கள், கொம்மிசரிஸ், தேசவழமை, சிவில்ராட்ஸ், தோம்பு, ரோமன் டச்சுச்சட்டம்.

---

## பரீட்சை வினாக்கள்.

1. டச்சுக்காரர் கிழக்குப் பிரதேசங்களில் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டியது எங்ஙனமெனக் கூறுக.
2. இலங்கையின் கரையோர மாகாணங்களை டச்சுக்காரர் கைப்பற்றிய வகையைக் கூறுக.
3. நாயக்கர் வமிசத்து மன்னர்களுக்கும் டச்சுக்காரருக்குமிடையே பிணக்குகள் உண்டாவதற்கான காரணங்களைக் கூறுக.
4. டச்சுக்காரரின் ஆட்சி இலங்கையில் வீழ்ச்சியடைந்ததற்குரிய காரணங்களை ஆராய்க.
5. இலங்கையில் டச்சுக்காரர் செய்த பரிபாலனத்தின் விளைவுகளும் பலாபலன்களும் யாவை?
6. கண்டி அரசாங்க முறைபற்றி ஒருகட்டுரை வரைக.
7. டச்சுப் பரிபாலனத்தைப் பின்வரும் தலையங்கங்களின் கீழ் எழுதுக.
   (1) நீதி பரிபாலனம் (2) அரசாங்க வருமானமும் வரிகளும் (3) பொருளாதாரநிலை (4) மதம் (5) கல்வி (6) கலாச்சாரம்.
8. குறிப்பெழுதுக:- இரண்டாம் இராசசிங்கன், இரண்டாம் விமலதர்மசூரியன், கீர்த்தி ஸ்ரீ இராசசிங்கன், 1766-ம் ஆண்டு உடன்படிக்கை, செபால்ட் டி. வீயர்த், தேசவழமை, தோம்பு.

---

பதினோராம் அத்தியாயம்

# பிரிட்டிஷார் காலம் 1796 — 1947

## இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சி ஸ்தாபிதம்

பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகள் இலங்கைச் சரித்திரத்தில் மிகமுக்கியத்துவம் வாய்ந்த காலங்களாகும். ஏனென்றால் ஏறக்குறைய 150 வருடங்களாகப் பிரிட்டிஷார் பரிபாலனத்தில் இலங்கைத் தேசம் இருந்து வந்ததுமன்றி, முன்னொருபோதும் இத்தேசத்தில் நிகழ்ந்திராத பல மாற்றங்களும், இன்றைய வாழ்க்கைக்குக் காரணமான பல சம்பவங்களும் இந்த இரு நூற்றாண்டுகளிலும் நடந்தேறியுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை பிரிட்டிஷார் பரிபாலனத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். 1796-ம் ஆண்டுமுதல் 1837-ம் ஆண்டுவரை ஒருபிரிவு; இக்காலத்தில் பிரிட்டிஷார் தமது ஆட்சியை இந்நாட்டில் ஸ்தாபிக்கவும், பலப்படுத்தவும் செய்து புதிதானதோர் அரசியல் முறையையும் வகுத்துக் கொண்டனர். இரண்டாம்பிரிவு 1837-ம் ஆண்டு தொடக்கம் 1913 ஆண்டீறாக உள்ளடங்கும். இலங்கையில் பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டகாலமிது. பெருமளவில் தோட்டங்கள் திறக்கப்பட்டதின் விளைவாய்ச் சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டதுடன் அரசியல் அமைப்பிலும் திருத்தங்கள் செய்யப்பட்டன. 1913ம் ஆண்டுமுதல் 1948-ம் ஆண்டுவரை உள்ளகாலம் மூன்றும் பிரிவைச் சார்ந்ததாகும். நடுத்தரவகுப்பு மக்களின் எழுச்சியும் அதன்பயனாய் இலங்கையர் அரசியல் ஆதிக்கத்தைப் பிரிட்டிஷாரிடமிருந்து கைவரப் பெற்றமையும் இப்பிரிவிலடங்கும்.

இலங்கையின் கரையோர மாகாணங்களை (Maritine Provinces) ஆங்கிலேயர் எங்ஙனம் கைப்பற்றினர்கள் என்பதுபற்றி இலங்கையில் டச்சுக்காரரது ஆட்சியின் வீழ்ச்சியெனும் அத்தியாயத்தின் பிற்பகுதியில் குறிப்

பிட்டிருக்தோம். அதாவது பிரிட்டிஷார் தம் ஆட்சியை இந்தியாவில் பலப்படுத்துவதற்காகக் கிழக்கு கடற்கரையோரத்தில் ஒரு துறைமுகத்தைத் தேடினர். கண்டி அரசனாகிய கீர்த்திஸ்ரீ என்பவனால் டச்சுக்காரருக்குக் கொடுக்கப்பட்ட கரையோரப் பகுதிகளை டச்சுக்காரரிடமிருந்து, கைப்பற்றுவதற்காகத் திட்டமிட்டுத் திரிகோணமலையை பிரிட்டிஷார் தாக்கினார்கள். அதுசமயம் பிரெஞ்சுக்காரர் டச்சுக்காரருக்குக் கைகொடுத்து ஆங்கிலேயரைத் தாக்கி முறியடித்தனர். பின்பு பிரெஞ்சுப் புரட்சிக்குப்பின் பிரெஞ்சுப் படைகள் ஒல்லாந்துக்குள் பிரவேசித்துப் பட்டேவியக் குடியரசை ஸ்தாபித்தன. டச்சு அதிபதியான ஸ்ரத்ஹோல்டர் இங்கிலாந்துக்கு ஓடித் தஞ்சம் புகுந்தான். அவனைக் கைப்பொம்மையாக்கிப் பிரிட்டிஷார் தம் காரியத்தைச் சாதிக்க முயன்றனர். இலங்கையில் டச்சுக்காரர் வசமிருந்த திரிகோணமலையை பிரிட்டிஷ் துருப்புக்கள் காவலில் விடும்படி ஸ்ரத்ஹோல்டர் கட்டளை பிறப்பித்தான். அவன் கட்டளையை மீறிப் பட்டேவியக் குடியரசின் கட்டளைகளைச் சிரமேற்கொண்ட இலங்கையிலிருந்த டச்சு அதிகாரிகள் திரிகோணமலையைப் பிரிட்டிஷ் துருப்புக்கள் வசம் விடுவதற்கு மறுத்தனர். 1795ம் ஆண்டு ஸ்ரீவார்ட் என்ற பிரிட்டிஷ் கடற்படைத்தலைவன் திரிகோணமலையைக் கைப்பற்றினான். அதன்பின் மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய கடற்கரை மாகாணங்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பிரிட்டிஷார் வசமாயின. முன்னரும் இவ் விபரம் கூறப்பட்டுளது.

## கண்டி அரசியல் முறை.

பிரிட்டிஷார் இலங்கையில் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றியகாலை இலங்கையின் நிலைமைபற்றி ஒருசிறிது ஆராய்வது அவசியமாகும். 1796-ம் ஆண்டில் இலங்கையில் இரு சுதந்தரமான அரசாங்கங்கள் தனித்தனியே நிலவிவந்தன. கரையோர மாகாணங்களில் டச்சுக்காரர் ஒருவித ஆட்சிபுரிந்து வந்தனர். கண்டி இராச்சியத்தில் கண்டி அரசன் சுதந்திரமான ஆட்சி





யொன்றை நிறுவிப் பரிபாலனம் செய்துவந்தான். இவ்விரு அரசாங்கங்களைப்பற்றிய பொதுவான கருத்துக்கள் டச்சுக்காலம்பற்றிய சரித்திரத்தில் குறிப்பிட்டிருக்தோம் என்றாலும் அவைகளைத் திருப்பவும் எடுத்துக் கூறுவது மிகையாகாது.

கண்டி இராச்சிய பரிபாலனத்திற்காகப் பல உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டிருந்தனர். பெரும் பிரிவுகளுக்குத் **திசாவை** எனும் அதிகாரியையும், சிறிய பிரிவுகளுக்கு **ரட்டேமகாத்மய** எனும் அதிகாரியையும், அதற்கும் சிறிய பகுதிகளுக்குக் **கோறளைமார்களையும், கிராமத் தலைமை அதிகாரிகளையும்** கண்டி அரசன் நியமனஞ் செய்திருந்தான். திசாவைகளுக்குள் பிரதானமான **அதிகார்**களும் (Adigar), திசாவைகளும், மகாத்மயாக்களும் மிகுந்த செல்வந்தர்களாயிருந்து நாட்டில் ஒழுங்கையும் சமாதானத்தையும் நிலைநாட்டினர். வரிவசூலித்தல், இராசகாரிய சேவைகளை மேற்பார்த்தல், குடிசனங்களுக்கு நீதிவழங்கல் ஆகிய கடமைகளை இவ்வதிகாரிகள் செய்து வந்தனர்.

அக்காலத்தில் அரசனுக்குக் குடிமக்கள் செய்ய வேண்டிய சில சேவைகளிருந்தன. அதற்கு **இராசகாரியம்** (Raja Karia) என்று பெயர். போரில் வீரராகச் சேர்ந்து சண்டை செய்தல், அரசனுக்கு வேண்டிய மரங்களைத் தறித்தல், அவனுக்கு உணவு, முத்து, யானை ஆகிய திரவியங்களைக் கொடுத்தல், வீதி, குளம் ஆகியவற்றைச் செப்பனிடுதல் அல்லது புதிதாக நிர்மாணித்தல் ஆகிய சேவைகள் இராசகாரிய சேவையினுள் அடங்கும். அரசனுக்குச் செய்யப்படும் சேவைகளுக்காக அவன் அச்சேவைகள் செய்தோருக்கு வேதனம் கொடுக்கவில்லை. அதற்குப்பதிலாக வயல்களையும் நிலங்களையும் மானியமாக வழங்கினான். இவைகளைப் பெற்றவர்கள் அரசனுக்குச் சிறு வரிகளைக் கொடுப்பதுமன்றித் தத்தம் சாதிகளுக்குரிய தொழில்களையும் செய்து கொடுக்கக் கடமைப்பட்டவராவர். குடிசனங்களுக்குக் கொடுத்த நிலங்கள் நீங்கலாக அரசன் தனக்கெனச் சில நிலங்கள் வைத்திருக்

தான். அவைகளுக்குக் **கபடகம்** எனப்பெயர். தனக்குச் சேவைபுரியும் பிரபுக்களுக்குச் சிலவற்றை வழங்கினன். அவற்றிற்கு **நிந்தகம்** எனப்பெயர். விகாரைகளுக்கும், தேவாலயங்களுக்கும் சில நிலங்களைத் தானம் செய்தான். அவைகளை **விகாரகம், தேவாலகம்** என அழைப்பர்.

## டச்சு அரசியல் முறை

டச்சுக்கொம்பெனியார் தம்கீழிருந்த கரையோர மாகாணங்களில் அமுல்நடத்திய அரசியல்முறை ஏறக்குறையக் கண்டி அரசியல்முறையையே ஒத்திருந்ததென்றாலும் தமது வியாபார நோக்கத்தை முன்னிட்டும், நிர்வாகச் சௌகரியத்தை முன்னிட்டும் சில மாற்றங்களை டச்சுக்காரர் புகுத்தியிருந்தார்கள். சிங்களவர் பெரும்பான்மையாக வசித்த பிரதேசங்களில் இராசகாரிய முறை அனுஷ்டிக்கப்பட்டது. ஆனல் தமிழர் பெருவாரியாக வசித்த யாழ்ப்பாணப் பகுதிகளில் இராசகாரிய முறையை அமுல் நடத்தாது, மக்களிடம் விளைபொருட்களில் ஒருபங்கை டச்சுக்காரர் வரியாகப் பெற்றுவந்தனர். டச்சுக் கொம்பெனியார்வசமிருந்த சிங்களப் பகுதிகளில் திசாவை, ரட்டேமகாத்மயா என்னும் உயர்தர உத்தியோகஸ்தர்கள் டச்சுக்காரராகவே விளங்கினர்கள். யாழ்ப்பாணப் பகுதியில் **மணியகாரர்** போன்ற அதிகாரிகள் திசாவைகளுக்குப் பதிலாக நியமிக்கப்பட்டிருந்தனர். இவ்விரு பகுதிகளிலும் நீதிமன்றங்களில் **ரோமன் டச்சுச் சட்டமும் தேசவழமையும்** பின்பற்றப்பட்டு விசாரணைகள் நடந்தேறின. கண்டி அரசியல்முறைக்கும் டச்சு அரசியல் முறைக்கும் உள்ள மற்றொரு முக்கியமான வித்தியாசம் என்னவெனில், கரையோர மாகாணங்களை ஆட்சிசெய்த டச்சுக் கவர்னரும் அவரின் கீழுள்ள உத்தியோகஸ்தர்களும் பட்டேவியாவிலுள்ள டச்சுக்கவர்னர் ஜெனரலின் ஆணைக்கு அடிபணிந்து, அவரின் கட்டளைகளை எதிர்பார்த்தே எவ்விஷயத்தையும் மேற்கொண்டு செய்யமுடியும். ஆனல் கண்டி அரசனே சர்வாதிகாரிபோல், சுதந்திரமாகத் தன் காரியங்களைக் கவனிக்க முடியும். கண்டி இராச்சிய அதிகாரிகளும் பிரபுக்களும்



எவ்விதமான சட்டதிட்டங்களுக்கும் கட்டுப்படாதவராய், வாழையடி வாழையாக அனுஷ்டிக்கப்பட்ட பழக்க வழக்கங்களைப் பின்பற்றி நடந்து வந்தார்கள்.

## கிராம வாழ்க்கை

பிரிட்டிஷார் இலங்கைக்கு வந்தபோது கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற ஒருசிலவிடங்களே நகரங்களாக விளங்கினவன்றி, இலங்கை பெரும்பாலும் கிராமங்கள் நிறைந்த தேசமாயிருந்தது. நெற்பயிர் விளைவித்தலே கிராமங்களில் மக்களின் பிரதான தொழிலாகும். நிலவளமும் நீர்வளமும் உடைத்தான இடங்களில் பயிர்ச்செய்கையையொட்டி மக்கள் தம் வாசஸ்தலங்களை அமைத்துக் கொண்டனர். புற்றரைகளில் கால்நடைகளை வளர்த்தனர். மேட்டுப்பாங்கான இடங்களில் பயிர்ச்செய்கையுடன் கமுகு, பாக்கு ஆகிய மரங்களையும் வளர்த்தனர்.

ஒவ்வொரு கிராமமும் தனது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாய் அமைந்திருந்தது. எப்பொருளுக்கும் பிறரை அல்லது பிறகிராமங்களைக் கிராமமக்கள் எதிர்பார்த்திருக்கவில்லை. தமக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் பிறவற்றையும் தாமே உற்பத்தி செய்துகொள்வது கிராமவாசிகளுடைய கொள்கையாயிருந்தது. பணப்புழக்கம் அதிகமாயிருக்கவில்லை. பண்டமாற்று முறை வழக்கிலிருந்தது. அதாவது கிராமவாசி தான் விளைவித்த ஒருபொருளைக் கொடுத்து மற்றவனிடமிருந்து தனக்குத் தேவையான இன்னொர் பொருளைப் பெற்றுக் கொள்ளுதலே பண்டமாற்று முறையாகும்.

ஒவ்வொரு கிராமத்தையும் நிர்வகிக்கக் **கிராமசபை** (Gansaba) என்று ஒன்றிருந்தது. குடியானவர்களிடையே ஏற்படும் நிலத்தகராறுகளைத் தீர்த்துவைப்பதும், கிராமத்திலுள்ள கமத்தொழிலைப் பார்ப்பதும் இச்சபையின் வேலைகளாகும்.

கிராமங்களில் மதக்கட்டுப்பாடு மிகத்தீவிரமாக அமுல் செய்யப்பட்டுவந்தது. ஒவ்வொரு சாதியில் பிறந்தவனும் தன் சாதிக்குரிய தொழிலைச் செய்தாகவேண்டும்.

உயர்சாதியைச் சேர்ந்தவர்கள் தாழ்ந்த சாதியாருடன் விவாக சம்பந்தமாகவோ அல்லது பந்திபோசனம் பண்ணுவதற்கோ தொடர்பு வைத்துக்கொள்ளமாட்டார்கள். தாழ்ந்த சாதியில் பிறந்தவன், அரசன் சிபார்சு செய்தாலுங் கூட மேல்சாதியினனாக முடியாது. சாதி ஆசாரங்களின் படி நடவாதவரை அவர் குடும்பத்தினர் தண்டித்து வந்தனர். குடும்ப ஒற்றுமையையும் பாதுகாப்பையும் முன்னிட்டுக் குடும்பத்தினர் ஒன்றாக வசித்துவந்தனர். ஒருவனது வாழ்விலும் தாழ்விலும், இன்பத்திலும் துன்பத்திலும் குடும்பத்தினருக்குப் பங்குண்டு.

கிராம வாழ்க்கை சம்பந்தமாகக் கண்டி இராச்சியத்துக்கும் கரையோர மாகாணங்களுக்கும் சில வித்தியாசங்கள் நிலவின. கண்டி இராச்சியக் குடியானவர்கள் அநேகமாக எழுத்துவாசனையற்றவர்களாவர். அவர்களுடைய வாழ்க்கைக்குக் கல்வியறிவு அவசியமில்லாமற்போயிற்று. ஆனால் டச்சுக்காரர் கரையோர மாகாணங்களில் வாழ்ந்த கிராமவாசிகளுக்குச் சமய போதனைக்காகப் பலபாடசாலைகளை நிறுவிக் கல்விபுகட்டி வந்தார்கள். அதுமட்டுமன்றிக்கட்டடம்கட்டுவது சம்பந்தமான சில சில தொழில்களையும் பயிற்றுவித்தனர். மேலும் தோட்டப் பயிர்ச்செய்கைக்கும் டச்சுக்காரர் ஆதரவளித்தனர். அடுத்தபடியாகக் கண்டி இராச்சியத்திலுள்ள குடியானவர் பௌத்த மதத்தைச் சார்ந்தவர்களாவர். பௌத்த பிக்குகள் இக்குடியானவர்மீது எவ்வித அதிகாரமுமின்றியிருந்தார்கள். ஆனால் கரையோர மாகாணங்களிலிருந்த கிராமவாசிகள் புரோட்டஸ்தாந்துக் கிறிஸ்தவ மதத்தையோ அல்லது ரோமன் கத்தோலிக்க மதத்தையோ தழுவியவர்களாகையால் அம்மதங்களின் தலைவர்களான பாதிரிமார் தம்திருச்சபையைச் சேர்ந்தவர்கள்மீது ஆதிக்கம் செலுத்தி வந்தார்கள்.

## இலங்கையில் பிரிட்டிஷாரின் தற்காலிக அரசாங்கம்

1796-ம் ஆண்டில் இலங்கைக் கரையோரமாகாணங்களுக்குப் பிரிட்டிஷார் சொந்தம்பாராட்டினர். இம்மாகாணங்களை டச்சுக்காரரிடமிருந்து பெறுதற்குப் பிரிட்டிஷ்



கிழக்கிந்தியக் கொம்பெனியார் ஆயிரக்கணக்காகச் செலவழித்தனர். இம்மாகாணங்களைச் சென்னை அரசாங்கத்தின் பரிபாலனத்தின் கீழ்க்கொணர்ந்து பல ஆயிரம் ரூபாய்களை வசூலித்துத் தாம் செலவழித்த தொகைக்கு ஈடுசெய்யவும், அதற்கு மேலும் இலாபம் தேடவும் கிழக்கிந்தியக்கொம்பெனி திட்டமிட்டிருந்தது. அன்றியும் ஐரோப்பாவில் பிரெஞ்சுக்காரருக்கும் பிரிட்டிஷாருக்கும் நடைபெற்ற யுத்தம் முடிந்தபின் சிலசமயம் பிரிட்டிஷார் தாம் கைப்பற்றிய இலங்கையின் பகுதிகளை டச்சுக்காரருக்குத் திரும்பவும் ஒப்புவித்து விடவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படலாம் என்று பிரிட்டிஷார் கருதினர். இக்காரணங்களால் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் தற்காலிகமான அரசாங்கத்தைப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கொம்பெனியார் நிறுவியிருந்தார்கள்.

கரையோரப் பகுதிகளின் பரிபாலனத்தை **கேணல் ஸ்டுவார்ட்** (Colonel Stewart) என்னும் பிரதம சேனாதிபதி நடத்திவந்தார். இவருக்குச் சிவில் இராணுவ அதிகாரங்களுண்டு. சென்னை அரசாங்கத்தின் உத்தியோகஸ்தருக்கு **ரொபர்ட் அன்ட்ரூஸ்** (Robert Andrews) என்பவர் தலைவராக விளங்கிச் சிவில் நீதி நிர்வாகங்களை நடத்திவந்தார். இத்துடன் நிற்காது கிழக்கிந்தியக் கொம்பெனியாருக்குள் வரிவசூலையும் இவர்களே செய்துவந்தனர்.

1796-ம் ஆண்டில் நிலமானிய முறையைச் சென்னையிலுள்ள பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கையில் ஒழிக்க முயன்றது. இத்தனைகாலமாய்க் கரையோரப் பகுதிகளில் வசித்த சிங்களவர் தம்நிலத்தின் விளைபொருட்களை அரசனுக்கு வரியாகச் செலுத்திவந்தார்கள். வரிகளைக் குடும்பவரியாக இவ்வளவு என்று குறிப்பிடப்பட்டிருந்ததுமன்றி, வசூலிக்கும் முறையில் கொடுமைகள் ஏற்படாமலும் பாதுகாக்கப்பட்டு வந்தது. ஆனால் பிரிட்டிஷார் இப்போது நிலங்களில் விளையும் பொருட்களுக்குப் பதிலாக ரொக்கப்பணம் கேட்டார்கள். மேலும் சிங்களவரை அதிகமாகக் கொடுமைப்படுத்தி வரிப்பளுவை அவர்கள்மேற் சுமத்தி அநீதியான முறையிலெங்கிலும் வரியை

வசூலிக்கத் தொடங்கினார்கள். இதன் பயனாய் வெகு சீக்கிரமே சிங்களவர் பிரிட்டிஷாரின் வரிமுறைகளை எதிர்த்துக் கலகம் விளைத்தனர். ஓர் இடத்து வரிகளை ஏலத்துக்கு விடுவர். வரிவசூலிக்கும் அதிகாரியே ஏலத்தை எடுத்து அதிக இலாபம் சம்பாதிப்பான். வரிகொடுக்கத் தவறிய குடிமக்களின்மீது நீதிமன்றத்தில் வழக்குத் தொடுப்பான். நியாயம் வழங்குபவனும் அவ்வதிகாரியாகவேயிருப்பான். இங்ஙனமாக ஒருதலைப் பட்சமான நீதி வழங்கப்பட்டது. மற்றும் வரிவசூலிக்கும் கீழ்அதிகாரிகளும் மிகக் கொடூரமான வழிகளில் வரிகளை எப்படியாவது வசூலிக்கப் பார்த்தனர். உண்மையைக் கவனிக்குமிடத்துப் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக்கொம்பெனியார் கரையோர மாகாணங்களை டச்சுக்காரரிடமிருந்து கைப்பற்றுவதற்கான செலவை இலங்கையில் முத்துக் குளித்தல் வழியாக ஈடுசெய்ததுமன்றி மேற்கொண்டும் இலாபம் சம்பாதித்துக்கொண்டார்கள் என்றே சொல்லவேண்டும்.

இக்காரணங்களினால் நாட்டுமக்கள் அதிருப்தியடைந்து குழப்பங்களை உண்டாக்கினர். குழப்ப நிலையைச் சமாளித்துச் சிபார்சு செய்யும்படி **டி. மியூரன்** (De Meuron) என்பானின் தலைமையில் ஒரு விசாரணைக் கொமிஷன் இங்கிலாந்திலிருந்து அனுப்பி வைக்கப்பட்டது. சென்னை அரசாங்கம் கையாண்டுவந்த வரிவசூல் முறைகள் தவிர்க்கப்பட்டு டச்சுக்காரரின் பரிபாலனத்தின்கீழிருந்த வரிமுறை சிபார்சு செய்யப்பட்டது. இதையொட்டி 1798-ம் ஆண்டின் இறுதியில் **பிரெடெரிக் நோர்த்** இலங்கைக்குக் கவர்னராக அனுப்பப்பட்டார். அவர் குழப்பங்களை அடக்கி விசாரணைக் கொமிஷனின் வரிசம்பந்தமான சிபார்சுகளை அமுல் நடத்துவதாகக்கூறி நாட்டில் சமாதானத்தை நிறுவினார்.

## பிரெடரிக் நோர்த் (Frederick North) 1798—1805

நோர்த்பிரபு இலங்கைக்குக் கவர்னராக வந்தபோது இலங்கையில் இரட்டை ஆட்சிநிலவியது-அதாவது பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கொம்பெனியாரது சென்னை அரசாங்



கம் இலங்கையில் தற்காலிகமாகப் பரிபாலனம் செய்து வந்தது என்று முன்பு கூறினோம். ஐரோப்பாவிலே பிரிட்டிஷாருக்கும் பிரெஞ்சுக்காரருக்கும் நடந்த யுத்தம் இன்னமும் முற்றுப்பெறாததால், பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்கென ஓர் கவர்னரை அனுப்ப உத்தேசித்து நோர்த் பிரபுவை அனுப்பிவைத்தது. இவர் கவர்னராக நியமிக்கப்பட்டாலும் சென்னையிலிருக்கும் பிரிட்டிஷ்கிழக்கிந்தியக் கொம்பெனியாரின் கட்டளைகளுக்கு அமைந்தே இலங்கையில் காரியங்கள் செய்யவேண்டியிருந்தது. இத்தகைய இருவிதமான பரிபாலனத்தையே **இரட்டை ஆட்சி** என அழைக்கிறோம்.

இரட்டை ஆட்சி முறையின்கீழ் நோர்த் பிரபு இலங்கைக்கு முதல் கவர்னராக வந்தபொழுது பரிபாலன விஷயமாகப் பற்பல சீர்திருத்தங்களைப் புகுத்த விரும்பினார். நல்ல நோக்கத்துடனும், நேர்மைத்திறனுடனும், நோர்த் இச்சீர்த்திருத்தங்களைச் செய்ய விரும்பினாலும் சென்னை அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகள் அவைகளுக்கு எதிராயிருந்து, அடிக்கடி தொந்தரவு செய்துகொண்டேயிருந்தார்கள். சுயநல மனப்பான்மையும், இலஞ்ச ஊழல்களுமுடைய சென்னையைச் சேர்ந்த சிவில் சேவிஸ் உத்தியோகஸ்தர்களை விசாரணைசெய்து பதவிகளினின்றும் நீக்கினார். இலங்கைப் பரிபாலனத்திற்கெனப் பிரத்தியேகமான **சிவில்சேவிஸ்** ஒன்றை ஏற்படுத்தினார். இலங்கையின் பல பகுதிகளிலும் வரிகள் வசூலிக்கப்பட்டுக் கிழக்கிந்தியக் கொம்பெனியாருக்குக் காலாகாலத்தில் வரிப்பணம் போய்ச் சேர்வதற்கு ஏற்பாடு செய்தனர்.

**நோர்த்** பிரபு சிவில், கிறிமினல் வழக்குகளின் நீதிபரிபாலன சம்பந்தமாகவும் பல சீர்திருத்தங்களைச் செய்தார். பிரிட்டிஷார் இலங்கைக்கு வந்தபோது நீதிமன்றங்களில் வீற்றிருந்த டச்சு நீதிபதிகள் நீதிபரிபாலன விஷயத்தில் பிரிட்டிஷாருடன் ஒத்துழைக்க மறுத்து விட்டனர். மேலும் அக்காலத்தில் அனுஷ்டிப்பில் இருந்துவந்ததும் டச்சுக்காரராற் புகுத்தப்பட்டதுமான ரோமன்

டச்சுச் சட்டம் பிரிட்டிஷாருக்கு விளங்கவில்லை. அதே சமயம் இலங்கை வாசிகளான சிங்களவரதும்-தமிழரதும் பழக்க வழக்கங்கள், தொன்றுதொட்டு வருகின்ற நாட்டு வழமைகள் யாவும் பிரிட்டிஷாருக்குப் புதினங்களாயிருந்தன. எனவே நீதிவழங்குவதில் அதிசிரமம் ஏற்பட்டது. சிலசமயம் தவறுகளும் நேரிட்டன. இக்குறையை நிவிர்த்திக்கும் பொருட்டு எட்மன் கரிங்டன் (Edmond Carrington) என்ற தலைசிறந்த நீதிபதியைக் கல்கத்தாவிலிருந்து தருவித்து டச்சுக்காரரின் சட்டமுறைகளை ஆராய்ந்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார். இச் சீர்திருத்தங்களையடுத்து 1801-ம் ஆண்டில் **சுப்பிரீம்கோடு** என்ற உயர்தர நீதிமன்றமும், 1802.ம் ஆண்டில் **மாகாணக் கோடு**களும் நிறுவப்பட்டமையோடு **சமாதான நீதிபதிகளும்** இலங்கையில் நியமிக்கப்பட்டனர். அரசாங்க மசோதாக்களை உண்டாக்கவும், அரசாங்கக் குற்றவாளிகள்மீது வழக்குத் தொடரவும், பொதுவாக அரசாங்கத்துக்குச் சட்ட சம்பந்தமான ஆலோசனை கூறவும் **அட்வகேற் பிஸ்கால்** (Advocate Fiscal)எனப்பட்ட அதிகாரியும் நியமிக்கப்பட்டார்.

நோர்த் பிரபுவின் மற்றொரு சீர்திருத்தம் நிலம் சம்பந்தமானதாகும். நிலமானியச் சேவைமுறையை இந்நாட்டு மக்கள் விரும்பாமையால் அம்முறையை நீக்கி நெற்பயிர் விளைவிப்போருக்கு நிலத்தைச் சொந்தமாக்கி விளைவை அதிகரிக்கச் செய்தால் கொம்பெனியாருக்கு மிகுந்த வரிப்பணம் கிடைக்கும் என்று கருதினர். மேலும் இராசகாரிய முறையில் குடிமக்கள் செய்து கொடுக்குஞ் சேவைகளைவிடக் கைமேற் பணங்கொடுத்துப் பற்பல சேவைகளிலும் தொழிலாளர்களை அமர்த்துவது பயனுள்ளதாகும் என நம்பினர். இவற்றை மனதிற்கொண்டு 1802-ம் ஆண்டில் பிறப்பித்த உத்தரவால் நிலமானிய சேவைக்குப் பதிலாக நிலங்களிற் பயிர்களை விளைவிப்போர் விளைச்சலில் பத்திலொரு பாகம் முதல் நாலிலொரு பாகம்வரை பங்கு கொடுக்கவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டது. அரசாங்கத்திற் கடமை



யாற்றும் முதலிமார், தலைமைக்காரர் மற்றும் பெரிய உத்தியோகஸ்தருக்கெல்லாம் அவர்கள் சேவைகளுக்கு நிலம் அளிக்கப்படுவதற்குப் பதிலாகப் பணம் வேதனமாகக் கொடுக்கப்பட வேண்டுமென்று நோர்த் விரும்பினர். இதனால் அதிகாரிகள் மக்களை வாட்டி வதைத்துத் தானியங்களைப் பெறமுடியாமற் போனதுமன்றி அதிகாரிகளுடைய செல்வாக்கும் குறைந்துபோயிற்று.

நிலசம்பந்தமான சீர்திருத்தம் கோரிய பயனைக் கொடுக்கவில்லை. அரசாங்க சேவைசெய்த தொழிலாளருக்கு அதிக பணம் வேதனமாகக் கொடுக்க நேரிட்டது. அரசாங்க வருமானமும் அதிகரிக்கவில்லை. அக்காலத்தில் பண்டமாற்று முறையே பெரும்பாலும் வழக்கத்திலிருந்ததால் குடிமக்கள் ரொக்கப் பணமாக அரசாங்கத்துக்கு வரிகொடுக்க இயலாதுபோயிற்று. பற்றுக்குறைக்கு வரிப்பளுவும் அதிகமாயிருந்தது.

இச்சீர்திருத்தங்களுடன் நோர்த்பிரபு கல்வி விஷயமாகவும், வைத்திய சம்பந்தமாகவும் செய்த சீர்திருத்தங்கள் பாராட்டுதற்குரியன. கல்விப் பகுதி, வைத்தியப் பகுதி, தபாற் பகுதி, அளவைப் பகுதி (Survey Dept.), பொது வேலைப் பகுதி (P. W. D.) போன்றவை எல்லாம் நோர்த்பிரபு பரிபாலனகாலத்தில் ஏற்பட்டவையாகும்.

### நோர்த் பிரபுவும் கண்டிப் படையெடுப்பும்

கவர்னர் நோர்த் கண்டி இராச்சியத்துடன் கொண்டிருந்த தொடர்பு அவ்வளவு மெச்சத்தக்கதல்ல. வியாபாரத்தை இலங்கை முழுமையும் விருத்திசெய்து பொருளீட்டவேண்டுமென்பது பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கொம்பெனியாரின் கருத்தாகும். அக்கருத்தை நிறைவேற்றுவதற்குக் கடமைப்பட்ட நோர்த் கண்டி இராச்சியவெல்லைகளில் விதிக்கப்பட்ட வரி பிரிட்டிஷாரின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடங்கலாயிருப்பதை உணர்ந்தார். மேலும் கண்டியரசன் தூண்டுதலினல் பிரிட்டிஷாரின்

பரிபாலனத்திலிருந்த கீழ்நாட்டு மக்கள் அடிக்கடி கலவரஞ் செய்துகொண்டு வியாபார அபிவிருத்திக்கு முட்டுக்கட்டையாயிருந்தார்கள். இக்காரணங்களன்றிக் கண்டி இராச்சியமானது ஓர் சுதந்திர நாடாக விளங்கிப் பிரிட்டிஷார் ஆட்சியின்கீழிருந்த கொழும்புக்கும் திரிகோணமலைக்கும் இடைப்பட்ட பகுதியில் அமைந்திருந்ததானது பிரிட்டிஷாருக்கும் மனக்கொதிப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது. இக்காரணங்களால் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றியோ அல்லது அரசனுடன் உடன்படிக்கை செய்துகொண்டோ ஆகவேண்டுமென்பதை நோர்த் உணர்ந்தார்.

இதுகாலையில் கண்டி இராச்சிய நிலைமையும் மிகப் பெருமைப்படத்தக்கதல்ல. ஏனெனில் கண்டியரசனாகிய **ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன்** தென்னிந்தியாவிலிருந்து வந்த நாயக்கர் வம்சத்தவருக்குத் தனது அரசசபையில் ஆதரவும் அனுசரணையுங் காட்டிவந்தானேயன்றிச் சிங்களப் பிரதானிகளைக் கிஞ்சித்தும் சட்டைபண்ணவில்லை. இதனால் ஸ்ரீவிக்கிரமன் பிரதானிகளது பகைக்கு ஆளாயிருந்தான். பிரதான அதிகாரராயிருந்த **பிலிமத்தலாவை** என்பவன் அரசனைக் கவிழ்த்துத் தானே அப்பதவியைப் பெறுவதற்கு இரகசியத் திட்டமிட்டிருந்தான். "ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்குமாம் கொக்கு" என்பதுபோலப் பிரிட்டிஷாரைக் கண்டியரசனுக்கு விரோதமாகக் கிளப்புவதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தான். பிலிமத்தலாவை எதிர்பார்த்திருந்த சந்தர்ப்பம் 1797-ம் ஆண்டு வந்துற்றது. பிரிட்டிஷாருடைய கரையோர மாகாணங்களிலிருந்து கண்டியரசனது மலைநாட்டு வியாபாரத்துக்காகச் சென்ற சில முஸ்லீம்களை யாரோ சூறையாடி இம்சித்துவிட்டனர். தனது பரிபாலனத்தின் கீழுள்ள குடிமக்களுக்கு இன்னல் செய்தவர் கண்டியரசனுடைய தூண்டுதலாற்றான் செய்திருக்க வேண்டுமெனக் கருதிய நோர்த்பிரபு அரசனிடம் நஷ்டஈடு கோரினர். இந்த அசம்பாவிதமான காரியத்துக்கு எவ்விதமும் சம்பந்தப்படாத கண்டியரசன் ஒருவேளை பிரதானிகள் தனக்கு எதிராகச் செய்த சூழ்ச்சிதானோ என்னவோ என்றெண்ணி நஷ்டஈடு கொடுக்க மறுத்துவிட்டான். உண்மையில் இது பிலிமத்தலாவை பிரிட்டிஷாருக்கும் கண்டியரசனுக்குமிடையே குரோதத்தை வளர்க்கச்செய்த சதித்திட்டமாகும். அவனது சூழ்ச்சியில் அகப்பட்ட நோர்த் பிரபு 1803-ம் ஆண்டில் கண்டியரசன்மீது யுத்தப் பிரகடனஞ் செய்தார்.



'ஆழமறியாது காலை விடுவது' போன்று நோர்த் ஆத்திரப்பட்டு அவசர புத்தியினால் இக்காரியத்தில் இறங்கினாரென்றால் மிகையாகாது. தன்வலி, மாற்றான்வலி ஆகிய இரண்டையுமறிந்து ஒரு அரசன் மற்றொரு அரசனுடன் பொருதல் தகும். ஆனால் மலைநாடான கண்டி இராச்சியத்தை அடைவதற்குமுன் பல குன்றுகளையும் அடவிகளையும் தாண்டிச் செல்லவேண்டும். இவைகளுக்கிடையில் நின்றுகொண்டு எதிரியை முன்னால் விடுத்துத் தாம் பின்னால் போய்த் தாக்கும் **கொரில்லாச் சண்டை** முறையைக் கையாளுவதிற் கண்டிக் குடியானவர்கள் பேர்பெற்றவர்களாகும். மேலும் கண்டி நகரையடைவதற்குச் சரியான நேர்ப்பாதைகளின்றிக் காடுகளின் வழியாகச் செல்லும் சுற்றுப் பயங்கரப் பாதைகளில் பிரிட்டிஷ் துருப்புக்கள் செல்லவேண்டும். இஃதன்றிக் கண்டி இராச்சியத்தில் மழைபெய்யத் தொடங்கிவிட்டால் ஆறுகள் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடித் துறைகளைக் கடக்க இயலாதாகிவிடும். இதன் நிமித்தம் வெளியிலிருந்து உணவு, படை போன்ற உதவிகள் கண்டிக்குள்ளிருக்கும் துருப்புக்களுக்கு வந்துசேர்வது துர்லபம். இவ்வளவு இன்னல்களுக்கிடையில் கண்டிமீது படையெடுத்த நோர்த் பிரபுவிடம் போதுமான சேனைபலம் கைவசமிருக்கவில்லை. ஐரோப்பாவிலும், இந்தியாவிலும் பிரிட்டிஷார் யுத்தங்களில் ஈடுபட்டிருந்ததால் இலங்கைக்குப் பிரிட்டிஷ் துருப்புக்கள் அனுப்பிவைப்பது சாத்தியமில்லாது போயிற்று.

பிரிட்டிஷ் படைகள் இரு பிரிவுகளாகப் பிரிந்து **கல்கெதரை, மாத்தளை** ஆகிய இருவழிகள் மூலமும் **கட்டுகஸ்தோட்டையை** அடைந்தன. அவைகளின் வரவை

அறிந்த ஸ்ரீவிக்கிரம இராசசிங்கன் கண்டியை விட்டு உள்நாட்டுக்குள் போய்விட்டான். கண்டியரசனைக் காணாத பிரிட்டிஷ் படைகள் தடுமாறின. இதற்கிடையில் மலேரியா என்னுங் காய்ச்சலும் அவர்களைப் பீடித்துக் கொண்டது. தென்மேல் பருவப்பெயர்ச்சிக்காற்றால் கண்டி நாட்டில் மழையும் ஆரம்பித்து வெள்ளப் பெருக்கெடுத்தது. வெளியிலிருந்த பிரிட்டிஷ் படைகளுக்கு உதவி கிடைக்கவில்லை. எனவே பஞ்சம், பசி, நோய் என்பவற்றால் பல துருப்புக்கள் மடிந்தன. கண்டியரசனின் படைகள் மீதியாயிருந்த பிரிட்டிஷ் படைகளைச் சுற்றி வளைத்துத் தம்மிடம் சரண்புகச் செய்தன.

கண்டியரசனுடன் பிரிட்டிஷார் செய்த முதற்போர் இங்ஙனம் தோல்வியுற்றது. இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியின்கீழ்க் கொண்டுவர வேண்டுமென்ற நோர்த் பிரபுவின் ஆசை இவ்வாறாகப் பரிதாபநிலை எய்தியது. கண்டியைக் கைப்பற்ற முடியாது என்பதையுணர்ந்த பிரிட்டிஷார் 1805-ம் ஆண்டு அந்த இராச்சியத்துடன் சமாதான உடன்படிக்கை செய்து கொண்டனர். இதனிடையில் 1802-ம் ஆண்டு இலங்கை முடிக்குரிய குடியேற்ற நாடாக (Crown Colony) பிரகடனப் படுத்தப்பட்டது. இலங்கை இப்போது பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நேரடியான பரிபாலனத்தின்கீழ்க் கொணரப்பட்டது. 1805-ம் ஆண்டு கவர்னர் நோர்த் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டார். அவருக்குப் பதிலாகச் **சேர் தோமஸ் மெயிற்லண்ட்** (Sir Thomas Maitland) இலங்கைத் தேசாதிபதியாக நியமிக்கப் பட்டார்.

## சேர் தோமஸ் மெயிற்லண்ட் (1805—1812)

பிரிட்டிஷ் ஆதிக்கத்தை இலங்கையில் இராணுவ பலத்தால் மட்டும் நிலைநாட்ட முடியாது. தங்களுக்கு விரோதமான சக்திகளின் பலத்தையும், செல்வாக்கையும் குறைத்து இந்நாட்டுச் சுதேசிகளின் ஆதரவை அபரிமிதமாகப் பெற்றால்தான் தம் ஆட்சி நிலைநிற்கும் என்பதை உணர்ந்து அதற்குரிய வேலைகளில் முழுமூச்சுடன்



இறங்கிப் பரிபாலனஞ்செய்த தேசாதிபதி மெயிற்லண்ட் ஆகும். சுதேசிகளின் இன்பத்தையும், பொருளாதாரத்தையும் அதிகரிப்பதின் அடிப்படையிலே இந்நாட்டின் செல்வமாளிகை கட்டவேண்டும். இக்குறிக்கோளை மனதிற்கொண்டே முடிக்குரிய குடியேற்றநாட்டுப் பரிபாலனம் இயங்கவேண்டும் என்னும் இலட்சியத்தைக் கடைப்பிடித்தவர் இவராவர். திடசித்தமும், இடையறா முயற்சியும், நேர்மைத்திறனும் உடையவர். நோர்த்பிரபு கவர்னராயிருந்த காலத்தில் நாட்டில் நிலவியிருந்த பரிபாலனச் சீர்கேட்டைச் செம்மைப்படுத்த எண்ணினார். ஊர் ஊராய்ச்சென்று மாகாணங்களில் பலநாள் முகாமிட்டு மக்களின் குறைகளையும், நிர்வாகத்தில் மலிந்துகிடந்த ஊழல்களையும் நேரடியாகத் தெரிந்துகொண்டார். சிவில் சேவிஸ் அதிகாரிகள் தங்கள் கடமையினின்றும் தவறி நேர்மையின்றி ஊழியஞ்செய்து வந்ததையும் அவர்கள் போதிய வேதனம் பெறாததால் லஞ்ச ஊழல்களிற் திளைத்துப்போயிருந்ததையும் அறிந்தார். அன்றியும் நோர்த்பிரபு கையாண்ட நிலவரிக்கொள்கையினாற் கொம்பெனியாரின் வருவாய் மிகக் குறைந்துபோயிருந்ததையும் உணர்ந்தார்.

கண்டி இராச்சியத்தைக் கைப்பற்றவேண்டுமென்ற நோர்த்பிரபுவின் மூடக்கொள்கையை விடுத்துப் பிரிட்டிஷ் பரிபாலனத்திலிருந்த பகுதிகளிலுள்ள குறைபாடுகளைச் சீராக்கத் தீவிரமாயுழைத்தார். கிழக்கிந்தியக் கொம்பெனியாரின் வருமானத்தைப் பெருக்குவதற்கு முன்பு கையாளப்பட்ட நிலமானிய முறையே தகுதியானதெனக் கண்டு அம்முறையை மீண்டும் புகுத்தினார். நேர்மையும், திறமையுமற்ற சிவில் சேவிஸ் அதிகாரிகளைப் பதவியினின்றும் நீக்கினார். கடமை தவறிய உத்தியோகஸ்தர்களுக்குச் சிறிதேனும் அவர் தயவு தாட்சண்யங்காட்டியதில்லை. கண்டிப் பிரதானிகளைப்போல் கரையோர மாகாணங்களிலும் மிகச் செல்வாக்குற்று விளங்கிய பிரதானிகள், முதலிமார் ஆகியவர்களின் அதிகாரத்தையுஞ் செல்வாக்கையுங் குறைக்க வழிதேடினார். இந்த அதிகாரிகள் நியாயம் வழங்குவதிலும், வரி வசூலிப்பதி

லும் மிகப் பட்சபாதகமாய் நடந்து குடிமக்களைத் துன்புறுத்தி வந்தார்கள். இன்னவர் போன்றவர்களுடைய நெருக்கடியினின்றும் மக்களை விடுவிப்பதற்காகச் சிவில் சேவிஸ் உத்தியோகஸ்தருக்கு இவ்வதிகாரங்களை வழங்க எண்ணினர்.

சிவில்சேவிஸ் சம்பந்தமாகத் தேசாதிபதி மெயிற்லண்ட் புகுத்திய சீர்திருத்தங்கள் போற்றத் தக்கவையாகும். சிவில்சேவிஸ் உத்தியோக வகுப்பின் அந்தஸ்தைப் பன்மடங்கு உயர்த்தினர். திறமையும் நேர்மையுங் கொண்டவர்களுக்குச் சிவில்சேவிஸில் உத்தியோகம் கொடுத்தார். இவர்கள் குடிமக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்துக்கொண்டு, தம் உத்தியோககால முழுமையும் இலங்கையிலேயே செலவழிக்கவேண்டும். நாட்டு நிலைமையை நன்கறிந்து சேவைசெய்ய வேண்டுமென்பதற்காகச் சிவில்சேவிஸ் அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்தியதுமன்றி வேலையிலிருந்து ஒய்வுபெறும்காலத்தில் பென்ஷன் முதலிய சலுகைகளுக்கும் அவர்கள் உரித்தாளியாகும்படி செய்தார். இதுமட்டுமன்றி இதுகாறும் சிவில்சேவிஸ் அதிகாரிகள் தம் வருமானத்தைப் பெருக்குவதற்காக வியாபாரம் போன்ற தொழில்களையும் பிரத்தியேகமாகத் தமது உத்தியோக அலுவல்களுடன் செய்துவந்தனர். சில சமயங்களில் ஈடுபடத் தகாத காரியங்களிலும் இறங்கித் தம்மதிப்பை இழந்துகொண்டிருந்தனர். இதையுணர்ந்த மெயிற்லண்ட் கவர்னர் பிற துறைகளில் சிவில்சேவிஸ் வகுப்பார் ஈடுபடுதலால் தங்கள் உத்தியோக அலுவல்களிற் போதிய கவனமின்றிப் பரிபாலன விஷயங்களில் பல குறைபாடுகளுக்கு இடம்வைத்திருந்தனர். எனவே சிவில்சேவிஸ் அதிகாரிகள் தங்கள் முழுநேரத்தையும், கவனத்தையும் தம் உத்தியோகத்திற் செலவழிப்பான்வேண்டி வேறு தொழில்களில் அவர்கள் இறங்கக்கூடாது என்று தடை விதித்தனர். மேலும் இவ்வதிகாரிகள் அடிக்கடி தம் பரிபாலனத்திலுள்ள பகுதிகளிற் சுற்றுப் பிரயாணஞ்செய்து குடிசனங்களின் கஷ்ட நஷ்டங்களைக் கேட்டறிந்து



நிவிர்த்திப்பதற்கான வழிவகைகளை ஆராயவேண்டுமென்றும் விதித்தார். இத்துடனில்லாது சிவில்சேவிஸில் மூன்று தரங்களை ஏற்படுத்தித் திறமைக்கும் நேர்மைக்குத் தகுந்தபடி பதவியுயர்வுகளையளித்தார். இறுதியாகச் சிங்களம், தமிழ் ஆகிய நாட்டுமொழிகளைச் சிவில்சேவிஸ் அதிகாரிகள் கற்று நாட்டுமக்கக்ளுக்கு யாதொருதடையின்றி நேரடித் தொடர்பு வைத்துக்கொள்ளவும் தூண்டினர். சிங்கள தமிழ் மொழிகளில் பரீட்சையில் தேர்ச்சிபெற்ற உத்தியோகஸ்தருக்குச் சன்மானங்களும் வழங்கி அவர்களை ஊக்குவித்தார்.

இந்தியாவில் சென்னை மாகாணத்தில் கிழக்கிந்தியக் கொம்பெனியார் எவ்வாறு கலேக்டர்களை ஏற்படுத்தி ஜில்லாக்களைப் (District) பரிபாலனஞ் செய்து வந்தார்களோ அதேபோன்று இலங்கையிலுள்ள பிரிட்டிஷாருக்குச் சொந்தமான ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு கலேக்டர் நியமிக்கப்பட்டனர். மாகாணத்திலுள்ள சிறிய சிவில், கிறிமினல் வழக்குகளில் நியாயம்வழங்கல், வரிப்பணம் பிரித்தல் போன்ற வேலைகளைக் கலெக்டர்கள் செய்துவந்தனர். வியாபாரம், கமத்தொழில், சுகாதாரம் ஆகிய விஷயங்கள் சம்பந்தமாக மக்களுக்கு ஏற்பட்டுள்ள குறைபாடுகளைக் கவனித்து அவ்வப்போது ஊர்களில் சுற்றுப்பிரயாணஞ் செய்து அறிக்கைகள் தயாரித்து அனுப்புதலும் கலெக்டர் கடமைகளாகும்.

மாகாணத்துப் பிரதானிகள், முதலிமார், விதானைகள் ஆகியவர்களின் செல்வாக்கையும் அதிகாரத்தையும் குறைக்க மெயிற்லண்ட் பலவழிகளைக் கைக்கொண்டார். அக்காலத்துக் குடிமக்களின் வாழ்க்கை விபரங்களைப் பொறித்துள்ள தோம்புகளை (Thombos) பிரதானிகளே வைத்திருந்தனர். ஆனல் அவை இப்போது பாடசாலை ஆசிரியர்களிடம் ஒப்புவிக்கப்பட்டன. இதுபரியந்தம் முதலிமாரால் செய்யப்பட்டுவந்த நீதிபரிபாலனம் இப்போது நீதிவழங்குதற்கெனப் பிரத்தியேகமாய் நியமிக்கப்பட்ட நியாயாதிபதிகளிடம் ஒப்படைக்கப்பட்

டது. இதுவரை உயர்ந்த குடும்பங்கள் எனப்பட்ட நிலச்சுவான்தார்களிலிருந்தே முதலியார்மார் நியமிக்கப் பட்டனர். இப்போது வேறு பல குடும்பங்களிலிருந்தும் முதலியார்மார் தெரிந்தெடுக்கப் பட்டனர். இஃதன்றி முதலியார்மாரின் மேற்பார்வையில் விதானைமார் ஊர்ப் பாதுகாப்புச் சேவையைச் செய்துவந்தனர். ஆனால் இப்போது சமாதான நீதிவான்களின் மேற்பார்வையில் ஊர்ப்பாதுகாப்பு விதானைமாரால் செய்யப்பட்டது.

சட்டவல்லுநரான **சேர் அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன்** (Sir Alexander Johnston) மெயிற்லண்ட் காலத்தில் இலங்கைச் சுப்ரீம் கோட்டுக்குப் பிரதான நீதிபதியாக இருந்தார். இவர் மெயிற்லண்டுக்குப் பல விஷயங்களிலும் ஆலோசனை கூறி அவரின் பரிபாலன வெற்றிக்கு உறுதுணை செய்தார். 1810-ம் ஆண்டு ஜூரிமார்மூலம் விசாரணை செய்யும் முறையும் இந்நாட்டில் புகுத்தப்பட்டது. நீதித்துறை இவ்வாறிருக்க மெயிற்லண்ட் காலத்தில் நாட்டினது நிதிநிலை பற்றியும் ஓர் கணக்குப் பரிசோதகரால் பரிசீலனை செய்யப்பட்டு வந்தது. அதன்பயனாக நாட்டின் வருமானத்தை எவ்வழிகளிற் பெருக்கலாம் என்றும், செலவினங்களை எங்ஙனஞ் சுருக்கலாமென்றும் வழிமுறைகள் தெரியலாயின.

இங்ஙனமாகக் கவர்னர் மெயிற்லண்டின் பரிபாலனம் மிகச் சிறந்ததாகவும், முடிக்குரிய குடியேற்ற நாடுகளின் இலட்சியங்களைப் பூர்த்தி செய்வதாகவும் இலங்கையில் அமைந்திருந்தது எனலாம்.

## சர் ரொபேட் பிரௌன்றிக் 1812—1820.
### Sir Robert Brownrig

பிரௌன்றிக் இலங்கைக் கவர்னராக வந்தகாலத்தில் கண்டி இராச்சியதானியில் அரசனுக்கும் பிரதானிகளுக்குமிடையே தப்பபிப்பிராயங்களும், மனக்கசப்புகளும் ஏற்பட்டிருந்தன. கண்டி அரசனுடன் நட்புரிமை பாராட்டும்படி மேலதிகாரிகளால் ஆலோசனை கொடுக்கப்பட்டே பிரௌன்றிக் இங்குவந்தார். கண்டி அரசனு



களும் ஏற்பட்டன. கண்டியரசனுடன் நட்புரிமை பாராட்டும்படி மேலதிகாரிகளால் ஆலோசனை கொடுக்கப்பட்டே பிரௌன்றிக் இங்கு வந்தார். கண்டி அரசனுகிய ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனுடன் ஒரு வர்த்தக உடன்படிக்கையும் செய்துகொள்ள வேண்டுமென்பது அவரது எண்ணமாயிருந்தது. இவ்வெண்ணம் நிறைவேறாததால் கண்டி இராச்சிய உள்நாட்டு நிலைமையைப் பயன்படுத்திக்கொண்டு பிரௌன்றிக் கண்டிமீது படையெடுத்தார். நோர்த் பிரபுவால் சாதிக்கமுடியாத காரியத்தைப் பிரௌன்றிக் சாதித்து வெற்றிபூண்டார் என்றே சொல்லவேண்டும்.

ஸ்ரீ விக்கிரம இராசசிங்கன் தனது பிரதானிகளின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் குறைக்கவேண்டும்; ஏனெனில் பிரிட்டிஷாரைவிட இவர்களே தனக்கு முதல் சத்துராதிகளாவர் என்பதைச் சீக்கிரமே கண்டுகொண்டான். தனது சொந்தக்காரரான நாயக்கருக்கு அரசசபையிலும், பரிபாலனத்திலும் பெரிய பொறுப்புக்களையும் பதவிகளையும் அளித்தான். பிரதானிகளின் பரிபாலனத்திலுள்ள பகுதிகளை வெவ்வேறாகப் பிரித்து எல்லைகளையும் குறுக்கினன். அவர்களிற் கடமைதவறியவரையும் கொடுமை புரிந்தவரையும் பதவிகளினின்றும் நீக்கினன். மிகப்பெரிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கே பெரிய பதவிகளைக் கொடுத்தான். தனது முதல் அதிகாராயிருந்த பிலிமத்தலாவை என்பவன் தனது உயிருக்குச் சதிசெய்தான் என்று குற்றஞ்சாட்டி, 1802-ம் ஆண்டில் அவனைச் சிரச்சேதம் செய்தான். இவனுக்குப் பதிலாக, முதல் அதிகாராக **எகலப்பொலை** என்பவனை அரசன் நியமித்தான். உதட்டில் உறவும் உள்ளத்திற் கள்ளமும் உடையவனாகிய எகலப்பொலை அரசன் பரிபாலனத்தில் அதிருப்தி கொண்டவனாய்க் கண்டியைப் பிரிட்டிஷார் கையில் ஒப்படைத்தாலும் பரவாயில்லை, அரசன் உயிரைப் போக்கிவிட்டால் போதுமானது எனும் கீழ்க்குணமுடையவனாய் அரசனுக்கு எதிராகக் கிளம்பிச் சதிசெய்தான். பிரதானிகளின் குடும்பங்கள் ஆட்டுமந்தைபோல் சிதறடிக்கப்பட்டுச் சின்னபின்னமாயின.

தனக்கு விரோதமாகக் குழப்பம் விளைவித்தவரைப் பழி வாங்கத் தீர்மானித்து ஸ்ரீ விக்கிரமன் பௌத்த பிக்குகளைக்கூடக் கொலைசெய்யப் பின்வாங்கினானில்லை. இதற்கிடையில் பிரிட்டிஷாரின் பிரசைகளான வியாபாரிகள் சிலரை உளவுகாரரென எண்ணிக் கண்டியரசனது ஆட்கள் பிடித்துக் கை, கால், மூக்கு, செவி முதலியவற்றை வெட்டி அங்கவீனப்படுத்தினார்கள். அன்றியும் அவர்கள் பிரிட்டிஷாரின் பரிபாலனத்திலிருந்த ஓர் கிராமத்துக்குந் தீ வைத்துவிட்டனர். தருணம்பார்த்திருந்த பிரௌன்றிக் காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமென்பதற்காகக் கண்டிநகர்மீது படையெடுத்தார். தனது பிரதானிகளால் கைவிடப்பட்டு அவலநிலையிலிருந்த கண்டி அரசன் தலைநகரை விட்டுவெளியேறி ஓடினானும், கடைசியில் பிரிட்டிஷார் கையில் சிக்கினான். பிரிட்டிஷார் கண்டி அரசனைச் சிறைப்படுத்தித் தேசப் பிரஷ்டம் செய்தனர்.

1815-ம் ஆண்டு கண்டிப் பிரதானிகளின் சமாஜம் பிரிட்டிஷாரால் கூட்டப்பட்டு, இருசாராருக்குமிடையே சமரசம் ஏற்பட்டு ஓர் உடன்படிக்கையெழுத்தானது. இதற்குக் கண்டி உடன்படிக்கை(Kandyan Convention) என்றுபெயர். இதன்பிரகாரம் கண்டி இராச்சியத்துக்கு நாயக்கர் வம்சத்தவரை அரசனாக ஏற்றுக்கொள்வதில்லையென்றும், இங்கிலாந்து அரசனையே தம் அரசனாகக் கொள்வதென்றும் பிரதானிகள் ஒப்புக் கொண்டனர். பிரதானிகளின் உரிமை, அந்தஸ்து, அதிகாரம் ஆகியவற்றைப் பாதுகாக்கவும், பௌத்த மதத்தைப் பேணி வளர்க்கவும் பிரிட்டிஷார் சம்மதித்தனர். கண்டி இராச்சியத்துக்கும் பிரிட்டிஷார் மாகாணங்களுக்குமிடையேயிருந்த வியாபாரத் தடைகள் நீக்கப்பட்டுப் பிரிட்டிஷாருக்கு வியாபாரச் சலுகைகள் கொடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது. அன்றியும் பிரதானிகள் தத்தம் பகுதிகளில் அரசியல் பரிபாலனமும், நீதிபரிபாலனமும் செய்துவர அனுமதிக்கப்பட்டது. ஆனால் சிவில்சேவிஸ் அதிகாரிகளுக்கு இப்பிரதானிகள் கட்டுப்பட்டவராவர். இவ்வி உடன்படிக்கையினால் பயனடைந்தவர் பிரிட்டிஷாரே



ஏனெனில் அரசியல் அதிகாரமும் வர்த்தக உரிமையும் அவர்களது கைக்கு வந்தது மிகமுக்கியமான பயனாகவே கருதப்படவேண்டும்.

## கண்டிக் கலகம் 1818

பிரௌன்றிக் காலத்தில் ஏற்பட்ட மற்றொரு முக்கிய நிகழ்ச்சி கண்டி இராச்சிய மாகாணங்களில் பிரிட்டிஷாருக்கு விரோதமாக எழுந்த கலகமாகும். பிரிட்டிஷார் ஆட்சியைப் பிரதானிகளும், பௌத்தபிக்குகளும், பொதுமக்களும் வெறுத்ததே இக்கலகத்தின் ஆரம்பமாகும்.

முதலாவதாகப் பிரிட்டிஷ் அரசாங்கமுறை சிங்கள அரசரது பரிபாலனமுறைக்கு மாறுபட்டதாயிருந்தது. நிலமானிய முறையின்படி இலங்கையில் பிரதானிகள் சிற்றரசர்கள்போல் ஆட்சிசெய்துவந்தனர். அரசன் அவர்களுக்கு நிந்தகம் எனப்பட்ட நிலங்களை வழங்கினானேயன்றிச் சம்பளம் கொடுக்கவில்லை. தத்தம் கிராமங்களில் இப்பிரதானிகள் சர்வாதிகார ஆட்சி நடத்திவந்தனர். அக்காலை சாதிக்கட்டுப்பாடு வேரூன்றியிருந்தது. பிரதானிகள் போன்ற உயர்ந்த சாதியைச் சேர்ந்தவர்களுக்கு நீதிமன்றத்திலுங்கூடப் பட்சபாதகமான நியாயம் வழங்கப்பட்டுக் குற்றங்கள் கண்டவிடத்துக் குறைந்த தண்டனை அளிக்கப்பட்டுவந்தது. நிலமானிய முறை இவ்வாறாகப் பிரிட்டிஷாரின் பரிபாலனம் வியாபாரத்துறையில் நடக்கும் பண்டமாற்று வாழ்க்கை முறைச் சமுதாய அமைப்புக்கு ஏற்றதாயிருந்தது. உத்தியோகஸ்தருக்குச் சம்பளம் வழங்கப்பட்டது. மேலதிகாரிகளுக்குக் கீழுள்ளவர்கள் அடிபணிந்து அவர்கள் இட்ட கட்டளைகளைத் தவறாது நிறைவேற்ற வேண்டியவராவர். நீதிதலத்தில் உயர்வு தாழ்வு பேதமின்றி அனைவரும் சமானமாகக் கருதப்பட்டு நியாயம் வழங்கப்பட்டது. சாதி, இனவேறுபாடுகளைப் பிரிட்டிஷார் பாராட்டவில்லை. இன்னோரன்ன பிரிட்டிஷ் அரசாங்க அமைப்பைப் பிரதானிகள் வெறுத்தனர். பிரிட்டிஷ் சிவில்சேவிஸ் அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதலாலும், சாதித்தராதரம் கவனியாது நீதிவழங்கப்படுதலாலும் தம் அந்தஸ்து பாதிக்கப்

படுவதாகப் பிரதானிகள் கருதினர். அன்றியும் சிங்களக் குடிமக்களைப் போலன்றிப் பிரிட்டிஷ் சேனைவீரர் தமக்கு மரியாதை காண்பிக்காததும் பிரதானிகளுக்கு மிகுந்த மனவெறுப்பைக்கொடுத்தது. மேலும் கடவைகளை நீக்கி, யாதொரு தடையுமின்றி வியாபாரம் செய்யலாமெனினும் பிரிட்டிஷார் பிறப்பித்த உத்தரவானது பிரதானிகளுக்கு இதுகாலை கிடைத்துவந்த கடவைப்பணத்திலும் விழுக்காடேற்பட்டுப் பிரதானிகளின் பொருளாதாரத்தைக் குலைத்தது.

இரண்டாவதாகப் பௌத்த பிக்குகளின் அதிகாரத்தையும் செல்வாக்கையும் பிரிட்டிஷார் குறைத்தனர். கண்டியரசர்கள் பௌத்த விகாரைகளுக்குச் சென்று வணங்குவதும், திருவிழாக்களில் பங்குபற்றுவதும், பௌத்தகுருமாரை மிகுந்தமரியாதையாய் நடத்துவதும் வழக்கமாயிருந்தது. ஆனால் பிரிட்டிஷ் அதிகாரிகள் பழைய சம்பிரதாயத்தை அனுசரித்து ஒன்றுஞ் செய்யவில்லை. பிரதானிகளில் பலர் பௌத்த பிக்குகளது உறவினருமாவர். தங்களுக்குள்ள மரியாதைகளைப் பெறாத பிக்குகள் பிரிட்டிஷ் ஆட்சியை வெறுத்ததில் வியப்பொன்றுமில்லை.

மூன்றாவதாகக் கண்டிப் பொதுமக்கள் பிரிட்டிஷ் ஆட்சியை வெறுத்தனர். பொதுமக்கள் அந்நியரான பிரிட்டிஷாரின்கீழ் வாழ விரும்பவில்லை. நிலமானிய முறையிலும், பழமையான சம்பிரதாயங்களிலும் மிகப் பற்றுதலுடைய குடிமக்கள், பிரிட்டிஷாரின் நவீனபரிபாலனமுறையைச் சிறிதளவும் விரும்பவில்லை. மதவிஷயங்களிலும் மற்றும் சமூகச் சடங்குகளிலும் கண்டியரசர்களது பேராபிமானத்தைப் பெற்றுவந்த மக்கள் புதிதாய் வந்த பிரிட்டிஷாரிடமிருந்து தங்களுக்கு அவ்விதமான சலுகைகள் கிடைக்காது என்று நம்பினார்கள். முற்கூறிய காரணங்கள் இவ்வாறிருக்கக் கண்டிக் கலகத்துக்கு உடனடியான காரணங்களுமிருந்தன. முதன் முதலாவதாக வைத்ததே சட்டம் என்று தம்மிஷ்டம்போல் சொலைவிருந்துகொண்டு கண்டியரசனுக்கு அடங்காது இதுகா



றும் தம் பகுதிகளைப் பரிபாலனம் செய்துவந்தவர்களான **வெல்லச, விந்தனை** ஆகிய இடங்களிலிருந்த பிரதானிகள் பிரிட்டிஷாராட்சியை எதிர்த்து முதலாவது கலகம் செய்தார்கள். பிரிட்டிஷார் தம்விஷயங்களில் தலையிடுவதை அப்பிரதானிகள் விரும்பவில்லை. இரண்டாவதாக வெல்லச என்றவிடத்திலிருந்த முஸ்லீம்கள் சிங்களத்திசாவையின் கீழிருக்க விரும்பாது ஒரு முஸ்லீம் முகாந்திரத்தை நியமிக்கும்படி பிரிட்டிஷாரைக் கேட்டு அவ்வண்ணமே பெற்றுக்கொண்டனர். இதனால் தன் வருவாயையும் செல்வாக்கையும் இழந்தவனாகிய சிங்களத் திசாவை தருணம் பார்த்துக் கொண்டிருந்தான். கண்டி இராச்சியத்துக்குப் போலியான உரிமைபாராட்டிய ஒருவனுக்குப் பக்கபலமாயிருந்து பிரிட்டிஷாரை எதிர்க்கத் தயாராயிருந்தான்.

இக்காரணங்களால் 1818-ம் ஆண்டு ஊவாமாகாணத்தில் கலகம் உண்டாயிற்று. கண்டிச் சேனைவீரர்களுக்குக் கலகம் துவங்கிய இடமும் சீதோஷ்ணமும், "கொரில்லா"ப் போர்முறையும், இயற்கையாயமைந்த அரண்களும் வாவிகளும் சாதகமாயிருந்தன. என்றாலும் பிரிட்டிஷ் அதிகாரிகள் கலகத்தை அடக்குவதில் வெற்றிகண்டார்கள். கண்டிக் கலகம் தோல்வியுற்றதற்குப் பல காரணங்களுண்டு. கண்டிப் பிரதானிகளிடை ஒற்றுமை நிலவவில்லை. எதிரிகளின் தாக்குதலின்போதுகூட அவர்கள் ஒன்றுபடவில்லை. அதற்குமாறாக **நான்கு கோறளைப்** பிரதானியாயிருந்த **மொல்லிகொடை** போன்ற சிலபிரதானிகள் பிரிட்டிஷாருக்கு உறுதுணையாயிருந்து கலகக்காரரை அடக்குவதில் உதவிபுரிந்தனர். இரண்டாவதாகக் கண்டிக்கும் கொழும்புக்கும் போக்குவரத்துக்கள் தடைப்படாதிருந்ததால், பிரிட்டிஷார்பக்கம் வெளியுதவியும், உணவும், ஆயுதங்களும் வந்துசேருவதற்கு வசதிகளிருந்தன. மேலும் முக்கியமாக அந்நாளில் தலதா மாளிகை யார்வசமிருந்ததோ அவர்களே கண்டியை ஆளத்தகுதியானவர் என்றநம்பிக்கை கண்டிப்பொதுமக்களிடை வேரூன்றியிருந்தது. அதற்கொப்ப 1818-ம் ஆண்டில் பிரிட்டிஷார் தலதா மாளிகையைக் கைப்பற்றித் தம்வசம் வைத்திருந்ததால் அவர்களுக்கே நாட்டை

யாளும் அதிகாரமுண்டு என்று எண்ணப்பட்டுக் கலகக்காரரும் பின்வாங்கினர்.

கண்டிக் கலகத்தின் பயனாய்ச் சிங்களப் பிரதானிகளின் அதிகாரம் மேலும் குறைக்கப்பட்டது அவர்களுக்குப் பதிலாக அரசாங்க ஏஜேண்டுகள் (Government Agents) ஒவ்வொரு மகாணத்துக்கும் அதிபதியாக நியமிக்கப்பட்டனர். இலங்கை அனைத்தும் பிரிட்டிஷார் பரிபாலனத்தின்கீழ்க் கொண்டுவரப்பட்டது. இந்நாள்வரை அந்நியர் படையெடுப்புக்களுக்கு ஆளாகாமலிருந்த கண்டிஇராச்சியம் இப்போது பிரிட்டிஷாரால் கைப்பற்றப்பட்டது. கவர்னர் **பாண்ஸ்** (Barnes) (1820-1830) காலத்தில் பரிபாலன சௌகரியத்துக்காகப் பல ரோட்டுகள் போடப்பட்டன. பலதெருக்களும் அமைக்கப்பட்டன. கொழும்பு, திரிகோணமலை, மட்டக்களப்பு ஆகிய இடங்கள் கண்டிப் பிரதேசத்துடன் ரோட்டுகள் மூலமாக இணைக்கப்பட்டன. நிலமானிய முறை, பிரிட்டிஷார் வருகைக்குப்பின் கைவிடப்பட்டது. கலகம்நடந்த காலை கண்டிக் கிராமங்கள் தீக்கிரையாக்கப்பட்டுப் பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கப்பட்டிருந்தாலும் குடிமக்கள் நிலமானியமுறையை விடுத்துப் பிரிட்டிஷாரின் நவீன அரசியல் முறையைப் பின்பற்றியதால் நன்மையே அடைந்தார்கள் எனக்கூறவேண்டும். ரோட்டுக்கள் முக்கிய இடங்களில் போடப்பட்டதால் பிரிட்டிஷார் அதிகாரமும் இலங்கையில் பரவியதுமன்றி, நாட்டின் பல பாகங்களும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு கொள்ள ஏதுவாயிற்று.

### சுருக்கம்.

ஒல்லாந்தர் (டச்சுக்காரர்) ஆளுகையின்பின் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் நூற்றைம்பது வருடகாலப் பிரிட்டிஷ் பரிபாலனத்தின் முக்கியத்துவம்—முன்னிராத பலமாற்றங்கள், வாழ்க்கைத் தர உயர்வு—1796 முதல் 1837 வரை பிரிட்டிஷார் தம் ஆட்சியை இந்நாட்டில் ஸ்தாபிக்கவும் பலப்படுத்தவும் முயற்சித்தல்—1837 முதல் 1913 வரை பொருளாதார அபிவிருத்தியின் பொருட்டு தோட்டங்கள் திறக்கப்பட்டு முன்னேற்றம் பெறல்—1913 முதல் 1948 வரை சுதந்திர விருப்பு மக்கள் எழுச்சி, ஆதிக்கம் இலங்கையர் கைவரப் பெறல்—1795-ம் ஆண்டுமுதல் இலங்கையின் பாகங்கள் பிரிட்டிஷார் கைவசப்பட்ட வரலாறு.



கண்டி அரசியல்முறை—அரசனின் சுதந்திரம்—அவன்கீழுள்ள பல்வேறு அதிகாரிகளும் கடமையும்—குடிமக்களின் சேவைகள்—கண்டியரசியல்முறைக்கும் டச்சு அரசியல்முறைக்குமுள்ள ஒற்றுமைவேற்றுமைகள்—பிரிட்டிஷார் வருகையின்போது இலங்கையில் பெரிதும் பரவியிருந்த மக்களின் கிராமவாழ்க்கை முறைகள்—கிராமவாழ்க்கை சம்பந்தமாகக் கண்டிமக்களுக்கும் கரையோரப் பக்கங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகள்.

## இலங்கையில் பிரிட்டிஷார் ஆட்சி ஆரம்பம்.

1796-ல் கரையோர மாகாணங்களுக்குப் பிரிட்டிஷார் சொந்தம்பாராட்டல்—சென்னையிலுள்ள பிரிட்டிஷ் கிழக்கிந்தியக்கொம்பெனி டச்சுக்காரரிடமிருந்து கரையோர மாகாணங்களைப்பெறப் பெருந்தொகை செலவழித்ததும், தாம் செலவழித்ததொகைக்கு ஈடுசெய்து மேலும் இலாபந்தேடத்திட்டமிட்டதும்—கேணல் ஸ்டூவார்ட் கரையோரப்பகுதிகளின் பரிபாலனத்தை நடத்துதல்—பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கையில் நிலமானிய முறையைநீக்கி ரொக்கப்பணமாக வரிகளை வசூலித்தல்—வரிவசூலிப்போரின் முறையீனங்கள்—நாட்டுமக்களின் அதிருப்தியும் குழப்பமும்—1798-ல் **பிரெடெரிக் நோர்த்** இலங்கைக்குக் கவர்னராக அனுப்பப்படல்—நாட்டில் அவர் சமாதானத்தை நிறுவுதல்.

## பிரெடெரிக் நோர்த் (1798 – 1805)

இவர் பிரிட்டிஷ் கிழக்கிந்தியக் கொம்பெனியாரின் கட்டளைக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் கீழ்ப்படிந்து நடக்கவேண்டிய நிர்ப்பந்தம்—இவரின் நன்நோக்கங்கள், நேர்மைத்திறன், சிவில் சேவின் முறையைவகுத்தல்—நீதிபரிபாலனத்தை நேர்மையாக நடத்த முயற்சித்தல்—எட்மன் கரிங்டன் என்னும் தலைசிறந்த நீதிபதியைக் கல்கத்தாவிலிருந்து அழைத்துச் சட்டமுறைகளை ஆராயச்செய்தல்—**1801-ல் சுப்பிரீம்கோடு, 1802-ல் மாகாணக்கோடுகள்** நிறுவப்படல்—**சமாதான நீதிபதிகளும்** சட்ட சம்பந்தமான ஆலோசனைகூற **அட்வகேற் பிஸ்காலும்** நியமிக்கப்படல்—விளைச்சலில் தானியப்பங்கு வரியாகப்பெறல்—முதலிமார், தலைமைக்காரர் ஆதியோருக்கு ரொக்கப்பணம் வேதனமாகக் கொடுக்கப்படவேண்டுமென விரும்பல்—கல்வி, வைத்தியம், தபாற்பகுதி, அளவைப்பகுதிகளில் சீர்திருத்தங்கள்—கண்டிப்படையெடுப்பும் தோல்விக்குரிய காரணங்களும்—1805-ல் கண்டியரசனுடன் சமாதான உடன்படிக்கை—இடையே 1802-ல் இலங்கைமுடிக்குரிய குடியேற்ற நாடாதல்—1805-ல் சேர் தோமஸ் மெயிற்லண்ட் இலங்கைத்தேசாதிபதியாக நியமிக்கப்படல்.

## சேர் தோமஸ் மெயிற்லண்ட் (1805 – 1812)

இவர் இராணுவபலத்தில் நம்பிக்கைவைக்காது மக்களின் ஆதரவை அன்பாலும், ஆதரவாலும், நேர்மைத்திறனாலும், இடையறா முயற்சியினாலும்பெற முயலல்—முன்னுள்ள சீர்கேடுகளைச் செம்மைப்படுத்த எண்ணல்—ஊர் ஊராய்ச்சென்று மக்களின் குறைகளைப்பதிந்து ஆவனசெய்தல்—பிரதானிகள், முதலிமாரின் செல்வாக்குகளைக்குறைத்தல்—சிவில்சேவில் வகுப்பினரின் அந்தஸ்தையுயர்த்தித் திறமையும் நேர்மையுமுடையவர்களை அவ்வுத்தியோகத்தில் நியமித்தல்—அவர்களுக்குப்

பென்ஷன் முதலிய சலுகைகளை ஏற்படுத்தல்—வரிவசூலிப்பதற்குக் கலெக்டர்கள் நியமனமும் அவர்கள் கடமைகளும்—தோம்புகள் ஆசிரியர்கள்வசம் ஒப்படைக்கப்படல்—1810-ல் ஜூரிமார் விசாரணைமுறை காட்டில் புகுத்தப்படல்—இவரது ஆட்சியில் முடிக்குரிய குடியேற்ற நாட்டு இலட்சியம் பூர்த்திபெறல்.

## சேர் ரொபேட் பிரௌன்றிக் (1812—1820)

இவர் வந்தகாலத்தில் கண்டி அரசனுகிய ஸ்ரீ விக்கிரம இராசசிங்கனுக்கும் பிரதானிகளுக்குமிடையேயுள்ள பிணக்குகள்—சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கண்டிமீது படையெடுத்தல்—கண்டியரசன் 1802-ல் தனது முதல் அதிகார் பிலிமத்தலாவையைச் சிரச்சேதம் செய்தல்—எகலப்பொலையை முதல் அதிகாரராக நியமித்தல்—எகலப்பொலையின் சூழ்ச்சிகள்—எகலப்பொல குடும்பத்தின் கொடூர அழிவு—பிரிட்டிஷ்வியாபாரிகளை உளவுகாரரென அரசனது ஆட்கள் அங்கவீனப்படுத்தல்—கண்டிமீது படையெடுப்பு—கண்டியரசன் சிறைப்படுத்தப்பட்டுத் தேசப்பிரஷ்டம் செய்யப்படல்—1815-ல் கண்டிப்பிரதானிகள் சமாஜம் கூட்டப்பட்டுக் **கண்டிஉடன்படிக்கை** நிறைவேறல்—இங்கிலாந்து அரசன் கண்டிக்கும் அரசனென ஒப்புக்கொள்ளப்படல்—நாயக்கர் வம்சம் நிராகரிக்கப்படல்—பிரதானிகளின் உரிமை, அந்தஸ்து, அதிகாரம் பாதுகாக்கப்படல்—பௌத்தசமயம் பேணப்படல்—வியாபாரத்தடைநீக்கம்—1818-ல் **கண்டிக்கலகம்**—பிரதானிகளும், பௌத்தபிக்குகளும் ஆங்கில ஆட்சியை வெறுத்தல்—அரசபரிபாலனத்திலும் பிரிட்டிஷ் பரிபாலனம் மாறுபட்டதாகத் தோற்றல்—வரி முறைகளில் வித்தியாசம்—பிரிட்டிஷ் ஆட்சியில் சாதிக்கட்டுப்பாடு தளர்ச்சியுறல்—பிரதானிகள் தம் அந்தஸ்து பாதிக்கப்படுவதாகக் கருதல்—பிரிட்டிஷ் சேனுவீரர் பிரதானிகளுக்கு மரியாதை காண்பியாமை—கண்டிப் பொதுமக்கள் பிரிட்டிஷ் ஆட்சியை வெறுத்தல்—பழைய சம்பிரதாயங்களிலும் சமூகச்சடங்குகளிலும் மனம் நாடல்—கண்டியரசனுட்சிக்குப் புறம்பான வெல்லச, விந்தனை முதலிய உட்பிரதேசப் பிரதானிகள் கலகத்தைக் கிளப்பல்—வெல்லசவில் முஸ்லீம் மூகாந்திர நியமனம்—இன்னோரன்ன காரணங்களால் ஊவாமாகாணத்தில் முதற் கலகம் ஆரம்பித்தல்—கண்டிப் பிரதானிகளின் ஒற்றுமையீனம்—பிரிட்டிஷாரின் இராணுவபலம், போக்குவரத்து வசதித்திருத்தங்கள் என்பவற்றுல் கலகம் அடக்கப்படல்—பிரதானிகள் முறைநீக்கப்பட்டு அரசாங்க ஏஜன்டுகள் நியமனம்பெறல்—கவர்னர் பான்ஸ் (1820-1830) பரிபாலன வசதிக்காகப் பல ரோட்டுக்களை அமைத்தல்.

### வினுக்கள்.

1. பிரிட்டிஷார் வருகையின்போது *1796*-ம் ஆண்டளவில் இலங்கையின் அரசியல் முறைபற்றியும், மக்களின் வாழ்க்கை முறைபற்றியும் விபரிக்குக.

2. இலங்கைக்குப் பிரிட்டிஷார் வரநேர்ந்த காரணங்களையும் படிப்படியாக அவர்களாதிக்கம் வலுப்பெற்றமையையும் விபரிக்குக.

3. போர்த்துக்கேயர் ஒல்லாந்தராட்சிகளுக்கும் ஆங்கிலேய கிழக்கிந்தியக் கொம்பெனியின் பரிபாலனத்துக்கு மிடையேயுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.



4. பிரிட்டிஷாராட்சியின் ஆரம்ப காலத்தில் இலங்கையைப் பரிபாலித்த இரு தேசாதிபதிகளைக் கூறி அவர்கள் காலத்தில் நாட்டிலேற்பட்ட நன்மையான மாற்றங்களையும் கூறுக.

5. சேர் பிரெடெரிக் நோர்த் கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடியாது போனமைக்கும், சேர் ரொபேர்ட் பிரௌன்றிக் கைப்பற்ற முடிந்தமைக்குமுரிய ஏதுக்களை ஆராய்க.

6. சேர் பிரெடெரிக் நோர்த், சேர் தோமஸ் மெயிற்லண்ட், சேர் ரொபேர்ட் பிரௌன்றிக் என்போருள் ஒருவரது ஆட்சிக்காலத்தை விபரிக்குக.

7. *1818*-ம் ஆண்டில் கண்டிக் கலகத்துக்குரிய முக்கிய காரணங்களையும் முடிவையும் விபரிக்குக.

8. பதினெட்டாம் நூற்றுண்டின் இறுதியில் கண்டி அரசியல்முறை, டச்சு அரசியல் முறைகளை ஆராய்க.

9. பின்வரும் மாற்றங்கள் எவ்வெவ்வாண்டில் எத்தேசாதிபதி காலத்தில் நிகழ்ந்தனவெனக் கூறுக.—

சிவில் சேவிஸ், சுப்பிரீம்கோடு ஆரம்பம், அட்வகேற் பிஸ்கால் நியமனம், மாகாணக் கோடுகள் ஆரம்பம், ஜூரிமார் விசாரணை முறை, அரசாங்க ஏஜன்டுகள் நியமனம்.

10. குறிப்பெழுதுக:— திசாவை, இராசகாரியம், மணியகாரர், பண்டமாற்று, கிராமசபை, கேணல் ஸ்டீவார்ட், ரொபேர்ட் அன்ட்ரூஸ், டி மியூரன், இரட்டையாட்சி, எட்மன்ட் கரிங்டன், அட்வகேற் பிஸ்கால், கொரிஸ்ஸாச் சண்டை, பிலிமத்தலாவை, எகலப்பொல, கலெக்டர், பான்ஸ்.

பன்னிரண்டாம் அத்தியாயம்

# கோல்புறூக் கொமிஷன் சீர்திருத்தங்கள்

## (Cole Brooke Commission Reforms 1832-33)

கவர்னர் மெயிற்லண்ட் நாட்டின் வருவாயைப் பெருக்குவதற்குப் பற்பல வழிவகைகளைக் கையாண்டிருந்தும், வருடா வருடம் பரிபாலனச் செலவு வரவுக்கு மிஞ்சியதாகவேயிருந்து வருவதைப் பிரிட்டிஷார் உணர்ந்தனர். இலங்கையின் நிர்வாகத்தில் எங்கேனும் தவறுகள் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று சிந்தித்தனர். இலங்கையின் நிர்வாகத்தைச் செம்மைப் படுத்திச் சிக்கன வழிகளை ஆலோசித்து, நிதிநிலைமையை ஒழுங்கு படுத்தி வருவாயைப் பெருக்க நிச்சயித்தனர். இதே போன்று இலங்கையில் நிலவிவந்த நீதி, சட்ட நிர்வாகம் ஆகியவை பற்றியும் அலசிப்பார்த்து அவற்றைச் சீர்படுத்தத் நிர்மாணித்தனர்.

பிரிட்டிஷாரின் அழைப்புக்கிணங்கி, இலங்கையின் பரிபாலன முறையைப் பரிசீலனைசெய்து நிதி நிலைமை உயர்த்துவதற்காக **எம். ஜீ. கோல்புறூக்** என்பவர் 1829-ம் ஆண்டிலும், நீதி நிர்வாகத்தைச் சீர்படுத்துவதற்காகச் **சி. எச். கமெரன்** (C. H. Cameron) என்பவர் 1830-ம் ஆண்டிலும் இங்கு வந்தனர். இவர்களிருவரும் **லிபரல் கட்சியைச்** சேர்ந்தவர்கள். தனி மனிதனுக்கு எல்லா விஷயங்களிலும் சுதந்திரம் இருக்கவேண்டும்; அவனது தனிப்பட்ட விஷயங்களில் அரசாங்கம் தலையிடக்கூடாது; தம் பிரதிநிதிகளால் அமைக்கப்பட்ட பாராளுமன்றங்களால் நிர்வகிக்கப்படும் அரசாங்கத்தில் பங்குபெறத் தமக்கு உரிமையுண்டு; நாட்டின் செல்வப் பெருக்குக்கான தொழில், வியாபாரம் ஆகியவைகளை அரசாங்கம் எடுத்து நடத்தாது தனிமனிதனது சொந்த முயற்சிக்கே விட்டுவிடவேண்டும்; மனிதன் சொந்தப் பிரயாசைக்கு இவைகளை விட்டுவிடுவதால் அவனதும் அரசாங்கத்தினதும் பொருளாதார நிலை உயரக்கூடும். இவைபோன்றவைகளே லிபரல் கட்சியின் கொள்கைகளாகும்.



இந்த லிபரல் கொள்கைகளால் உந்தப்பட்ட கோல்புறூக்கும் அவரது சகாவும் இலங்கை வந்துற்றகாலை இங்குள்ள நிலைமைகளைக் கண்டு, அவைகளைச் சீர்ப்படுத்த எண்ணினர். இலங்கையானது முடிக்குரிய குடியேற்ற நாட்டு அந்தஸ்தை 1802-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் திகதி அடைந்த நாளிலிருந்து நோர்த் பிரபுவும், அவருக்குப் பின்வந்த கவர்னர்களும் தாங்கள் இட்டதே சட்டம் என்னும் பாணியில் சர்வாதிகாரிகளாகக் கேட்க ஆளின்றி மனம்போனவாக்கில் நடந்து வந்தார்கள். இதுவன்றிக் கண்டி இராச்சியத்திலே முதலிமாரும் விதானைமாரும் மிகுந்த செல்வாக்குடன், நிலமான்ய முறையின்கீழ்க் கிடைக்கும் வருவாயை வாயில் போட்டுவிட்டுக் குடிமக்களை வருத்தி வந்தார்கள். மேலும் அப்போது இராசகாரிய சேவைமுறை கையாளப்பட்டுச் சாதிக் கொடுமைகளுக்குட்பட்டுச் சுதந்திரமற்று அடிமைகளாய்க் குடிசனங்கள் உழன்று வந்தார்கள். இந்நிலைமைகள் கோல்புறூக் என்பவருக்கு மிகுந்த வெறுப்பை உண்டாக்கியது. இச்சீர்கேடுகளை அகற்றுவதற்கு அவர் பல சீர்திருத்தங்களைப் புகுத்தினார். சுருங்கக்கூறின் இலங்கைக்கு நவீன பரிபாலனம் ஒன்றைத் தந்துதவ விரும்பினார். ஆனால் இக்கொமிஷனர்களுடைய சிபார்சுகளைச் செயல்முறைப் படுத்துவதில் மக்களின் பரிபூரண ஆதரவு கிட்டுமா, அவர்கள் இச்சிபார்சுகளுக்குத் தங்களைத் தகுதிப் படுத்தியிருக்கின்றார்களா என்பதை இவர்கள் முன்கூட்டிக் கருதினார்களில்லை. இனி அவர்கள் செய்த சீர்திருத்தங்களைப் பார்ப்போம்.

முதலாவதாகக் கோல்புறூக் தொன்றுதொட்டுப் பழக்கமாயிருந்துவந்த **இராஜகாரிய** முறையை ஒழிக்க வேண்டுமென்று சிபார்சு செய்தார். இம்முறை தீங்கு விளைவிக்கக் கூடியதாயிருந்தது. நிலமான்ய முறைப்படி நிலத்தைப் பெற்ற குடியானவன் ஒரு ஆண் மகனை இராஜசேவைக்கு அனுப்பக் கடமைப்பட்டிருக்கின்றான். இதிலுள்ள அநீதி என்னவென்றால் குடியானவர் பெற்ற எல்லா நிலங்களும் ஒரே அளவினதல்ல; ஒரு தரத்தான

விளைச்சலை உடையனவுமல்ல; ஒரே அளவு தொகையினர்தான் அங்கு பயிர் செய்யவுமில்லை. சில நிலங்களில் குறைந்த தொகையினரும், சிலவற்றில் பெருந்தொகையினரும் வேலைசெய்து வந்தனர். இதுமட்டுமன்றி ஒரு சாதியைச்சேர்ந்தவன் தனது நிலத்தை விடுத்தோ அன்றித் தொழிலை விடுத்தோ வேறிடங்களுக்கு அல்லது வேறு தொழிலுக்குச் செல்ல அனுமதி கிடையாது. இன்னும் சொல்லப் போனல் சுயமுயற்சிக்கு ஊக்கமளிக்கப் படவில்லை. ஒருவன் தனக்கு உகந்த தொழிலோ, வியாபாரமோ, விவசாயமோ செய்ய அனுமதிக்கப்படாததால் அவனது முயற்சிக்கு ஆக்கந் தரப்படவில்லை. இதனல் அவனதும் நாட்டினதும் பொருளாதார நிலை விருத்தியாகவில்லை. பார்க்குமிடத்து அரசாங்கமே கடனளியாகியது.

இராஜகாரிய முறை 1832-ம் ஆண்டில் சட்ட பூர்வமாக ஒழிக்கப்பட்டது. ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பிய தொழிலைச் செய்யும் உரிமை பெற்ருன். சாதி, சமய, வகுப்பு வேறுபாடுகளின்றி எல்லோரும் சமம் என்ற முறை ஏற்பட வழிகாட்டியது. கட்டுப்பாடுகள் நீங்கப்பெற்று மனிதன் சுதந்தரமுள்ளவனுய்க் காணப்பட்டான். கைத்தொழில், வியாபாரம் ஆகியவை அபிவிருத்தியடையவும் இது உதவியது.

இரண்டாவதாக இலங்கை அரசாங்கம் வர்த்தகத் துறையிற் கொண்டிருந்த ஏகபோக உரிமை (Monopoly) ஒழிக்கப்பட்டது. வியாபாரமே பிரதான நோக்கமாகக் கொண்டு இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயரும் டச்சுக்காரரும் கறுவாப்பட்டை வியாபாரத்திலும் ஏனைய தொழில்களிலும் ஏகபோக உரிமை பாராட்டி வேறெவரும் தம் சம்மதமின்றி இத்துறைகளில் இறங்கக் கூடாது என்று விதித்திருந்தனர். இதே முறையைத் தான் பிரிட்டிஷாரும் பின்பற்றி வந்தனர். உதாரணமாக நாட்டிற் காணப்படும் கறுவா மரங்களெல்லாம் தமக்கே சொந்தமென்றும், கறுவாச் செடிகளை அழிப்பவருக்கோ, வெட்டி வீழ்த்துபவருக்கோ, களவு செய்பவருக்கோ கடுமையான தண்டனை விதித்தும், கறுவாப் பட்டைகளை வேறெவரும் விற்பனை செய்யாது தடுத்தும் பிரிட்டிஷார் கறுவா வியாபாரத்தில் உரிமைபாராட்டி வந்தனர். இவ்வுரிமை 1833-ம் ஆண்டில் நீக்கப்பட்டபோது ஐரோப்பியரும், நாட்டுமக்களும் பெரும் பணத்தை முதலீடு செய்து, இயந்திரங்களுடன் கூடிய தொழிற்சாலைகளை நிறுவி, வியாபாரங்களைச் செய்து பெரும் பொருளீட்டினர். அரசாங்கம் விவசாயத்துறையிலும் வர்த்தகத்துறையிலும் தனது உரிமைகளை நீக்கியதுமன்றிக் கோப்பி, மிளகுத் தோட்டங்களையும் பிறருக்கு விற்றுப் பிறரும் இவ்வியாபாரங்களில் பங்குபற்றச் செய்யும்படி வாய்ப்பளித்தது.



மூன்ருவதாகக் கோல்புறூக் செய்த சிபார்சு கவர்னருக்கு இருந்த எல்லையற்ற அதிகாரங்களைக் கட்டுப்படுத்தித் தனி மனிதனுக்குரிய சுதந்திரத்தைப் பெற்றுத் தந்ததாகும். லிபரல் கட்சியைச் சேர்ந்த இவர், கவர்னர்கள் சர்வாதிகாரிகளாய் இருக்கக் கூடாது, மக்கள் கையிலே அரசாங்கப் பொறுப்பு அமைந்திருக்க வேண்டும், கவர்னராயிருந்து நாட்டைப் பரிபாலனம் செய்வோர் மக்கள் பிரதிநிதிகளுடன் கலந்து ஆலோசித்து அரசியற் கருமங்களை ஆற்றவேண்டும் என்னுங் கொள்கைகளையுடையவராவர். கோல்புறூக் இலங்கைக்கு வந்தபோது இங்கு அனுஷ்டானத்திலிருந்தபடி, இலங்கைக் கவர்னர் தேசத்துரோகி எனக்கருதும் ஒருவனை விசாரணையின்றிச் சிறைத்தண்டனை அளிக்கவோ, தேசப்பிரஷ்டம் செய்யவோ முடியும். அன்றியும் கவர்னராயிருந்து சர்வாதிகாரம் புரியும் ஒரு பிரிட்டிஷாரின் செயல்களை இத்தீவிலுள்ள எந்த நீதிமன்றமும் குற்றப்படுத்த முடியாது. கவர்னராயிருப்பவர் சட்ட வரம்புக்கு உட்பட்டவரல்ல என்ற நிலையிருந்து வந்தது. கோல்புறூக் செய்த சிபார்சுகளினுல் இந்நிலைமைகள் மாறிக் கவர்னர் எதேச்சாதிகாரம் கட்டுப்படுத்தப்பட்டுத் தனி மனிதனது பேச்சு, எழுத்துச் சுதந்திரங்கள் அங்கீகரிக்கப்பட்டுக் கவர்னர் சட்ட வரம்புக்கு உட்பட்டவர் என்பதும் ஏற்பட்டது.

நீதி, நிர்வாகம், சட்டம் ஆகிய துறைகளை வெவ்வேறாக்கப் புதிதாக ஓர் நிர்வாக சபையையும் (Executive Council) சட்ட சபையையும் (Legislative Council) நிறுவியதும் கோல்புறாக்கின் மற்றொரு சீர்திருத்தமாகும். இவ்விரண்டு சபைகளும் 1833-ம் ஆண்டு நிறுவப்பட்டன. நிர்வாக சபையைக்கூட்டிக் கவர்னர் நாட்டுப் பரிபாலனம், நீதி ஆகிய விஷயங்களில் ஆலோசனை கேட்கவேண்டும்; ஆனால் நிர்வாக சபையின் ஆலோசனையின்படி கட்டாயமாக நடக்கவேண்டுமென்பதல்ல; நிர்வாக சபையுடன் கவர்னர் ஒத்துப்போகாவிடில் அவர் அதற்குரிய காரணங்களைக் குடியேற்ற நாட்டு மந்திரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

சட்டசபையானது ஒன்பது உத்தியோகஸ்தரையும் ஆறு நியமனமான உத்தியோகப் பற்றற்றவரையும் (Nominated Unofficials) கொண்டதாயிருந்தது. உத்தியோகப் பற்றற்ற நியமன அங்கத்தவர்கள், இலங்கையில் வாழ்ந்துவந்த சிங்களவர், தமிழர், பறங்கியர், ஐரோப்பிய வர்த்தகர், தோட்டத்துரைமார் ஆகிய பல இனங்களின் பிரதிநிதிகளாய் விளங்கினர். பரிபாலன நிர்வாகத்தில் இவர்களுக்கு அதிகாரம் ஒன்றுமில்லையென்றாலும், இலங்கைவாழ் மக்களின் பிரதிநிதிகள் என்ற தரப்பில், சட்ட சபையில் குடிமக்களின் குறைகளை எடுத்துச் சொல்லவும், கவர்னரின் பரிபாலன முறைபற்றி மக்களின் விருப்பு, வெறுப்புகளை வெளிப்படையாக - நேரடியாக எடுத்துக்கூறவும் சட்டசபையில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இதனால் உத்தியோகஸ்தர், உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரின் சொற்களைச் செவிமடுத்து, ஆவன செய்ய முயற்சித்தனர். இச்சட்டசபை ஜனப் பிரதிநிதித்துவ அரசாங்கத்துக்கு ஒரு முன்னோடியாக விளங்கியது எனலாம்.

கோல்புறாக்கின் மற்றொரு சீர்திருத்தம் பரிபாலன சம்பந்தப்பட்டதாகும். அவர் இந்நாட்டுக்கு வந்தது அரசியலைச் சீர்திருத்துவதற்கு மட்டுமன்று, செலவுகளைக் குறைப்பதற்குமேயாகும். இலங்கை இவரது வருகைக்கு



முன் பதினேழு பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தது. இத்தனை பிரிவுகளிருப்பதால் அத்தனை அதிகாரிகளை நியமித்து அவர்களுக்குச் சம்பளம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்பதை ஆலோசித்துச் சிறிய மாற்றஞ் செய்தார். இலங்கையை வடபகுதி, கீழ்ப்பகுதி, தென்பகுதி, மேற்பகுதி, மத்தியபகுதி எனப்பிரித்து அப்பகுதிகளுக்கு முறையே யாழ்ப்பாணம், திரிகோணமலை, காலி, கொழும்பு, கண்டி ஆகிய நகர்களைத் தலைநகர்களாக்கினார். இங்ஙனமாகப் பிரிவுகள் ஏற்பட்டதால் பரிபாலனச் செலவுகள் குறைக்கப் பட்டதுமின்றிப் பல பகுதிகளிலுள்ள மக்களும் சாதி இனபேதம் பாராது ஒன்றாகப் பழகவும் செய்தனர்.

பரிபாலன விஷயமாகக் கோல்புறாக் செய்த மற்றொரு சிபார்சு சிவில் சேவிஸ் பற்றியதாகும். சிவில் சேவிஸ் அதிகாரிகள் பெரும்பணத்தை விழுங்கி ஏப்பமிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்களைப் போஷிப்பது இலங்கையின் சக்திக்கு மேற்பட்டதாகக் கோல்புறாக் சிந்தனையிற்பட்டது. எனவே 1833-ம் ஆண்டு தொடக்கம் சிவில் சேவிஸ் அதிகாரிகளின் ஓய்வுகாலப் பென்ஷன் உரிமைகளை நீக்கிவிட்டார்; உயர்ந்த சம்பளமுள்ள பதவிகளைக் குறைத்தார். அவர்களின் சம்பளத்தையும் குறைத்தார். அதுவுமின்றிச் சிவில் சேவிஸ் பதவிகளை வெள்ளையரே மேற்கொண்டு பெரும் சம்பளத்தைப் பெற்று வந்தார்கள். இப்பதவிகளுக்கு இலங்கையரையும் தகுதியாக்கிக் குறைந்த சம்பளத்தில் நியமித்தார். சிவில் சேவிஸ் சம்பந்தமான சீர்திருத்தங்கள் விரும்பிய பயனைத் தரவில்லை எனலாம். ஆதிகாலத்தில் இலங்கையிருந்த நிலைமையில் ஓர் திறமையான சிவில் சேவிஸ் வர்க்கம் அவசியமென்று கோல்புறாக் கருதவில்லை. ஏனெனில் இராஜகாரிய சேவை, வர்த்தக ஏகபோக உரிமை ஆகியவை எடுபட்டுவிட்டமையாலும், நிர்வாக சட்டசபைகள் ஏற்பட்டுள்ளதாலும், கிராம பரிபாலனத்தைக் கிராம சபைகள் செவ்வனே நடத்தி வந்ததாலும், திறமையான சிவில்சேவிஸ் அதிகாரிகளுக்கு அதிக வேலையிராது என்று அவர் கருதியிருக்கலாம். பழையன

கழிதலும், புதியன புகுதலும் பின்பற்றிப் பண்டைய நிலமான்ய முறையை விடுத்து நவநாகரிக காலத்தை நோக்கி இலங்கை வேகமாகச் சென்று கொண்டிருப்பதை அவர் உணரவில்லைப் போலும். கோல்புறூக்கின் இச்சிபார்சுகளால் சிவில்சேவிஸ் உத்தியோகஸ்தர்கள் அதிகமாகப் பாதிக்கப் பட்டனர் என்பது சொல்லாமலே விளங்கும்.

கடைசியாக ஆங்கிலக் கல்வியை அளிப்பதற்குக் கோல்புறூக் தகுந்த முயற்சி செய்தார். கல்வி இலாக்காவின் மானியத்தை அதிகப்படுத்திப் பல ஆங்கிலப் பாடசாலைகளை ஸ்தாபித்தார். இலங்கையில் தங்களைத் தாங்களே ஆட்சி செய்து கொள்வதற்கு, அகில உலகிலும் பேசப்பட்டு வரும் ஆங்கிலமொழி அறிந்திருத்தல் நலம்; இலங்கையர் சிவில் சேவிஸ் உத்தியோகங்களைப் பெறுதற்கும் ஆங்கில அறிவு அவசியமாகும்; இதற்கிடையில் இலங்கையரசாங்கமும் நீதிமன்றங்களும் ஆங்கில மொழியிலேயே கருமம் ஆற்றுவதாய் அமைந்திருந்தன. பல கலைகளைத் தன்னுட் கொண்டதும், நுண்ணறிவையும் நன்னெறியையும் புகட்டக் கூடியதுமான ஆங்கில மொழியை இலங்கையர் கற்றுத் தேர்தல் அவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் அபிவிருத்தி உண்டாகும் என்று கோல்புறூக் நம்பினார். சுயமொழியில் போதனை பயிற்சி அளிக்காது அந்நிய மொழியான ஆங்கில மொழியில் பாடசாலைகளில் போதனையளித்தது இந்நாட்டு மக்களுக்கு எத்துணைப் பயனளித்திருக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி. அதுமட்டுமன்றிக் கிறிஸ்தவ மிஷனரிகளின் மேற்பார்வையில் ஆங்கிலப் பாடசாலைகள் விடப்பட்டிருந்ததால், கிறிஸ்தவரை விடப் பெரும்பான்மையராக இந்நாட்டில் வசிக்கும் ஏனைய மதத்தைச் சேர்ந்தவருக்கு எவ்வளவு அசௌகரியங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதும் ஒருவாறு ஊகித்தற்குரியது.

கோல்புறூக் என்பவருடன் வந்த கமெரன் என்பவரது நீதிபரிபாலன சம்பந்தமான சிபார்சுகளும் போற்றுதற்குரியவையாகும். இதுவரை சட்டங்களைப் பூரண



மாகத் தெரியாத கவர்னரின்கீழ் இயங்கிவந்த சிவில் கோடுகள் திருப்திகரமாக நடைபெறாததால் 1832-ம் ஆண்டில் எடுபட்டு விட்டன. அவற்றிற்காக இலங்கை முழுமையும் ஒரேமாதிரியான நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இதுவரை ஐரோப்பியருக்கு ஒருவிதமான சட்டமும் தனியான நீதிமன்றமும் இயங்கிவர, இலங்கை நாட்டு மக்களுக்கு வேறுசட்டங்களும் வேறு நீதிமன்றங்களும் இயங்கிவந்தன. இந்த முறை நீக்கப்பட்டுச் சுதேசிகளுக்கும் ஐரோப்பியர் போன்ற விதேசிகளுக்கும் ஒரேவித சட்டங்களும், ஒரேவித நீதிமன்றங்களும் ஏற்பட்டு நீதி வழங்குவதிலுள்ள பாரபட்சம் நீக்கப்பட்டது. ஓர் **உயர்தர நீதிமன்றம்** (Supreme Court) ஏற்பட்டு அங்கு கிரிமினல் வழக்குகளும் கீழ்க் கோட்டுத் தீர்ப்புக்கு எதிரான வழக்கு மனுக்களும், அப்பீல்களும் விசாரிக்கப்பட்டன. மற்றும் மாகாணந்தோறும் **டிஸ்திரிக் கோடுகள்** (District Courts) அமைக்கப்பட்டுச் சிவில் குற்றங்களும், சிற்சில கிரிமினல் குற்றங்களும் விசாரணை செய்யப்பட்டன. டிஸ்திரிக் நீதிபதிகளுக்கு நாட்டு வழமைகள் தெரியாததால் அவர்களுக்குத் துணைபுரியக் குறிப்புரையாளர்களும் நியமிக்கப்பட்டனர். இங்ஙனமாகச் சட்ட சம்பந்தமான சீர்திருத்தங்கள் இந்நாட்டு மக்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்து "எல்லோரும் சமம்" என்ற தத்துவத்தை அவர்களிடையே நிலைநாட்டின.

மேலேகூறிய கோல்புறூக் கொமிஷனின் சீர்திருத்தங்களில் ஒரு சில குறைபாடுகள் இருந்தாலும் அவைகள் நன்னோக்கத்துடன் இந்நாட்டு மக்களின் சுபீட்சத்தைப் பெறும் நோக்கமாகக் கொண்டு புகுத்தப்பட்டனவாகும். அவைகள் இந்நாட்டினது அரசியல், பொருளாதார, சமுதாய முன்னேற்றத்துக்கு அத்திவாரமாய் அமைந்து விளங்கின.

**சுருக்கம்.**

மெயிற்லண்ட் முயற்சித்தும் வருடாவருடம் இலங்கையின் பரிபாலனச் செலவு வரவுக்கு மிஞ்சியதாக இருந்ததைப் பிரிட்டிஷார் உணர்தல்—நிர்வாகத்தையும், சட்டங்களையும் சீர்படுத்தத் தீர்மானித்து லிபரல்கட்சியைச் சேர்ந்தவர்களான

கோல்புறூக் என்பவரை 1829-ம் ஆண்டிலும், கமெரன் என்பவரை 1830-ம் ஆண்டிலும் இலங்கைக்கு அனுப்பல்—தனிமனிதனின் சுதந்திரம், அரசாங்கத்தில் பிரதிநிதித்துவ உரிமை, தொழில், வியாபாரம் என்பவற்றிற் சொந்தம் என்னும் லிபரல் கட்சியின் முற்போக்குக் கொள்கைகள்—இதுவரை கவர்னர்களும் கண்டி இராச்சியத்தில் முதலிமாரும், விதானைமாரும் ஏதேச்சாதிகாரமாய் நிலமானிய வருவாயைச் செலவழித்தலும், குடிமக்களை வருத்தலும்—இச்சீர்கேடுகளை அகற்றக் கோல்புறூக் விரும்பல்—ஒவ்வோர் குடியானவனும் ஒவ்வோர் ஆண்மகனை இராசகாரிய சேவைகளுக்கு அனுப்ப வேண்டுமென்னும் கட்டுப்பாட்டை நீக்கல்—சாதிக் கட்டுப்பாட்டின்படி வேறு இடங்களுக்கு அல்லது வேறுதொழிலுக்குச் செல்லக்கூடாது என்னும் நியதியைநீக்கல்—அரசாங்கத்தின் வியாபார ஏகபோக உரிமையை ஒழித்தல்—கவர்னரின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தல்—தனிமனிதனின் பேச்சுக்களுக்கு சுதந்திரங்களுக்கு உரிமைகொடுத்தல்—நீதி, நிர்வாகம், சட்டம் என்பவற்றை வெவ்வேறாக்கல்—நிர்வாக சபையையும், சட்டசபையையும் ஏற்படுத்துதல்—இலங்கையை ஐந்து பகுதிகளாகப் பிரித்து ஐந்து நகர்களைத் தலைநகராக்கல்—சிவில்சேவில் அதிகாரிகளின் செலவைக் குறைத்தல்—இலங்கையரையும் சிவில்சேவின் பதவிகளில் நியமித்தல்—ஆங்கிலக்கல்வியை நாட்டிற்கு அளித்தல்—இவைகள் கோல்புறூக் செய்த சீர்திருத்தங்களாகும்.

கமெரன் சிவில்கோடுகளை நீக்கி இலங்கைமுழுமையும் ஒரேவிதமான நீதிமன்றங்களை ஏற்படுத்தல்—ஐரோப்பியருட்பட எல்லோருக்கும் ஒரே விதசட்டம் வழங்கல்—உயர்தர நீதிமன்றம், டிஸ்திரிக்கோடுகள் என்பன நிறுவப்படல்—"எல்லோரும் சமம்" என்னும் தத்துவத்தை நிலைநாட்டல்.

### வினாக்கள்.

1. கோல்புறூக் என்பவர் யார்? அவர் இங்கு வரநேர்ந்தமையையும், செய்த சீர்திருத்தங்களையும் விரிவாகக் கூறுக.
2, கமெரன் என்பவர் நீதி நிர்வாக சம்பந்தமாக இலங்கையிற் செய்த சீர்திருத்தங்களெவை?
3. கோல்புறூக், கமெரன் என்போரின் சீர்திருத்தங்களின் முன்னர் இலங்கையில் தனிமனிதனது சுதந்திரங்கள் பாதிக்கப்பட்டு வந்தமையையும், இவர்களின் சீர்திருத்தங்களின் பயனாய் தனிமனிதன் அடைந்த சுபீட்சங்களையும் விபரிக்குக.

---

## பதின்மூன்றாம் அத்தியாயம்

# இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி

பிரிட்டிஷார் தங்கள் ஆட்சியை இலங்கையில் ஸ்திரமாக ஸ்தாபித்துச் சமுதாயத்துக்குகந்த பரிபாலனமுறையை வகுத்தபின் இந்நாட்டின் பொருளாதார நிலையை அபிவிருத்தி பண்ணுவதில் விசேஷ கவனங்காட்டினர். 1837-ம் ஆண்டு தொடக்கம் ஏறக்குறைய 20-ம் நூற்றாண்டு ஆரம்ப காலம் ஈறாக இந்நாட்டில் ஏராளமான தோட்டங்களை நிறுவித் தோட்டப் பயிர்ச்செய்கையைப் பரப்பினார்கள். அத்தோட்டங்களில் விளைந்த பொருட்களை வேறு இடங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்காகப் போக்குவரவுச் சாதனங்களை அமைத்தார்கள். முதன்முதலாகக் கோப்பித் தோட்டங்களையும், அடுத்துத் தேயிலை, றப்பர், தென்னை ஆகிய தோட்டங்களையும் அமோகமாகத் திறந்ததால் ஏற்றுமதி பெருகியது. அந்த ஏற்றுமதிகளைச் சிரமமின்றியும் குறுகிய காலத்திலும் குறைந்த பணச் செலவில் செய்வதற்காகப் பல ரோட்டுகளை அமைத்து மோட்டார் வாகனங்களைப் புகுத்திப் புகையிரத நிலையங்களையும் பாதைகளையும் திறந்தார்கள். தோட்டங்களில் உழைத்துக்கொடுப்பதற்காகத் தென்னிந்தியாவிலிருந்து பல தொழிலாளர்களை இலங்கைக்குத் தோட்டத்துரைமார் வரவழைத்துத் தோட்டங்களை வனப்பு நிறைந்த பூலோக சுவர்க்கமாக மாற்றினார்கள். போக்குவரவுச்சாதனப் பெருக்காலும், புதிய தொழிலாளர் குடியேற்றங்களின் விளைவாலும் புதுப்புது நகர்கள் பல தோன்றுவதற்கும் ஏதுவாயிருந்தன. நாட்டிலேற்பட்ட பணப்பெருக்காலும் தொழிலாளர் - முதலாளிமார் உறவாலும் பல பிரச்சினைகள் பின்னர் அரசியலிலும், சமுதாயத்திலும், பொருளாதாரத்திலும் தோன்றின. சுருக்கக் கூறின் 1837-ம் ஆண்டு முதல் 20-ம் நூற்றாண்டின் ஆரம்பகாலம்வரை இலங்கையில் விவசாயத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார நிலைமாறி வர்த்தகத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார நிலை எங்ஙனம் ஏற்பட்டது என்பதுபற்றிய விபரத்தை இவண் ஆராய்வோம்.

நில மானியமுறை இந்நாட்டில் பிரிட்டிஷார் வந்த காலத்தில் நடைபெற்றுவந்ததால், விவசாயமே மக்களின் பிரதான தொழிலாயிருந்தது என்பதைக் கூறத் தேவையில்லை. விவசாயத்தில் பெரும்பான்மை மக்கள் ஈடுபட்டிருந்தும் நாட்டின் தேவைக்கு நெல்விளைவு பற்றாக்குறையாகவேயிருந்துவந்தது. உணவு விஷயத்தில் சுய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு இலங்கையில் விவசாயத்தையும் உணவு உற்பத்தியையும் பெருக்க வேண்டுமெனப் பிரிட்டிஷார் செயலாற்றினர். பழைய சிங்கள அரசர்களால் கட்டுவிக்கப்பட்டுத் தூர்ந்துபோன குளங் குட்டைகளையும், இடிந்து தகர்ந்துபோன கால்வாய்களையும் பிரிட்டிஷார் செப்பனிட்டு நீர்ப்பாசன முறைகளைப் புனருத்தாரணஞ்செய்தனர் அன்றியும் புதுப்புது உணவுப் பயிர்களையும், புதுமுறையான சாகுபடி முறைகளையும், அவர்கள் இந்நாட்டில் புகுத்தினர். பிரிட்டிஷார் ஆரம்பகாலமுதலே விவசாய அபிவிருத்தியில் அதிக உற்சாகம் காட்டிவந்தபோதிலும் மக்களிடம் போதிய பணமும், மிகுந்த உற்சாகமும் அற்றுப்போனமையால் பிரிட்டிஷார் தம்முயற்சியில் வெற்றிபெறவில்லையென்றே கூறவேண்டும்.

மலைப்பாங்கான பிரதேசங்களிலும் சீதோஷ்ண ஸ்திதி இருந்த இடங்களிலும் பிரிட்டிஷார் தோட்டங்களைத்திறந்து வர்த்தகப்பயிர்களை (Cash crops) வளர்க்குமாறு மக்களுக்கு உற்சாகமூட்டி வந்தனர். ஏனெனில் பிரிட்டிஷாரின் முக்கிய நோக்கம் வர்த்தகத்தை வளர்த்து அதன்மூலம் தம் வருமானத்தைப் பெருக்கவேண்டுமென்பதாகும். குடிசனங்களிடம் போதிய முதலீடு செய்வதற்குரிய பணம் இல்லாததாலும் வர்த்தகப்பயிர்ச் செய்கையில் அவர்களுக்கு அனுபவமும் அறிவும் இல்லாததாலும், பிரிட்டிஷார் எடுத்தமுயற்சி வீணாயிற்று என்றாலும் மெயிற்லண்ட, **பாண்ஸ்** (Barnes) ஆகிய கவர்னர்களின் தலையீட்டினாலும், அவர்கள் ஐரோப்பியருக்குக் காண்பித்த சில சலுகைகளினாலும், கோப்பிச் செய்கையிலும், பருத்தி விளைவிப்பதிலும், கரும்பு பயிரிடுதலிலும் சிலர் ஈடுபட்டிருந்தனர். கோப்பிவிளைவிப்பதால்



அபரிதமான இலாபம் கிடைக்குமென எண்ணிய பிரிட்டிஷார், மலைப்பிரதேசங்களில் கோப்பிச் செய்கையை விரிவாக்கினர். 1832-ம் ஆண்டில் **ஜோர்ஜ்பேர்ட்** (George Bird) என்பவர் கம்பளைப் பகுதியில் முதன்முதலாக ஒரு கோப்பித்தோட்டத்தைத் திறந்தார். அவரை அடுத்துப் பாண்ஸ் கவர்னரும், மற்றும் அரசாங்க ஏஜெண்டுகளும், சிற்சில இடங்களில் கோப்பிப் பயிரை விளைவிக்கலாயினர். மேற்கிந்தியத் தீவுகளிலிருந்து இங்கிலாந்தில் இறக்குமதியாகும் கோப்பிக்கு வரி குறைவாயிருந்தாலும், அத்தீவுகளிலுள்ளவர்கள் கோப்பிச்செய்கையில் அனுபவமுள்ளவர்களாக விளங்கியதாலும் இலங்கையில் உற்பத்தியான கோப்பிக்கு அதிக செல்வாக்கில்லாது போயிற்று.

ஐரோப்பாவிலே இலங்கையில் விளைந்த கறுவாப் பட்டைக்கு மிகுந்த மதிப்பிருந்தது. நாட்டின் வருவாய்க்குக் கறுவா முக்கியமான காரணமாயிருந்ததால் டச்சுக் கிழக்கிந்தியக் கொம்பெனியார் இவ்வியாபாரத்தைப் பொன்னேபோல் போற்றி வளர்த்துவந்தனர். அவர்களிடமிருந்து பரிபாலனம் பிரிட்டிஷாருக்கு மாறியபோது, கறுவா வியாபாரத்தில் பிரிட்டிஷார் ஏகபோக உரிமை பாராட்டினர். கறுவாப்பட்டையில் வேறெவரும் வியாபாரம்செய்ய அனுமதிக்கப்படாததால், பிரிட்டிஷார் இவ்வியாபாரத்திலிருந்து பெரும் பொருளீட்டினர். ஆனால் காலம்மாறி இலங்கைக் கறுவாவுக்கிருந்த கிராக்கி அந்நிய நாட்டுச் சந்தையில் குறைந்தது. இலங்கைக் கறுவாவுக்கு அதிகவிலை கொடுக்கவேண்டியிருந்ததால், டச்சுக்காரர் ஜாவாவில் கறுவாவை விருத்திசெய்து விலையைக் குறைத்தார்கள். மேலும் கறுவாவுக்குப் பதிலாக வேறுவாசனைப் பொருள்களும் உற்பத்தியாக்கப்பட்டமை கறுவாப் பட்டையின் உபயோகத்தைக் குறைத்தது. பிறவாசனைப் பொருட்களின் விற்பனை கூடுதலும் கறுவா வர்த்தகம் குறைவுற்றது.

இலங்கையின் பிரதான ஏற்றுமதிச் சரக்காக விளங்கிய கறுவா வியாபாரஞ் சீர்குலையவும் அதன் ஸ்தானத்தைக் கோப்பியடைந்தது. கறுவாவைப்போன்று மலைப்

பிரதேசத்தில் நீர்வளமுள்ள இடத்தில் கோப்பியும் விளைவிக்கப்பட்டது. டச்சுக்காரர் கோப்பிச்செய்கையில் ஆங்காங்கே ஈடுபட்டிருந்தாலும் 1837-ம் ஆண்டிலிருந்தே இலங்கைக் கோப்பியினது நிலைமை சீர்ப்பட்டது எனலாம். கோப்பிச்செய்கை இதுசமயம் அமோகமாக விருத்தியடைந்ததற்குரிய காரணங்கள் பலவாகும். முதன்முதலாக உலக நாடுகளுக்கு அனுப்பப்பட்டுவந்த மேற்கிந்தியத்தீவின் கோப்பியேற்றுமதி வரியும் இலங்கையின் கோப்பியேற்றுமதி வரியும் ஒன்றாக்கப்பட்டது. ஏனெனில் மேற்கிந்தியத்தீவின் கோப்பிக்கு முன்னர் ஏற்றுமதி வரி குறைவாயிருந்தது. அதிக ஏற்றுமதி வரிசெலுத்திவந்த இலங்கைக்கோப்பி முன்னையதுடன் போட்டியிட முடியவில்லை. ஏற்றுமதிவரிகள் இருவிடங்களிலும் ஒன்றுபோலாக்கப்பட்டதும் இலங்கைக் கோப்பிக்கு மதிப்பு ஏற்பட்டது. இரண்டாவதாக மேற்கிந்தியத்தீவுகளிலுள்ள கோப்பித் தோட்டங்களில் வேலைசெய்துவந்த அடிமைகள் சுதந்திரம்பெற்று விடுதலை செய்யப்பட்டனர். அடிமைகள் விடுதலை செய்யப்பட்டதின் விளைவாக ஆங்கு கோப்பி உற்பத்தி குறைந்தது. இலங்கைக் கோப்பி வெளிநாடுகளில் மதிப்புப்பெற்றது. மூன்றாவதாக ஜமேய்க்காத் தீவில் கோப்பிச்செய்கையில் அனுபவம் பெற்றுவந்த **ஆர் பி. டைட்லர்** (R. B. Tytler) என்பவர் 1837-ம் ஆண்டில் இலங்கையில் சரியான, சிறந்த முறையில் கோப்பியைப் பயிரிடுவதற்கான வழிமுறைகளைத் தோட்டக்காரருக்கு எடுத்துக்காட்டினார். இதனாலும் இலங்கையில் கோப்பிச்செய்கை அபிவிருத்தியடைந்தது. கடைசியாக முடிக்குச் சொந்தமான காணி, பூமிகளை அரசாங்கம் பிறருக்கு விற்றதாலும் கோப்பிச்செய்கை முன்னேற்றமடைந்தது. கோல்புறாக்கின் சிபார்சுப்படி அரசாங்கம் வர்த்தகத்துறையில் கொண்டிருந்த ஏகபோக உரிமைகள் நீக்கப்பட்டு வர்த்தகம் தனிநபர்களின் பொறுப்பில் விடவேண்டிய நிர்ப்பந்தம் உண்டானது. எனவே அரசாங்கம் 1835-ம் ஆண்டு இறுதிக்குள் தன்னிடமிருந்த தோட்டங்களையெல்லாம் ஏலத்துக்குவிட்டு விற்பனைசெய்தது. நிறைய இலாபம் சம்பாதிக்கலாம் என்று ஆசைப்பட்ட பலரும் கோப்பிச்செய்கையை மேற்



கொண்டார்கள். பிரிட்டிஷ் கவர்னராக இலங்கையைப் பரிபாலனஞ்செய்த **மக்கென்சி** இராணுவ, சிவில் அதிகாரிகள், சிவில்சேவிஸ் உத்தியோகஸ்தர், இந்தியாவிலும் இங்கிலாந்திலுமுள்ள பணக்காரர்களில் பலர் பணத்தைக் கோப்பித் தோட்டங்களில் முதலீடுசெய்து அத்துறையில் ஈடுபட்டார்கள். 1837-ம் ஆண்டு தொடக்கம் 1845-ம் ஆண்டு ஈறாகக் கோப்பிச்செய்கை நிலப்பரப்பிலும், முதலீட்டிலும், விளைச்சலிலும் தோட்டங்களின் எண்ணிக்கையிலும், ஏற்றுமதியிலும் இறுதியாய் இலாபத்திலும் பன்மடங்கு பெருகியிருந்தது. 1835-ம் ஆண்டில் 142000 பவுண்கள் பெறுமதியான கோப்பி இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் 1845-ம் ஆண்டில் 250000 பவுண்கள் விலைமதிப்பான கோப்பி ஏற்றுமதிசெய்யப்பட்டுளது. இந்தப் பத்து வருடங்களிலும் பிரிட்டிஷ் முதலாளிகள் ஏறக்குறைய 3000000 பவுண்களை கோப்பித்தொழிலில் மட்டும் முதலீடு செய்திருந்தார்கள் என அறியப்படுகிறது.

வளர்ந்தோங்கி வந்த கோப்பிச்செய்கை 1847-ம் ஆண்டில் மந்தநிலையெய்தியது. அதற்குப் பல காரணங்களுள. முதலாவதாகப் பணம் முதலீடு செய்யவிரும்பியவர்கள் அனைவரும் அவசரத்தில் சுலபமான இலாபஞ் சம்பாதிக்கும் நோக்கத்திற் கோப்பித் தோட்டங்களை அதிக விலைக்கு வாங்கியமையாகும். நிலத்தின் தன்மைகளையும் சாகுபடி முறைகளையும் கவனியாது தோட்டங்களை வாங்கிக் கோப்பியைப் பயிரிட்டபோது அத்தோட்டங்கள் எதிர்பார்த்த பயன்தரவில்லை. தோட்டத்தொழிலாளருக்குக் கிராக்கிஏற்பட்டதால் அவர்களுக்குக் கூடுதலான வேதனம் கொடுக்கவேண்டியிருந்தது. தோட்டங்களை வாங்க முன்வருபவர்களின் தொகை அதிகரிக்கவே தோட்டநிலங்களை அளந்து கொடுக்கும் வேலையில் அரசாங்க உத்தியோகஸ்தர் தாமதித்தனர். ரோட்டுகள் அதிகம் போடப்படாமையினால், தலைச்சுமையில் எடுத்துச்சென்ற விளைபொருட் சாமான்களுக்கு அதிக சுமைகூலி கொடுக்கவேண்டியிருந்தது. இதன் நிமித்தமாகவும் உற்பத்திச்செலவு பெருகியது. இரண்டாவதாக உற்பத்திச்

செலவு அதிகரித்ததால் இலங்கையின் கோப்பிவிலையும் வெளிநாட்டில் அதிகரிக்க நேரிட்டது. இதற்கிடையில் பிரிட்டிஷார் **ஜாவாவிலும் பிரேஸிலிலும்** கோப்பியை மிகமலிவாக உற்பத்திசெய்து இங்கிலாந்தில் இறக்குமதி செய்தனர். எனவே இலங்கைக் கோப்பி அதிகம் விற்பனையாகவில்லை. மூன்றாவதாக 1845-ம், 1846-ம் ஆண்டுகளில் மிகுந்த பணநெருக்கடி ஏற்பட்டதால் இலங்கைக் கோப்பித் தோட்டமுதலாளிகள் கோப்பிச் செய்கைக்கு வேண்டிய பணத்தைக் கடனாகப்பெற இயலவில்லை. இதனால் பல தோட்ட முதலாளிமார் நட்டம் அடைந்தனர். இக்காரணங்களால் 1847-ம் ஆண்டு கோப்பிச் செய்கையில் மந்தம் ஏற்பட்டது.

1855-ம் ஆண்டில் கோப்பிக்கு மீண்டும் நல்லகாலம் பிறந்து, அது தனது பழைய நிலையையடைந்தது. பணம் வைத்திருந்தவர் அனைவரும் கோப்பிச் செய்கையில் ஈடுபட்டனர். மலைநாட்டுப் பிரதேசத்தில் கோப்பி நன்றாக விளைவிக்கலாம், அதனால் அதிக இலாபம் தேடலாம் என்று கருதிய மலைநாட்டுக் குடியானவரும் கோப்பிச் செய்கையில் மும்முரமாக ஈடுபட்டனர். மாத்தளை, கண்டி, குருநாகல், நாவலப்பிட்டி, டிக்கோயா, கம்பளை, நுவரெலியா, அப்புத்தளை, வெலிமடை, உடப்புசலாவை, பேதுருதாலகாலை ஆகிய இடங்களிலெல்லாம் கோப்பி பெருவாரியாகச் சாகுபடி செய்யப்பட்டது. கோப்பி ஏற்றுமதியும் அதிகரித்தது; சாகுபடிநிலங்களும் பெருகின. 1847-ம் ஆண்டில் 60000 ஏக்கரில்மட்டும் கோப்பி பயிர் செய்யப்பட்டது. ஆனால் 1878-ம் ஆண்டில் 275000 ஏக்கர் நிலம் சாகுபடிக்குப் பயன்படுத்தப்பட்டது.

1870-ம் ஆண்டுவரைக்கும் உச்சநிலையிலிருந்த கோப்பிச் செய்கையானது அதற்குப்பின் தனது இறுதிக் காலத்தை அடைந்தது எனலாம். 1869-ம் ஆண்டு கோப்பிச் செடிகளில் ஒருவிதமான பூச்சிவிழுந்து, பயிர்களை நாசஞ் செய்தது. இதனால் விளைவு மிகவுங் குன்றிப் போனது. இந்தநிலை கோப்பிப்பூச்சியின் காரணமாக 1890-ம் ஆண்டளவில் 50000 ஏக்கர் நிலங்களே கோப்பி



விளைவின்கீழிருந்தன. மற்றோர் காரணம் யாதெனில் பிரேஸில் நாட்டுத் தோட்டமுதலாளிகள் இலங்கைத்தோட்ட முதலாளிகளுடன் கோப்பி வியாபாரத்தில் போட்டியிட்டனர். மேலும் மேல்நாடுகளிற் கோப்பிக்கு இருந்த மதிப்பும் வரவரக் குறைந்துபோயிற்று. இங்ஙனமாகக் கோப்பித் தொழில் இறுதிக் காலத்தை எய்தியதால் ஏற்றுமதி குறைந்து இந்நாட்டின் பொருளாதார நிலை படுமோசமானது. அரசாங்க வருமானம் குன்றியதும் மற்றும் போக்குவரத்துச் சாதனங்களின் விஸ்தரிப்பும் தடைப்பட்டது.

கோப்பிச் செய்கை வீழ்ச்சியுற்றதால் இலங்கையின் பொருளாதாரம் பெருமளவு சீர்குலையக் கோப்பிக்குப் பதிலாக எத்தோட்டப்பயிரை விளைவித்து இலாபம் தேடலாம் என்று தோட்ட முதலாளிகள் சிந்திக்கலாயினர். அவர்கள் சிந்தனையின் விளைவாகச் சிங்கோனா எனப்படும் கொயினாச்செடி இலங்கையில் பயிரிடப்பட்டது. ஆரம்பத்தில் ஹக்கலையில் சிங்கோனாப்பயிர் சிறிதளவு விளைவிக்கப்பட்டது. 1872-ம் ஆண்டில் 500 ஏக்கர் வரையில் சிங்கோனாச் செய்கையின் கீழிருந்தது. வரவர இலங்கைச் சிங்கோனாவுக்கு லண்டனில் நல்ல செல்வாக்கு ஏற்பட்டதால் விளைவுகள் அதிகரிக்கப்பட்டு 1879-ம் ஆண்டில் 60000 ஏக்கர் நிலத்தில் சிங்கோனா சாகுபடியாயிற்று. தேவைக்கு அதிகமான பேர் இச்செய்கையில் ஈடுபட்டு அளவுக்கு மிஞ்சிப் பயிரை உற்பத்திசெய்ததால் சிங்கோனாவின் விலை இறங்கியது. இதனிடையில் ஜாவாத்தீவிலும் இப்பயிர் விளைவிக்கப்பட்டதால் தோட்ட முதலாளிமார் எதிர்பார்த்த இலாபம் கிட்டாததைக்கண்டு ஏமாந்து படிப்படியாக இச்செய்கையைக் கைவிட்டனர்.

சிங்கோனாத் தொழிலின் கதி இவ்வாறாக முன்பு கோப்பி பயிரிட்ட இடங்களில் தேயிலையைப் பயிரிட முயற்சித்தனர். 1872-ம் ஆண்டில் சிறிதளவு ஆரம்பிக்கப்பட்ட தேயிலைச்செய்கை படிப்படியாக அபிவிருத்தியானது. 1883-ம் ஆண்டில் தேயிலை 35000 ஏக்கர் நிலத்

தில் சாகுபடி செய்யப்பட்டது. மறுவருடம் அது இருமடங்காயிற்று. 1889-ம் ஆண்டில் 35000000 இறாத்தல் தேயிலை வெளிநாட்டுக்கு ஏற்றுமதிசெய்யப் பட்டது. இலங்கையிலிருந்து ஏற்றுமதியான விளைபொருட்களில் தேயிலை மூன்றில் ஒரு பங்காகும். இங்ஙனமாக 20-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை தேயிலைச்செய்கை அபரிமிதமாக இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு, முக்கிய ஏற்றுமதிப் பொருளாயிருந்து பெரும் இலாபத்தைத் தேடித் தந்துளது.

## இங்கிலாந்திலிருந்து தாவர ஆராய்ச்சி

நிலத்திலிருந்து றப்பர்க் கன்றுகளை இலங்கைக்குக் கொண்டுவந்து 1876-ம் ஆண்டில் பேராதனை போன்ற இடங்களில் நாட்டிப் பரிசோதனை செய்தனர். தேயிலைச் செய்கையில் தகுந்த இலாபம் கிடைத்து வந்ததால் றப்பர் செய்கையில் தோட்ட முதலாளிமார் அதிக நாட்டமில்லாதிருந்தனர். 1900-ம் ஆண்டில் 2000 ஏக்கர் நிலத்தில் இலங்கையில் றப்பர் விருத்திசெய்யப்பட்டது எனினும் அதிவிரைவாக இலங்கையில் றப்பர்ச்செய்கை முன்னேறியது. காரணம் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற இடங்களில் மோட்டார் உற்பத்திக்குப் பெருமளவில் றப்பர் தேவைப்பட்டதும், மற்றும் மின்சாரம் சம்பந்தப்பட்ட தொழில் துறைகளுக்கு அது உபயோகப்பட்டதுமேயாம். றப்பர் முறையாகச் செய்கைபண்ணுவது பற்றியும் பாலிலிருந்து றப்பர் தயாரிக்கும் வழிவகைகளைப் பற்றியும் இங்கிலாந்துத் தாவர ஆராய்ச்சியாளர் மக்களுக்கு எடுத்துக் காட்டினார்கள். எனவே உஷ்ணமும் ஈரக்காற்றுமுடைய பகுதிகளான களுத்துறை, கேகாலை இரத்தினபுரி, காலி போன்ற இடங்களில் றப்பர்ச் செய்கை ஏராளமாக நடைபெற்றது. 1910-ம் ஆண்டில் 200000 ஏக்கர் நிலத்தில் றப்பர் விளைவிக்கப்பட்டது. 1920-ம் ஆண்டில் 400000 ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தில் இச்செய்கை மேற்கொள்ளப்பட்டது.

தேயிலையைப் போன்று இலங்கையில் இதுகாலை விளைவிக்கப்பட்ட மற்றொரு பிரதானமான பொருள்



தென்னையாகும். தென்னந் தோப்புக்கள் பண்டைநாள் தொட்டே இலங்கையில் பயிரிடப்பட்டன. முற்காலத்தில் தென்னை பெரும்பாலும் வீட்டுவளவுகளிலேயே உற்பத்தியாக்கப்பட்டது. பிற்காலத்தில் சவர்க்காரம் முதலிய பொருட்கள் தயாரிப்பதற்கும், வேறு தேவைகட்கும் தேங்காயெண்ணெய் முதலிய பொருட்கள் உபயோகத்திற்கு வந்தபோது தெங்குப் பொருட்களுக்கு வெளிநாடுகளில் அதிக மதிப்பு உண்டானது. கடற்கரைப் பகுதிகள் தென்னந்தோப்புக்களை உண்டாக்குவதற்கு ஏற்ற இடமாயிற்று. நீர்கொழும்பு, சிலாபம், குருநாகல், யாழ்ப்பாணம் முதலிய பகுதிகளில் அமோகமாகத் தென்னந்தோப்புக்கள் பயிரிடப்பட்டன. 1910-ம் ஆண்டில் ஏற்றுமதியான தெங்குப்பொருட்கள் 24 சதவிகிதமாகவும், 1920-ம் ஆண்டில் 27 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளன.

தேயிலை, றப்பர், தென்னை ஆகிய மூன்று பயிர்களை இலங்கை உற்பத்தி செய்து அவற்றை வெளிநாடுகளுக்கு அனுப்பித் தனது பொருளாதாரத்தைச் சீர்படுத்தி வந்தது. இன்னும் இம்மூன்று பொருட்களிலேயே இந்நாட்டின் பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அமைந்துள்ளன. இவற்றின் விலை குறைந்தாலோ, விற்பனை குறைந்தாலோ, அன்றிப் பிறநாடுகள் இம் மூன்று பொருட்களையும் உற்பத்தி செய்யப் போட்டியிட்டு முனைந்து நின்றாலோ இலங்கையின் பொருளாதார நிலை சீர்குலைந்துவிடும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

கோப்பி, தேயிலை, றப்பர், தென்னைமுதலாகிய வியாபாரப் பொருட்களுக்குப் பிரிட்டிஷ் அரசாங்கம் விசேஷ அக்கறைகாட்டி வந்தாலும் உணவுப் பொருளாகிய நெல் உற்பத்திப் பெருக்கையும் புறக்கணித்தவர்களல்லர். குளங்களைச் செப்பனிட்டும், நீர்ப்பாசன வசதிகளை ஏற்படுத்தியும், கால்வாய்களை வெட்டியும் நெல் உற்பத்திக்கு ஆவன செய்தார்கள். பிரிட்டிஷ் அரசாங்கம் வருமானத்தைமட்டும் அதிகரிப்பதுடன் நின்றுவிடாமல் குடிசனங்களுக்கும் பிரயோசனமானதும், அவசியமானதுமான நீர்ப்பாசன வசதிகளைப் புனருத்தாரணஞ்

செய்து குடிமக்களின் வருவாயையும் பெருக்குவதிற் சிறிது கவனம் செலுத்தினர்கள். மராமத்து இலாக்காவின் (Public Works Department) கீழிருந்த நீர்ப்பாசன வேலைகளைப் பரிட்சித்து விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து 1900-ம் ஆண்டில் கவர்னர் றிட்ஜ்வே காலத்தில் நீர்ப்பாசன இலாக்கா (Irrigation Department) ஒன்றை ஏற்படுத்தி இவ்வேலைகளை அதனிடம் ஒப்படைத்தார்கள்.

### சுருக்கம்

பிரிட்டிஷார் இலங்கையில் சமுதாயத்துக்குகந்த பரிபாலன முறையை வகுத்தபின் பொருளாதாரத்தை வளர்க்க விசேஷ கவனங்காட்டல்—1837 முதல் 20-ம் நூற்றாண்டு ஆரம்பகாலம் வரை கோப்பி, தேயிலை, றப்பர்த்தோட்டங்களையும், தென்னந்தோட்டங்களையும் ஆரம்பித்து அமோகமாக விருத்தியாக்கல் — மோட்டார்ப்பாதைகள், புகையிரத வீதிகளைத்திறந்து தோட்டப்பிரயோசனங்களை இலகுவிற் கொண்டு செல்லவும், பிரயாண வசதியை இலகுபடுத்தவும், தோட்டங்களுக்குப் பசளை முதலியவற்றைக் கொணரவும் வசதிகளை ஏற்படுத்தல் — தோட்டங்களில் உழைக்க இந்தியத் தொழிலாளர்களை வருவித்தல் — விவசாயத்தோடு தொடர்பு பூண்ட வர்த்தகம் பெருகல் — பழைய சிங்கள அரசர் காலத்துக் குளங்களையும் கால்வாய்களையும் செப்பனிட்டு உணவுப்பயிர் அபிவிருத்திக்கு ஊக்கங் காட்டல் — சுதேச மக்களிடம் போதிய மூலதனமின்மையின் பெருந்தோட்டங்களைப் பிரிட்டிஷ் துரைமார் முதலீடு செய்து உடைமையாக்கல் — 1832-ல் ஜோர்ஜ்பேர்ட் கம்பளைப்பகுதியில் முதன்முதல் கோப்பித்தோட்டத்தைத் திறத்தல் —இதனையடுத்து பாண்ஸ் கவர்னரும், சில அரசாங்க ஏஜண்டுகளும் கோப்பிச்செய்கையில் ஊக்கங்காட்டல் — ஜாவாவில் டச்சுக்காரர் கறுவாவை விளைவித்துக் குறைந்த விலைக்கு விற்கவாரம்பித்தமையாலும், பிற வாசனைப் பொருட்கள் உபயோகத்துக்கு வந்தமையாலும் இலங்கைக் கறுவாப்பட்டைக்கு மதிப்பு குறையலாயிற்று. எனவே இலங்கையில் கோப்பிச்செய்கையை விருத்தியாக்க முயற்சிகள் எடுக்கப்படல்—1837-ல் டைட்லர் என்பவர் கோப்பிச் செய்கைக்கான சிறந்தவழி முறைகளை எடுத்துக் காட்டல்—கோல்புறூக் சிபார்சுப்படி அரசாங்கத்தின் வர்த்தக ஏகபோக உரிமை நீக்கப்பட்டமையால் அரசாங்கம் தோட்டங்களை ஏலத்துக்கு விடல் — இராணுவ சிவில் அதிகாரிகள் இங்கிலாந்திலுள்ள பல பணக்காரர் ஆகியோர் கோப்பித்தோட்டங்களில் முதலீடு செய்து அத்துறையில் ஈடுபடலும், கோப்பிச்செய்கை பன்மடங்கு விருத்தியாதலும் — 1847-ல் கோப்பிச்செய்கை மந்தநிலை பெய்தல் — அதற்குரிய காரணங்கள் — 1855-ல் மீண்டும் கோப்பிச் செய்கையில் அபிவிருத்தி ஏற்படல் — மாத்தளை, கண்டி, குருநாகல், டிக்கோயா முதலிய இடங்களிலெல்லாம் கோப்பி பெருவாரியாகச் சாகுபடி செய்யப்படல்— 1869-ல் பிறேஸில்நாட்டுக் கோப்பியின் போட்டி — 1872 இலிருந்து தேயிலைச்



செய்கை படிப்படியாக விருத்தியாதல் — 1876 இலிருந்து றப்பர்ச் செய்கை விருத்தியாதல் — 1900 ஆண்டில் 2000 ஏக்கர், 1910-ல் 200000 ஏக்கர், 1920-ல் 4000000 ஏக்கர் நிலத்தில் றப்பர் பயிரிடப்படல் — சவர்க்காரம், பிஸ்கற் என்பவற்றின் தேவைகளுக்குத் தென்னைப் பொருட்கள் உபயோகிக்கப்பட்டமையால் இலங்கையின் பழைய தாவரமாகிய தென்னைச் செய்கையிலும் அபிவிருத்தி ஏற்படல் — கோப்பி, தேயிலை, றப்பர், தென்னை ஆகியவை இலங்கையின் பொருளாதார விருத்திக்கு உயிர்நாடியாக அமைதல்.

### வினுக்கள்

1. கறுவாப்பட்டைக்கு அடுத்தபடியாக அதன் ஸ்தானத்தைப்பெற்ற முதல் வர்த்தகப் பயிர் யாது? அதன் அபிவிருத்தியையும், அபிவிருத்திக்குக் காரணமாய் உழைத்தோரையும் பற்றி ஆராய்க.
2. கோப்பிச்செய்கையில் மந்தமேற்பட்ட காரணங்களையும், இன்று இலங்கைக் கோப்பி வகிக்கும் ஸ்தானத்தையும் பற்றி விபரிக்குக.
3. இலங்கையின் பொருளாதார வர்த்தக விருத்திக்கு ஜீவநாடியாயுள்ள பயிர்வகைகளைக் கூறி அவை விருத்தியடைந்த வகையை ஆராய்க.
4. இலங்கையில் தேயிலை அல்லது றப்பர் என்னும் பொருள்பற்றி ஓர் கட்டுரை வரைக.

பதினான்காம் அத்தியாயம்

# தோட்டங்கள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட விளைவுகள்

தோட்டப் பயிர்ச்செய்கை மேலோங்கி வளர ஆரம்பித்ததால் இலங்கையில் உண்டான மாற்றங்கள் பலவாகும் அவற்றை ஒவ்வொன்றாக இவண் ஆராய்வோம்.

## ரோட்டுக்கள்

பிரிட்டிஷார் இலங்கைக்கு வருவதன்முன் கிராம மக்கள் தங்களுக்கு வேண்டிய அத்தியாவசியமான பொருட்களைத் தாங்களே உற்பத்திசெய்துகொண்டபடியாலும் வெளிநாடுகளுடன் அதிக தொடர்பின்றி வாழ்ந்திருந்தபடியாலும் இலங்கையில் ரோட்டுக்கள் இல்லாதிருந்தன. இந்நாட்டுக்குப் பிரிட்டிஷார் வந்து தோட்டங்களைத் திறந்த பின்பு தோட்டத்தின் உற்பத்திப்பொருட்களைக் கொழும்புப் பட்டினத்திற்கு அனுப்பவும், அங்கிருந்து அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யவும், தோட்டத்தில் வேலைசெய்வோருக்கு உணவு முதலிய இன்றியமையாத சாதனங்களைக் கொழும்பு போன்ற இடங்களிலிருந்து தருவித்துக் கொடுக்கவும், போக்குவரத்துச் சாதனங்கள் தேவையாயிருந்தன. கண்டி முதலிய மலைப் பிரதேசங்களுக்குச் செல்வதற்குத்தடையான காட்டுப் பாதைகளைக் கடக்கவும், கல்ரோட்டுகளை அமைக்கவும், பாலங்களைக் கட்டவும் வசதிசெய்து தரும்படி தோட்டத்துரைமார் அரசாங்கத்திடம் விண்ணப்பித்தனர். அரசாங்க வருவாய் போதாமையால் தோட்டத்துரைமாரின் வேண்டுகோளை நிறைவேற்ற முடியவில்லை. பின்பு தோட்டங்களின் விளைவு அதிகரித்து வியாபாரம் பெருகவே அரசாங்க வருமானமுங் கூடியது. அரசாங்கத்தார் பழைய ரோட்டுகளைப் புதுப்பித்ததுடன் புதிய பல ரோட்டுக்களை மேல்மாகாணத்திலும், சப்ரகமுவா மாகாணத்திலும் அமைத்தனர். 1841-ம் ஆண்டில் கொழும்பு - கண்டி ரோட்டுக்கும், அதன்பின் அம்பேபுச - குருநாகல் ரோட்டுக்கும் கல்லிடப்பட்டது. 1847-ம் ஆண்டில் கோப்பி



வியாபாரத்தில் மந்தம் ஏற்படவே அரசாங்க வருவாய் குறைந்து ரோட்டு வேலைகள் முடியவில்லை. எனவே 1848-ம் ஆண்டு ரோட்டுச் சட்டமொன்று பிறப்பிக்கப்பட்டு, ஒவ்வொரு ஆணும் 6 நாட்களுக்கு ரோட்டில் கூலியில்லாமல் வேலைசெய்ய வேண்டுமென்றும் தவறினால் தலைக்கு ரூ. 1-50 அபராதம் கட்டவேண்டுமென்றும் உத்தரவிடப்பட்டது.

திரும்பவும் கோப்பி வியாபாரம் தலைதூக்கவே ரோட்டு வேலைகளில் அபிவிருத்தி காணப்பட்டது. கவர்னர் **சேர். ஜோர்ஜ் அண்டர்சன்** என்பவர் கம்பளையிலிருந்து எட்டியாந்தோட்டைக்கு ஒரு ரோட்டை நிர்மாணித்தார். இந்த ரோட்டு கொழும்பையும் - கண்டியையும் எட்டியாந்தோட்டைக்கூடாக இணைத்தது. கவர்னர் **சேர். ஹென்றி வார்ட்** 1855-ம் ஆண்டில் கண்டி - கொழும்பு ரோட்டிலுள்ள பாலங்களைத் திருத்தினார். கண்டிக்கும் கம்பளைக்கும் கிழக்கேயுள்ள பகுதிகளில் ரோட்டுக்களை அமைத்தார். கவர்னர் **சேர் ரொபின்சன்** 1865-ல் கினிகாதனையிலிருந்து டிக்கோயாவுக்கு ஒருரோட்டும், காலியிலிருந்து அக்குரசவுக்கு ஒருரோட்டுந் திறந்தார். மேலும் கொழும்பு - பதுளை ரோட்டை மட்டக்களப்பு வரைக்கும் விஸ்தரித்தார். நுவரெலியாவிலிருந்து மஸ்கேலியாவுக்கு ஒருரோட்டையும், களுத்துறை, இரத்தினபுரிப் பகுதிகளில் சில ரோட்டுகளையும் கவர்னர்களான **சேர் கிறிகோறி, கோர்டன்** என்பவர்கள் திறந்தனர். கவர்னர் **ரிட்ஜ்வே** காலத்திலும் தோட்டங்களுக்குச் சேய்மையிலுள்ள பிரதேசங்களில் ரோட்டுக்கள் அமைக்கப்பட்டன. திரிகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களுக்கெல்லாம் ரோட்டுக்கள் போடப்பட்டன. மாட்டுவண்டிகளின் சேவை திருப்திகரமில்லாதிருக்கவே ரோட்டுக்களில் மோட்டார்ப் போக்குவரத்துக்கள் ஏற்பட்டன. நூற்றுக்கணக்கான மோட்டார் லொறிகளும், வண்டிகளும், மோட்டார் கார்களும் அதிகமாக ரோட்டுக்களில் ஓடத்தொடங்கின சில ரோட்டுகளுக்குக் கற்கள் போடப்பட்டு உறுதிப் படுத்தப்பட்டன. 1927-ம் ஆண்டில் ஏறக்குறைய இலங்கையில் 16400 மைல் நீளமுள்ள ரோட்டுக்கள் திறக்கப்பட்டன.

## புகையிரதத் தபால் போக்குவரத்து

இந்தியாவில் 1840-ம் ஆண்டில் புகையிரதப் பாதைகள் அமைப்பதற்கான முயற்சிகள் செய்யப்படுவதை அறிந்து தோட்டத்துரைமாரும், வியாபாரிகளும் இலங்கையிலும் அவ்வண்ணம் செய்யவேண்டுமென்று அரசாங்கத்தைத் தூண்டினர். உற்பத்திப் பொருட்கள் தோட்டத்திலிருந்து மாட்டுவண்டியில் எடுத்துச்செல்வதால் காலதாமதம் ஏற்படுவதாலும், தோட்டத் தொழிலாளிகளுக்கு வேண்டிய உணவுப் பொருட்கள் மற்றும் உரம் ஆகியவைகளை கொழும்பிலிருந்து எடுத்துவருவதற்குத் துரிதமாய் அமைந்த போக்குவரத்து வசதி தேவைப்பட்டதாலும் புகையிரதப் போக்குவரத்து வசதி ஏற்படுத்துவது அவசியமாகக் கருதப்பட்டது. மேலும் தோட்டங்களிலிருந்து கொழும்புக்கு எடுத்துச் செல்லும் கோப்பியைக் குறைந்த செலவிலும், குறிப்பிட்ட காலத்திலும் எடுத்துச் சென்றால்தான் உரியகாலத்தில் அனுப்பப்பட்டு அங்குள்ள பிறேசில் கோப்பியினுடைய எதிர்ப்பைச் சமாளிக்கமுடியும்; எனவே தோட்டத்துரைமாரின் விருப்பத்திற்கிணங்கிக் கோப்பிச்செய்கை நல்லஉச்சநிலையிலிருந்தபோது, இந்நாட்டில் 1858-ம் ஆண்டு புகையிரதப் பாதை இடுவதற்கான ஆரம்பப் பிரயத்தனம் எடுக்கப்பட்டது. முதலில் ஒரு பிரிட்டிஷ் கொம்பெனி இதைச் செய்துவந்தது. 1867-ம் ஆண்டில் கண்டிக்கு ஒரு புகையிரதப் பாதை அமைக்கப்பட்டது. 1873-ம் ஆண்டில் இப்புகையிரதப் பாதை கம்பளைவரைக்கும், 1874-ம் ஆண்டில் நாவலப்பிட்டி வரைக்கும், 1885-ம் ஆண்டில் நனுஓயாவுக்கும், 1893-ம் ஆண்டில் அப்புத்தளைக்கும், 1899-ம் ஆண்டில் பண்டாரவளைக்கும், 1924-ம் ஆண்டில் பதுளைக்கும் விஸ்தரிக்கப்பட்டது. இதைத் தவிர்த்துத் தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் ஆகிய தோட்டப் பொருட்களின் ஏற்றுமதியை உத்தேசித்து அவிசாவலை, எட்டியாந்தோட்டை, இரத்தினபுரி, ஒப்பநாயக்க, உடப்புசல்லாவ ஆகியஇடங்களுக்குப் புகையிரதப்பாதை போடப்பட்டது. இதுமட்டுமன்றிப் பிரயாணிகளின் சௌகரியத்தை முன்னிட்டுக் களுத்துறை, காலி,



மாத்தறை, நீர்கொழும்பு, புத்தளம் போன்ற இடங்களிலும் புகையிரதப் பாதைகள் அமைக்கப்பட்டன. அன்றியும் கரையோரப்பகுதிகளிலும் யாழ்ப்பாணம், குருநாகல், அநுராதபுரம், திரிகோணமலை, மதவாச்சி ஆகிய இடங்களிலும் பல கவர்னர்களால் மக்களின் போக்குவரத்து வசதிக்காகப் புகையிரதப் பாதைகள் விஸ்தரிக்கப்பட்டன. இலங்கையில் தற்சமயம் ஏறக்குறைய 950 மைல் நீளமான புகையிரதப் பாதை போடப்பட்டுளது. இப்பாதைகளால் வியாபாரம் அதிகரித்ததுமன்றி மக்கள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சுலபமாய்ப் போய்வரவும் ஏதுவாயிற்று.

இலங்கையில் 1858-ம் ஆண்டில் தபால் செய்திகள் அனுப்பும் முறை ஏற்பட்டு வியாபாரமும் தொழில்களும் வளர்ச்சியுற்றன. அதே வருடத்தில் இலங்கையின் பிரதான பாகங்களுக்குத் தந்தி இணைப்பு ஏற்படுத்திக் கொழும்புக்கும் மற்றும் கண்டி, திரிகோணமலை, மன்னார் போன்ற இடங்களுக்கும் தந்திமூலம் செய்திகள் அனுப்பப்பட்டன. அரசாங்க காரியாலயங்களிலும் முக்கிய பட்டினங்களிலும் டெலிபோன்மூலம் தொடர்பும் ஏற்படுத்தப் பட்டது. 1870-ம் ஆண்டில் சமுத்திரத்தின் கீழ்ச் செல்லும் தந்தி (Cables) முறை கையாளப்பட்டு இலங்கைக்கும் இந்தியாவுக்கும் செய்திகள் பேசப்பட்டு வந்தன.

## கொழும்புத் துறைமுகம்

கொழும்புக்கெனச் சிறந்த துறைமுகம் ஒன்றிலாததால் தோட்டப் பொருட்களெல்லாம் ரோட்டு மார்க்கமாகவும் புகையிரத மார்க்கமாகவுங் கொண்டுவரப்பட்டு வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டன. கொழும்புக்குடா அதிக ஆழமில்லாதிருந்ததால் பெரிய கப்பல்களைக் கரைசேர்த்து நங்கூரமிட முடியாது சிறிது தூரத்திலேயே கடலுக்குள் நங்கூரமிட வேண்டியிருந்தது. இக்காரணத்தால் பெரும்பாலான கப்பல்கள் காலித் துறைமுகத்துக்குச் சென்று தங்கிவந்தன. அங்குள்ள துறைமுகத்துக்குச் சமீபமாய்ப் பாறைகளிருந்ததால் விபத்துக்கள் ஏற்படலாயின. இத்துறையை அபிவிருத்தி பண்ணுவதற்கும்

அரசாங்கம் பெரும் பணத்தைச் செலவிடவேண்டியிருந்ததால், காலித் துறைமுகத்தைத் திருத்துவதைவிடக் கொழும்புத் துறைமுகத்தைத் திருத்துவது பலவிதத்திலும் நன்மை பயக்குமென அரசாங்கம் கருதியது. இதனிடையில் 1869-ல் **சூயஸ் கால்வாய்** திறக்கப்பட்டதால் இந்துமகாசமுத்திரத்திற் செல்லும் வர்த்தகக் கப்பல்களுக்கு இலங்கை ஓர் தங்குமிடமாகியது. வியாபாரம் அதிகரிக்கவும் கப்பற்போக்குவரத்தும் பெருகியது. வியாபாரத்துக்கும், கப்பல்கள் வந்து தங்கிச் செல்லுவதற்கும் கொழும்புத் துறைமுகம் ஏற்றதென எண்ணி அரசாங்கம் கொழும்புத் துறைமுகத்தைத் திருத்தி அணைபோடுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்தது. மேலும் கொழும்பில் ஏற்றுமதி செய்யும் சரக்குகளுக்குக் கப்பல்வரி அதிகமாயிருந்ததால், கொழும்பிற் கப்பல்கள் அதிகநாள் தாமதமின்றி விரைவில் சரக்குகளை ஏற்றிச் செல்லுவதற்கு அனுகூலமாகக் கொழும்புத் துறைமுகத்தைத் திருத்துவதும் அவசியமாயிற்று. இவ்வேலையை அரசாங்கமேற்று 1882-ம் ஆண்டு முடித்துக் கொடுத்தது. புதிய அணைகளைக் கட்டிக் கொழும்புத்துறைமுகத்தை 600 ஏக்கர் அளவில் நிர்மாணித்தது. இதன் பயனாய் மேற்கே லண்டன், கிழக்கே அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கிடையிற் கொழும்புத் துறைமுகம் ஒரு கேந்திரஸ்தானமாக அமைவுற்றது. கப்பற் போக்குவரத்தால் ஏற்றுமதி பெருகவே இலங்கையின் பொருளாதார நிலையும் உயர்ந்தது.

## தொழிலாளர் – தென்னிந்தியர் வருகை

தோட்டங்களின் தொகை பெருகிவர அவைகளில் வேலைசெய்வதற்கு வேண்டிய தொழிலாளரைத் தேடிப் பிடிப்பது பெரும் பிரச்சினையாகிவிட்டது. இராஜகாரிய முறைப்படி சேவைகளை அனுபவித்துவந்த அரசாங்கம், கோல்புறூக்கொமிஷன் சிபார்சுப்படி அம்முறை ஒழிக்கப்பட்டபின் தோட்டங்களில் வேலை செய்வதற்கான தொழிலாளர் சேவையை இழந்துவிட்டது. தம் சொந்த காணி பூமியிலே பிறந்து வளர்ந்துவந்த சிங்களக் குடியானவர் தம் பிறப்பிடத்தையும், மனைவி மக்களையும் கிராமாந்தரங்களில் விட்டுவிட்டுத் தொலைவிலுள்ள தோட்-



டங்களுக்குச் சென்று தொழிலாற்ற விரும்பவில்லை. அன்றியும் கிராமப் புறத்திலிருந்து தோட்டங்களுக்குச் சென்று கூலிவேலை செய்வதை மிக இழிவாக மக்கள் அக்காலத்திற் கருதினர். எனவே தோட்டவேலைக்கான தொழிலாளரைத் தென்னிந்தியாவிலிருந்து தருவிக்க வேண்டியதாயிற்று.

தோட்டத் துரைமாருக்கு இது விஷயத்தில் அரசாங்கம் பல உதவிகளைச்செய்தது. மன்னாருக்கும், இராமேஸ்வரத்துக்குமிடையில் வள்ளப்போக்குவரவைச் செய்து கொடுத்தது; தலைமன்னாரிலிருந்து மதவாச்சிக்கு ஓர் புகைவிரதப்பாதையை அமைத்தும் கொடுத்தது. இந்தியாவிலிருந்து இலங்கைத் தோட்டங்களுக்குவரும் தொழிலாளர்கள் அம்மை, காலரா ஆகியதொற்றுநோய்களால்பீடிக்கப்படாதிருக்கவும், இந்நோய்களைப் பரப்பாதிருக்கவும் இலங்கையில் தங்கிடத்தை ஏற்படுத்திச் சோதனைக்காலம்வரை அவர்களை நிறுத்தியிருந்தது. அனைத்துக்கும் மேலாக 1865-ம் ஆண்டில் ஒரு சட்டமியற்றித் தொழிலாளருக்கு வைத்திய வசதிகளைத் தோட்டத்துரைமார் கட்டாயம் செய்து கொடுக்க வேண்டுமென்றும் அரசாங்கம் விதித்தது. இதன்பயனாகத் தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்துசேர்ந்த தொழிலாளர்தொகை ஏறக்குறைய 10 இலட்சமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இங்ஙனம் இத் தொழிலாளர் வர்க்கம் மலைப்பகுதிகளில் தொழில் புரிந்து நாளடைவில் ஓர் அரசியல் பிரச்சினைக்கும் அடிகோலியது. அதாவது பெரும் பான்மையான தோட்டத் தொழிலாளர் தம் வாக்குரிமையால் **பாராளுமன்றம்** (Parliament) மலைநாட்டவரையே தம் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து அனுப்பினர். இதனால் மலைநாட்டைத் தம் தாயகமாய்க் கொண்டுள்ள சிங்களவர் தம் மலைநாட்டுச் சகோதரர் ஒருவரைப் பிரதிநிதியாக அனுப்பவியலாது தவித்துக் கொண்டிருந்தனர். இது ஓர் பெருங்குறையாகவேயிருந்து வந்தது. ஆனால் புதிதாக ஏற்பட்டுள்ள சட்டப்படி இங்குவந்து குடியேறியுள்ள தோட்டத் தொழிலாளர் இலங்கைப் பிரஜாவுரிமை கிடைத்துள்ள ஏனைய

இந்தியருடன் சேர்ந்து தங்களுக்கென நான்கு பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்து மேல் நடைபெறவிருக்கும் புதிய பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைப்பார்கள். இனிமேல் மலைநாட்டுச் சிங்களவர் இக்குறைபாட்டைக் கூறமாட்டார்கள்.

## இலங்கை வங்கி

பிரிட்டிஷார் இலங்கைக்கு வந்தபோது கறுவா வியாபாரமே பிரதானமாயிருந்துவந்தது. இதனால் அதிக லாபம் இல்லையென்றே சொல்லவேண்டும். வெளிநாட்டு வியாபாரம் இவ்வாறிருக்க உள்நாட்டிலும் மிகக்குறுகிய அளவிலேயே வியாபாரம் நடைபெற்றது. அரசாங்கம் கறுவா வியாபாரத்தில் ஏகபோகவுரிமை பாராட்டியதால், தனிப்பட்டவர் அவ்வியாபாரத்தைச் செய்யவும் இயலாது போயிற்று. 1833-ம் ஆண்டில் கோல்புறூக் கொமிஷன் சிபார்சுப்படி அரசாங்கத்திடமிருந்த வியாபார ஏகபோகவுரிமை எடுபட்டது. இக்காலிலிருந்து வியாபாரமும் தொழில்களும் அதிகரித்தன. ஐரோப்பியத் தோட்டத் துரைமார் கோப்பிச் செய்கையில் அதிக ஊக்கம்காட்டவே கோப்பி வியாபாரம் அபிவிருத்தியுற்றது. வெளிநாட்டுவியாபாரமும் உள்நாட்டு வியாபாரமும் பெருகியது. 1877-ம் ஆண்டில் ஏறக்குறைய 10 கோடிரூபா பெறுமதியான வியாபாரம் இந்நாட்டைச் சேர்ந்ததாயிருந்தது.

பழைய நிலமானிய முறைப்படி அரசனுக்குக் கபடகம் எனப்பட்ட நிலங்களுண்டு. பிரதானிகளுக்கு நிந்தகம் எனப்பட்ட நிலங்களுண்டு. இவ்விரு திறத்தாரின் நிலங்களிலும் பயிர்விளைவிப்பதற்குக் குடியானவர்களிருந்தனர். மக்களிடையே பணப்புழக்கம் அதிகமற்றதாயிருந்தது. பண்டமாற்றுமுறை நடைமுறையிலிருந்தது. பண்டைய முறைப்படி முதலாளி சொல்லைத் தொழிலாளி தட்டமுடியாது. தோட்டத் தொழிலாளி தனது சம்பளக் கூலியை ரொக்கப் பணமாகப் பெற்றான். தோட்டத் துரைமார் தொழிலாளருக்குச் சம்பளம் கொடுக்கவும், மற்றும் தோட்டம் வாங்குதல், இயந்திரம் தளபாடங்கள் நிறுவுதல் போன்ற விஷயங்களுக்கும் பெருவாரியான பணத்தை முதலீடு செய்யவேண்டியிருந்தது.



இங்கிலையில் தோட்ட முதலாளிமார் தமது தோட்டங்களை வங்கியில் ஈடுவைத்துப் பணத்தைக் கடன்வாங்கினர். தோட்டச்செய்கை விருத்திக்கும், வியாபாரத்துக்கும் கடன்வாங்கும் நிர்ப்பந்தம் உண்டாகவே 1841-ம் ஆண்டில் **இலங்கை வங்கி** (Bank of Ceylon) என்ற ஒரு வங்கியை வெளிநாட்டு மூலதனத்துடன் ஒரு லண்டன் வியாபாரி ஆரம்பித்தார். 1843-ம் ஆண்டு கண்டியில் இவ்வங்கியின் ஒரு கிளைஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டது. தோட்டத்து அபிவிருத்தியில் அக்கறைகொண்ட அரசாங்கம் முதன்முதலாக ஆரம்பித்த இந்த வங்கிக்கு எல்லாவிதச் சலுகைகளுங் காட்டியது. இதன்பின் ஒவ்வொன்றாகப் பல வங்கிகள் இலங்கையில் நிறுவப்பட்டன.

## பட்டினங்களின் வளர்ச்சி

தோட்டங்கள் தேசமெங்குந் திறக்கப்பட்டதாலும், வர்த்தகத் தொழில்முறைகள் பெருகியதாலும், ஏற்றுமதி இறக்குமதி விலைகள் அதிகரித்ததாலும், ரோட்டுக்கள் விஸ்தரிக்கப்பட்டதாலும் பல பட்டினங்கள் வளர்ச்சியுற்றன. புதிய பட்டினங்களுந் தோற்றின. பிரிட்டிஷார் இலங்கைக்கு வருமுன்னரிருந்த ஒருசில பட்டினங்களும் வளர்ச்சியுற்றன. பட்டினங்களில் ஜனப்பெருக்கம் ஏற்பட்டு நெருக்கமான வீடுகள் கட்டப்பட்டு மக்களின் சுகாதாரம் கெட்டுப்போயது. அசுத்தக் காற்றையுட்கொண்டு, விஷக்கிருமிகள் நிறைந்த தண்ணீரைப் பருகிச் சத்தற்ற உணவை உண்டு, நெருக்கமான வீடுகளிற் சீவித்து மக்கள் பல தொற்றுநோய்களுக்குள்ளானர்கள். இங்நிலை கொழும்பு, கண்டி, காலி, குருநாகல், நீர்கொழும்பு, நுவரெலியா போன்ற இடங்களில் நிலவிவந்தது.

இன்னோரன்ன நிலைகளைக் கவனிப்பதற்காக அரசாங்கம் **நகரசபைகளை** (Municipalities) ஆரம்பித்தது. 1866-ம் ஆண்டில் கொழும்பிலும், 1867-ம் ஆண்டில் காலியிலும், 20-ம் நூற்றுண்டில் யாழ்ப்பாணம், குருநாகல், நீர்கொழும்பு, நுவரெலியா, மட்டக்களப்பு, திரிகோணமலை ஆகிய இடங்களிலும் நகரசபைகள் ஸ்தாபிக்கப்பட்டு

அந்தந்தப் பகுதியிலுள்ள மக்களின் தேவைகளைக் கவனித்து வந்தன. சிறிய பட்டினங்கள் சுகாதார சபைகளின் கீழ் விடப்பட்டன. இவைகளும் காலடைவில் **அர்பன் கவுன்சில்களின்** (Urban Council) பரிபாலனத்தில் இயங்கலாயின. சுருங்கக் கூறின் பெரிய பட்டினங்களிலும், சிறிய பட்டினங்களிலுஞ் சனங்களுக்கு வேண்டியவற்றைக் கவனித்துப் பரிபாலனஞ்செய்யும் பொறுப்பை **ஸ்தல சுய ஆட்சி இலாக்கா** (Department of Local Government) ஏற்றுக்கொண்டது.

## நிர்வாகச் சீர்திருத்தங்கள்

தோட்டங்கள் அபிவிருத்தியடைய நாட்டின் வருமானமும் அதிகரித்தது. பிரிட்டிஷார் காலத்திற் சிவில் சேவிஸ் பகுதியாரின் திறமையினாலே நாட்டின் பரிபாலனம் செம்மையான முறையில் நடந்துவந்தது. எனவே இச்சேவையாளரின் உத்தியோக முறைகளை மாற்றியமைத்து அவர்களை மேலும் திறமையாக்குவதற்குரிய வழிவகைகள் இப்போது கையாளப்பட்டன. சிவில் சேவிஸ் அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வும், பதவி உயர்வும், 55 வயதுவரை கடமையாற்றுவோருக்கு உபகாரச் சம்பள வசதிகளும் செய்யப்பட்டன. இவ்வதிகாரிகள் தோட்டச் செய்கையில் ஈடுபட்டுப் பணம் சம்பாதிப்பது தடுக்கப்பட்டுத் தங்கள் முழுநேரத்தையும் உத்தியோக அலுவல்களுக்குச் செலவிடும்படி வற்புறுத்தப்பட்டனர். சிவில் சேவிஸ் பகுதியில் சேருபவர்கள் பிரவேச பரீக்ஷை எழுதித் தேறவேண்டுமென்றும், பின் சிங்களம் அல்லது தமிழ் ஆகிய மொழிகளைப் பயிலவேண்டுமென்றும் விதிக்கப்பட்டது. இக்காரணங்களாற் சிவில் சேவிஸ் உத்தியோகத்தரின் திறமையான பரிபாலனம் இந்நாட்டில் நடைபெற்றது எனலாம்.

சிவில் சேவிஸ் உத்தியோகத்தர்களைத் தவிர வேறு பல அரசாங்க இலாக்காக்களும், தோட்டங்கள் நாடெங்குந் தோன்றியதால் எழுந்தன. தோட்டப் பகுதிகளுக்கு ரோட்டுகள் அமைப்பதற்கு **மராமத்து இலாக்காவும்**



(Public Works Department), தோட்ட நிலங்களை அளப்பதற்கு **அளவை இலாக்காவும்** (Survey Department), தோட்டத் தொழிலாளரின் நோய்களுக்குச் சிகிச்சை செய்யும்பொருட்டு **மருத்துவ இலாக்காவும்** (Medical Dept.), தோட்டப்பயிர்களின் சாகுபடியைக் கவனிப்பதற்கு **விவசாய இலாக்காவும்** (Agricultural Dept.), தோட்ட முதலாளிகளின் வேண்டுகோட்கிணங்கிப் புகையிரதப் பாதைகள் போடுவதற்குப் **புகையிரதப்பகுதி இலாக்காவும்** (Railway Dept.) ஏற்பட்டன.

நிர்வாக சௌகரியத்தை அனுசரித்து முன்பிருந்த ஐந்து மாகாணங்களுக்குப் பதிலாக ஒன்பது மாகாணங்கள் வகுக்கப்பட்டன. முன்னையஐந்துமாகாணங்களுடன் 1845-ம் ஆண்டில் வடமேல்மாகாணத்தையும், 1873-ம் ஆண்டில் வடமத்திய மாகாணம், 1886-ல் ஊவா மாகாணம், 1889-ம் ஆண்டில் சப்ரகமுவ மாகாணம் ஆக ஒன்பது மாகாணங்களாக அரசாங்கம் பிரித்தது. இப்புது மாகாண அமைப்புமுறையால் அரசாங்க ஏஜண்டுகளும், அவர்களது உதவி ஏஜண்டுகளும் பல நகரங்களையும் நன்றாகப் பரிபாலித்துக் குடிகளுடைய நன்மைக்கான அரிய சேவைகளைச் செய்வதற்கு வசதியேற்பட்டது.

## நீதிபரிபாலனம்

கோல்புறூக் கொமிஷனுடைய சிபார்சுப்படி 1833-ம் ஆண்டில் நீதி பரிபாலனமும் நிர்வாக பரிபாலனமும் வெவ்வேறாக்கப்பட்டாலும், தோட்டப் பகுதிகளில் இவ்விரு காரியங்களையும் ஒரே விதமான உத்தியோகஸ்தரே கவனித்து வந்தார்கள். 1860-ம் ஆண்டில் அரசாங்க வரியைச் சேகரிப்பதற்கும் நியாயம் வழங்குவதற்குமாக வெவ்வேறு உத்தியோகஸ்தர் நியமிக்கப்பட்டனர். இஃதன்றி ஏழை மக்களுடைய சௌகரியத்தை முன்னிட்டுச் சின்னஞ்சிறு கிறிமினல் வழக்குகளை விசாரிப்பதற்காகப் **போலிஸ் நீதிமன்றங்களும்** (Police Courts) சிறிய சிவில் வழக்குகளைக் கேட்பதற்காக **ரிக்வெஸ்ற் நீதிமன்றங்களும்** (Courts of Requests) ஏற்படுத்தப் பட்டன. கிராமங்களில் ஏற்படும் சிறு நிலத்தகராறு, நீர்ப்பாசனம்

சம்பந்தமான சிறு வியாச்சியங்கள் என்பவற்றைத் தீர்த்துவைப்பதற்காகக் கன்சபா (Gansabha) எனப்பட்ட கிராமச்சங்கங்களும் நிறுவப்பட்டன.

## சட்ட சபையும் செய்தித்தாள்களும்

தோட்டத்துரைமார், தங்களுடைய கோரிக்கைகளுக்கு அரசாங்கம் பராமுகமாயிருந்தபோது அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டியது அவசியமாகப்பட்டது. எனவே சட்டசபை மூலமாயும், பத்திரிகைகள் மூலமாயும் அரசாங்கம் தம் வற்புறுத்தலுக்கு உடன்பட வேண்டுமெனத் தோட்டத்துரைமார் கருதிக் கருமம் ஆற்றலாயினர்.

கோல்புறூக் சிபார்சுப்படி இலங்கையில் ஒன்பது உத்தியோகஸ்தர்களையும், ஆறு உத்தியோகப் பற்றற்றவர்களையும் கொண்ட சட்டசபை (Legislative Council) ஒன்று ஏற்படுத்தப்பட்டதென அறிவீர்கள். உத்தியோகப் பற்றற்றவர்களில் மூவர் தோட்டத் துரைமாரும் வியாபாரிகளுமாவர். மற்றுமூவரும் பறங்கியர், சிங்களவர், தமிழர் ஆகியவரது பிரதிநிதிகளாவர். இவர்கள் தோட்ட அபிவிருத்திக்கான வழிகளை அரசாங்கம் செய்யவேண்டுமென்று கண்டிப்பாய் வற்புறுத்தியதுடன் அரசாங்கம் பணக்குறைவைத் தோதிட்டு ஏதும் கூறுவதாயிருந்தால் இலங்கையின் இராணுவப் பாதுகாப்புக்கான செலவை பிரிட்டிஷ் அரசாங்கம் கட்ட வேண்டுமென்று விவாதித்தது. அங்ஙனமாகக் கிடைக்கும் பணத்தைத் தோட்ட அபிவிருத்திக்குச் செலவிட வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்தியது. மேலும் சட்டசபையிலே உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவரின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று சதா இவ்வங்கத்தினர் கிளர்ச்சிசெய்து வந்தனர். இக்கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்வதாயில்லை. சட்டசபையில் உத்தியோகப் பற்றற்றவரின் எண்ணிக்கையை அதிகரிப்பதால், சிறுபான்மையினரான ஐரோப்பியரும், பறங்கியரும் மட்டுமே ஆதிக்கம் செலுத்தவேண்டி நேரிடும் என்றும், பெரும்பான்மை மக்களான சிங்களவர், தமிழர், முஸ்லீம்களின்



உரிமைகளைப் பாதுகாக்கமுடியாது போய்விடுமென்றுங் கருதிக் குடியேற்றநாட்டு மந்திரி இக்கோரிக்கைகளுக்கு இணங்காது விடுத்தார்.

தோட்டத்துரைமார் கையாண்டுவந்த இன்னொரு ஆயுதம் செய்தித்தாள்களாகும். அரசாங்கத்தார் நடத்தி வந்த கொழும்பு ஜேனல் (Colombo Journal) என்ற பத்திரிகையில் தோட்டத்துரைமாரும் வியாபாரிகளும் தத்தம் கருத்துக்களை வெளியிட்டு வந்தார்கள். இத்துடன் 1834-ம் ஆண்டில் ஒப்ஸேவர் (Observer) என்ற பத்திரிகையையும், 1846-ம் ஆண்டில் சிலோன் எக்சாமினர் (Ceylon Examiner) என்ற பத்திரிகையையும் ஆரம்பித்துத் தோட்டத்துரைமாரே நடத்தி வந்தனர். இவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்யும்படி அரசாங்கத்தைத் தூண்டியும், அரசாங்கத்தின் போக்குகளைக் கண்டித்தும் இப்பத்திரிகைகள் தொண்டாற்றி வந்தன.

தோட்டங்கள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட மேற்கூறிய பயன்கள் தவிர வேறுசில விளைவுகளையும் இங்கு குறிப்பிடுவதவசியம். ஏனெனில் அவைகளும் இந்நாட்டுப் பொருளாதாரநிலைக்கு ஓரளவு உதவியாயுள்ளவை என்பது தெளிவு.

## பணப் புழக்கம்.

நிலமானியமுறை நடைமுறையிலிருந்த காலந்தொட்டு மக்கள் நிலத்தைப் பண்படுத்தித் தமது சொந்த உபயோகத்துக்கென நன்செய்தானியங்களை விளைவித்தனர். ஆனால் தோட்டங்கள் திறக்கப்பட்டபின் இந்நிலை மாறிச் சுயதேவைப் பூர்த்திக்காக உணவு விளைவிப்பதுமன்றி வெளிநாட்டுச் சந்தைக்கெனவும், வியாபாரத்துக்கெனவும் உணவு விளைவிக்கப்பட்டு ஏற்றுமதிசெய்யப்பட்டது. ஏற்றுமதியின் விளைவாக நாட்டில் ரொக்கப்பணம் வந்து சேர்ந்தது. பண்டமாற்றுமுறை மாறிக் காசுப்புழக்கம் அதிகரித்தது. விவசாயமுறை ரொக்கப்பணத்துக்கும் இலாபத்துக்கும் பொருத்தமாய் அமைக்கப்பட்டிருந்தது

மன்றி, அப்பணத்தைக் கொடுத்து வாங்கக்கூடிய பொருட்களுக்கும் இலங்கை அந்நியநாட்டை எதிர்பார்த்திருக்கும்படி செய்தது. இதனால் அந்நியநாட்டு வியாபாரத்தின் ஏற்றத்தாழ்வையொட்டி இலங்கையின் பொருளாதாரம் அமையவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

## சாதிப் பாகுபாடுகள் மறைவு.

ரோட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டபின் தோட்டப் பொருள்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. ஒதுங்கி வாழ்ந்த மக்கள் தம்மூரிலிருந்து வேறோர் ஊருக்கோ, வேறோர் மாகாணத்துக்கோ சுலபமாய்ப் பிரயாணம் செய்யலாயினர். ரோட்டுக்கள் அமைக்கப்பட்டதால், இலங்கையில் மிகத்தூரத்திலுள்ள கிராமங்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளப்பட்டு, மத்திய அரசாங்கம் வலிமையுறலாயிற்று. இலங்கைவாழ் மக்கள் அனைவரும் எச்சாதியைச் சேர்ந்தவராயினும் நாட்டுநலனிலும் அரசியலிலும் தமக்குப் பங்குண்டு என்ற உணர்ச்சி வளரலாயிற்று. மோட்டார்களிலும், புகையிரதங்களிலும் பிரயாணஞ்செய்த மக்கள் தங்களது சாதிமத வேறுபாடுகளை மறந்து ஒன்றாகச் சேர்ந்து பிரயாணஞ் செய்துவந்தனர். தம் சுயதேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டுவந்த கிராமமக்கள் பட்டினங்களுடன் தொடர்பூண்டு, பட்டினமக்களுக்குத் தேவையான உணவுப்பொருட்களை உற்பத்திபண்ணுவாராயினர். இதனால் பட்டினவாசியாயினும் கிராமவாசியாயினும் "எல்லோரும் சமம்" என்ற எண்ணம் மக்களிடையே நிலவுவதாயிற்று.

## பிழைப்புக்கள்-வேலைகள்.

தோட்டங்கள், காடெங்கும் திறக்கப்பட்டதால், அவைகளில் மக்களுக்கு ஊதியம்கிடைக்கும் பலவேலைகள் தொழில்கள் கிடைத்தன. பட்டினங்களில் புதுத்தொழில்கள் ஏற்பட்டதால் அவற்றிற்கான அலுவல்களில் கிளார்க் வேலைகளைச் செய்ய ஒருசாரார் நியமிக்கப்பட்டனர். பணப்புழக்கம் அதிகரித்தமையால் மக்களிற்பலர் ஆசிரியத்தொழிலிலும், வைத்தியத்தொழிலும், சட்டத்தொழி



லும் புகுந்து வேலைபார்த்தனர். வேறுசிலர், போக்குவரத்துக்கள் அதிகப்பட்டதால் பெரிய கொம்பெனிகளின் பிரதிநிதிகளாகவும், தரகர்களாகவும், தொழில் வல்லுநராகவும் ஆயினர். இங்ஙனமாகத் தோட்டந்துரவு வைத்திருப்பவர் முதலாளியாகவும், தொழில்புரிவோர் தொழிலாளர் வகுப்பினராயும், இவ்விருபிரிவும் நீங்கிய ஏனையோர் கல்விபயின்றவர்களாகப் பல உத்தியோகங்களில் அமர்ந்து மத்தியதர வகுப்பினராகவும் ஆயினர். இக்கடைசி இருவகுப்பினரும் இதுகாறும் செய்துவந்த சேவைமுறையின் அடிப்படையினின்றும் வேறுபட்டு ஒப்பந்தமுறை (Contrect) யை அனுசரித்துக் கடமையாற்றினர்.

## ஏழை பணக்கார பேதம்.

தோட்டப்பயிர்களின் விளைவாலும், அதிகரிப்பாலும் நாட்டின் வருவாய் பன்மடங்கு பெருகியது. இப்பணவரவால் வந்த செல்வமானது நாட்டுமக்களிடையே சமமாய்ப் பங்கிடப்படவில்லை. வாழ்விலுள்ள ஏற்றத்தாழ்வுகள் இருந்தே வந்தன. பணம்படைத்தவர்கள் பொருளாதார சுதந்திரத்தை அனுபவித்ததுமன்றி அரசியற் துறையிலும் பங்குபற்றிக்கொள்ள விழைந்தார்கள். அன்றாட வாழ்வைக் கழிக்கும் குடியானவர்களும், கிராமவாசிகளும் தினமும் உழைக்கும் கூலியுடன் திருப்தியடையலாயினர். இங்ஙனமாக ஜாதிவேறுபாடுகள் மறைந்தவுடன் வகுப்பு வேறுபாடுகளான ஏழை பணக்காரன் என்ற பாழும்நிலை ஏற்பட்டது.

14.9.61

## விரும்பத்தகாத விளைவுகள்.

தோட்டங்கள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட விரும்பத்தகாத விளைவுகளுஞ்சிலவுள. அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளை அரசாங்கம் பிறருக்குக் குறைந்தவிலைக்கு விற்றது. இதன்விளைவாகத் தற்காலிகமாக வாழவந்த அந்நியநாட்டு மக்கள் பயன்பெற்றனரேயன்றி நிரந்தரவாசிகளான இந்நாட்டினர் பிற்காலத்தில் குடியிருக்கவும்,

விவசாயம் பண்ணவும் இடமில்லாது தத்தளிக்கவேண்டியதாயிற்று. குறுகியகாலப் பொருளாதார முன்னேற்றத்தைக் கருதி நிலங்கள் பெருவாரியாக விற்கப்பட்டதால் இந்நாட்டு மக்களுக்குப் பிழைப்பும் இருக்கைவசதியும் தேடிக் கொடுப்பது அரசாங்கத்துக்குத் தீராதபிரச்சினையாகிவிட்டது. ஒன்றவந்தபிடாரி ஊர்ப்பிடாரியைத் துரத்தியகதையாய் இவ்விஷயம் முடிந்துவிட்டது. தோட்டங்கள் திறக்கப்பட்டதால் உண்டான மற்றொரு தகாத விஷயம் அந்நியரது ஆதிக்கமாகும். தோட்டப்பொருட்கள்சம்பந்தமான ஏற்றுமதி இறக்குமதி வேலைகளும், மற்றும் வர்த்தகமும் அந்நியநாட்டாரின் பொறுப்பிலேயே இருந்துவந்ததால், இவைகளால் ஏற்பட்ட இலாபத்தைச் சம்பாதித்துக்கொண்டவர்கள் பிறநாட்டவரே. இந்நாட்டுமக்கள் இன்னோரன்ன வருமானத்தை இழந்ததுமன்றித் தொழில் துறைகளில் போதிய அனுபவமும் பயிற்சியுமில்லாது போயினர். வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்த அந்நிய வியாபாரிகள் இந்நாட்டவர் உணவு உற்பத்திசம்பந்தமாகவோ அல்லது உள்ளூரில் கைத்தொழில்களை விருத்திசெய்வது சம்பந்தமாகவோ எடுத்த முயற்சிகளை ஆதரிக்காததுடன் இடர்விளைத்தும் வந்தனர். தோட்டங்கள் திறக்கப்பட்டதால் ஏற்பட்ட மற்றொரு வருந்தத்தக்க விஷயம் விவசாயம் புறக்கணிக்கப்பட்டதும், அந்நிய நாட்டுச் சந்தையில் நம்நாட்டுப் பொருளாதாரப் பொருட்களை அடைவுவைத்ததுமாகும். அரசாங்க உதவியும், அனுசரணையும் தோட்டத்துரைமார் வியாபாரிகள் பக்கமேயிருந்ததால், உணவுப் பொருட்களைப் பயிரிட அரசாங்கத்துக்கு உதயமாகவில்லை. தேயிலை, றப்பர், தெங்குப் பொருட்கள் ஆகியவற்றை அமோகமாக அபிவிருத்திசெய்து, அவைகளை அந்நியநாட்டுச் சந்தையில் விற்றுப் பெரும்பணத்தைச் சம்பாதித்ததுமன்றி அப்பணத்தைக்கொண்டு உணவுப் பொருட்களையும் வெளிநாட்டிலிருந்துதானே இறக்குமதி செய்துவரலாயினர். இங்ஙனமாக இலங்கையின் பொருளாதாரம் அந்நியநாட்டவருடன் இணைக்கப்பட்டது. அன்றியும் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்கள் ஆகிய மூன்றின் விற்பனையிலேயே இந்நாட்டு வருமானம்



தங்கியிருக்கிறது. இப்பொருட்களின் விலைகளில் ஏற்றத்தாழ்வு ஏற்படலாம். அப்போது நாட்டின் வருமானம் ஸ்தம்பித்துப் போவதுமன்றி அநேகர் வேலையின்றித் திண்டாடவும் நேரிடும். அகில உலகிலும் 1929-ம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதாரமந்தமும் (Economic Depression) 1914-ம் ஆண்டிலும், 1939-ம் ஆண்டிலும் முறையே ஆரம்பமான இரு உலகப்போர்களும் இலங்கையின் பொருளாதாரம் எம்முறையில் அமையவேண்டுமென்று இந்நாட்டவருக்குத் தக்கபாடம் படிப்பித்துக் கொடுத்துள்ளன. நாட்டின் சுயதேவைகளைப் பூர்த்திசெய்வது சம்பந்தமாக ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைகளை வகுப்பதும், அவசியம் நேரும்போது அரசாங்கம் பொதுமக்களின் நலனை உத்தேசித்து விவசாயம், வர்த்தகம் ஆகியவற்றில் தலையிடுவது அவசியம் என்றும் உணரப்பட்டது. ரொக்கப் பணம் தேடித்தரும் தேயிலை, றப்பர், தென்னை போன்ற தோட்டப் பொருட்களைமட்டும் அபிவிருத்தி செய்வதுடனமையாது, உஷ்ணப் பிரதேசங்களிலுள்ள நிலங்களையும் திருத்திக்கழனியாக்கி அவற்றில் உணவுப்பொருட்களையும் விளைவித்தல்வேண்டும். இத்துடன் கைத்தொழில்களையும் வளர்த்துவரவேண்டும். நெசவாலை-கரும்பாலை நிறுவுதல், சீனி உற்பத்தி, சீமெந்து உற்பத்தி, சவர்க்காரஞ் செய்தல், மீனெண்ணெய் வடித்தல் ஆகியவைபோன்ற இந்நாட்டுக்குப் பொருத்தமான, இந்நாட்டு மூலப்பொருட்களிலிருந்து (Raw Materials) செய்யக்கூடியதான கைத்தொழில்களை ஏற்படுத்தவேண்டும். மேற்குறிப்பிட்ட விதங்களில் நாட்டின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கு அரசாங்க உதவி அவசியம். தொழிற்கல்வியளிப்பதின் மூலமும், ஆராய்ச்சி ஸ்தலங்களை நிறுவுவதன் மூலமும், பொருட்களை விற்பதற்கான இடங்களைத் தேடித்தந்து சலுகைகளைச் செய்வதன் மூலமும், மூலதனத்துக்கு வட்டியில்லாக் கடன் கொடுப்பதன் மூலமும் அரசாங்கம் ஆதரவுதரமுடியும்.

இறுதியாகப் பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்த 1937-ம் ஆண்டு இந்நாட்டில் ஏற்பட்ட

அரசியல் விளைவுகளும் உறுதுணையாயிருந்தன. அரசியலில் இலங்கையருக்கு ஓரளவு பொறுப்பாட்சி வழங்கப்பட்டகாலே இந்நாட்டுமக்கள் விழித்தெழுந்து, முன்பு புறக்கணிக்கப்பட்ட காரியங்களில் அக்கறை செலுத்த ஆரம்பித்தனர். உணவுப்பொருட்களை இந்நாட்டில் விளைவிக்க அரும்பெரும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. கல்லோயாத்திட்டம், பராக்கிரம சமுத்திரத்திட்டம், மின்னேரியாத்திட்டம்போன்ற பல மின்சாரத்திட்டங்கள் நடத்தப்பட்டு கைத்தொழில்களுக்கு வசதிசெய்து கொடுக்கப்பட்டு வருகிறது. உள்ளூர்ப்பொருட்களை விற்பனையாக்க அரசாங்கவிற்பனை இலாக்கா (Marketing Dept.) நிறுவப்பட்டது. மற்றும் விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கவும், மற்றும் பொதுமக்களுக்கு வேண்டியபொருட்களை விநியோகிக்கவும் **கூட்டுறவு இயக்கம்** (Co-operative Movement) ஏற்படுத்தப்பட்டது. குடியானவர்களின் நன்மைகளைக் கோரிப் பல குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மீன்பிடித்தொழிலை விரிவான முறையில் அமைத்து நவீனசாதனங்களின் உதவியால் மீன்பிடிப்பை அதிகரிப்பதற்கான செயல்களில் அரசாங்கம் அக்கறை காட்டிவருகின்றது. மற்றும் பழவர்க்கங்களைப் பெருவாரியாக உற்பத்திபண்ணவும் பல முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இக்காரணங்களால் இலங்கைநாடானது உணவுவிஷயத்தில் தனது சுயதேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதுடன் தனது பொருளாதார நிலையையும் சீர்ப்படுத்தி, இந்நாட்டுமக்கள் அந்நியநாட்டிலிருந்து தமது தேவைகளை எதிர்பார்த்திராத ஒரு சுபீட்சநிலையையும் ஏற்படுத்தும் என்பது வெளிப்படை.

### சுருக்கம்.

தோட்டப்பயிர்ச்செய்கை வளர்ச்சியினால் ஏற்பட்ட மாற்றங்கள்: ரோட்டுகள், புகையிரதத்தபால் போக்குவரத்து, கொழும்புத்துறைமுக அபிவிருத்தி, தென்னிந்தியத் தொழிலாளர்வருகை, வங்கிகள் நிறுவப்படல், பட்டினங்களின் வளர்ச்சி, நிர்வாகச் சீர்திருத்தங்களும் பல இலாக்காக்களும், நீதிபரிபாலனம், சட்டசபை, பத்திரிகைகள், பணப்புழக்கம், சாதிப்பாகுபாடுகள் தளர்தல், பிழைப்புக்கான வேலைகள் அதிகரித்தல், அரசாங்க விற்பனை இலாக்கா, கூட்டுறவு இயக்கம் இன்னபிற, பொருளாதார அபிவிருத்தி, வெளிநாட்டுத்தொடர்பு அதிகரித்தல்.



பல செம்மையான ரோட்டுக்கள் வேண்டப்பட்டமை—தோட்டத்துரைமார் அரசாங்கத்திடம் இத்தேவையை நிறைவேற்றுமாறு விண்ணப்பித்தல்—மேல், சப்ரகமுவா மாகாணங்களில் பழையரோட்டுக்கள் புதுப்பிக்கப்படலும், பல புதியரோட்டுக்கள் திறக்கப்படலும்—1841-ல் கொழும்பு கண்டிரோட்டுக்கும், பின்னர் அம்பேபுச குருநாகல்ரோட்டுக்கும் கல்லிடப்படல்—1847-ல் கோப்பிவியாபாரத்தில் மந்தம் ஏற்படல்—அதன்காரணமாக 1848-ல் ரோட்டுச்சட்டம் பிறப்பிக்கப்படல்—கோப்பிவியாபாரத்தில் அபிவிருத்தி ஏற்படலும் கவர்னர் சேர் ஜோர்ஜ் அண்டர்சன் கொழும்பையும் கண்டியையும் எட்டியாந்தோட்டைக்கூடாக இணைக்கும்வகையில் கப்பலையிலிருந்து எட்டியாந்தோட்டைக்கு ஓர் ரோட்டை நிர்மாணித்தலும்—சேர் ஹென்றி வார்ட் 1855-ல் பாலங்களைத் திருத்தலும், பலரோட்டுக்களைக் கம்பளைக்கும் கண்டிக்கும் கிழக்கேயுள்ள பகுதிகளில் அமைத்தலும்—1865-ல் சேர் றொபின்சன் கினிகத்தேனையிலிருந்து டிக்கோயாவுக்கு ஒருரோட்டும், காலியிலிருந்து அக்குரசவுக்கு ஒருரோட்டும், பின்னர் பதுளைமுதல் மட்டக்களப்புவரைக்கும் ஒரு ரோட்டும் அமைத்தல்—நுவரெலியா, மல்தெனியா, களுத்துறை, இரத்தினபுரிப் பகுதிகளில் கவர்னர்கள் சேர்விதிகோர், கோர்டன் காலங்களில் ரோட்டுக்கள் திறக்கப்படல்—ரிட்ஜ்வே காலத்தில் திரிகோணமலை, யாழ்ப்பாணப்பகுதிகளில் பலரோட்டுக்கள் அமைக்கப்படல்—மோட்டார்வாகனங்களின் உபயோகமும் பல ரோட்டுக்கள் உறுதிப்படுத்தப்படலும்—1927-ம் ஆண்டில் இலங்கையில் ஏறக்குறைய 16400 மைல் நீளமானரோட்டுக்கள் இருத்தல்.

1840-ல் இந்தியாவில் புகையிரதப்பாதை அமைப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படலும், தோட்டத்துரைமார் பிறேசில் கோப்பிவியாபாரத்தோடு போட்டியிட உதவியாகப் புகையிரதவீதிகளை அமைக்குமாறு அரசாங்கத்தை வேண்டுதலும்—1858-ல் புகையிரதவீதிகள் அமைப்பதற்கான பிரயத்தனம் எடுக்கப்படல்—1867-ல் கொழும்பு கண்டிப் புகையிரதவீதி அமைக்கப்படல்—1873-ல் கம்பளைவரைக்கும், 1874-ல் நாவலப்பிட்டிவரைக்கும், 1885-ல் நானுஓயாவுக்கும், 1893-ல் அப்புத்தளைக்கும், 1899-ல் பண்டாரவளைக்கும், 1924-ல் பதுளைக்கும் புகையிரதப்பாதைகள் விஸ்தரிக்கப்படல்—மற்றும் காலகாலங்களில் தேயிலை, றப்பர், தெங்குப்பொருட்களின் ஏற்றுமதி வசதியை உத்தேசித்தும், பிரயாணிகளின்போக்குவரவு வசதியைஉத்தேசித்தும் அவிசாவளை, எட்டியாந்தோட்டை, இரத்தினபுரி, ஒப்பநாயக்கா, களுத்துறை, காலி, மாத்தறை, நீர்கொழும்பு, புத்தளம் போன்ற இடங்களுக்கும், அநுராதபுரம், திரிகோணமலை, மதவாச்சி, யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய இடங்களுக்கும் புகையிரதப்பாதை விஸ்தரிக்கப்படலும், 1858-ம் ஆண்டுமுதல் தபாற்செய்தி அனுப்பும்முறை ஏற்படலும்—தொடர்ந்து தந்தி இணைப்பு, டெலிபோன்வசதி, சமுத்திரத்தந்தியிணைப்பு ஆகியன ஏற்படலும்—கொழும்புத்துறைமுகம் விஸ்தரிக்கப்படல்.

தென்னிந்தியத்தொழிலாளர் வருகையின்பொருட்டு அரசாங்கம் செய்த உதவிகள்—1843-ம் ஆண்டில் கண்டியில் இலங்கைவங்கியின் கிளைஸ்தாபனம் நிறுவப்படல்—தொடர்ந்து பலவங்கிகள் தோற்றல்—தோட்டங்கள் திறக்கப்பட்டமையாலும், போக்குவரவுச்சாதனங்கள் ஏற்பட்டமையாலும் பட்டினங்கள் வளர்ச்சி

புதல்—நகரசங்கங்கள், பட்டினசங்கங்கள், கிராமச்சங்கங்கள் போன்ற சுயஆட்சி முறைகள்—சிவில்சேவிஸ் சீர்திருத்தமும் திறமையான பரிபாலனமும்—மராமத்து, அளவை, மருத்துவ, விவசாய, புகையிரதப்பகுதி இலாக்காக்கள் ஏற்படல்—முன்னைய ஐந்து மாகாணங்கள் 1845-முதல் 1889-க்கு இடைப்பட்டகாலத்தில் ஒன்பது மாகாணங்களாகப் பிரிக்கப்படலும் அரசாங்க, உதவியரசாங்க ஏஜண்டுகளின் பரிபாலனமும்—பொலிஸ், நீக்குவென்ற், கன்சபா (கிராம) க்கோடுகள்—சுயதேவைப் பூர்த்திக்கும் வெளிநாட்டு வியாபாரத்துக்கும் ஏற்ற விளைபொருட்கள் விருத்தியாக்கப்படல்—பணப்புழக்கம் அதிகரித்துப் பொருளாதார விருத்தியேற்படல்.

பிரயாணமுறைகள், அரசியலிற்பங்கு இன்ன பிறவற்றுள் சாதிக்கட்டுப்பாடு தளர்தல்—ஆசிரியத்தொழில், வைத்தியத்தொழில், சட்டத்தொழில், அரசாங்க உத்தியோகங்கள் இன்னபிறவற்றுள் தொழில்முறைகள் பலதிறத்தனவாகி மேலோங்கல்—இரு உலகப்போர்களும் பொருளாதாரமந்த காலங்களும்—உள்நாட்டுக் கைத்தொழில் முன்னேற்ற அவசியங்களும் அபிவிருத்தியும்.

### வினக்கள்.

1. தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தியினால் இலங்கையடைந்த முன்னேற்றங்களெவை? நிரைப்படுத்திக் கூறுக. ஒன்றினை விபரிக்க.
2. இலங்கையில் காலாகாலங்களில் ரோட்டுக்கள் புகையிரதப் பாதைகள் விஸ்தரிக்கப்பட்ட வகையையும், தபால் தந்தி முறைகள் விருத்தியடைந்த முறையையும் விபரிக்க.
3. கடந்த ஒரு நூற்றுண்டில் இலங்கையடைந்த மாற்றங்களை அதற்கு முந்திய ஒரு நூற்றுண்டோடு ஒப்பிட்டு ஆராய்க.
4. இலங்கையில் ஸ்தலஸ்தாபன ஆட்சிமுறை ஏற்பட்டவகையையும் இன்று இலங்கையின் பலபாகங்களில் கடமையாற்றும் ஸ்தலஸ்தாபனங்களையும் கூறுக. உமதூரில் நடைபெறும் ஒரு ஸ்தலஸ்தாபன ஆட்சிமுறையை விபரிக்குக.
5. இலங்கையிற் பண்டமாற்றுமுறை படிப்படியாக மறைந்து பணப்புழக்கம் பெருகியமைக்குரிய ஏதுக்களை ஆராய்க.
6. இலங்கையில் சிறிய பெரிய பட்டினங்கள் தோற்றி வளர்ச்சியுற்றமையையும் பழையபட்டினங்கள் வீழ்ச்சியுற்றமை அல்லது பிரபல்யமடைந்தமையையும் சரித்திரசம்பந்தமாகப் பூமிசாத்திர ஏதுக்களுடன் ஆராய்க.
7. இலங்கையில் வர்த்தகவிருத்தி, பொருளாதார முன்னேற்றம், வெளிநாட்டுத்தொடர்பு என்பவற்றைத் தற்காலத்தோடொட்டி ஆராய்க.
8. பாதையமைப்பிலும் சீர்திருத்தத்திலும் பணிபுரிந்த முக்கிய இலங்கைக் கவர்னர்களைக் கூறி அவர்கள் ஒவ்வொருவரும் பாதையமைப்பில் புரிந்த செயல்களைக் காலங்காட்டிக் குறிப்பிடுக.
9. இலங்கையில் பல்வேறு அரசாங்கக்காரியாலயங்கள் தோற்றியமைக்கான காரணங்களை ஆராய்க. ஒருகாரியாலயத்தின் கடமைகளைச் சுருக்கிக் கூறுக.
10. தொழில் முறைகள் அபிவிருத்தியடையவும், விவசாயம் மேலோங்கவும் இன்று அரசாங்கம் காட்டிவரும் ஆதரவுகளை விபரிக்குக.

---

## பதினைந்தாம் அத்தியாயம்

# சமுதாய அரசியல் அபிவிருத்திகள்.

சென்ற அத்தியாயங்களில் இலங்கையிற் பிரிட்டிஷார் தம் ஆட்சியை ஸ்தாபித்துப் புதிதான அரசியல் முறையை நிறுவியதைப்பற்றியும், தோட்டங்கள் அபரிமிதமாகத் திறக்கப்பட்டதால் விளைந்த பொருளாதார மாற்றங்கள்பற்றியும் படித்தோம். இவண் 20-ம் நூற்றுண்டில் மத்திய வகுப்பார் அல்லது நடுத்தர வகுப்பு மக்களின் எழுச்சியைப் பற்றியும், அரசியல் அமைப்பில் ஏற்பட்ட அபிவிருத்திபற்றியும், பிரிட்டிஷார் கையில் நின்றும் அந்த அரசியல் ஆதிக்கம் எங்ஙனம் படிப்படியாக மத்திய வகுப்பாருக்கும் பின் தொழிலாளர் கைக்கும் மாறியது என்பது பற்றியும் ஆராய்வோம்.

இருபதாம் நூற்றுண்டில் இலங்கையில் ஏற்பட்ட சமுதாய அபிவிருத்தியைக் கவனிக்குமுன் பிரிட்டிஷார் இங்கு வந்தபோது இருந்த பொதுசனங்கள், பிரதானிகள், குடியானவர்கள் ஆகியவர்களைப்பற்றிச் சிறிதளவு தெரிந்திருப்பது நல்லது. இலங்கை மக்களை இனவாரியாகப் பிரித்தால் அவர்களில் பிரதானமானோர் சிங்களவராவர். இச்சிங்களவரில் கீழ்ப்பகுதிகளில் வாழ்வோர் **கீழ்நாட்டுச் சிங்களவர்** என்றும், மலைப்பகுதிகளில் வசிப்போர் **மலைநாட்டுச் சிங்களவர்** என்றும் இருபிரிவினராக அழைக்கப்படுவர். சிங்களவருக்கு அடுத்தபடியாகத் தொகையிற் கூடியவர் தமிழர். தமிழருக்கு அடுத்தவர் சோனகரும், மலாயருமாவர். அடுத்தபடியாகப் பறங்கியர் ஆவர். சமயவாரியாக இந்நாட்டவரைப் பிரிப்பதாயிருந்தால் பெரும்பாலான சிங்களவர் பௌத்தராவர். தமிழ்மக்களில் பெரும்பாலோர் ஹிந்துக்கள். சோனகரும் மலாயரும் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவர்கள். பறங்கியரில் ஒருசாரார் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தையும் ஏனையோர் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவமதத்தையும் சார்ந்தவர். இலங்கை மக்களைத் தொழில்வாரியாகப் பார்த்தால் மூன்று முக்கிய தொழிற் பிரிவினராவர். முதலாவது பிரதானிகள், பின்பு பிக்குகள், கடைசியாக

விவசாயிகளும் வியாபாரிகளுமாவர். இங்ஙனம் இனம், மதம், மொழி ஆகியவற்றால் வேறுபட்டிருந்த மக்கள் சமுதாய அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்களால் ஒன்றுபடலாயினர்.

## தலைமைக்காரர் ஆட்சியும் வீழ்ச்சியும்.

பிரிட்டிஷாரின் ஆட்சிக்கால ஆரம்பத்தில் பிரதானிகள் ரட்டே மகாத்மயா, மணியக்காரர், வன்னியர் ஆகிய தலைமைக்காரர் மிகச் செல்வாக்குற்றிருந்தனர். முக்கியமாகக் கிராமங்களில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும், அரசாங்கத்துக்குரிய நிலமானிய வருவாயைச் சேகரிப்பதும், நீதிவழங்குவதும் 19-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை தலைமைக்காரரது கடமைகளாயிருந்து வந்தன. மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் படைத்திருந்த இவர்கள், பிரிட்டிஷார் ஆட்சிக்காலத்தில் படிப்படியாகச் செல்வாக்கை இழந்தனர். அதற்குப் பல காரணங்களுண்டு.

1817-ம், 1818-ம் ஆண்டுகளில் நடந்த கண்டிக்கலகத்தினாலும், 1848-ம் ஆண்டில் பிரிட்டிஷாருக்கு விரோதமாக ஏற்பட்ட சூழ்ச்சிகளினாலும் பிரிட்டிஷாரது அனுதாபத்தைத் தலைமைக்காரர் இழந்தனர். கோல்புறூக் கொமிஷன் சிபார்சுப்படி இராஜகாரியமுறை ஒழிக்கப்பட்டதும், இனமதபேதமின்றி எல்லோருக்கும் ஒரேவிதமான நியாயம் வழங்கப்பட்டதும் தலைமைக்காரரின் செல்வாக்கு மிகவும் குறையக்காரணமாயின. இஃதன்றிப் போக்குவரத்துக்கள் நாடெங்கும் அதிகரித்ததால் கிராமங்களில் குற்றங்களும் அதிகரித்தன. பெருகிவரும் குற்றங்களை முன்போல் தலைமைக்காரர் தடுத்து நிறுத்த முடியவில்லை. எனவே கொழும்பில் தலைமைக் காரியாலயத்திலிருந்து சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டிவந்த போலீஸ் அதிகாரிகள், கிராமங்களிலும் பரவலாகஇருந்து குற்றங்களை நேரிலேயே கண்டுபிடித்து ஒழுங்கைக்கண்காணித்து வரலாயினர். இதனாலும் தலைமைக்காரர் அதிகாரம் குறையலாயிற்று. கடைசியாகப் பழைய



நிலமானிய முறைக்குத் தகுந்த பயிற்சியும் அனுபவமும் உள்ள தலைமைக்காரர் புதியநிலைமைக்கு ஏற்றமுறையில் நிர்வாகஞ் செய்வதற்குத் தகுதியும் மனமுமற்றவர்களாயிருந்தனர். எக்காரியத்தையும் ஏதேச்சாதிகாரத்துடன் தம்மனம்போல் செய்துவந்தார்களே தவிரப் பிரிட்டிஷாரின் நவீன முறைக்குத் தக்கதாகத் தலைமைக்காரியாலத்தாரிடும் ஆக்ஞைகளை ஏற்றுப் பரிபாலன விஷயங்களைச் செய்து விட்டதாக இருக்கவில்லை. நிர்வாகத்தை நடத்துவிப்பதற்கும் பயிற்சி பெற்ற அதிகாரிகளை விரும்பிய பிரிட்டிஷார் தலைமைக்காரரின் சேவைகளை விரும்பாதவராய், அவர்களை முற்றிலும் நிர்வாகப் பொறுப்பிலிருந்து நீக்கியோ அன்றி அவர்களது செல்வாக்கையும் அதிகாரத்தையும் குறைத்தோ அவர்களுக்குப்பதில் பகுதிவருமான அதிகாரிகளை (District Revenue Officers) நியமித்தனர். கோல்புறூக் சிபார்சுகளின் விளைவாகப் புதிதாய் நாட்டில் தோன்றிக்கொண்டிருந்த மத்தியவகுப்பினர், அரசியல் ஆதிக்கம்பெற்றதுடன் பகுதி வருமான அதிகாரிகள்போன்ற அரசாங்க உத்தியோகங்களிலும் நுழையலாயினர். இங்ஙனமாகப் பல நூற்றாண்டுகளாக மேலோங்கியிருந்த தலைமைக்காரரின் ஆட்சி வீழ்ச்சியடைந்தது.

## குடியானவர்களின் அவதி

இந்நாட்டில் பிரிட்டிஷார் ஆட்சியின் ஆரம்பத்தில் குடிஜனங்களாயிருந்த சிங்களவரும், தமிழரும், முஸ்லீம்களும் பெரும்பாலும் கமத்தொழிலையே தமது பிரதான தொழிலாகச் செய்துவந்தனர். இக்குடியானவர்களின் நிலைமை மிகப்பரிதாபகரமானதாகவே யிருந்துவந்தது. மழையின்மை, பஞ்சம், வெள்ளப்பெருக்கு, நீர்ப்பாசன வசதிக்குறைவு, மிருகங்களால் அழிவு ஆகிய காரணங்களால் கமத்தொழில் விருத்தி குன்றியிருந்தது.

வறியவராய்க் காலங்கழித்துவந்த இக்குடியானவர்களுக்கு நன்மைசெய்யும் நோக்குடனே கோல்புறூக் தமது சிபார்சுகளைச் செய்தார். அவைகளில் முக்கியமானது

கிராமச்சங்கங்களைப் (Gansabha) புனருத்தாரணம் செய்வதாகும். கிராமப் புறங்களில் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டிக் குற்றங்களை விசாரணைசெய்து நீதி வழங்கிவந்தது கிராமச்சங்கங்களேயாகும். அன்றியும் நீர்ப்பாசன வசதிகளைக் கண்காணிப்பதும், குடியானவர்களுக்கு விவசாய சம்பந்தமான நீர்நிலைகளை மேற்பார்வை செய்வதும் கிராமச்சங்கங்களின் பொறுப்பிலிருந்தன. இக்கிராமச்சங்கங்களின் சேவையினால் கிராமவாசிகள் தங்கள் கமத்தொழிலைச் செவ்வனே செய்துவரலாயினர். கிராமச்சங்கங்கள் மறைந்துபோக இவ்வேலைகளெல்லாம் கிராமப் புறங்களில் தடைப்பட்டன. குடிமக்களிடையே குற்றங்கள் அதிகரித்தன. கோல்புறூக் இக்கிராமச்சங்கங்களை உயிர்ப்பிப்பதற்கான யோசனைகளைக் கூறியும் அவைகள் பல ஆண்டுகளாக ஸ்தம்பித்த நிலையிலேயேயிருந்தன. கிராமச்சங்கங்களின் நிலை ஒருபுறமிருக்க, மற்றொரு பக்கம் அரசாங்கம் தோட்டங்களின் அபிவிருத்தியைக் கருதிப் புதிய நிலச்சட்டங்களை ஏற்படுத்தியது. இதுவும் குடியானவர்களுடைய கூட்டுறவு வாழ்வைக் குலைத்ததெனலாம். குடியானவர்கள் சுயநலங்காரணமாகவும், இலாபங்கருதியும் தம்நிலங்களை விற்கத் தலைப்பட்டனர். பங்கு நிலங்களை விற்பதில் பலவழக்குகள் எழுந்தன. நீதிமன்றங்களில் கிராமவாசிகள் ஒருவர்மேல் ஒருவர் வழக்குத்தொடர்ந்து தம்பொருளையும் காலத்தையும் விரயஞ் செய்தனர். நீதிமன்றங்களில் நேரத்தைச் செலவிட்டதால் தங்களது விவசாய முன்னேற்றமும் தடைப்பட்டது. இதுகாறும் நிலத்தகராறுகளையும் விவசாயசம்பந்தமான குற்றங்களையும் கிராமச்சங்கங்கள் விசாரித்துத் தீர்ப்பளித்து வந்துள்ளன. அவை இப்போது இல்லாதொழியவே கிராமவாசிகள் தங்கள் அறியாமையினாலும், பொய்வழக்குத் தொடரும் வழக்கத்தினாலும் தங்களிடையே குரோதத்தையும் வீண்மனத்துயரையும் விளைவித்துக் கொண்டனர். இதுகாரணமாய்க் கிராமவாழ்க்கை சீர்குலைந்தது.

வெந்தபுண்ணிலே வேல்பாய்ச்சுவதுபோல், இவ்வளவு அவதியுற்றிருந்த குடிமக்களின்மீது அரசாங்கம்



புதிய வரிச்சுமைகளைச் சுமத்தியது. அவற்றில் ஒன்று, ரோட்டுச் சட்டப்படி (Road Ordinance) ஒவ்வொரு குடியானவனும் வருடத்தில் 6 நாட்கள் ரோட்டுப் பழுதுபார்க்கும் வேலையைச் செய்யவேண்டுமென்பதாகும். இவைகளின் காரணமாக 1848-ம் ஆண்டு மாத்தளை, குருநாகல் ஆகிய பகுதிகளில் முதன்முதலாகக் கலக நெருப்பு மூண்டது. பிரிட்டிஷார் ஆட்சியை எதிர்த்து எழுப்பப்பட்ட கலகம் எனநினைத்த அரசாங்கம் கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது. இச்செயலை ஆராய்ந்தறியுமாறு பிரிட்டிஷ் பாராளுமன்ற அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு விசாரணைக்குழு இலங்கைக்கு வந்துசேர்ந்தது. இக்குழு குடியானவர்களின் அவலநிலையை அலசிப் பார்த்து அவர்களுக்கு ஆவனசெய்யும்படி அரசாங்கத்துக்கு அறிவுறுத்தியது.

## குடிமக்களின் உயர்ச்சி

பிரிட்டிஷ் பாராளுமன்றக் குழுவின் கருத்துப்படி சிவில்சேவிஸ் அதிகாரிகளின் திறமையின்மை குடிகளின் கஷ்டங்களுக்கு அடிகோலியது என்பதாக அறியப்பட்டது. எனவே குடிகளின் நலனுக்காகப் பல முயற்சிகள் செய்யப்பட்டு அவர்களது நிலை 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து சிறிது சிறிதாக மேம்பட்டு வரலாயிற்று.

முதலாவதாக நீர்ப்பாசன வசதிகள் புனருத்தாரணஞ் செய்யப்பட்டன. பாழடைந்த குளங்கள் பழுது பார்க்கப்பட்டன. புதுக் குளங்களும் தோண்டப்பட்டன. நெற்சாகுபடி துரிதப்பட்டது. வரண்ட பிரதேசங்களில் மக்கள் குடியேற்றப்பட்டனர். இத்துறையில் **வார்ட், கிறிகோறி, கோர்டன், றிட்ஜ்வே** முதலிய கவர்னர்கள் கிராமவாசிகளுக்குத் துணைபுரிந்தனர். இரண்டாவதாகக் கிராமச்சங்கங்களுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது. அவைகள் முன்போலவே விவசாய அபிவிருத்திக்கு ஆக்கந்தேடின. குடியானவர்களிடையே எழுந்த சிறு சிவில், கிறிமினல் குற்றங்கள் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டன. கிராமச் சங்கங்களின் மேற்பார்வையில் கிராமமக்கள் கிணறு வெட்டுதல், வாய்க்கால் அமைத்தல் ஆகிய

கருமங்களில் ஈடுபட்டுவந்தனர். இத்துறையில் **ரொபின்சன் கவர்னர்** சிறந்த சேவை செய்துள்ளார். மூன்றாவதாகக் கிராம மக்களின் அறிவின்மையை நீக்குவதற்காகப் பாடசாலைகள் திறக்கப்பட்டன. சிங்கள - தமிழ்ப் பாடசாலைகள் தோன்றி வளர்ச்சியுற்றன. இவ்விரு மொழிகளை மக்களுக்குப் போதித்துப் பாடசாலைகளை நடத்துவிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொண்டது. மதப் பிரசாரகர்களும் கல்வி அபிவிருத்திக்காகப் பெரும் பாடுபட்டனர். மிஷனரிமார் நடத்தும் பாடசாலைகளுக்கு அரசாங்கம் பணவுதவி செய்துவந்தது. நான்காவதாகக் கிராம மக்களுக்கு இலவச வைத்திய வசதிகளையும் அரசாங்கம் உதவியது. ஆயுள்வேத வைத்தியமுறை வளர்ந்துவந்தது. அத்துடன் மலேரியா போன்ற நோய்களாற் றுன்புறும் குடியானவருக்குத் தக்க ஔஷதம் கிடைக்கும்படி பல இலவச மருத்துவ நிலையங்களும் நிறுவப்பட்டன. இத்துறையில் **கிறிகோறி கவர்னரின்** கொள்கை மெச்சத்தக்கது. ஐந்தாவதாகக் கிராமங்களிற் கடன்காரரின் தொல்லைகளாற் குடியானவரின் விவசாயம் தடைபட்டு வந்தது. குடியானவர்களின் கடன்சுமையை நீக்கி அவர்களுக்கு நிவாரணமளிப்பதற்காகக் குறைந்த வட்டிக்குப் பணங் கொடுக்குமாறு **கூட்டுறவு ஐக்கியநாணய சங்கங்களை** (Co - operative Credit Society) அரசாங்கம் நிறுவியது. இத்துறையில் **கவர்னர் மக்கலம்** சிறந்த தொண்டாற்றியுள்ளார்.

மேற்கூறிய வகைகளில் பிரிட்டிஷார் ஆட்சிக்காலத்தில் கிராம மக்களின் தாழ்ந்த நிலையைச் செம்மைப்படுத்தப் பல முயற்சிகள் செய்யப்பட்டும், கிராம மக்கள் அறிவிற் குறைந்தவர்களாயிருந்ததால் இச்சீர்திருத்தங்களைத் தங்களுக்குப் பயன்படுத்தாது விடுத்தனர். தோட்டங்களில் உழைக்கும் தொழிலாளியும் பட்டினங்களில் தொழிற்சாலைகளில் தொழில்செய்யும் தொழிலாளியும் தங்களுக்கு வேண்டிய வசதிகளையும் கூலி, சுகாதார வசதிகள், குடியிருப்பு ஆகியவற்றையும் பெற்றுக்கொள்ளத் தவறவில்லை. ஆனால் கிராமங்களில் கமத்தொழிலில் ஈடுபட்ட குடியானவர்நிலை மிகப் பிற்போக்காகவேவெகு



காலமிருந்துவந்தது. எனினும் 20-ம் நூற்றாண்டில் குடிமக்களின்நிலை சிறிதளவு மாறியுளது எனலாம். **சர்வஜன வாக்குரிமையின்** (Universal Franchise) காரணமாகக் கிராமாந்தரங்களிலுள்ள மக்கள் அரசியற் துறையிற் பங்குபற்றவேண்டியவர்களானார்கள். பாராளுமன்றங்களுக்குப் போட்டியிடும் அபேட்சகர் வாக்குரிமையைப் பெறும் நோக்குடன் அவர்களுக்கான வசதிகளைச்செய்ய முன்வந்ததும் தம்மால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் தமக்கு வேண்டியவற்றிற்குப் போராடி, மக்களுக்கு நலம் செய்கின்றார்களா என்பதைக் கவனிப்பதும் குடிமக்களின் க்ஷேமத்தை வளர்ப்பனவாகும். வாக்குரிமையினால் மட்டுமன்றிப் போக்குவரவுச் சாதனங்களின் வளர்ச்சியாலும் கிராமமக்களின் ஒதுங்கியிருக்கும் மனப்பான்மை மாறியுள்ளது. பலவிடங்களுக்குஞ் சென்று பலபேருடன் பேசிப்பழகி நாட்டுவிஷயங்களை அறிவதும், தங்களது குறுகிய மனப்பான்மையை விடுத்துப் பரந்த மனப்பான்மையுடன் பிறருடன் நடந்துகொள்வதும் கிராம மக்களின் நல்வாழ்வுக்குப் பயன்தருவதாகும்.

## மத்திய வகுப்பாரின் எழுச்சி.

பிரிட்டிஷாரின் ஆட்சித்துவக்ககாலத்தில் பறங்கியரே நடுத்தர வகுப்பினர் என்றளவில் இந்நாட்டிலிருந்து வந்தனர். கோல்புறூக் கொமிஷனின் சிபார்சுகளால் பயனடைந்தவர்கள் இவர்களேயாகும். ஆங்கிலப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்றுத் தேர்ந்த பறங்கியர் ஆசிரியர்களாக அமர்ந்தனர். நீதிமன்றங்களில் சட்ட வல்லுனராகவும், நீதிபதிகளாகவும் கடமையாற்றினர். தோட்டங்கள் பெருவாரியாகத் திறக்கப்பட்டதால் இவர்கள் குமாஸ்தாவேலை பார்த்து வந்தனர். இங்ஙனமாக 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்நாட்டுச் சமுதாய வாழ்வில் உயர்ந்த பதவிகள் வகித்து, நடுத்தரவகுப்பினர் என்று எண்ணக்கூடிய அளவு வாழ்க்கைவசதிகளைப் பெற்றிருந்தவர் பறங்கியராவர்

இலங்கையிலே பறங்கியர் நிலைமை பெருமைப்படத்தக்கதாய் இருந்தபோது, மற்றும் இந்நாட்டவரான சிங்

களவர், தமிழர், சோனகர் ஆகிய வகுப்பினர் அதிகமாக முன்னேறவில்லை என்றே சொல்லவேண்டும். 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில், தோட்டங்கள் திறக்கப்பட்டதன் விளைவாகச் சில சிங்களவர் தமது நிலையை ஒருவாறு உயர்த்திக்கொள்ள முயன்றார்கள். தச்சுவேலை, கட்டிடவேலை, யந்திரவேலை, கொந்தராத்துவேலை (Contract), ஏற்றுமதி இறக்குமதிவேலை, வாடகைவண்டி வைத்தல் ஆகிய வேலைகளில் ஈடுபட்டுச் சிங்களவர் வருவாயைப் பெருக்க முயன்றனர். அரசாங்க உதவிபெறும் கிறிஸ்தவப் பாடசாலைகளில் ஒருசிலர் கல்விபயின்று அக்கல்வியினுதவியால் பலவேலைகளில் அமர்ந்து சம்பாதிக்கலாயினர். சோனகர் வியாபாரத்தில் ஈடுபட்டு உள்ளூரிலும், அயலூரிலும் வர்த்தகஞ்செய்து தங்களது பொருளாதார நிலையை உயர்த்தப் பிரயத்தனப்பட்டனர். இங்ஙனமாகச் சில சிங்களவரும், தமிழரும், சோனகரும் தொழில்களைச் செய்து பெரும் பொருளீட்டினார்கள். பொருள் பெருகப் பெருக, அப்பொருளை அக்காலத்தில் வெகுவிரைவில் இலாபம்தேடித் தரத்தக்கதான வியாபாரமான கோப்பிச்செய்கையில் முதலீடுசெய்தார்கள். கோப்பி வியாபாரம் தலைதூக்கி நின்றதால் அது முதலீட்டுக்காரருக்குக் கணிசமான பலனைத் தந்தது. இவ்வகுப்பினர் தம் சமுதாய வாழ்க்கை நிலையையும் உயர்த்துவதற்குக் காரணமாயிருந்தது. 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மத்தியவகுப்பாரின் தொகை பெருகியது எனலாம். அரசாங்க உத்தியோகங்களில் பறங்கியர்மட்டுமன்றி, யாழ்ப்பாணத் தமிழரும், கல்விகற்ற சிங்களவரும் அமரலாயினர். கோல்புறூக்கொமிஷனின் சிபார்சுகள் நீண்டகாலப்பயனைத்தர, நாடு அபிவிருத்தியடைந்தது. இதனாற் படித்தவர்களிற்பலர் வைத்தியராகவும், நீதிபதிகளாகவும், ஆசிரியராகவும் தொழில்புரிந்தனர். இங்ஙனமாக இலங்கையில் மத்தியதரவகுப்பினர் சிறிது சிறிதாக முன்னேறி நாட்டில் செல்வாக்குப் பெறலாயினர்.



## மத்தியதர வகுப்பினரால் ஏற்பட்ட சமூக, சமய மாற்றங்கள்.

நடுத்தர வகுப்பாரின் எழுச்சியாலும், செல்வாக்கினாலும், இலங்கைச் சமுதாயத்தில் பல மாற்றங்கள் நிகழலாயின. ஆங்கிலக்கல்வியும், வெளியூர்ப் போக்குவரத்தும், புதிய தொழில் துறைகளும் மக்களிடையே நிலவிவந்த சாதிக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறியத் துணைபுரிந்தன. பணமும், கல்வியறிவும் ஒருங்கே உடைத்தானவர்கள் தமக்கெனத் தனிப்பிரிவை ஏற்படுத்திக்கொண்டனர். சாதிபேதம் நீங்கிக் கல்வி, பணம் ஆகிய இரண்டின் அடிப்படையில் பணக்கார வர்க்கம் பாட்டாளி வர்க்கம் என்ற வேறுபாடுகள் எழலாயின.

நடுத்தர வகுப்பாரின் எழுச்சியால் வந்த மற்றொரு முக்கியமான மாற்றம் சமயச்சார்புடையதாகும். போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையிலுள்ள பௌத்த விகாரைகளையும், இந்து ஆலயங்களையும் அழித்து இவைகளுக்குச் சொந்தமான நிலங்களில் கிறிஸ்தவரான போர்த்துக்கேயர் தமது சமயக் கோவில்களையும், பாடசாலைகளையும் நிறுவினர்கள். டச்சுக்காரர் காலத்தில் பௌத்தர்களும், இந்துக்களும், ஏன் கத்தோலிக்க கிறிஸ்தவர்களுங்கூடப் பகிரங்கமாக ஆராதனை செய்து வருவதற்குப் புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவராகிய டச்சுக்காரர் தடை விதித்திருந்தனர். ஆனால் பிரிட்டிஷாரோ பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும் வழிபாட்டுச் சுதந்திரம் அளித்து எம்மதத்தவரும் தத்தம் மதவழிபாடுகளைச் செய்துவருவதற்கு அனுமதித்தனர். இதுகாரணமாக இலங்கையில் பௌத்தசமயப் பிரசாரம் செய்யப்பட்டு மக்கள் சிங்களம், பாளி ஆகிய மொழிகளைக் கற்பதற்கு ஊக்கமளிக்கப்பட்டது. அதுபோன்று இந்துசமயப்பிரசாரம் செய்யப்பட்டுச் சைவசமய நூல்களை மக்கள் படித்தனுபவிப்பதற்கு ஏதுவாயிற்று. இருந்தபோதிலும் பப்திஸ்ற் (Baptist), வெஸ்லியன் (Wesleyan), ஆங்கிளிக்கன் (Anqlican) கிறிஸ்தவ மிஷனரிகளின் அபார உழைப்பால் கிறிஸ்தவ சமயம் மேலோங்கி வரலாயிற்று.

புத்தகங்கள், பத்திரிகைகள் போன்ற பிரசாரங்கள் மூலமாயும், பொதுவிடங்களிலும் தெருக்களிலும் செய்த பிரசாரங்கள் மூலமாயும், சமயச்சார்பான சபைகள் பள்ளிக்கூடங்கள் ஆகிய ஸ்தாபனங்கள் மூலமாயும் கிறிஸ்தவசமயம் பிரபல்யமடைந்தது. 19-ம் நூற்றாண்டின் முற்பகுதிவரை வளர்ந்தோங்கிவந்த கிறிஸ்தவமதத்தில் தம் மதங்களுக்கு ஏற்படும் ஆபத்தை எதிர்த்துத் தடுக்கப் பௌத்தர்களும், இந்துக்களும் நடவடிக்கை எடுக்காது இருந்தனர்.

ஏறக்குறைய 1860-ம் ஆண்டிலிருந்து பௌத்தர்களும், இந்துக்களும் விழிப்புணர்ச்சி பெற்றார்கள். பௌத்த பிக்குகள், செல்வம்படைத்த மத்தியதர வகுப்பினரின் உதவியைப்பெற்றுப் பௌத்தசமயத்தை வளர்க்க ஆவனசெய்ய முற்பட்டதுமன்றி, அச்சியந்திரசாலைகளை நிறுவித் துண்டுப்பிரசுரங்கள் மூலமாயும், பௌத்தசபைகளையும், பாடசாலைகளையும் நிறுவுவதின் மூலமாயும் தம்மதத்துக்கு வரும் ஆபத்தைத் தடுக்கலானார்கள். பௌத்தர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்குமிடையே மதசம்பந்தமான தர்க்கம் பொதுவிடங்களில் நடைபெறலாயிற்று. **பௌத்த பிரம்மஞானசங்கம்** (Buddhist Theosophical Society) என்ற ஒன்றை ஒல்காட் (Olcott) என்னும் அமெரிக்கர் 1880-ம் ஆண்டு இலங்கையில் நிறுவிப் பௌத்தசமயக் கல்வியை மக்களுக்கு ஊட்டுவதற்கு அடிகோலினார். பழைய பௌத்த ஸ்தாபனங்கள் புதுப்பிக்கப்பட்டனவுமன்றிப் புதிய பெரமுணக்கள் நிறுவப்பட்டுப் பௌத்தமத வளர்ச்சிக்கும் சமஸ்கிருதம், பாளி, சிங்களம் ஆகியமொழிகளின் வளர்ச்சிக்கும் ஆவன செய்யப்பட்டன. பௌத்தமதம் வளர்ச்சியுற்றதுபோல் இந்துமதமும் வளர்ச்சியுற்றது. **ஆறுமுகநாவலர்** என்னும் சைவப் பெரியார் இத்துறையில் தலைசிறந்த தொண்டாற்றியுள்ளார். கிறிஸ்தவ மிஷனரிமார் செய்துவந்த மதமாற்றத்தைத் தடுக்கவும், சைவமும் தமிழும் ஓங்கவும் அரும்பாடுபட்டார். இதன் பயனாய் 1888-ம் ஆண்டில் **யாழ்ப்பாண சைவபரிபாலன சபை** நிறுவப்பட்டது. இச் சபை நாவலடைவில் அபிவிருத்தியுற்றது. சைவசமய



முறைப்படி பாடசாலைகளில் கல்வியூட்டும் பணியை மேற்கொள்ளப்பட்டது. இப்பெரியாரது அடிச்சுவடுகளைப் பின்பற்றி யாழ்ப்பாணச் சைவர்கள் இந்துமத வளர்ச்சிக்கு அரிய சேவைகள் செய்துள்ளார்கள். இங்ஙனமாகப் பிரிட்டிஷாரின் ஆட்சித்தொடக்கத்தில் குன்றியிருந்த பௌத்தமதமும், இந்துமதமும் 19-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து தலைதூக்க ஆரம்பித்தன.

**சுருக்கம்.**

இருபதாம் நூற்றாண்டில் நடுத்தரவகுப்பு மக்களின் எழுச்சி, அரசியல் அபிவிருத்தி, அரசியல்ஆதிக்கம் என்பன மத்தியவகுப்பார், தொழிலாளர்கைக்குப் படிப்படியாக மாறியமை—இனவாரியாகவும், மதவாரியாகவும், மொழிவாரியாகவும் வேறுபட்டிருந்த மக்கள் சமுதாய அமைப்பில் ஒன்றுபடல்—பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதிவரை ஆதிக்கம் செய்துவந்த தலைமைக்காரர் பிரிட்டிஷார் ஆட்சிக்காலத்தில் படிப்படியாகச் செல்வாக்கை இழந்தமை—பகுதிவருமான அதிகாரிகள் ( D. R. O. ) நியமனம்—மத்தியவகுப்பார் அரசாங்க உத்தியோகங்களில் சேர்ந்து ஆதிக்கம்பெறல்—மழையின்மை, பஞ்சம் போன்ற இயற்கைமாறுபாடுகளால் குடியானவர் அவதியும் கமத்தொழில் விருத்திகுன்றலும்—கோல்புறூக் சிபார்சின்படி கிராமச்சங்கங்கள் நிறுவப்படல்—கிராமவாசிகள் வீண்வழக்குகள் பேசிப் பொருள்விரயஞ்செய்தலும் கிராமவாழ்க்கை சீர்குலைதலும்—ஆரம்பகாலத்தில் பிரிட்டிஷார் சுமத்தியவரிகளும் மக்களின் கஷ்டங்களும்—பிரிட்டிஷ் பாராளுமன்ற விசாரணைக்குழு அனுப்பப்படல்—நீர்ப்பாசனவசதிகள் செய்யப்படல்—வார்ட், கிரிகோறி, கோர்டன், ரிட்ஜ்வே முதலாம் கவர்னர்களின் சேவைகள்—கிராமச்சங்கங்களின் கடமைகளின் மாற்றங்கள்—மிஷனரிமாரும் கல்வியபிவிருத்தியும்—இலவச மருந்துச்சாலைகள் திறக்கப்படல்—கூட்டுறவு ஐக்கிய நாணயசங்கங்கள் ஏற்படல்—சர்வஜன வாக்குரிமையின் காரணமாக மக்கள் அரசியல்துறையிற் பங்குபெறல்—போக்குவரத்து அபிவிருத்தி—பறங்கியரின் உயர்ச்சியும் உத்தியோக தோட்டங்கள் திறக்கப்பட்டதால் சிங்களவர் கைக்கொண்ட பல்வேறுதொழில்கள்—சோனகர் வியாபாரத்தில் பொருளீட்டல்—அரசாங்க உத்தியோகங்களில் பறங்கியர் மட்டுமன்றி யாழ்ப்பாணத்தமிழரும், கல்விகற்ற சிங்களவரும் அமரல்—நாடு அபிவிருத்தியடைதலும் மத்தியவகுப்பார் செல்வாக்குப்பெறலும்.

மத்தியவகுப்பார் உயர்வால் ஏற்பட்ட மாற்றங்கள், ஆங்கிலக்கல்வி வளர்ச்சி, வெளியூர்ப்போக்குவரத்து, புதியதொழில்துறைகள் பெருகல், சாதிக்கட்டுப்பாடு தளர்தல், பணக்காரவர்க்கம், பாட்டாளிவர்க்கம் என வேறுபாடுகள் தோன்றல்—பிரிட்டிஷாராட்சியில் சமயசுதந்திரம்—இந்துசமயமும், பௌத்தசமயமும் வளர்தல்—சமயவளர்ச்சிச் சங்கங்கள் தோற்றல்—பௌத்த இந்துமத வளர்ச்சிக்கு ஒல்காட்டினதும் ஆறுமுகநாவலர் போன்றோரினதும் தொண்டுகள்.

### வினுக்கள்.

1. பிரிட்டிஷாராட்சி ஆரம்பகாலத்தில் இனவாரியாகவும், மொழிவாரி சமய வாரியாகவும் மக்கள் வேறுபட்டிருந்தமையையும் பின்னர் அவர்கள் ஒன்றுகூடிச் சமுதாயவளர்ச்சிக்கு உதவியமையையும்பற்றி விபரிக்குக.

2. பத்தொன்பதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் ஆதிக்கஞ் செலுத்திய தலைமைக்காரர்பற்றியும், அவர்கள் செல்வாக்குப் படிப்படியாகத் தளர்வுற்றமைபற்றியும் விபரிக்குக. இன்று தலைமைக்காரர் ஆட்சி எந்நிலையிலுள்ளது?

3. கிராமமக்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் ஆரம்பகாலத்தில் அனுபவித்துவந்த கஷ்டங்கள்பற்றியும் இன்று அவர்கள் நிலை எத்தகைத்து என்பதுபற்றியும் ஆராய்க.

4. மத்தியவகுப்பாரின் எழுச்சி, ஆதிக்கம், அவர்கள் படிப்படியாக அடைந்த முன்னேற்றங்கள் என்பனபற்றி விரித்தெழுதுக.

5. இலங்கையில் இன்று சமய, கலாச்சார மொழி வளர்ச்சிகளுக்குதவியாயிருந்த, இருக்கின்ற ஏதுக்களை ஆராய்க. இவற்றின்வளர்ச்சிக்கு மேலும் வேண்டப்படுவன யாவை?

---

## பதினூரும் அத்தியாயம்

# அரசியற் சீர்திருத்தங்கள்.

20-ம் நூற்றுண்டில் இலங்கையில் ஏற்பட்ட அரசியல் அபிவிருத்தியை நான்கு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவையாவன **மக்கலம் சீர்திருத்தம், மனிங் சீர்திருத்தம், டொனமூர் சீர்திருத்தம், சோல்பரி சீர்திருத்தம்** என்பனவாகும். இவை ஒவ்வொன்றையும்பற்றித் தனித்தனி ஆராய்வோம்

கோல்புறூக் கொமிஷனின் சிபார்சுகளின்பின் இந்நாட்டில் சிறுபான்மையினரான ஐரோப்பியரும், பறங்கியரும் தத்தம் நலன்களை அபிவிருத்திசெய்து, அரசியல் ஆதிக்கம் பெறுவதற்காகப் பல கிளர்ச்சிகள் செய்து வந்தனர். இதற்கு அடிப்படையாக 1855-ம் ஆண்டில் சட்டசபையில் (Legislative Council; உத்தியோகப்பற்றில்லாதவரின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதால் தாம் அந்த ஸ்தானங்களைக் கைப்பற்றலாம் என்று ஐரோப்பியரும் பறங்கியரும் பிரிட்டிஷ் அரசாங்கத்தை வற்புறுத்தினர். ஆனால் அரசாங்கம் இக்கோரிக்கைக்கு இணங்கவில்லை. ஏறக்குறைய 8000 எண்ணிக்கையுள்ள ஐரோப்பியரும், சிறுபான்மையினரான பறங்கியரும், 20லட்சம் எண்ணிக்கையுள்ள மற்ற இலங்கையரும் வாழ்கின்ற குடியேற்ற நாட்டிலே, அரசாங்கமானது சிறுபான்மையோருக்கும், பெரும்பான்மையோருக்கும் நடுவில்நின்று ஆட்சிபுரியவேண்டும். எனவே **பிரதிநிதித்துவ ஆட்சிமுறை** (Representative Govt.) இந்நாட்டுக்கு இது சமயம் பொருந்தாது என்று கூறி மறுத்துவிட்டனர். ஆனால் தோட்டத்துரைமார் சங்கமும் (Planters Association), இலங்கைவர்த்தகர்சங்கமும் (Ceylon Chamber of Commerce) தத்தம் பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்துச் சட்டசபைக்கு அனுப்பலாம் என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அனுமதித்தது. 1860-ம் ஆண்டில் உத்தியோகப் பற்றற்ற அங்கத்தவர்கள் **பண மசோதா** (Money Bill) ஒன்றைத்தவிர்த்து வேறெந்த மசோதாவையும் சட்டசபையில் கொண்டுவரலாம் என்று அனுமதிக்கப்பட்டனர்.

1867-ம் ஆண்டில் இலங்கையின் வரவுசெலவுத் திட்டம் (Budget) கட்டுப்பாட்டைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தன் பொறுப்பினின்றும் நீக்கி இலங்கை அரசாங்கப் பொறுப்பில் விட்டது. இங்ஙனம் சிற்சில அரசியல் முன்னேற்றங்கள் ஏற்பட்டாலும், இந்நாட்டவரின் கிளர்ச்சி நடந்து கொண்டேயிருந்தது.

## மக்கலம் சீர்திருத்தங்கள்.

பணமும் செல்வாக்கும் படைத்த இலங்கை மத்தியதர வகுப்பினர், சிறிதுசிறிதாக அரசியல் அரங்கத்தில் பங்குபெற விழைந்தனர். ஆங்கிலங்கற்ற சிங்களவரும், தமிழரும் மேனாட்டுக் கொள்கைகளைப் பின்பற்றியதுடன், ஆங்கிலேயர் மேனாட்டில் அனுபவித்துவந்த அரசியல் உரிமைகளைத் தாமும் இந்நாட்டில் அனுபவிக்க வேண்டுமெனக் கோரினர். அக்காலத்தில் பிரிட்டனில் ஆட்சி செலுத்திய லிபரல் கட்சியினர், ஜனங்களின் நன்மைக்காக ஜனங்களால் நடாத்தப்படும் அரசியல்முறையை விரும்பியவர்களாதலால், இலங்கையிலும் இன்னோரன்ன ஆட்சிமுறை அமுல் நடத்தப்பட வேண்டுமென்று ஆங்கிலங் கற்றவர்கள் கிளர்ச்சி செய்தனர். பெரும்பான்மை ஐரோப்பியர்களை அங்கத்தினராகக் கொண்ட மலைநாட்டுத் தோட்டத்துரைமார் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது போலக் கீழ்நாட்டுப் படித்த சிங்களவரும் 1907-ம் ஆண்டில் தாழ்ந்த பிரதேச விளைபொருட்சங்கம் (Low Country (Product's Association) என்ற ஒன்றை ஸ்தாபித்தனர். 1832-ம் ஆண்டுக்குப்பிற்பாடு பிரிட்டனில் பாராளுமன்றம் மத்தியவகுப்பாரின் ஆதிக்கத்திலிருந்ததுபோல இலங்கையிலும் இருந்தால் என்னவென்று மத்தியதர வகுப்பினர் கருதலானார்கள்.

அரசியற் சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று கோரி 1909-ம் ஆண்டில் மத்தியதர வகுப்பினர் பலத்த கிளர்ச்சிபண்ணிக் குடியேற்றநாட்டு மந்திரிக்கும் பலமுறை விண்ணப்பித்தார்கள். அவர்களது முக்கியகோரிக்கைகள் இரண்டு. ஒன்று சட்டசபையிலே (Legislative



Council) வகுப்புவாரியான பிரதிநிதித்துவத்தை (Communal Representation) நீக்கிப் பிரதேச வாரியான பிரதிநிதித்துவம் (Territorial Representation) தரவேண்டுமென்பது. அப்படிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டபோது தங்கள் பிரதிநிதிகளைத் தாங்களே தேர்தல் மூலம் தெரிந்தனுப்பும் உரிமைவேண்டும். இரண்டாவது நிர்வாகசபையிலே (Executive Council) உத்தியோகப் பற்றில்லாதவர்களுக்கும் இடமளிப்பது. அப்படி இடமளித்தாற்றான், நிர்வாகவிஷயத்தில் மக்களுக்கும் ஒரு சிறிது பங்கிருப்பதாக அமையும். மத்தியதரவகுப்பினர் இவ்விரு கோரிக்கைகளையும் கேட்டுக் கிளர்ச்சிசெய்தனர். இவர்கள் தங்கள் கோரிக்கைகளுக்கு ஆதாரமாகவும் பல விஷயங்களை எடுத்துக்காட்டினர். கோல்புறூக் சிபாரின்படி 1833-ம் ஆண்டு அமைக்கப்பட்ட சட்டசபை 1909-ம் ஆண்டுக்குப் பொருத்தமானதல்ல. இடைப்பட்ட காலத்தில் இந்நாட்டின் ஜனத்தொகை நாலு மடங்கும், அரசாங்கவருமானம் எட்டுமடங்கும் அதிகரித்துவிட்டன. இம்மாற்றங்கள் நிகழ்ந்தும், சட்டசபையின் அமைப்பில் மட்டும் மாற்றம் நிகழவில்லை. அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்டுச் சட்டசபையிலிருந்த உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவர்கள் மக்களின் குறைகளையெண்ணி அவர்களுக்கு இன்றியமையாதனவாய்ச் செய்யப்பட வேண்டியவை யாவை என்பனபோன்ற விஷயங்களில் அக்கறைகாட்டவில்லை. மக்களின் குறைகளைக் கவர்னரும் சிவில்சேவிஸ் அதிகாரிகளும் அறிந்து கவனிக்கின்ற முறையில் அவ்வளவு பலன்கிட்டாது. ஏனெனில் இம்முறையால் நாட்டுமக்கள் தங்களுக்கு உண்மையாகவே வேண்டியவற்றைப் பெறமுடிவதில்லை. கல்விவிஷயமாகப் பார்த்தால் இலங்கையருக்கு வேண்டாத மேனாட்டுக்கல்விமுறை இங்கு புகுத்தப்பட்டிருக்கின்றது. அதன்பயனாய் இந்நாட்டுத் தொன்மையான கலாச்சாரமும் கலைகளும் அழிவுற்றுப் போகின்றன. மேலும், சட்டசபையில் ஐரோப்பியருக்கு அதிக சலுகைகள் காட்டப்பட்டுள்ளன. பறங்கியர் உள்ளடக்கிய ஏறக்குறைய 9000 ஐரோப்பியருக்குப் பிரதிநிதிகள் நியமிக்கப்பட்டிருக்க, ஏனைய 20 லட்சம் மக்களாகிய சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள்

ஆகியவர்களுக்குத் ஒரு பிரதிநிதி வீதம் நியமிக்கப்பட்டிருந்தது. இன்னோரன்ன விஷயங்களை இலங்கையிலுள்ள மத்தியதர வகுப்பினர் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரிக்கு விளக்கிக்கூறினர்.

இக்கூற்றுகளுக்கு அது சமயம் இலங்கைக்கவர்னராகிய **சேர் ஹென்றி மக்கலம்** மறுப்பு விடுத்தார். முதலாவதாக அரசியல் மாற்றங்களுக்குத் தற்பொழுது அவசியமில்லை எனவும், தற்போதைய அரசாட்சியின்கீழ் நாடு நன்கு செழிப்புற்றிருக்கின்றது எனவும் மக்கலம் கூறினார். தோட்டப்பயிர்களால் அந்நியநாட்டு வர்த்தகம் பெருகி, நாட்டின் பொருளாதாரம் வெகுவாக விருத்தியடைந்தது. செல்வமும் பெருகியது. ஆனால் இச்செல்வம் தோட்டமுதலாளிகளாகிய ஐரோப்பியரின் கையிலே தங்கியிருந்தது என்றால் மிகையாகாது. மேலும் தோட்டப்பயிர்களாகிய கோப்பி, தேயிலை, றப்பர், தென்னை ஆகியவற்றின் அடிப்படையில் இந்நாட்டுப் பொருளாதாரம் அந்நியநாட்டுச் சந்தையில் அடகுவைக்கப்பட்டது என்றும் சொல்லலாம். அன்றியும் தோட்டப்பயிர்களுக்கு மிதமிஞ்சிய உற்சாகம் அளிக்கப்பட்டதால் விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. உணவுஉற்பத்தி தடைப்பட்டது. இவைகளை ஆராயும்போது நாட்டில் உண்மையான சுபீட்சம் மக்கள் மனதுக்கு உகந்தவகையில் ஏற்பட்டதென்று சொல்ல முடியாது. இரண்டாவது ஆட்சேபம் யாதெனில் படித்த ஒருசில இலங்கையரே சீர்திருத்தம் விரும்புவதாகவும், பெரும்பான்மையான நாட்டுப்புற மக்கள் அரசியலில் சிரத்தை கொள்ளாததுமன்றித் தங்கள் மாகாண ஏஜெண்டுகளின்மேலும் மற்றும் உத்தியோகத்தர்மேலும் நம்பிக்கைவைத்து, அவர்களைத் தங்கள் பிரதிநிதியாகக் கருதி வருகிறார்களென்றும் மக்கலம் தெரிவித்தார். இக்கூற்றையும் ஆட்சேபிக்கமுடியும். ஏனெனில் பண்டைய நிலமானியமுறை நிர்வாகத்தில் ஊறிப்போன முதலியார்மார்களின் பேச்சைக்கேட்டே, அந்நியநாட்டவராகிய மாகாண ஏஜெண்டுகள் பரிபாலனம் செய்துவந்தனர். ஆதலின் முதலியார்மார் கூறுவது பொதுஜன



அபிப்பிராயம் எனச் சொல்லமுடியாது. இங்ஙனமாகக் கவர்னர் மக்கலம் மத்தியதர வகுப்பினரின் கோரிக்கைகளுக்கு இணங்க மறுத்தாலும் அவைகளை ஆராய்தல் சால்புடைத்தாகும் எனக் கருதினர்.

1912-ம் ஆண்டில் அரசியல் விஷயமாக மாற்றங்கள் செய்யப்பட்டன. இம் மாற்றங்களின்படி கவர்னர் அதிகாரங்கள் ஒருசிறிதும் குறைக்கப்படவில்லை. வரவு செலவுத்திட்டப் பொறுப்பும், ஏனைய சட்டங்கள் ஆக்கும் உரிமையும், ரத்து அதிகாரமும் கவர்னரிடமே இருந்தன. சுருங்கக்கூறின் இலங்கையின் நிர்வாகப் பொறுப்புக்குக் கவர்னரே பொறுப்பாளியாவர். முன்பிருந்தபடியே நிர்வாகசபை (Executive Council) அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் அரசாங்கப் பகுதிகளின் தலைவர்களையும் உடைத்தாயிருந்தது. சட்டசபை (Legislative Council) பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டது.

## 1912-ம் ஆண்டுச் சட்டசபை.

உத்தியோகப் பற்றுள்ளவர்கள் 11
உத்தியோகப்பற்றில்லாதவர்கள் 10

இப்பத்து ஸ்தானங்களும் பின்வருமாறு பிரிக்கப்பட்டன

| நியமிக்கப்பட்டவர். | | தெரிவு செய்யப்பட்டவர். | |
|---|---|---|---|
| தாழ்நாட்டுப்பிரதேசச் சிங்களவர் | 2 | முஸ்லிம்கள் | 1 |
| தமிழர் | 2 | ஐரோப்பியர் | 2 |
| கண்டியர் | 1 | பறங்கியர் | 1 |
| படித்த இலங்கையர் | 1 | | |

மேலே காட்டியுள்ள அட்டவணைப்படி ஐரோப்பியரும், பறங்கியரும், படித்த இலங்கையரும் தத்தம் பிரதிநிதிகளைத் தாங்களே தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றனர். படித்த இலங்கையரின் சார்பாகச் **சேர் பொன்னம்பலம் இராமநாதன்** அவர்களே தெரிவுசெய்யப்பட்டார். மற்றும் 6 அங்கத்தவர்கள் கவர்னரால் நியமிக்கப்பட்டனர். 1912-ம் ஆண்டு ஏற்பட்ட சீர்திருத்தங்களின் முக்கியத்துவம் என்னவெனில் பிரதிநிதிகளைத் தேர்தல்மூலம் ஓரளவு தெரிவுசெய்யும் முறை அங்கீகரிக்கப்பட்டதும்,

நடுத்தர வகுப்பைச் சார்ந்த சிங்களவருக்கும், தமிழருக்கும் பிரதிநிதித்துவ உரிமை கொடுக்கப்பட்டதுமாகும். சட்டசபையிலிருந்து நிர்வாகசபை பிரிக்கப்பட்டதால் கவர்னரின் ஏகேச்சாதிகார ஆட்சி உறுதிப்பட்டது. சட்டசபையில் உத்தியோகப் பற்றில்லாதவர்கள் எவ்வளவுதான் மக்கள்தேவையை எடுத்துக் கூறியும், கவர்னரின் நிர்வாகக் குறைகளைக் கடிந்தும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினாலும் நிர்வாகசபை அங்கத்தவர்களான கவர்னரின் உத்தியோகஸ்தர்கள் தம்மனம்போலக் காரியங்கள் செய்வதற்கு வழியிருந்து கொண்டுதானிருந்தது.

## மனிங் சீர்திருத்தங்கள் (Manning Reforms)

1912-ம் ஆண்டில் கவர்னர் மக்கலம் அவர்களால் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் நடுத்தரவகுப்பினருக்குத் திருப்தியளிக்கவில்லை. மக்கலம் காலத்திற்குப்பின் தோட்டங்கள் அதிகரித்தாலும், அரசாங்கப் பகுதிகள் விரிவாக்கப்பட்டமையாலும், சட்ட, மருத்துவ, ஆசிரியத் தொழில்கள் விரிவடைந்தமையாலும் இலங்கையில் மத்தியதரவகுப்பினர் பெருகலுற்று 1917-ம் ஆண்டு தொடக்கம் இன்னும் பல அரசியற் சீர்திருத்தங்களை விரும்பிக் கிளர்ச்சி செய்யலாயினர். இவர்கள் கிளர்ச்சிக்குப் பலகாரணங்களிருந்தன. முதலாவதாக முதல் உலகமகாயுத்தம் (1914-1918) ஆரம்பித்தகாலை 1915-ம் ஆண்டளவில் இலங்கையில் சிங்களவருக்கும் சோனகருக்கும் கலகம் மூண்டது. இக்கலகத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கம் தப்பர்த்தப்படுத்தித் தங்கள் ஆட்சியை எதிர்த்துச் செய்யப்படும் முயற்சி என்பதாகக்கருதிக் கலகக்காரர்மீது கடும் நடவடிக்கைகளை எடுத்தது. இதன் பயனாய் இலங்கையில் பிரிட்டிஷாருக்கு விரோதமான உணர்ச்சி மக்களிடை எழுந்தது. இரண்டாவதாக இந்தியாவில் இதுதருணம் **இந்தியத் தேசியக் காங்கிரஸ் சபை** (Indian National Congress) போராட்டத்தால் **மாண்டேகு சேம்ஸ் போர்டு** (Montague Chelmsford Reforms சீர்திருத்தங்கள் ஏற்பட்டு ஜனங்களுக்கு அரசியல் ஆதிக்கம் கொஞ்சங் கொஞ்சமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. மூன்றாவதாகப் பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்



தில் பௌத்தமதமும் இந்துமதமும் புனருத்தாரணஞ் செய்யப்பட்டு, நாட்டு மக்களிடை தங்கள் நாடு, மொழி, கலாச்சாரம் என்பனபோன்ற புத்துணர்ச்சியை உண்டாக்கின. இக்காரணங்களெல்லாம் இலங்கை சுயராஜ்யம் பெறவேண்டுமென்ற மத்தியதர வகுப்பினரின் அபிலாஷைக்கு ஆக்கந்தேடின.

1919-ம் ஆண்டு **சேர். பொன்னம்பலம் அருணாசலம், சேர். ஜேம்ஸ் பீரிஸ்** ஆகியவர்கள் தலைமையில் **இலங்கைத் தேசிய காங்கிரஸ்** (Ceylon National Congress) ஸ்தாபிக்கப்பட்டது. கவர்னரின் ஏகேச்சாதிகாரத்தை நீக்கிப் பொறுப்புள்ள ஜனநாயக ஆட்சியை இலங்கையில் நிறுவவேண்டுமெனவும், சட்டசபையிலே உத்தியோகப்பற்றில்லாதவர்கள் தொகை அதிகமிருக்க வேண்டுமெனவும், அதனால் ஜனங்களின் சுபீட்சத்துக்கான சட்டதிட்டங்களைப் பிரதிநிதிகள் இயற்றமுடியுமெனவும், சட்டசபையிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டு நிர்வாகசபை அமைக்கப்படல் வேண்டுமெனவும் இலங்கைத்தேசிய காங்கிரஸ் கோரியது. மேலும் வகுப்புவாரியான பிரதிநிதித்துவமுறை தவிர்க்கப்பட்டுப் பிரதேசவாரியான பிரதிநிதித்துவமுறை ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும், அதனால்தான் 'இந்நாட்டுமன்னர்' என்ற தத்துவம் பிறக்குமென்றும், பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் இன்னனமாக வழிவகைகள் ஏற்படுமென்றும் காங்கிரஸ் சுட்டிக்காட்டியது. தனது விண்ணப்பங்களைக் குடியேற்றநாட்டு மந்திரியிடம் சமர்ப்பிக்க **எச். ஜே. சி. பெரேரா** என்னும் சிறந்த சட்டநிபுணர் தலைமையில் ஒரு தூதுக்கோஷ்டி லண்டனுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இக்கோஷ்டியார் தங்களது அபிப்பிராயங்களை மிகத்தெளிவாக எடுத்துரைத்த பின்னர், இலங்கைக்கு ஒருபுதிய அரசியல் மாற்றத்தை அளிக்கக்கருதி, 1920-ம் ஆண்டில் பிரிட்டிஷ் பாராளுமன்றம் மசோதா ஒன்றை நிறைவேற்றியது.

இம்மசோதாவில் கண்டுள்ள சீர்திருத்தங்கள் 1920-ம் ஆண்டு இலங்கையில் நடைமுறைக்கு வந்தன. இதன்பிரகாரம் கவர்னர் அதிகாரம் கொஞ்சமும் குறைந்தபாடில்லை. நிர்வாக சபையில் 3 உத்தியோகப்பற்றில்லாதவர்களுக்கு அங்கத்துவம் அளிக்கப்பட்டது. சட்டசபை 14 உத்தியோகப் பற்றுள்ளவரையும், 23 உத்தியோகப்பற்றில்லாதவரையும் அங்கத்தவராய்க் கொண்டு பின்வருமாறு அமைக்கப்பட்டது.

## 1921-ம் ஆண்டுசட்டசபை.

உத்தியோகப் பற்றுள்ளவர் ... 14
உத்தியோகப் பற்றில்லாதவர் ... 23

இவ்விருபத்துமூவர்களையும் பற்றிய விபரம் கீழ்வருமாறு

| தெரிவுசெய்யப்பட்டவர். | | நியமிக்கப்பட்டவர்: | |
|---|---|---|---|
| கொழும்பு நகரப் பகுதி ... | 1 | கண்டியர் ... | 2 |
| மேற்குமாகாணப் பகுதி ... | 2 | முஸ்லீம்கள் ... | 1 |
| மற்று 8 மாகாணப்பகுதிகள் | 8 | இந்தியர் ... | 1 |
| பறங்கியர் ... | 1 | விசேசநலவுரிமையுடையோர் | 3 |
| ஐரோப்பியர் ... | 2 | | |
| தாழ்ந்த பிரதேச விளைபொருட்சங்கம் | 1 | | |
| வர்த்தகர் சங்கம் ... | 1 | | |

மேற்கூறியவற்றிலிருந்து ஐரோப்பியர், பறங்கியர், கண்டியர், முஸ்லீம்கள், இந்தியர் ஆகியவர்களுக்கு 7 ஸ்தானங்கள் வகுப்புவாரியான பிரதிநிதித்துவ முறையில் அளிக்கப்பட்டன. அதேசமயம் 11 பிரதேசங்களுக்கு 11 பேர் பிரதேசவாரியாகத் தெரிவு செய்யப்பட்டதும், தாழ்ந்த பிரதேசச் சிங்களவருக்கும் தமிழருக்கும் (அதாவது தாழ்ந்தபிரதேச விளைபொருட்சங்கம், வர்த்தகச் சங்கம், விசேஷ நலஉரிமைகள்) 5 ஸ்தானங்கள் பிரதேசவாரியாக அளிக்கப்பட்டதும் கவனிக்கற்பாலதாகும். இச் சீர்திருத்தங்களின் பயனாய் ஏற்பட்ட விளைவுகள் யாதெனில், 21 வயதுக்கு மேற்பட்ட ஆங்கிலம் அல்லது சிங்களம் அல்லது தமிழ் எழுதப் பேச வாசிக்கத் தெரிந்தவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டதும், பிரதேசவாரியான பிரதிநிதித்துவமுறை ஏற்பட்டதுமாம். இந்த அர



சியல்திட்டத்தில் 1924-ம் ஆண்டில் சிறிதுமாற்றம் ஏற்பட்டது. சட்டசபையில் 23 பேர்களாயிருந்த உத்தியோகப்பற்றில்லாதவர்கள் இப்போது 37 பேர்களாக அதிகப்படுத்தப்பட்டனர். இவர்களில் முன்பு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் 16 பேராக இருந்ததை இப்போது 29 பேராக உயர்த்தினர். பிரதேசவாரியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட ஸ்தானங்கள் ஒவ்வொரு மாகாணத்துக்கும் இரண்டுவீதம் அதிகப்படுத்தப்பட்டன.

**கவர்னர் மனிங்** சீர்திருத்தங்களின்படி ஏற்பட்ட அரசியல் முறையானது 1920-ம் ஆண்டிலிருந்து ஏறக்குறைய 10 ஆண்டுகள் அமுல் நடத்தப்பட்டது. சட்டசபையில் மத்திய வகுப்பினரின் பிரதிநிதிகள் பெரும்பான்மையினராயிருந்தனர். சட்டசபையிலுள்ள உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தவர்களின் தொகை அதிகப்படுத்தப்பட்டிருந்தாலும் அவர்களுக்கு நிர்வாகசபையார் தவறுகள் இழைத்தபோது அவர்களைக் கண்டிக்கும் உரிமை இருந்ததேதவிர அன்னவரினின்றும் பரிபாலனப் பொறுப்பைக் கைப்பற்றித் தாமே நிர்வாகம் செய்யக்கூடிய கடமையுணர்ச்சி இருக்கவில்லை. உத்தியோகப்பற்றில்லாதவர்கள் நிர்வாகசபையின் போக்கைக் கண்டித்து, விவாதம் செய்வதில் பயிற்சியுற்று, அதைக்கண்டிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாய் இருந்தார்களேதவிர, அவர்களுக்கு நாட்டின் நிர்வாகத்தை நடத்தும் நிர்வாகசபை மீது எவ்விதமான அதிகாரமும் கொடுக்கப்படவில்லை. இதன்காரணமாய்த் தங்கள் வாய்கொண்டமட்டும் கத்திக் கத்தி ஒரு பிரயோசனத்தையும் அடையாத சட்டசபை அங்கத்தவர்கள் நாளடைவில் உற்சாகம் குறைந்தவர்களாய், அரசியல் அமைப்பின்மீது வெறுப்புக்கொள்ளத் துவங்கினர்.

## டொனமூர்ச் சீர்திருத்தம் (Donoughmore Reforms)

1929-ம் ஆண்டு டொனமூர்ப்பிரபுவின் தலைமையில் இலங்கையின் அரசியல் முறைபற்றி விசாரணைசெய்ய ஒரு விசாரணைச்சபையைப் பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பிவைத்தது.

டொனமூர்க்கொமிஷன், அரசியல் மாற்றங்கள் செய்ய விரும்பியபோது, இரண்டு முக்கியவிஷயங்களைக் கவனத்துக்கு எடுத்துக்கொண்டது. முதலாவதாக இலங்கையர்களின் பிரதிநிதிகளுக்குப் பரிபாலன விஷயங்களில் தக்க பயிற்சி அளிக்கவேண்டும். இதுகாறும் இருந்துவந்த சட்டசபையில் உத்தியோகப்பற்றில்லாத அங்கத்தவர் பெரும்பான்மையராயிருந்தாலும் அவர்கள் நிர்வாகசபை அங்கத்தவரைக் கண்டித்து விவாதம் புரிவதில் தேர்ச்சியுற்றிருந்தார்களேதவிரப் பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்றும் திறமையும் பயிற்சியும் அற்றவராயிருந்தனர். ஏனெனில் சட்டசபை அங்கத்தவர்கள் எவ்வளவுதான் விரும்பினாலும், அவர்களால் நிர்வாகசபையைக் கைப்பற்றி நாட்டின் நிர்வாகத்தை ஏற்று நடத்துவதற்கு அரசியல் திட்டத்தில் இடமில்லாதிருந்தது. எனவே தாங்களே தங்கள் பரிபாலனத்தை நடத்தும் பேராற்றலை அவர்களுக்கு அளித்தாற்றான் இன்றியமையாத கல்விப்பிரச்சினை, சுகாதாரப்பிரச்சினை, கைத்தொழில் பிரச்சினை, உணவுப்பிரச்சினை போன்றவைகளைத் தீர்ப்பதில் அவர்களுக்குப் பயிற்சியும் அனுபவமும் ஏற்படமுடியும். இதுகாறும் பிரிட்டிஷ்முறையில் பழகிய உத்தியோகஸ்தரின் துணைகொண்டு கவர்னர் நிர்வாகத்தை நடத்திவந்தார். ஒருவரின் செயலைக் கண்டனம்பண்ணும் உரிமையுடையவருக்கு அச்செயலை நிறைவேற்றும் பொறுப்பும் கொடுக்கப்பட்டதாற்றான் அச்செயலைக் கிரியாம்சத்தில் நிறைவேற்றுவதிலுள்ள கஷ்டங்களும் தடங்கல்களும் நன்குவிளங்கும். ஆகவே சட்டசபை அங்கத்தவர்களின் கையிலேயே நிர்வாகப் பொறுப்பும் ஒப்படைக்கப்படவேண்டுமென்று டொனமூர்க்கொமிஷன் விரும்பியது. மற்றொருவிஷயம் என்னவெனில் இதுகாறும் மிகச்சிறு பான்மையரான படித்தவருக்கே கொடுக்கப்பட்டிருந்த வாக்குரிமையால், கிராமாந்தரங்களில் வசித்துவந்த விவசாயிகள் தொழிலாளர்கள் ஆகியவர்களின் நிலைமையில் அபிவிருத்தி காண்பதற்கு இடமில்லாதிருந்தது. இக்குறையைப் போக்குவதற்கு வழிவகைகள் தேடவேண்டுமென்றும் டொனமூர்க்கொமிஷன் விரும்பியது. இவ்விருவிஷயங்களையும் மனத்திற்கொண்ட டொனமூர்



விசாரணைச்சபையானது இலங்கையருக்கும் பயிற்சியளிக்கும் அரசாங்கமுறையைச் சிபார்சு செய்தது. அன்றியும் சாதாரண மக்களுக்கு அரசியல் அந்தஸ்து வழங்கவும் ஏற்பாடுசெய்தது. சாதாரண மக்களுக்கும் வாக்குரிமை இருந்தாற்றான் அவர்களைத் தேடிவரும் பிரதிநிதிகள் அன்னாரது வெறுப்பை நீக்குவதற்கும் விருப்புக்களைச் செய்து கொடுப்பதற்கும் முன்வருவார்களென எண்ணியது.

## டொனமூர்க் கொமிஷனின் சிபார்சுகள்.

1. சர்வஜனவாக்குரிமை,
2. அரசாங்கசபை,
3. கவர்னரின் அதிகாரத்தைக் குறைத்தல் என்பனவாகும்.

**1. சர்வஜன வாக்குரிமை:** 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும் பெண்களும் வாக்குரிமை பெற்றனர். இதுவரை கல்வியாலுஞ் செல்வத்தாலும் அதிகாரம் பெற்றிருந்த சிலர்கையில் அரசியல் ஆதிக்கம் இருந்தது. இப்போது சாதாரண மக்களின் பொறுப்பில் அரசியற் செல்வாக்கு அமர்ந்திருந்தது. நாட்டுப் புறங்களிலும் கிராமாந்தரங்களிலுமுள்ள சாதாரண மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்திசெய்வதாற்றான் தமக்கு வெற்றி கிட்டுமென்று தேர்தலிற் போட்டியிடும் அபேட்சகர்கள் தொடங்கினர். சாதாரண மக்களை இத்தனை காலம் புறக்கணித்ததுபோன்று இனியும் செய்யமுடியாது; தேர்தலிற் தாம் தோற்க நேரிடுமென்பதை ஒவ்வொரு அபேட்சகரும் உணரத்தொடங்கினர். எனவே சாதாரண மக்களுக்கு வேண்டியதான விவசாய உற்பத்தி, ஸ்தல ஸ்தாபன அபிவிருத்தி, சுகாதாரத்தில் அக்கறை, தொழிலாளர் முன்னேற்றம், போதனை முதலிய காரியங்களிலீடுபட்டு இவைகளைப் பெற்றுத்தர முயற்சிகள் செய்தனர். சுருக்கக்கூறின் சாதாரண மனிதன் அரசியலென்னும் உடலின் ஒரு முக்கிய உறுப்பாகக் கருதப்படலானான்.

**2. அரசாங்க சபை** (State Council): முன்னிருந்து வந்த நிர்வாகசபையும், சட்டசபையும் ஒன்றாக்கி அரசாங்க சபையொன்றை அமைத்து அதற்கு மேற்குறிப்பிட்ட இருசபைகளினது அதிகாரங்களுங் கொடுக்கப்படுமாறு டொனமூர் கொமிஷன் சிபார்சு செய்தது. இந்த அரசாங்க சபையில் மொத்தம் 61 அங்கத்தவர்கள் இருந்தனர். பிரதேசவாரியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட 50 பிரதிநிதிகளும், சிறுபான்மை வகுப்பினருக்காக (Minority Community) கவர்னரால் நியமிக்கப்பட்ட 8 பிரதிநிதிகளும், அரசாங்கத்தின் மூன்று முக்கிய விஷயங்களைப் பொறுப்புவகித்துவந்த மூன்று **அரசாங்க அதிகாரிகளும்** (Officers of State) அடங்கியசபையே **அரசாங்கசபை** (State Council) எனப்படும். இராஜாங்க அதிகாரிகள் கவனித்துவந்த விஷயங்கள் அரசாங்க சேவையாளரைக்கவனித்தல் (Public Services), சட்டம் நிர்வகித்தல் (Law), நிதிப்பொறுப்புவகித்தல் (Finance) ஆகியவற்றின்பாற்படும். இந்த அரசாங்கசபையானது மொத்தத்தில் நாட்டுக்குவேண்டிய சட்டதிட்டங்களை வகுத்ததுமன்றிப் பரிபாலன கருமங்களையும் நிர்வகித்து வந்தது. அரசாங்க அதிகாரிகள் நீங்கலான அரசாங்கசபை அங்கத்தவர்கள் தங்களை **ஏழு நிர்வாகக் குழுவினராகப்** (7 Executive Committees) பிரித்துக்கொண்டு அரசியற் பரிபாலனம் செய்துவரலாயினர். இந்த ஏழுநிர்வாகக் குழுக்களும் தங்களுக்கெனத் தனித்தனி ஏழு தலைவர்களைத் தெரிந்தெடுத்தன. நிர்வாகக் குழுவின் ஏழுதலைவர்களும் அடங்கிய சபையானது மந்திரிகள்போர்ட்டு (Board of Ministers) என வழங்கப்பட்டது.

இந்த ஏழு மந்திரிகளும் முறையே உள்நாட்டு விவகாரம், விவசாயம், ஸ்தலஸ்தாபனம், சுகாதாரம், கல்வி, தொழில்கள், போக்குவரத்துக்கள் ஆகிய ஏழு இலாக்காக்களை (Departments) நிர்வகித்து வந்தார்கள். இவ்வரசியல்முறை காரணமாக இலங்கைமக்களின் பிரதிநிதிகள், தம்நாட்டுப் பரிபாலனத்தில் பயிற்சிபெற்றதுமன்றிப் பொறுப்புணர்ச்சியுடன் கடமையாற்றப் பழகிக்கொண்டனர். இவர்கள் முன்னிருந்ததுபோல் நாட்டுப்



பரிபாலனத்திலோ அன்றிச் சட்டதிட்டங்களிலோ குறைபாடுகள் இருக்குமாயின் அதற்கு வேறெவரையும் கண்டிக்கவும் வசைப்புராணம் பாடவும் இயலாது. தங்களைத் தாங்களே குற்றப்படுத்திக் கொள்ளவேண்டியதே. வரவுசெலவுத்திட்டத்தைத் (Budget) தயாரித்து, அரசாங்கசபைக்குச் சமர்ப்பிக்கும் பொறுப்பும் மந்திரிகள் சபைக்கு இருந்தது. ஏழு இலாக்காக்களை நிர்வகித்த மந்திரிகள் தத்தம் இலாக்காவுக்குப் பொறுப்பாக்கப்பட்டிருந்தார்கள். அவர்களுக்கு மற்றவர்களுடைய இலாக்காக்களைப்பற்றிய அக்கறை இருக்கவில்லை. தத்தம் இலாக்காக்களின் முன்னேற்றத்துக்கும், குறைபாடுகளுக்கும், அந்தந்த மந்திரிகளே தனிப்பட்டமுறையிலே அரசாங்க சபைக்கும் பொறுப்பாளியாவார்.

**3. கவர்னரின் அதிகாரத்தைக் குறைத்தல்:** டொனமூர்க்கொமிஷன் சிபார்சுப்படி கவர்னரின் விசேஷ அதிகாரங்களும், சலுகைகளும் அவசரகாலத்தில் சட்டங்களைப் பிறப்பிக்கும் தனியுரிமையும், மசோதாக்கள் சட்டமாவதற்கு கவர்னர் கொடுக்கவேண்டிய சம்மதம் ஆகிய உரிமையும் முன்னிருந்ததுபோலவே இப்போதும் இருந்துவந்தன என்றாலும் முன்போலக்கவர்னர் ஏகச்சாதிகாரமான அதிகாரம் நடத்தவியலாது போயிற்று. நிர்வாகப்பொறுப்பு அரசாங்கசபைக்கு வந்துவிட்டது என்பதைப் பார்த்தோம். கவர்னர் இப்போது அரசியலை மேற்பார்க்கும் ஒரு உயர்தர உத்தியோகஸ்தராகவே கருதப்பட்டார். இப்போது அவர் நடுநிலைமை வகிக்கவேண்டிய கட்டம் ஏற்பட்டுவிட்டது. உதாரணமாக ஒரு பந்தாட்டக் கோஷ்டியின் தலைவன் போன்ற நிலையிலிருந்த கவர்னர் இப்போது இருபந்தாட்டக் கோஷ்டிகளில் நடுநிலைமைவகிக்கும் மத்தியஸ்தன் (Referee) போன்று விளங்கினர். இருகோஷ்டிகளில் எந்தக் கோஷ்டிக்கும் சாராத ஒரு மத்தியஸ்தர் எங்ஙனம் பாரபட்சமின்றித் தீர்ப்புக் கூறுவாரோ அங்ஙனமே கவர்னர் அரசாங்கசபையில் அலுவல்களை மேற்பார்த்து, அச்சபையினரால் கொண்டுவரப்படும் தீர்மா

னங்களுக்குத் தமது சம்மதமாகிய முத்திரையை அளித்து வந்தார். அரசியல் விளையாட்டில் விளையாடுபவர்கள் தவறு இழைத்தால், சட்டத்தை மீறினால் மத்தியஸ்தராகிய கவர்னர் அதைமேற்பார்த்து வந்தார். இவ்வாறாகக் கவர்னரின் ஏதேச்சாதிகார ஆட்சிமுறை பெருமளவு கட்டுப்படுத்தப்பட்டது.

டொனமூர்க்கொமிஷன் சிபார்சுப்படி இந்நாட்டின் அரசியல் 1931-ம் ஆண்டு தொடக்கம் 1947-ம் ஆண்டுவரை நடைபெற்றுவந்தது. இந்தப்பதினாறு வருடங்களிலும் இலங்கையருக்கு அரசியல் நிர்வாகத்தில் அனுபவமும் பொறுப்புணர்ச்சியும் ஏற்பட்டன. மேலும் நாடு பல துறைகளிலும் அபிவிருத்தியடைந்தது என்பதற்கு ஐயமில்லை. என்றாலும் இவ்வரசியல்முறையில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்தன. முதலாவதாக வாக்குரிமை வயதுவந்த எல்லோருக்கும் அளிக்கப்பட்டதால், படிப்பு வாசனையற்ற சாதாரணமக்கள், சாதி, மதம், அந்தஸ்து ஆகியவற்றைக் கவனித்துத் தங்கள் வாக்குரிமையைத் தத்தம் சாதியினருக்கோ, சமயத்தினருக்கோ, பணம் படைத்தவருக்கோ அளித்துவந்தார்கள். நாட்டுப்பற்றும் சேவா உணர்ச்சியுமுள்ளவர்களுக்கு அரசாங்கசபையில் இடமில்லாது போயிற்று. சர்வஜன வாக்குரிமையால் இக்குறைமட்டும் ஏற்படவில்லை. மற்றொன்று என்னவென்றால் சிறுபான்மையான மக்களுக்குப் பிரதேசவாரியான பிரதிநிதித்துவ முறையால் அதிக நன்மை ஏற்படவில்லை. விசேஷமாக மலைநாட்டுச்சிங்களவர் இம்முறையால் தமக்குப்போதிய பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை இழந்தார்கள். ஆதலின் அரசாங்கம் பிரதிநிதித்துவ முறையைத் திரும்பவும் மாற்றவேண்டியிருந்தது. டொனமூர் சிபார்சுகளிலுள்ள மற்றொருகுறை எதுவெனில் ஏழு நிர்வாகக் குழுக்களின் தலைவர்களான ஏழுமந்திரிகளும் தமக்குள் மனஒருமைப்பாடின்றி காரியம் நிகழ்த்தினர். அவர்களிடையே பரஸ்பர ஒற்றுமை நிகழவில்லை. சாதாரண மக்களின் நற்புகழ்ச்சியையும் ஆதரவையும் பெறுவதற்காக இம்மந்திரிகள் ஒருவரை ஒருவர் முந்திக்கொண்டு தத்தம் இலாக்காக்களைப் பெருக்



கிக்கொண்டு போனார்களேதவிர உண்மையில் தங்கள் சுயநலத்தைவிட நாட்டின்நலமே பெரிது என்பதாகக் கருமம் ஆற்றினார்களில்லை. இக்காரணத்தால் விசேஷதிறமையும் செயலாற்றும் தேர்ச்சியுமுள்ள இரண்டொரு மந்திரிகள் மிகமிகத் துரிதமாய் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். அதேசமயம் அதிக செல்வாக்கும் திறமையுமில்லாத மந்திரிகள் ஆமைவேகத்தில் நகர்ந்துகொண்டிருந்தார்கள். மேலும் இம்மந்திரிகளுக்குக் கூட்டுப் பொறுப்புணர்ச்சி (Collective Responsibility) இருக்கவில்லை. இவர்களையெல்லாம் ஒருவழிப்படுத்தி ஏககாலத்தில் எல்லாத் துறைகளிலும் முன்னேற்றங் காணும்படி செய்யக்கூடிய தேர்ப்பாகன் இருக்கவில்லை. அரசாங்கம் என்றதேரைத் தேர்பாகனில்லாத ஏழு குதிரைகள் வெவ்வேறுதிக்குகளுக்குத் தத்தம் மனம்போனவாக்கில் இழுத்துச்சென்றன. கடைசியாக அரசாங்கசபை சட்டமியற்றவும், நிர்வாகஞ்செய்யவும் பொறுப்பிருந்தாலும் கவர்னர் உசிதப்படி சட்டங்கள் அங்கீகரிக்கப்படாமலும் போனதுமுண்டு. மேற்கூறிய குறைகளிருந்தாலும் டொனமூர்ச் சீர்திருத்தங்களால் இந்நாட்டு அரசியலில் ஒரு புத்துணர்ச்சி மக்களிடை ஏற்பட்டது என்பதை மறுப்பதற்கில்லை.

## சோல்பரிக்கொமிஷன் (Soulbury Commission)

டொனமூர்க்கொமிஷனின் சிபார்சுகளிலிருந்த குறைபாடுகளை நீக்கவேண்டுமென்று இலங்கையில் அரசாங்கசபையினரிடையே கிளர்ச்சி நடந்துவந்தது. 1942-ம் ஆண்டு அரசாங்கசபையானது இலங்கைக்கு **டொமினியன் அந்தஸ்து** (Dominion Status) அளிக்கப்படவேண்டுமென்று விரும்பியது. அதற்கிணங்க 1943-ம் ஆண்டில் பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரி இந்நாட்டு மக்களுக்கு ஒரு வாக்குறுதியளித்தார். அதாவது இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்ததும் இலங்கைக்கு உள்நாட்டு நிர்வாகத்தில் பூரணசுயேச்சை அளிப்பதாகப் பிரிட்டிஷ்பாராளுமன்றம் தீர்மானித்துள்ளது என்பதாம். ஆனால் இலங்கையில் வெளிநாட்டு விவகாரமும், கொமன்வெல்த் நாடு

களுடன் உள்ள தொடர்பு சம்பந்தமும் பிரிட்டிஷ்பாராளுமன்றம் கவனித்துக் கொள்ளும் என்பதாகவும் அறிவிக்கப்பட்டது. இதன் காரணமாகச் **சோல்பரிக் கொமிஷன்** இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டது இக்கொமிஷன் அரசாங்கசபையிலுள்ள அங்கத்தவரின் கோரிக்கைகளையும், மற்றும்பல சிறுபான்மை மக்களுடைய கோரிக்கைகளையும் நன்ருக ஆராய்ந்து தனது சிபார்சுகளை 1945-ம் ஆண்டு அறிக்கையிட்டது.

சோல்பரிக் கொமிஷனின் சிபார்சுகள் பின்வருமாறு:—

1. சர்வஜனவாக்குரிமை ஊர்ஜிதம் செய்தல்.
2. சட்டசபையில் மேல்சபை கீழ்சபை என இரு பிரிவுகள் ஏற்படுத்தல்.
3. நிர்வாகசபைச் சீர்திருத்தம்.
4. சிறுபான்மை வகுப்பினருக்குச் சலுகைகள் செய்தல்.
5 கவர்னர் அதிகாரத்தை மேலும் குறைத்தல்.

**1. சர்வஜன வாக்குரிமை :** டொனமூர் விசாரணைச் சபையார் சிபார்சுசெய்துள்ளபடி 21 வயதுக்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாருக்கும் வாக்குரிமை அளித்திருப்பதை சோல்பரிக்கொமிஷன் ஊர்ஜிதஞ்செய்தது. சர்வஜன வாக்குரிமையினுல்தான் நாட்டுப்புறங்களிலும், கிராமாந்தரங்களிலுமுள்ள ஏழைமக்கள் தங்களுடைய பிரதிநிதிகளின் மூலம் தங்களுக்கு வேண்டிய காரியங்களைப் பெற்றிருக்கின்ருர்கள். அவர்களுடைய வாழ்க்கை பலதுறைகளிலும் முன்னேறிக்கொண்டு வருகிறது. இவ்வித வாக்குரிமை அவர்களுக்கு இருந்திராவிட்டால் அவர்களின் குறைகளை நிவர்த்திக்க எவருமே முன்வந்திருக்க மாட்டார்கள். அவர்கள் குறை என்றென்றும் தீராததாகவே இருந்திருக்குமென்று சோல்பரிக் கொமிஷன் கருதியது. எனவே சர்வஜன வாக்குரிமை இந்நாட்டு மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருப்பது நன்மை என்றும், அது தொடர்ந்திருக்க வேண்டுமென்றும், இம்முறையில்



இருந்துவரும்குறைகள் காலடைவில் மக்களுக்குக் கல்வியறிவு ஊட்டப்படும்போது காணப்படாதென்றும் கருதியது.

**2. இருபிரிவுள்ள சட்டசபைகள்:** இலங்கைப் பாராளுமன்றம் **ஜனப் பிரதிநிதிகள் சபை** (House of Representatives) என்ற கீழ்சபையும், **செனேற்** என்ற மேல்சபையும் கொண்டதாய் அமைக்கப்பட்டது. ஜனப்பிரதிநிதி சபைக்கு அங்கத்தவர்கள் பிரதேசவாரியாக மக்களாற் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சிறுபான்மை வகுப்பினரான மக்களுக்கும் இச்சபையில் அங்கத்துவம் அளிக்கப்பட்டது. மொத்தம் 101 பேர் அங்கத்தவர்கள் அடங்கிய ஜனப்பிரதிநிதி சபையில் 6 பேர் சிறுபான்மையினரது பிரதிநிதிகளாகக் கவர்னரால் நியமிக்கப்பட்டனர். 75,000 மக்களடங்கிய பிரதேசத்துக்கு ஒருபிரதிநிதியும், 1000 சதுர மைல்களைக் கொண்ட ஒருபிரதேசத்துக்கு ஒருபிரதிநிதியும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் அங்கம் வகித்தார்கள். மேலும் ஏதாவது ஒருபிரதேசத்தில் சிறுபான்மை மக்கள் கூட்டமாக வசித்தால் அம் மக்களுக்கு விசேஷ பிரதிநிதித்துவமும் அளிக்கப்பட்டது. ஏனெனில் புதிதாய் அமைக்கப்பட்ட பாராளுமன்றத்தில் பெரும்பான்மையினரோடு சிறுபான்மையினரும் அங்கம்வகித்துத் தம்முரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதற்காகவேயாகும். அடுத்தபடியாகச் செனேற்சபை எனப்பட்ட மேல்சபையில் 35 வயதுக்குமேற்பட்ட 30 அங்கத்தினர் உறுப்பினராயிருந்தனர். இவர்களில் 15 பேர் ஜனப்பிரதிநிதி சபையால் தெரிவு செய்யப்படுபவர்கள். மற்றும் 15 பேர் கல்வி, விஞ்ஞானம், கைத்தொழில், மருத்துவம், விவசாயம், சமூகத்தொண்டு முதலியதுறைகளில் நாட்டுக்கு அளப்பரும் சேவைசெய்தவர்களும், மிகுந்த அனுபவம் உள்ளவர்களுமாயிருந்து கவர்னரால் நியமிக்கப்படுபவர்கள். ஜனப்பிரதிநிதிகள் சபைக்கு 5 வருடத்துக்கொருமுறை தேர்தல் நடைபெறும். ஜனப்பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாகையால் அவர்களே நாட்டின் அரசியல் ஆதிக்கத்தை உடையவர்களா

வார்கள். சட்டங்களியற்றுவதும், நிதிசம்பந்தமான விஷயங்களைப் பரிபாலிப்பதும் இவர்களைச் சார்ந்ததாகும். செனேற்சபை அங்கத்தவர்கள் ஜனப்பிரதிநிதிகள் சபை இயற்றும் மசோதாக்களைக் கவனமாக - நிதானமாக- ஆற அமையப் பரிசீலனை செய்து அவைகளிலுள்ள குறைபாடுகளைக் களையும்படி ஆலோசனை கூறவேண்டியவர்களாவர். இவர்கள் கீழ்ச்சபையினருக்கு ஆலோசனை கூறலாமேயொழியத் தங்கள் கருத்துக்களை அவர்கள் மேல் திணிக்க முடியாது. செனேற்சபை அங்கத்தவர்கள் பொதுத்தேர்தலில் போட்டிபோடவேண்டிய அவசியமும் சந்தர்ப்பமும் இல்லையாதலால், அவர்கள் பாரபட்சமின்றி, விருப்பு வெறுப்பு இன்றிச் சுயேச்சை மனத்துடன் எம்மசோதாவையும் ஆராய்ந்து தங்கள் ஆலோசனையைக் கூறலாம். மேலும் இவர்கள் பலதுறைகளிலும் அனுபவமும் ஆற்றலும் உள்ளவர்களாதலால் இவர்களுடைய ஆலோசனைகள் நாட்டுக்குப்பயன் தரக்கூடும்.

**3. நிர்வாகசபை (Executive)ச் சீர்திருத்தங்கள்:** பிரதம மந்திரியை உள்ளடக்கிய மந்திரிசபை (Cabinet யானது நாட்டின்நிர்வாகத்தை நடத்துவிக்கும் ஜனப்பிரதிநிதிகள் சபையில் யார் அதிக செல்வாக்குடையவராய் இருப்பாரோ அவரே பிரதமமந்திரியாக இருந்து தமது நிர்வாகசபையின் மந்திரிகளைப் பொறுக்கி எடுப்பார். இம்மந்திரிசபை கூட்டுப் பொறுப்புணர்ச்சியுடன் நாட்டின் நிர்வாகத்தை நடத்தும். நாட்டின் அபிவிருத்திக்கான திட்டங்களை எல்லா மந்திரிகளும் ஏகமனத்தோடு, ஒரே மனப்பான்மையுடன் நடத்துவிப்பர். டொனமூர்க் கொமிஷன் சிபார்சுப்படி ஏற்பட்ட மந்திரிகள்சபை போன்றல்லாது அரசாங்கம் என்ற இரதத்தை மந்திரிகள் என்ற குதிரைகள் ஒரேவழியில் இழுத்துச்செல்லும். அக்குதிரைகளை ஒருமுகப்படுத்தி நடத்திச்செல்லும் தேர்ப்பாகன் பிரதம மந்திரியாவார். அவர் குதிரைகளின் கடிவாளத்தைப் பிடித்து இழுத்துக் குதிரைகள் வெவ்வேறு திக்குகளில் ஓடநினைக்கும்போதெல்லாம் அவைகளை நேர்வழிப்படுத்துவார். இம்மந்திரிசபை தமது



கருமங்களுக்கு ஜனப்பிரதிநிதி சபைக்குப் பொறுப்புக் கூறவேண்டியதாகும். 10 மந்திரிகளை உள்ளடக்கிய மந்திரி சபையானது இலங்கையின் உள்நாட்டு விவகாரங்கள் அனைத்தையும் நடத்துவிக்கும் பொறுப்புடையதாகும். வெளிநாட்டு விவகாரங்கள் பாதுகாப்பு ஆகிய இருவிஷயங்களும் முன்போலப் பிரிட்டிஷ் அரசாங்கத்தால் நடத்தப்படும். அன்றியும் பொதுவான கருத்துடையவர்களைக் கொண்டே மந்திரிசபை அமைக்கப்பட்டதால், இனிப் பல அரசியல் கட்சிகள் உருவாகும் எனக் கருதப்பட்டது.

**4. சிறுபான்மைவகுப்பினர் (Minorities) உரிமைகள்:** சிறுபான்மை வகுப்பினரின் நல உரிமைகளைப் பாதுகாக்கவேண்டியும், அவர்கள் பெரும்பான்மையினரான மக்களால் நசுக்கப்படாதிருக்கும் பொருட்டும் சோல்பரிக் கொமிஷன் சில சீர்திருத்தங்கள் செய்வது அவசியமாயிற்று. ஜனநாயகம் புதிதாக உலவுகின்ற இலங்கை போன்ற ஒரு நாட்டில் சிறுபான்மையினர் பெரும்பான்மையினருக்கு அரசியலில் பதுங்கிகிடக்க நேரிடலாம். எனவே பெரும் பான்மையினர் சிறுபான்மையினருக்கு நலமாகநடந்து அவர்களை நம்பிக்கை பெறுமட்டும் பின்னவருக்கு சிலசலுகைகள் அரசியல் அமைப்பில் அளிக்கப்பட வேண்டுமென்று சோல்பரிக்கொமிஷன் உணர்ந்து பின்வரும் மூன்று சிபார்சுகளைச் செய்தது. முதலாவதாக, செனேற் என்ற மேல்சபையில் சிறுபான்மைச் சமூகத்தவருக்கு அங்கத்துவம் அளிப்பது. இரண்டாவதாகச் சிறுபான்மையினருக்கு விரோதமாகச் சட்டசபையில் நிறைவேற்றப்படும் மசோதாக்களுக்கு கவர்னர் தமது அங்கீகாரத்தை அளிக்காதிருப்பது; ஏனெனில் மசோதா சட்டமாவதற்குக் கவர்னரின் அங்கீகாரம் அவசியமாகும். மூன்றாவதாக அரசாங்க உத்தியோகங்களில் சிறுபான்மையினருக்கும் இடம் கிடைக்கும்படியாக அரசாங்க சேவைக் கொமிஷனை (Public Service Commission) அரசியல் ஆதிக்கமற்ற ஒரு சுயேச்சைக் கொமிஷனாக ஏற்படுத்துவது. கொமிஷன் தகுதியான அரசாங்க உத்தியோகஸ்தர்களைத்

தெரிந்தெடுத்துக் கவர்னருக்கும் சிபார்சுசெய்யும். இம்மூன்று வழிகளினாலும் சிறுபான்மைச் சமூகத்தாரது உரிமைகள் காப்பாற்றப்படுமெனச் சோல்பரி விசாரணைச் சபையார் கருதினர்.

**5. கவர்னரின் அதிகாரத்தைக்குறைத்தல்:** இதுகாறும் அரசியலில் பிரதான ஸ்தானத்தை வகித்துவந்த கவர்னர் இப்போது இங்கிலாந்து அரசரின் ஒருபிரதிநிதியாக மட்டும் கருதப்பட்டார். ஏனெனில் இலங்கையர் எல்லா விதமான உள்நாட்டு விவகாரங்களையும் செய்துமுடிக்கப் பூரணசுயேச்சையளிக்கப்பட்டனர். டொனமூர்க் கொமிஷன் கவர்னருக்கு அளித்திருந்த 17 விஷயங்களுக்கான விசேஷ அதிகாரங்கள் இப்போது 7 ஆகக் குறைக்கப்பட்டன. ஏறக்குறைய இங்கிலாந்து அரசன் போன்று, இலங்கையின் கவர்னரும் எந்தக்கட்சிக்கும் பாரபட்சமற்றவராய், மந்திரிசபையாரது ஆலோசனைப்படி நிர்வாகவிஷயங்களை நடத்திவரலாயினர். பாராளுமன்றத்தைக் கூட்டுவதும், கலைப்பதும், மந்திரிகளை நியமிப்பதும் விலக்குவதும் ஆகிய செய்கைகளில் இங்கிலாந்து அரசருக்குள்ள உரிமையே இலங்கை கவர்னருக்கும் கொடுக்கப்பட்டது. கவர்னருக்குக் கொடுக்கப்பட்ட விசேஷஅதிகாரங்கள் நாட்டின்நலனை உத்தேசித்தே அவரிடம்விட்டு வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இங்ஙனமாகச் சோல்பரிக்கொமிஷன் கவர்னரின் அதிகாரத்தைக் குறைத்துப் பல சிபார்சுகளைச் செய்தது.

### சுருக்கம்

இருபதாம் நூற்றாண்டில் இலங்கை அரசியல் அமைப்பில் ஏற்பட்ட மாறுதல்கள் — மக்கலம், மனிங், டொனமூர், சோல்பரி சீர்திருத்தங்கள் — 1855-ல் சட்டசபை ஸ்தானங்களைக் கூட்ட ஐரோப்பியரும் பறங்கியரும் அவாவுதல் — பிரிட்டிஷ் அரசாங்கம் மறுத்தல் — இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அரசியலில் பங்குபெற, ஆங்கிலேயர் மேனாட்டில் அநுபவிக்கும் உரிமையைத் தாமும் பெற இலங்கையின் மத்தியதரவகுப்பினர் கோருதல் — தோட்டத்துரைமார்சங்கம் போன்ற தாழ்ந்த பிரதேச விளைபொருட்சங்கம் ஸ்தாபிக்கப்படல் — 1909-ல் மத்தியதர வகுப்பாரின் பதைத்த எழுச்சியும் குடியேற்ற மந்திரிக்கு விண்ணப்பமும் — பிரதேசவாரியான பிரதிநிதித்துவத்தையும் நிர்வாகசபையில் அங்கத்துவத்தையும் கோருதல் — அச்சமயம் இலங்கைக்கவர்னரான சேர்ஹென்றி மக்கலத்தின் ஆட்சேபம் — ஆனால் மத்தியதரவகுப்பினரின் கோரிக்கைகளை ஆராய்தல் சால்புடைத்து



எனக்கருதல்— 1912-ல் மக்கலம் சீர்திருத்தங்களும் கவர்னரின் அதிகாரங்களில் மாற்றமின்மையும்— சட்டசபை திருத்தியமைக்கப்படல் —உத்தியோகப்பற்றுள்ளவர் 11 பேரும், உத்தியோகப்பற்றற்றவர் 10 பேரும் நியமனம் பெறல் — பிரதிநிதிகளைத் தேர்தல்மூலம் ஓரளவுக்குத் தெரிவுசெய்யும்முறை நடைமுறைக்குவரல் — சேர் பொன்னம்பலம் இராமநாதன் படித்த இலங்கையரின் சார்பாகத்தெரிவுசெய்யப்படல் — கவர்னரின் ஏதேச்சாதிகாரப்போக்கில் மாற்றமில்லாமை — மக்கலம் காலத்திக்குப்பின் தோட்டங்கள் அதிகரித்தலும் சட்ட, மருத்துவ, ஆசிரியத்தொழில்கள் விரிவடைதலும் — 1914-1918-ல் முதலாம் உலக மகாயுத்தம் — 1915-ல் இலங்கையில் சிங்களவர் சோனகர் கலகம் — கலகக்காரர்மீது பிரிட்டிஷாரின் கடும் நடவடிக்கைகள் — மக்களிடை பிரிட்டிஷாருக்கு விரோதமான மனோபாவம் — இந்தியத்தேசிய காங்கிரஸ் சபையின் போராட்டங்களும் வெற்றிகளும் இலங்கை மக்களும் அவ்வுணர்ச்சிவசப்படலும் — பௌத்தமதம், இந்துமதம் புனருத்தாரணம் செய்யப்படல் — மக்களிடை நாடு, மொழி, மதம், கலாச்சாரம் என்பவற்றில் புத்துணர்ச்சி—சுயராஜ்ய அவா —1919-ல் சேர் பொன் அருணாசலம், சேர் ஜேம்ஸ் பீரிஸ் என்போர் தலைமையில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் ஸ்தாபனம் — சட்டசபையில் உத்தியோகப்பற்றில்லாதவர் அதிகரிக்க வேண்டுமென்னுங் கிளர்ச்சி— பிரதேசவாரியான பிரதிநிதித்துவமுறை வேண்டுமென இலங்கைத்தேசியகாங்கிரஸ் கோரல் — எச். ஜே. சி. பெரேராதலைமையில் லண்டனுக்குத் தூதுக்கோஷ்டி — இலங்கை அரசியல் மாற்றங்கருதி 1920-ல் பிரிட்டிஷ்பாராளுமன்றத்தில் மசோதா —1921-ம் ஆண்டுச்சட்டசபை — உத்தியோகப்பற்றுள்ளவர் 14 பேர், உத்தியோகப்பற்றற்றவர் 23 பேர் — 21 வயதுக்கு மேற்பட்ட எழுதவாசிக்கத்தெரிந்தவர்களுக்கு வாக்குரிமை — பிரதேசவாரியான பிரதிநிதித்துவம் — 1924-ல் உத்தியோகப்பற்றில்லாதவர் 37 பேராக அதிகரிக்கப்படல் — இந்த மனிங் சீர்திருத்தமும் அதிகம் பயனளிக்காமையால் 1929-ல் டொனமூர்ப்பிரபுவின் தலைமையில் அரசியல் விசாரணைச்சபை இலங்கைக்கு வரல் — டொனமூர்க்கொமிஷன் மக்களின் பிரதிநிதிகளுக்குப் பரிபாலனவிஷயத்தில் தக்க பயிற்சியளிக்கவும் நிர்வாகப் பொறுப்பை ஒப்படைக்கவும் வேண்டுமெனச் சிபார்சுசெய்தல் — சர்வஜனவாக்குரிமை, அரசாங்கசபை, கவர்னரின் அதிகாரத்தைக்குறைத்தல் என்னும் மூன்று முக்கிய சிபார்சுகள் — 21 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் வாக்குரிமைபெறல் — அரசாங்கசபையின் அமைப்பு — 61 அங்கத்தவர்கள் —7 நிர்வாகக்குழுவும் மந்திரிகளும் — 1931 முதல் 1947 வரை டொனமூர்க்கொமிஷன் சிபார்சுப்படி நாட்டின் அரசியல் இயங்கல் — அரசியல் நிர்வாகத்தில் மக்களுக்கேற்பட்ட புத்துணர்ச்சி — 1942-ம் ஆண்டில் அரசாங்கசபை இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கும்படிகோரல் — 1943 ல் பிரிட்டிஷ் குடியேற்றநாட்டு மந்திரி இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்ததும் இலங்கைக்கு உள்நாட்டு நிர்வாகத்தில் பூரண சுயேச்சை அளிப்பதாக வாக்குறுதி கொடுத்தல் — 1945-ல் சோல்பரிக் கொமிஷனரின் சிபார்சுகள் — சர்வஜன வாக்குரிமை, இரு பிரிவுள்ள சட்டசபைகள், நிர்வாக சபைச்சீர்திருத்தம், சிறுபான்மை வகுப்பினர் உரிமைகள், மேலும் கவர்னரின் அதிகாரத்தைக் குறைத்தல் — ஜனப் பிரதிநிதிகள் சபையின் அமைப்பு — 101 அங்கத்தவர்கள் — செனெற் சபையின் அமைப்பு — 35 வய

ஆக்கு மேற்பட்ட 30 உறுப்பினர் — பிரதம மந்திரியும் 10 மந்திரிகளையுடைய மந்திரி சபையும் — கவர்னருக்கு இருந்த 17 விசேஷ அதிகாரங்கள் 7 ஆகக் குறைக்கப்படல்.

### வினாக்கள்.

1. இருபதாம் நூற்றாண்டில் இலங்கை அரசியல் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?

2. மக்கலம் சீர்திருத்தங்களையும் *1912*-ம் ஆண்டுச்சட்ட சபை அமைப்பையும் விளக்கிக் கூறுக.

3. மனிங் சீர்திருத்தங்களையும் *1921*-ம் ஆண்டுச்சட்ட சபை அமைப்பையும் விளக்கமாகத் தருக.

4. டொனமூர்ச் சீர்திருத்தங்களை விரித்துக் கூறுக.

5. சோல்பரிக் கொமிஷனின் சீர்திருத்தங்களை விளக்குக.

---

## பதினேழாம் அத்தியாயம்

# சுதந்திர இலங்கை

## ஐக்கிய தேசீயக்கட்சி அரசாங்கம்.

1947-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைச் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களாற் பொறிக்கப்பட வேண்டிய நன்னாளாகும். இரண்டாம் மகாயுத்தம் முடிவடைந்தபின் பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கைக்குப் பூரண டொமினியன் அந்தஸ்து வழங்கப்படுமென்று அறிவித்தது. 1948-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4-ந்திகதி இலங்கை பூரண சுதந்திர நாடாகப் பிரகடனப்படுத்தப் படுத்தப்பட்டது. ஆறு தினங்களில் அதாவது 10-ம் திகதியன்று சுதந்திர இலங்கையின் முதல் பாராளுமன்றம் **கிளாஸ்டர் கோமகனால்** (Duke of Gloucester) திறக்கப்பட்டது. புதிய அரசியற் திட்டப்படி டி. **எஸ். சேனநாயக்கா** முதற் பிரதம மந்திரியாகத் தெரிவுசெய்யப்பட்டார். அவர் பெருந் தன்மையுடையவராயும், சிறந்த அரசியல் ஞானியாகவும் இருந்து இலங்கை மக்கள் அனைவரதும் அன்புக்கும், மதிப்புக்கும் பாத்திரமானார். அவருக்குப்பின் **டட்லி சேனநாயக்கா** இலங்கைப் பிரதமரானார். அவர் தனது காலஞ் சென்ற தந்தையின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி அரசியற் பாரம் தாங்கிவந்தார். அரசியற் பாரத்தை நீண்டநாளாகத் தாங்கமுடியாத அவர் பதவியைத் துறந்தார். அவருக்குப்பின் **சேர். ஜோன் கொத்தலாவலை** இலங்கைப் பிரதமராகி இலங்கையின் செல்வாக்கை மேல்நாடுகளில் வளர்த்துள்ளார். இவரின் பதவிக் காலத்தில் 1954-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் **இரண்டாம் எலிசபெத் மகாராணியார்** இலங்கைக்கு விஜயஞ்செய்தார். 1948-ம் ஆண்டு இலங்கை பூரண சுதந்திரமானபோது **சோல்பரிப் பிரபு** இலங்கையின் தேசாதிபதியாக இருக்கும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார். சோல்பரிப் பிரபு தமது பதவிக் காலத்தில் லண்டன் செல்ல நேர்ந்தபோது பிரதம நீதிபதியாயிருந்த **திரு. C. நாகலிங்கம் அவர்கள்** பதில் கவர்னராகக் கடமையாற்றினார். சோல்பரிப் பிரபுவின்பின் இலங்கையரே இப்பதவியை வகிக்கவேண்டுமென்று மக்கள் அபிப்பிராயப்பட்டதால் **சேர். ஒலிவர் குணதிலக்கா**

இலங்கையர் என்றமுறையில் முதன் முதலாகக் கவர்னர் ஜெனரலானார்.

இலங்கை பூரண சுதந்திர நாடானபின் பல அரசியற் கட்சிகள் தோன்றின. அவைகளில் முதன் முதலாகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்டது ஐக்கிய தேசியக் கட்சி (யு. என். பி.)யாகும். செல்வந்தர்களின் பொருளுதவியால் அக்கட்சி நல்ல முறையில் இயங்கி வந்தது. நாட்டுமக்களுக்குப் பல சுதந்திரங்களையும் வழங்கியது. தொழில்களைத் தேசிய மயமாக்கும் கொள்கையைவிடுத்து எத்தொழிலும் கூட்டுறவு முறையில் நடத்தப்பட வேண்டுமென்று விரும்பியது. சிறுபான்மையினருக்குரிய உரிமைகளில் தலையிடாது நடந்து வந்தது. இக்கட்சி நீங்கலாக மற்றும் தமிழ்க் காங்கிரஸ், சமசமாஜக்கட்சி கொம்மியூனிஸ்ட்கட்சி, முதலாம் இடது சாரிக்கட்சிகள் பல உருவாகியுள்ளன. அச்சமயத்தில் எதிர்க்கட்சியாக விளங்கியது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியாகும்.

ஐக்கிய தேசியக் கட்சியால் நடத்தப்பெறும் அரசாங்கம் ஏறக்குறைய கடந்த ஆறு வருடங்களில் நாட்டு முன்னேற்றத்திற்காகப் பல திட்டங்களை வகுத்துள்ளது. நாட்டின் உணவு அபிவிருத்திக்கும், நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குவதற்கும் காணி அபிவிருத்தியில் இவ்வரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தியுள்ளது. வருடம் ஒன்றுக்கு இரண்டு லட்சம் வீதம் பெருகிவரும் இந்நாட்டு மக்களுக்கு உணவு தேடுவது இன்றியமையாத பிரச்சினையாகும். எனவே உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காக, நீர்ப்பாசன வசதிகளைச் செய்து வந்தது. **மினிப்பே, மின்னேரியா, பராக்கிரம சமுத்திரம், கல்லோயா** போன்ற நீர்ப்பாசனத் திட்டங்களெல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகவே வகுக்கப்பட்டன. விவசாய அபிவிருத்திக்கு முதலிடம் கொடுத்தப்பின் தொழில் அபிவிருத்திக்கும் ஆவன செய்து வந்தது. அன்றியும் சுகாதாரத் துறையில் பல அபிவிருத்திகள் செய்யப்பட்டன. உதாரணமாக மலேரியாக் காய்ச்சல் இந்நாட்டில் தற்போது மிகக் குறைந்து விட்டது எனலாம். கல்வித்துறையில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகம் வரை இலவசக் கல்வியளிக்கப்பட்டு வருகிறது. இவைகளெல்லாம் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் அரிய சாதனைகளாகும்.



## மக்கள் ஐக்கிய முன்னணிக்கட்சி அரசாங்கம்

சுமார் 9 வருடங்களாக இலங்கையை ஆண்டுவந்த ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் 1956-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தோல்வியடைந்தது. முதலாளித்துவ அரசாங்கமென வர்ணிக்கப்பட்ட யு. என். பி. ஆட்சியில் இந்நாட்டு மக்களிற் பெரும்பாலானோர் அதிக நன்மைகள்பெறவில்லை. நாடு சுதந்திரம் பெற்றபின் இலங்கையின் புராதன சமயப் பெருமையையும், கலாச்சாரத்தையும் மீண்டும் புனருத்தாரணஞ் செய்யக்கூடிய அரசாங்கம் என்று கடந்த 10 வருடங்களாக இந்நாட்டுக்கு இன்றியமையாததாகவிருந்தது. அத்தகைய பழம்பெருமையை உண்டாக்குவதற்கு உறுதிமொழியளித்த மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியை அமோக ஆதரவுடன் மக்கள் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினர். இக்கட்சியை மகாஜன எக்சத் பெரமுனையெனச் சிங்களத்தில் வழங்குவர். ம. ஐ. மு. கட்சியைப் பதவியிலமர்த்துவதற்குப் பௌத்த பிக்குகளும், ஆயுர்வேத வைத்தியர்களும், சுயபாஷை ஆசிரியர்களும் பேராதரவு கொடுத்தனரெனச் சொல்லப்படுகிறது. இக்கட்சி அரசாங்கம் **மக்கள் அரசாங்கம்** எனவும் வர்ணிக்கப்படுகின்றது.

ம ஐ. மு. கட்சியின் தலைவர் **S. W. R. D. பண்டாரநாயக்கா** ஆவர். இவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஸ்தாபகரும் தலைவருமாவர். இக்கட்சியினருடன் விபுளங்கார லங்கா சமசமாஜக்கட்சி, பாஷா பெரமுனை ஆகிய இருதரப்பினரும் சேர்ந்து யு. என். பி. யைப் பொதுத் தேர்தலிற் தோற்கடித்து இன்று அரசாங்கத்தைக் கூட்டாக அமைத்திருக்கின்றனர்

இத்தருணம் ம. ஐ. மு. அரசாங்கத்தின் கொள்கைகள்பற்றிச் சிறிது குறிப்பிடுவது பொருத்தமுடையதாகும். ம. ஐ. மு. அரசாங்கம் **சிங்களம் மட்டும்** மசோதா

வைப் பிறப்பித்துச் சிங்களமொழி நாடெங்கணும் அரசகரும மொழியாக இருக்கவேண்டுமென விதித்துள்ளது. இக்காரணமாக தமிழரிடைய கிளர்ச்சியேற்பட்டது. ஆகவே தமிழரசுக்கட்சியினர் சத்தியாக்கிரகப்போர் நடாத்தவிருந்தனர். நாட்டின் நலத்திற்காகக் கலவரம் ஏற்படாது **செல்வநாயகம் பண்டாரநாயக்கா** சமரச ஒப்பந்தம் ஏற்பட்டது. அதன்படி தமிழருக்கு நியாயம் வழங்குமுகத்தான் **தமிழ்மொழியின் நியாயமான பிரயோகம்** என்பதுபற்றி ஒரு மசோதாவைப் பிறப்பிக்க உறுதிகூறியுள்ளது. சிங்கள மக்களது மொழி, கலாச்சாரம் சிறந்துவிளங்க வேண்டுமென்று கூறுவதுபோல் தமிழ் மக்களது மொழி, கலாச்சாரம் என்பவற்றையும் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது முற்றிலும் சரியே.

மற்றொரு முக்கியதுறையிலும் ம. ஐ. மு. கட்சி அரசாங்கம் ஒரு புதிய கொள்கையை வகுத்துச் செயலாற்றிவருகிறது. கடந்த ஆட்சியில் பொதுவுடைமைக் கொள்கைகளையுடைய நாடுகளுடன் இராசரீகத் தொடர்புகளெதையும் இலங்கையரசாங்கம் கொண்டிருக்கவில்லை. இது ஒருதலைப்பட்சமான போக்கு எனவுணர்ந்த ம. ஐ. மு. கட்சி அரசாங்கம் உலக வல்லரசுகள் அனைத்துடனும்பாரபட்சமின்றிச் சிநேகபாவத்துடனிருந்து உலக சமாதானத்துக்கு உதவவேண்டுமெனத் தன்வெளிநாட்டுக் கொள்கையை வகுத்துள்ளது அதன்படி ருஷியா, சீனபோன்ற இன்னோரன்ன கொம்யூனிஸ்ட் நாடுகளுடன் இராசரீகத் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. இக்கொள்கை வரவேற்கத் தக்கதேயாகும். இக்கொள்கையைப் பின்பற்றித் திருகோணமலையிலுள்ள கடற்படைத் தளத்தைப் பிரிட்டிஷாரின் ஆதிக்கத்தினின்றும் சௌஜன்யமான முறையில் இவ்வரசாங்கம் விடுவித்துக்கொண்டுள்ளது.

மற்றொருதுறையிலும் ம. ஐ. மு. கட்சியின்கொள்கை பாராட்டத்தக்கதாயுள்ளது. கடந்த பலநூற்றண்டுகளாக அந்நியராட்சியில் நசுக்குண்டு க்ஷீணதசையடைந்திருந்த இந்நாட்டு மக்களனைவரதும் சமயம், கலை, நாகரிகம் என்பனவற்றை மீண்டும் மகோன்னத நிலைக்குக் கொண்டுவருவதற்காகவும், விசேஷமாகப் பௌத்தமத வளர்ச்சிக்கும் பௌத்தமதத்தினரின் பண்பாட்டுவளர்ச்சிக்கும் ஆவனசெய்வதற்காகவும் 'கலாச்சார அமைச்சு'



ஒன்றை இவ்வரசாங்கம் புதிதாக நிறுவிக் கருமமாற்றி வருகிறது.

இவ்வரசாங்கம் பதவியேற்றுள்ள சில மாதங்களில் பொதுமக்களின் அபிமானத்தையும், ஆதரவையும் பெறுவதற்காக ஓரளவு முயன்றுள்ளது என்பது உண்மையே. இனி இந்நாட்டில் அரசாங்கத்தை நிர்வகிக்கும் எந்தக் கட்சியும் பொதுமக்களது அபிலாஷைகளை ஒதுக்கித் தள்ளுவதற்கில்லை. இவ்வாறு இலங்கை மக்களிடம் சமீபகாலமாக மிகப்பெரிய விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்பதற்கு ஐயமில்லை.

இலங்கை பூரண சுதந்திரம் அடைந்தபின் தனது வெளிநாட்டுக் கொள்கையையும் தானே வகுத்துக்கொண்டு வருகிறது. கொமன்வெல்த் நாடுகளில் இலங்கையும் அங்கம் வகித்து கொமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடுகளிலும், கொழும்புத்திட்டத்திலும் பங்கு பற்றியிருக்கிறது. இதனால் இலங்கை அடைந்துள்ள பயன் அளவிட முடியாது. கொமன்வெல்த் நாடுகளிடையே பரஸ்பர நட்பும் நல்லெண்ணமும் இருப்பது அவசியம் என்றாலும் இலங்கையானது தனக்குச் சுதந்திரமான வழியில் உலக நாடுகளுடன் அவசியமேற்படும் போது வர்த்தக உடன்படிக்கைகளைச் செய்துள்ளது. உதாரணமாக நவசீனவுடன் இலங்கை றப்பர் — அரிசி வர்த்தக உறவு கொண்டிருப்பது இந்நாட்டினுடைய சுதந்திரமான வெளிநாட்டுக்கொள்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

வருங்கால இலங்கையின் முன்னேற்றம் இன்று உலகில் இருபிரிவாய் இருக்கின்றது. முதலாளித்துவ நாடுகளுடனும், பொதுவுடைமைக்கொள்கை நாடுகளுடனும் சமரச நோக்குடன் நடந்து, இருதரமான நாடுகளிலிருந்து தனது சுதந்திர உரிமை பாதிக்கப்படாத அளவுக்குப் பெறவேண்டிய உதவிகளைப் பெறுவதிலும், உலகத்தில் சமாதானத்தை நிலைநிறுத்தப்பாடுபடுவதிலும் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது. இந்த முறையில் இலங்கைப் பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவலை, பண்டாரநாயக்கா என்போரது செயற்கரிய செயல்கள் பாராட்டற்பாலன.

### சுருக்கம்.

1947 பெப்ரவரியில் இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட்டமை— 1948 பெப்ரவரியில் பூரணசுதந்திர நாடானமை — D. S. சேனநாயக்காவைப் பிரதமமந்திரியாகக்கொண்ட புதிய பாராளுமன்றம் க்ளொஸ்டர் கோமகனால் திறக்கப்படல்—பின்னர் முறையே டட்லி சேனநாயக்கா, சேர் ஜோன் கொத்தலாவல, S. W. R. D. பண்டாரநாயக்கா பிரதமமந்திரிபதவி வகித்தலும், சோல்பரிப்பிரபு, சேர் ஒலிவர் குணதிலகா, தற்காலிகமாக ஒருமுறை ஜஸ்டிஸ் காலிங்கம் ஆகியோர் கவர்னர் ஜெனரலாகக் கடமையாற்றலும் — இக்காலங்களில் இரண்டாம் எலிசபெத்மகாராணி இலங்கைக்கு விஜயஞ்செய்தல் ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, தமிழ்க்காங்கிரஸ்கட்சி, தமிழரசுக்கட்சி, சமசமாஜக்கட்சி, கொம்மியூனிஸ்ற்கட்சி எனப்பல அரசியற்கட்சிகள் தோற்றலும், செல்வாக்குப்பெறுதலும் — இன்று மக்கள் முன்னணிக்கட்சி ஆட்சிபுரிதல் — இலங்கை சுதந்திரம் பெற்றபின் விவசாய அபிவிருத்தித்திட்டங்கள், கைத்தொழிலபிவிருத்தித்திட்டங்கள், குடியேற்றத்திட்டங்கள், பிறநாடுகளுடன் நெருங்கிய தொடர்பு முதலாயின வளர்தல் — மொழிப்பிரச்சினையும், பின்னர் ஏற்பட்ட சுமுகமான ஒப்பந்தமும்— திருகோணமலைத்தளம் 1957-ல் இலங்கையர் வசம் ஒப்படைக்கப்படல்.

### வினாக்கள்.

1. இலங்கை சுதந்திரநாடானபின் தோற்றிய அரசியற் கட்சிகளையும், பிரபல்யம் பெற்ற இரு கட்சிகளின் ஆட்சிக்கால விளைவுகளையும் ஆராய்க.

2. உமது அரசியற் கொள்கைகளையும் உமது கொள்கையுடையகட்சி ஆட்சிப்பீடத்தமரின் நாட்டின் நலத்திற்கு செய்யும் பணிகளையும் கூறுக.

3. இன்று சுதந்திர இலங்கையில் எழுந்துள்ள முக்கிய பிரச்சினைகளையும் அவற்றைத்தீர்ப்பதற்குக் கைக்கொள்ளவேண்டிய வழிவகைகளையும் ஆராய்க.

---

# பரீக்ஷை வினாக்கள்.

1. இலங்கையில் பிரிட்டிஷார் கரையோரமாகாணங்களைக் கைப்பற்றியதையும், தங்கள் ஆட்சியை ஸ்தாபித்ததையும் விபரமாகக் கூறுக.

2. பிரெடெரிக் நோர்த், சேர் தோமஸ் மெயிற்லண்ட் ஆகிய இலங்கைக் கவர்னர்களின் பரிபாலனத்தை ஒப்புநோக்குக.

3. 1818-ம் ஆண்டு கண்டிக் கலகத்துக்கு ஏதுவான காரணங்கள் யாவை? அதன்விளைவுகள் என்ன?

4. கோல்புறூக்கொமிஷனின் (அ) பரிபாலனச் சீர்திருத்தங்கள் (ஆ) சட்டசம்பந்தமான சீர்திருத்தங்கள் (இ) அரசியற் சீர்திருத்தங்கள் பற்றி விபரமாக எழுதுக.

5. இக்கால இலங்கையின் வளர்ச்சிக்குக் கோல்புறூக்கொமிஷன் எவ்வாறு அடிகோலியது என்பதை எடுத்துக் காட்டுக.

6. 19-ம் நூற்றாண்டின் துவக்கமுதல் ஏறக்குறைய 50 ஆண்டுகளாக கோப்பித்தொழில் அபிவிருத்தி அடைந்தவிதத்தை முறைப்படி கூறுக.

7. 20-ம் நூற்றாண்டில் தேயிலை, றப்பர், தென்னை ஆதியபயிர்த் தோட்டங்கள் வளர்ச்சியடைந்தமையை விபரிக்குக.

8. தோட்டங்கள் திறக்கப்பட்டதால் உண்டான விளைவுகளைத் தொகுத்துக் கூறுக.

9. 19-ம் நூற்றாண்டில் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் யாவை? அவைகளுக்கான காரணங்களைக் கூறுக.

10. 1920-ம் ஆண்டுமுதல் 1948-ம் ஆண்டுவரை இலங்கையில் ஏற்பட்ட அரசியல் வளர்ச்சியைக் கூறுக.

11. சோல்பரி, டொனமூர்ச் சீர்திருத்தங்களைத் தனித்தனி ஆராய்க.

12. குறிப்பெழுதுக: இலங்கைத் தேசியகாங்கிரஸ், கண்டிஉடன்படிக்கை, மக்கலம்சீர்திருத்தம், மனிங்சீர்திருத்தம், ஞெபேட் பிரௌன்றிக்.

---

# பரீக்ஷைப் பத்திரத் தொகுதி.

## அரசினர் சிரேஷ்டதாரதரப் பத்திரப்பரீட்சை — 1943

சரித்திரம்

### 1. இலங்கைச் சரித்திரம்.

1. சிங்கள ராச்சியத்துக்குத் தலைநகராகச் சீதவாக்கையைத் தெரிவு செய்தற்குக் காரணமாயிருந்த அரசியல், பூமிசாத்திர சம்பந்தமான விஷயங்கள் எவை? அது தன் உயர்நிலைமையினின்றும் வீழ்ச்சியடைதற்குக் காரணங்களென்னை? விடையை விளக்கக் குறிப்புப் படமொன்று வரைக.

2. ஒல்லாந்தர் தாபித்த நீதிவிசாரணை முறையையும் சட்ட முறையையும் விவரிக்க. அவற்றின் எப்பகுதிகளை இக்காலத்திலும் காணலாம்?

3. பிரித்தானியர் கண்டி ராச்சியத்தை 1803-ம் ஆண்டிற் பிடிக்கமுடியாமைக்கும், ஆனால் 1815-ம் ஆண்டிற் பிடிக்க முடிந்ததற்கும் முறையே காரணங்களைத் தருக.

4. எட்வேட் பாண்ஸ், ஹென்றி உவாட் என்போரின் ஆட்சியை விவரிக்க.

5. இலங்கையிற் கோப்பிப் பயிர்ச்செய்கை விருத்தியடைந்ததினாலுண்டான பிரதான பயன்களென்னை?

6. மனிங் தேசாதிபதியின் காலத்தில் இலங்கைச் சட்ட நிரூபண சபையிலேற்பட்ட மாறுதல்கள் என்னை?

## அரசினர் சிரேஷ்டதாராதரப் பத்திரப்பரீட்சை — 1944.

சரித்திரம்.

### 1. இலங்கைச் சரித்திரம்.

1. முதலாம் இராசசிங்கனின் இராச்சிய பரிபாலனத்தை விவரித்து அவன் போர்த்துக்கேசருக்கு எதிராக எடுத்த நடவடிக்கைகளையும், அவற்றில் சித்தி பெருமையின் காரணங்களையும் ஆராய்க.

2. போர்த்துக்கேசரும், ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும் கண்டியைப்பிடிக்க எடுத்த முயற்சிகளைக் கால அட்டவணைப் படுத்திக் காட்டுக. மற்றயவர் சித்தி அடையாததற்கும், ஆங்கிலேயர் சித்தி பெற்றதற்கும் காரணங்கள் என்னை?

3. இலங்கையில் ஒல்லாந்தரா, போர்த்துக்கேயரா கூடியசெல்வாக்குடையராயிருந்தனர்? அவரிருவரையும் ஒப்பிட்டு அவர்களுடைய ஆட்சியின் முக்கிய அம்சங்களை ஆராய்க.

4. சேர் றபேட் கோட்டன், சேர் உவில்லியம் மானிங் என்போரின் ஆட்சியை விவரிக்க.

5. இலங்கையரின் சமுதாய வாழ்க்கை, தெருப்பாதைகளும், புகையிரதப்பாதைகளும் பெருக்கமடைந்தமையால் எங்ஙனம் பாதிக்கப்பட்டதென்பதை விளக்குக.

6. (அ) புத்தசமயப புனருத்தாரணம்.
   (ஆ) "கபடகம்", "நிந்தகம்"
   (இ) நாயக்கர்
   (ஈ) சங்கிலி
   (உ) விதிய பண்டாரன்
   (ஊ) டச்சுக் கிழக்கிந்திய வர்த்தக சங்கம்.

இவற்றுள் எவையேனும் நான்கினுக்குச் சிறு குறிப்புகள் எழுதுக.

## அரசினர் சிரேஷ்டதராதரப் பத்திரப்பரீட்சை 1945.

### சரித்திரம்

### பகுதி I. இலங்கைச் சரித்திரம்.

**1. விடை இரண்டு வசனங்களுக்கு மேற்பட வேண்டுவதில்லை.**

i. சித்தவாக்கை இராசதானியின் உயர்ச்சி யாரால் ஏற்பட்டது?

ii. "மல்வானை கொன்வென்ஸன்" (Malvana Convention) என்பது யாது?

iii. "ஸ்ரீ சரணங்கர" என்பவர் யார்?

iv. இரண்டாம் இராசசிங்கன் அரசாட்சிக் காலத்திலே கண்டி இராசதானியைப்பற்றிய விபரங்களை எழுதிய ஆங்கிலேயன் யார்?

v. "கோல்புரூச் கொம்மிசன்" அங்கீகரிக்கச் செய்தவற்றுள் முக்கியமானதொன்றை எடுத்துக் கூறுக.

2. இலங்கைச் சரித்திரத்தில் கொற்றே-அரசாட்சிக்காலம் முக்கியமானதாகக் கருதப்படுவதேன்?

3. போர்த்துக்கேயர் கண்டி இராசதானியைக் கைப்பற்ற விரும்பியதேன்?

4. டச்சுக்காரர் காலத்து இலங்கையின் நீதிபரிபாலனத்தைப் பற்றி விவரிக்க.

5. தோட்டக் கிருஷிகம் மனிதர் வாழ்க்கையினை எவ்வெவ் வழிகளில் மாற்றுவதாயிற்று?

6. 1833-ம் ஆண்டு தொடக்கம் 1931-ம் ஆண்டுவரைக்குமுள்ள காலத்திலே சட்டநிரூபணசபையின் வளர்ச்சியை விபரிக்குக.

## அரசினர் சிரேஷ்ட தராதரப் பத்திரப் பரீட்சை (தமிழ்) 1946.

### சரித்திரம் $1\frac{1}{2}$ மணி

### சுருக்கமாய்ப் பொருத்தமான விடை தருக.

1. இரண்டொரு வாக்கியங்களில் விடை யெழுதுக:—

(i) சீதாவாக்கை இராசதானியைப் பலமுறச் செய்த அரசன் யாவன்?

(ii) இலங்கைச் சரித்திரத்தில் சங். வாஸ் என்பவரது முக்கியத்துவம் யாது?

(iv) பிரித்தானியர் கண்டி இராசதானிக்கு 'ரோட்டு'ப் பாதைகள் அமைத்ததேன்?

(v) கொழும்பிற் செயற்கைத் துறைமுகம் அமைக்கப்பட்டது எவ்வாண்டில்?

2. போர்த்துக்கேயர் கண்டி இராசதானியினைத் தமது ஆணைக்குக் கீழ்ப்படுத்த விரும்பியதேன்?

3. ஒல்லாந்தர் கால இலங்கையில் வியாபாரமும் கிருஷிகத் தொழிலும் இருந்த நிலைமையை விளக்குக.

4. "கோல்புரூக் கொமிஷனி" ன் முக்கியத்துவம் யாது?

5. தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தியினால் இலங்கை மக்கள் அடைந்தபயன் யாது?

6. "சோல்பரிக் கொமிஷனி"ன் பிரதான சிபார்சுகளெவை? அவற்றை ஆராய்க.

## அரசினர் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை, ஆகஸ்டு 1947.

### சரித்திரம்

1. சுருக்கமான விடை யெழுதுக:-

   i. டொன் லோறன்சோ டி அல்மேடா என்பவர் யார்?

   ii. 16-ம் நூற்றூண்டில் நடுப்பகுதி தொடக்கம் சீதாவாக்கை இராச்சியம் வளர்ச்சியுற்றதற்கான காரணங்கள யாவை?

   iii. மல்வானை உடன்படிக்கையைப் பற்றி நீர் அறிந்தவற்றை எழுதுக.

   iv. டச்சுக்காரரின் உதவியைநாடிய முதற் சிங்கள அரசன் யார்? அவன் எப்பொழுது எவ்விடத்தில் அரசாண்டான்?

   v. ரோட்டுப்பாதைகள் அமைக்கும் திட்டத்தை ஆரம்பித்த தேசாதிபதி யார்?

   vi. இலங்கையிற் பிரித்தானிய ஆட்சி ஆரம்பமான காலத்தில் "இராசகாரியம்" என்பது குறித்தது யாது?

2. கிழ்த்திசையை நோக்கிப் போர்த்துக்கேயர் வந்ததற்குரிய காரணங்கள் யாவை? போர்த்துக்கேயர் இந்துச்முத்திரத்தில் ஆதிக்கத்தை எவ்வாறு நிலைநாட்டிக்கொண்டனர்?

3. நெதர்லாந்து கிழக்கிந்தியக்கொம்பெனி ஆரம்பமாகி அபிவிருத்தியடைந்த வரலாற்றைச் சுருக்கமாகக் கூறுக?

4. இலங்கையில் டச்சுக்காரரின் ஆட்சி முறையைப்பற்றி அல்லது இலங்கையில் டச்சுக்காரரின் கல்வி முறையைப்பற்றிச் சுருக்கமான வரலாறு எழுதுக.

5. தோட்டப்பயிர்ச் செய்கை (தேயிலை, றப்பர் ஆகியன) அபிவிருத்தியின் பயனாக இலங்கையில் ஏற்பட்ட முக்கிய சமுதாய மாறுதல்களைச் சுருக்கமாக விளக்குக.

6. 1833 (கோல்புறூக்) தொடக்கம் இலங்கையில் அரசியற் சீர்திருத்தம் ஏற்பட்ட வரலாற்றைப் படிப் படியாக விளக்குக.

## சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சை, ஒகஸ்ற் 1948.

### சரித்திரம்

விடைகள் பொருத்தமானவையாயும் சுருக்கக்கூறி விளங்குவைப் பனவாயும் அமைதல் வேண்டும்.

1. சுருக்கமான விடை தருக:-

   (அ) கோட்டை, சீதாவாக்கை, கண்டி ஆகிய இடங்களில் அரசியற்றிய அரசர்களுள் முக்கியமான மூவரைக் கூறுக

   (ஆ) இலங்கையிலே போர்த்துக்கேயர் ஆட்சியின் முக்கிய அமிசங்கள் மூன்று கூறுக.

   (இ) "மல்வானை உடன்படிக்கை" (Malvana Convention) என்பது யாது? அது எப்போது யாரால் செய்து கொள்ளப்பட்டது?

   (ஈ) இலங்கையிலே, ஒல்லாந்தர் போர்த்துக்கேயரை வெற்றி கொள்வதற்குச் சாதகமாயமைந்த காரணங்கள் யாவை?

   (உ) பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலே, இலங்கையின் அரசியலமைப்பு வளர்ச்சியில் முக்கியமான மூன்று படிகளெவை?

2. போர்த்துக்கேயர் இலங்கைக்கு வந்த பொழுது இலங்கையின் அரசியல் நிலைமை எவ்வாறிருந்ததென்பதை விளக்குக.

3. முதலாம் இராசசிங்கனின் குணகுணங்கள் அவனை ஓர் போர்வீரனென்றும் அரசாட்சியிற் கைதேர்ந்தவனென்றும் நிலைநாட்டுவதற்கு எங்ஙனம் உதவுகின்றனவென ஆராய்க.

4. "ஒல்லாந்தரின் நீதி பரிபாலனம்" அல்லது "இலங்கையில் ஒல்லாந்தர் கல்வி முறை" என்பதைப்பற்றி விபரிக்க.

5. இந்த நூற்றூண்டின் முதல் இருபது ஆண்டுகளிலும் இலங்கையின் அரசியலமைப்புச் சீர் இருத்தக் கிளர்ச்சிக்குக் காரணங்களாயமைந்தவற்றை எடுத்து விளக்குக. அக் கிளர்ச்சியால் ஏற்பட்ட பலாபலன்கள் யாவை?

## எஸ். எஸ். ஸி. — டிசம்பர் 1949.

### சரித்திரம்

### பகுதி I இலங்கைச் சரித்திரம் கி. பி. 1500 முதல்

1. சிதவாக்கையில் இராசசிங்கனது அரசியலாதிக்கத்தின் பெருமையை விளக்கி அவனது விழ்ச்சிக்கான ஏதுக்களையும் ஆராய்க.

2. இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சிபுரிந்த பகுதிகளின் பரிபாலனமுறையை விபரிக்குக. உமதுவிடையை ஒரு குறிப்புட் படத்துடன் விளக்குக.

3. ஒல்லாந்தருக்கும் கண்டி நாயக்கர் வம்சத்து அரசர்களுக்கு மிடையேயிருந்த தொடர்புகளில் மிக முக்கியமானவை எவை?

4. கவர்னர் நோர்த்தின் நீதி, அரசியல் பரிபாலன சீர்திருத்தங்களை அல்லது பராமரிப்புச் சேவையைச் சுருக்கமாக விபரி.

5. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் கமக்காரரின் நிலையின் முன்னேற்றத்திற்காக அரசாங்கம் செய்த வழிகளெவை?

6. பின்வரும் விஷயங்களில் டொனமூர்ச்சீர்திருத்தங்களைச் சுருக்கமாக விபரி. (அ) சர்வஜனவாக்குரிமை (ஆ) சட்டசபையில் பிரதிநிதித்துவக் கொள்கை.

## ஜி. ஸீ. ஈ. பரீட்சை ஜூலை 1957.

### பகுதி 1.

### இலங்கைச் சரித்திரம்.

1. போர்த்துக்கேயருடன் சிதாவாக்கை மன்னர் வைத்துக் கொண்ட இராணுவ இராசதந்திரத் தொடர்புகளைப் பார்க்கிலும் கண்டிமன்னர் வைத்துக் கொண்டதொடர்புகள் மிக்க பயனற்றமைக்குக் காரணங்கூறுக.

2. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் டச்சுக்காரரினதும், போர்த்துகேயரினதும் ஆட்சிகளின் விளைவுகளை ஒப்பிடுக.

3. இலங்கைச் சரித்திரத்தில் (அ) பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மட்டக்களப்பு (ஆ) 18-ம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் திருகோணமலை (இ) 20-ம் நூற்றாண்டுமுதல் 75 வருட காலத்தில் காலி, என்பனவற்றின் முக்கியத்துவத்தை விளக்குக.

4. கோல்புரூக் கமிஷனரின் சிபார்சுகளின் பயனாகிய வியாபாரத் தடைகளின் நீக்கமும் இராசகாரிய (*Rajakariya*) ஒழிப்பும் எவ்வாறு நாட்டின் பொருளாதார விருத்திக்கு உதவியாயிருந்தன?

5. இலங்கையிற் புகையிரதப் போக்கு வரத்து வளர்ச்சி அடைந்தமையைப் பற்றி எழுதுக. உமது விடையை கொடுக்கப் பட்டுள்ள புறவரிப் படத்தில் விளக்குக.

6. கீழ்வருவனவற்றுள் எவையேனும் இரண்டின் அபிவிருத்திக்கு இலங்கையில் 20-ம் நூற்றாண்டில் கையாளப்பட்ட பிரதான வழிவகைகளை விபரிக்க.

(அ) உணவு உற்பத்தி

(ஆ) கல்வி, (இ) ஸ்தல ஸ்தாபன ஆட்சி.

## ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சை (தமிழ்)
### சரித்திரம்

1. போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் இலங்கையின் கரையோர மாகாணங்களைக் கைப்பற்றியமையினால் இந்நாட்டின் பிற்கால சரித்திரம் எவ்வகையில் மாறுபட்டது?

2. குடியானவர்களின் நிலைமையை உயர்த்துவதற்குப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசினர்செய்த முயற்கள் யாவை?

3. கி. பி. 1911 தொடக்கம் கி. பி. 1948 வரையும் இலங்கையின் அரசியலமைப்பு விருத்தியடைந்த வரலாற்றினைச் சுருக்கிக் கூறுக.

4. பிரித்தானியருடைய ஆளுகையில் இலங்கையரசியலில் ஏற்பட்ட மாற்றங்களை முறையாகக் குறைந்தது இரண்டு அரசியல் விசாரணைச் சபைகளுடனாவது தொடர்புபடுத்தி ஆராய்க.

5. கண்டி இராச்சியத்தை ஒல்லாந்தர் தமக்குக் கீழ்ப்படுத்த முடியாமலிருக்க, சீதாவாக்கை இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் அடிப்படுத்தியதெங்ஙனம்?

6. இலங்கை 18-ம் நூற்றாண்டிலே யுத்தம்புரிதற்கு வாய்ப்பான ஒரு கேந்திர ஸ்தானமாயிருந்தமையாலும் 19 ஆம் நூற்றாண்டிலே பொருளாதாரம் சம்பந்தமான காரணங்களினாலும் பிரிட்டிஷாருக்கு முக்கியம் வாய்ந்த நாடாயிருந்தது. இதனை விளக்குக.

7. 1910 ஆம் ஆண்டுதொடங்கி இலங்கை யரசியலில் ஏற்பட்ட அபிவிருத்திகளைச் சுருக்கமாக எடுத்துக்கூறி, அவற்றின் பயனாக நாட்டின் பொருளாதாரத்துறையிலாவது அல்லது சமூக சேவைத்துறையிலாவது ஏற்பட்ட அபிவிருத்தியினை விளக்குக.

8. இலங்கையில் போர்த்துக்கேயருடைய அல்லது ஒல்லாந்தருடைய அரசாட்சியின் பயனாக ஏற்பட்டு இன்னும் நிலைபெற்றிருக்கும் மாற்றங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

9. கோல்புறூக் கொமிஷனர்கள் செய்த சிபார்சுகளின் சிறந்த அம்சங்கள் யாவையென ஆராய்க.

10. இலங்கையின் பயிர்த்தோட்ட (Plantation) அபிவிருத்தியாலேற்பட்ட முக்கியமான பலாபலன்களெவை?

11. 1833-ம் ஆண்டு தொடங்கி 1929-ம் ஆண்டு வரையும் சட்டநிரூபண சபையின் வளர்ச்சியை ஆராய்க.

12. பின்வருவனதைக் கற்பிக்கும் பொழுது எவ்வெக் குறிப்புக்களை அழுத்திக் கூறுவீர்?

(அ) கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பிற்கு: 'கண்டி ராச்சியத்தை இணைத்துக் கொள்வதற்குப் போர்த்துக்கீசர் செய்த முயற்சிகள்'.

13. இலங்கையில் போர்த்துக்கேயருடைய அரசாட்சியின் பயனாக ஏற்பட்டு நிலைபெற்றிருக்கும் மாற்றங்களை ஒல்லாந்தருடைய அரசாட்சியின் பயனாக ஏற்பட்டு நிலைபெற்றிருக்கும் மாற்றங்களோடு ஒப்பிட்டாராய்க.

14. கடற்கரை மாகாணங்களையும் கண்டிராச்சியத்தையும் பிரித்தானியர் வென்று இணைத்ததற்குரிய காரணங்கள் யாவை?

15. பிரித்தானியருடைய ஆளுகையில், இலங்கையிலே மத்திய வகுப்பினர் தோன்றியதாலேற்பட்ட பலாபலன்களை ஆராய்க.

16. டொனமூர் அரசியற்திட்டத்திலுள்ள குறைகளென நீர் கருதுவனயாவை? அவற்றைச் சோல்பரி அரசியற்திட்டம் எவ்வாறு நீக்க முயல்கிறது?

---

## ஆசிரியர் கலாசாலைப் பிரவேச பரீட்சை

### பகுதி I. இலங்கைச் சரித்திரம்.

1. சிங்கள அரசர்கள் கோட்டையையும் சீதாவாக்கையையும் தலை நகரங்களாகத் தெரிவு செய்தமைக்குக் காரணம் யாது? போத்துக்கேயர் கோட்டையைவிட்டுக் கொழும்பைத் தலைநகராக்கியதேன்?

2. இத்தீவைப் போத்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆண்டதற் கறிகுறிகளாக இப்போதுங் காணக் கூடியவை யாவை?

3. பிரித்தானியர் கண்டி ராச்சியத்தைத் தமதாக்கிக்கொள்ள விரும்பியதேன்? 1818–ம் ஆண்டு வரையில் பிரித்தானியர் இத்தீவை முற்றாகத் தமதாட்சிக்குட்படுத்தவில்லை என்று கூறுதல் சரியோ? ஆராய்க.

4. அரசாங்க சபையின் அமைப்பையும் அதன் கருமங்களையுஞ் சுருக்கமாகக் கூறுக. முந்திய அரசாங்க மந்திர சபையினின்றே இச்சபை உண்டானது எனக் கூறுதல் என்ன அளவுக்குப் பொருந்தும்?

5. இலங்கையில் பெருந்தோட்டமுறையில் (றப்பர், தேயிலை போன்று) கமஞ்செய்யு முறை விருத்தியடைந்ததால் உண்டான மாற்றங்களென்னை?

7. போத்துக்கேயர் காலத்தில் சீதாவாக்கை இராச்சியம் வளர்ந்ததற்கும் தேய்ந்ததற்கும் காரணங்களை விளக்குக.

8. (அ) ஆங்கிலேயர் இலங்கை மக்களுக்கு அரசியலுரிமைகள் வழங்கியவரலாற்றைக் கூறுக.

(ஆ) டொனமூர் அரசியற்றிட்டத்தாலாய பிரதான மாற்றம் மூன்று கூறி அவற்றுக்குக் காரணமுங் காட்டுக.

இல. 73
10. 5. 1959
இல. 12808
7. 6. 1966
4707.

ஜி. ஸி. ஈ., மற்றும் உயர்வகுப்புப்

## பாடப் புத்தகங்கள்.

1. **உயர்தர எண்கணிதம்**
   சிவக்கொழுந்து - மஹாதேவன் - ரூ. 4-00
2. **உயர்தர அக்ஷரகணிதம்**
   சிவக்கொழுந்து - மஹாதேவன் - ரூ. 4-50
3. **உயர்தர கேத்திரகணிதம்** (அச்சில்)
   சிவக்கொழுந்து - மஹாதேவன்
4. **உலக பூமிசாஸ்திர விளக்கம்** (முழுத்தொகுதி)
   சிவக்கொழுந்து (Approved) - ரூ. 7-75
   ஒ. பகுதி 1 – ரூ. 4-00, பகுதி 2 ரூ. 4-00
5. **இலங்கைச் சரித்திர விளக்கம்**
   A. விஜயன் விக்ரோரியா B. A. - ரூ. 3-00

ஆசிரியர்கட்கு 15 % கொமிஷன் உண்டு.

பிரசுரம்:

**வடலங்கா புத்தகசாலை,**

கிளை: கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்

பருத்தித்துறை — இலங்கை

# CEYLON HISTORY

for G. C. E. etc.

**A. Viyajan Victoria B. A.** *Price Rs. 3.00*